மங்கையர் மலர்



MANGAYAR MALAR ஏப்ரல் 1999 விலை ரூ. 12



மிகமிகச் சிறந்த பரிசு... முந்நூறு கோடி ஆண்டுகளுக்கு முந்தைய பூமியில் அனல் கக்கும் ஆழத்தில் உருவானது.

அன்பை வெளிப்படுத்த வார்த்தைகள் வரவில்லை என்றால் அதை வைரத்தின் மூலம் சொல்லுங்கள். வைரங்கள் அருமையானவை. மிக அரிதாகக் கிடைப்பவை. வெல்ல முடியாதவை. பெரும் பெருமைக்கு உரியவை. வைரங்கள் யாவும் அன்னை பூமியின் மிகப் பழமையான பொக்கிஷங்கள்.

அவற்றில் சிலவற்றைக் காண, பிரின்ஸ் ஜுவல்லரி ஷோரூமுக்கு வாருங்கள். நெக்லஸ், அட்டிகை, பதக்கம், மோதிரம், வளையல், பிரேஸ்லெட், தொங்கட்டான் முதலிய நகைகளில் பதித்து இணைக்கப்பட்டுப் பளபளக்கும் பல வகைகளைப் பாருங்கள். அன்பு என்ற சொல்லுக்குப் புதியதோர் அர்த்தத்தை அவை அனைத்தும் சொல்லும்.

PRINCE® JEWELLERY

பனகல் பார்க், தி.நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 434 6783, 434 7493, 436 3137, 436 3138.
(ஷோரூம் சென்னையில் மட்டுமே)

வைரத்தின் சிறப்பு எடையில் தெரியும்

வைரத்தை அளவிடக் கூடிய அதன் தன்மைகளில், எடைதான் மிக எளிதானது. கேரட் என்பது இந்த எடையின் ஓர் அலகு. கேரட் விதையிலிருந்து இந்தப் பெயர் பெற்றது. இது கோப் விதைத் தோடுகளில் (அல்லது லோக்கஸ்ட் மரம்) இருப்பது. பண்டைக்கால நவரத்தின வியாபாரிகள் தங்கள் வைரங்கள் எடை போடுவதற்கு இந்தச் சின்னஞ் சிறு விதைகளைப் பயன்படுத்தினர். இன்று கேரட் என்பது 0.2 கிராம் அளவுள்ள திட்டமான மெட்ரிக் எடை ஆகும்.

சம்பத்து மோதிரங்களின் அணிவரிசையைக்
கண்டுகளிக்க வரவேற்கிறோம்.

மலர் : 19 இதழ் : 3

மங்கையர் மலர்

ஏப்ரல் '99

திருமணம் - சில டிப்ஸ்

1) சகோதரிகளே, எந்தத் திருமணத்திற்குச் சென்றாலும் உங்கள் நெருங்கிய தோழியாக இருந்தாலும் புது தம்பதியினரின் ஜோடிப் பொருத்தம் பற்றி விமர்சனம் செய்ய வேண்டாம். மாப்பிள்ளை கறுப்பு, குள்ளம், வயதானவராக இருக்கிறார்கள், இத்யாதி என்று, இதுவே பல சமயங்களில் தம்பதியினர் இடையே மனஸ்தாபம் வரக் காரணமாகிறது.

2. திருமண விருந்தில் இலையில் ஸ்வீட் ஐட்டம்ஸ் வைக்காமல், அழகாக பேக் செய்து, இலைக்குப் பக்கத்தில் வைக்கலாம். டயாபடீஸ்காரர்கள் கூச்சப் படாமல் எடுத்துச் செல்வார்கள். பந்தி இலையில் வீணாவதைத் தடுக்கலாமே.

3. பெண் வீட்டார் திருமணச் சத்திரம் 'புக்' செய்யும்பொழுது கண்டிப்பாக, மாப்பிள்ளை வீட்டார் ஒருவரை உடன் அழைத்துச் செல்லவும். இது பல பிரச்சனைகள் ஏற்படாமல் தடுக்க உதவும்.



எனது தோழியின் திருமணத்தில் ஒரே சமயத்தில் 3 திருமணம் நடைபெறும் சத்திரத்தில், இரண்டு மாடிகளை எனது தோழியின் தந்தை புக் செய்தார். கூடவே மாப்பிள்ளை வீட்டில் ஒருவரை அழைத்துச் சென்றார். ஆனால் திருமண நாளில் ஒரு மாடி மட்டுமே அவருக்கு கொடுக்கப்பட்டது. இரண்டு மாடி புக் செய்தும் மணப்பெண்ணின் மாமியார் இதை பெரிய விஷயமாக்க, மாப்பிள்ளையின் உடன் வந்த உறவினர், பெண்ணின் தந்தை இரண்டு மாடி புக் செய்ததற்கு தான்தான் சாட்சி என்று கூறி சமாதானம் செய்ய, திருமணம் இனிதே நடந்தது.

– பவானி சந்திரசேகரன்

நீங்கள் விரும்பும்...

கவிதைப் பக்கம்

கதைகள்

பார்க்க வேண்டிய இடங்கள்

இளம்தம்பதிகள் கவனிக்க!

'மனைவி'யைப் பற்றி

இளமையாய் இருக்க

ஆசிரியர் பதில்

வியப்பூட்டும் 'சிறுமி'



ரூ.1.60
4 கப் பில்டர் காபி
40 காசுக்கு அற்புத சுவை
கமகம
அபிஸ்
ஸ்ரீ அம்பாள் காபி ஒர்க்ஸ்
த.பெ. எண் : 59 விருதுநகர்.

சில வார்த்தைகள்....


மறந்து போகத் தகுமோ?



சமீபத்தில் ஒரு கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக ஒரு இடத்திற்குப் போன போது பக்கத்திலுள்ள பிரசித்தி பெற்ற கோயிலுக்குப் போனேன். தவிர்க்க முடியாத சில சமயங்களில் தவிர மற்றபடி நான் இன்னார் எனச் சொல்வதைத் தவிர்த்து விடுவேன். இங்கேயும் அப்படித்தான். அதனால் நம்மால் பல விஷயங்களை கவனிக்க முடிகிறது.

அந்தக் கோவிலின் ஈசுவரன், அம்பிகை சந்திரகாந்தக் கல்லால் செய்யப்பட்ட சிலைகள் என்றார் பூஜித்தவர். வெளியே வாருங்கள் என அழைத்துப் போய் கிடப்பில் போடப்பட்டிருந்த நந்தியைக் காண்பித்து இதுவும் சந்திரகாந்தக் கல்லால் ஆனது என ஒரு ரூபாய் நாணயத்தைக் கொண்டு தட்டிக் காண்பித்தார். ஒவ்வொரு இடத்திலிருந்து ஒவ்வொரு நாதம் வந்தது. பக்கத்திலேயே நிறுவப்பட்டிருந்த பல கற்களில் பலவிதமான உருவங்கள், மீன், பல்லி என. இவற்றைப் பல கோவில்களில் பார்த்திருக்கிறேன். அந்த அழகிய நந்திக்குப் பக்கத்திலேயே ஒரு சுத்தி இருந்தது.

நாங்கள் கொஞ்ச தூரம் நடந்து போன பிறகு ஏதோ சத்தம் கேட்கத் திரும்பிப் பார்த்தால் ஒரு விடலைப் பையன் சுத்தியலால் நந்தியின் மண்டையில் போட்டுக் கொண்டு இருந்தான். ஒருகணம் தயங்கித் திரும்புவதற்குள் நாலு சாத்து சாத்திய திருப்தியுடன் அவன் போய் விட்டான். அன்றைக்கெல்லாம் மனமே ஆறவில்லை.



நம்முடைய இளைஞர்களுக்கு நம்மிடம் இருக்கும் பொக்கிஷங்களை நாம் சொல்லித் தரவில்லையே, இரண்டு மூன்று தலைமுறைகளில் இத்தனை அற்புதமான ரகசியங்கள் மறைந்து விட்டனவே என்று கிடந்து அடித்துக் கொண்டது மனம்.

நான் பல புத்தகங்களின் வாயிலாகத் தெரிந்து கொண்ட சில விஷயங்களை இங்கு தருகிறேன். (இது சரியில்லை என்றால் 'நட்பு வட்டம்' எழுதலாம்.) கோயில்களிலே ஏராளமான நகைகள் பல்வேறு உயரிய கற்களுடன் ஸ்வாமிக்குச் சாத்தப்படுகிறது. மரகதம், கோமேதகம், சிவப்பு போன்ற கற்கள் எல்லாம் காண வரும் மக்களின் தோஷம் போக்குபவை. அதனால்தான் கற்பூர ஆரத்தியிலே பட்டுத் தெறிக்கும் ஒளிவீச்சுக்கள் தெய்வீகச் சூழலில் எத்தனையோ கண்ணுக்குத் தெரியாத தோஷங்களை நீக்குகின்றன. (இதைத்தான் இன்று அவரவர் அணிய சிபாரிசு செய்யப்படுகிறது.)

அதே போல பிரமிடு அமைப்பு பல விந்தைகளைச் செய்கிறது என் நீங்கள் அறிவீர்கள். அதன் 'சக்தி மையம்' நடுவிலே உள்ளது. உச்சி ஆபத்தானது. உச்சியில்லாத சக்திமையம் கொண்ட கவிழ்ந்த அமைப்புதான் நம் யாககுண்டங்கள். இதில்தான் அக்னி வளர்த்து பல்வேறு விந்தைகளை நம் முன்னோர்கள் செய்திருக்கிறார்கள்.

பழைமையான கோயில் கருவறைகள் குறிப்பிட்ட அகல நீள உயரத்தில் உள்ளது. நடுவில் ஒலிகளை இழுக்கும் தெய்வ மூர்த்தம். இந்தச் சூழலில் செய்யப்படும் வழிபாடு எலக்ட்ரோ மேக்னட் பவரை சுற்றியிருக்கிறவர்களுக்குத் தருகிறது.

மஞ்சுளா ரமேஷ்

இப்படி இன்றைய பௌதீக விதியாளர்களும், விஞ்ஞானிகளும் வியந்து பாராட்டும் பல மகிமைகள் நம் கோயில்களிலே கொட்டிக் கிடக்கின்றன. அதே போலத்தான் சந்திரகாந்தக் கல்லும். அது சந்திர ஒளியை ஈர்த்து எதிரில் இருப்பவர்களுக்கு நிவாரணத்தைத் தருகிறது. இவையெல்லாம் இன்றைய விஞ்ஞானிகளே சொல்லும் விஷயம். அதன்படி இக் கோயில் மனநிலையில் நிவாரணம் தேடுபவர்களுக்கான க்ஷேத்திரமாக இருக்க வேண்டும் என நான் நினைத்தது சரியாகவே இருந்தது. அதுவேதான் பிற்பாடு நான் படித்த அக் கோயில் புராணத்திலும் உள்ளது.

அதற்கேற்றாற் போல அங்கு அமைந்த தீர்த்தம், மூளைக்கு மிகச் சிறந்த 'வைப்ரேஷனை'த் தரும் அரச மரம், அதிலே அழகான பிள்ளையார் என எல்லாம் கச்சிதமாகவே அமைந்துள்ளது. ஆனால் இதெல்லாம் யாருக்குப் போக வேண்டுமோ அவர்களுக்குப் போகாமல் சுத்தியெடுத்துக் கொண்டு நந்தியின் தலையைத் தட்டிப் பார்க்கிறார்கள்!

இன்றைய இளைஞர்கள் நம் முன்னோர்கள் வகுத்து வைத்திருந்த விஞ்ஞான உண்மைகளை அறியாமலே போய் விட்டார்கள். ஏதாவது சொன்னால், 'ஆமாம் நாம கிட்டே இல்லாதது எதுவுமேயில்லை என்ற பாட்டத்தை எப்போதுதான் விடுவீங்களோ' என அமெரிக்காவிற்குப் பறக்கத் துடிக்கிறார்கள். காரணம் நம்மாலும் முழுமையாகச் சொல்ல முடியவில்லை. வளர்க்கும் போது டி.வி. காட்டி சோறூட்டித்தானே வளர்க்கிறோம்.

அமைதியான வீதித் திண்ணையில் தெருக் கோடி பிள்ளையாரையும், வீட்டிலிருந்து தெரியும் கோபுர உச்சியையும், கண்ணன் கதையையும் சொல்லிச் சோறூட்டிய காலம்தான் போயே போச்சே! அத்தனையும் கட்டுக்கதை என ஒரே மூட்டாக இடது கையால் தள்ளிவிடச் செய்து விட்டோம். ஒரே ஆட்டம் பேயாட்டம், பேயோட்டம் தான். பணம், பணம், பதவி, பெருமை, புகழ் இவை பின்னாடி ஓடவே நேரமில்லையே... நாம் எங்கே நம் பக்கத்திலே கொட்டிக் கிடக்கும் இந்தத் திருநாட்டின் மகிமைகளை உணரப் போகிறோம்.

ஒரு பௌதீகப் பேராசிரியர் பேசிக் கொண்டு இருந்தபோது சொன்னார், ''காலேஜில் நான் லெக்சர் கொடுக்கும் போதெல்லாம் பல பௌதீகத் தியரிகள் நம்

நாட்டில் எப்படியெல்லாம் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன என்று சொல்லுவேன். மாணவர்கள் ரொம்ப சுவாரஸ்யமாகக் கேட்பார்கள்'' என்றார். அவரைச் சுற்றி வந்து வணங்கலாம் போலிருந்தது. வயதில் சின்னவளாகி விட்டாள். அவரை மிகவும் பாராட்டி,

''உன்னைப் போல கல்லூரி, பள்ளி ஆசிரியர்கள் மாணவர்களுக்குச் சொன்னாலே போதும். நம் சமுதாயமே மாறி விடும். அடுத்த தலைமுறை நிச்சயம் உயர்ந்து விடுவார்கள்'' என்றேன்.

பல பிரமிக்க வைக்கும் மகத்துவங்கள் நம்மிடையே உள்ளன. நம்மால் அவற்றை உருவாக்க முடியாது. ஆனால் அவர்கள் செய்து வைத்ததைப் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்குக் கொடுக்கலாமே! எத்தனையோ இரகசியங்கள் அழிந்து போய் விட்டன. நாம் இருப்பது இப்போது உலகத்தையே சிறிய திரையில் அடக்கி, அத்தனை விஷயங்களையும் ஃப்ளாப்பியில் மடக்கியுள்ள தகவல் யுகம். தகவல் தொடர்புகள் உள்ள இந்த யுகத்திலாவது இருக்கிறதை யாவது காப்பாற்றலாமே!

இதற்காகப் பெரிதாக உழவாரப்பணி மேற்கொள்ள வேண்டியதில்லை. நம் குழந்தைகளிடம் எத்தனையோ விஷயங்களைப் பேசுவது போல நம்மிடம் உள்ள செழுமையான கலாசாரத்தையும் பேசலாம். நீங்கள் சுவாரஸ்யமாக சொன்னால் அவர்கள் சுவையாகக் கேட்டுக் கொள்வார்கள். உங்கள் ஊரிலே புறக்கணிக்கப்பட்டுப் பாழடைந்து போயிருக்கும் பழைய கோயில்களுக்குச் சென்று வாருங்கள். மனிதர்கள் காலடி படப்பட கோயில் செழிக்க ஆரம்பிக்கும்.

நம்முடைய வாழ்க்கை முறையிலே அடங்கியுள்ள அற்புதமான மனோதத்துவ, விவகாரரீதியான, ஆரோக்கியத்திற்கான விஷயங்களையெல்லாம் யோசித்துப் பாருங்கள். திருமணம் என்பது ஒரு ஆணுக்கும், ஒரு பெண்ணுக்கும் நடக்கின்ற விஷயமாகவா நம் பெரியவர்கள் வைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு சடங்கிற்கும் ஒவ்வொரு உறவுக்காரர் தேவை.

எத்தனை எத்தனை மகத்துவங்கள் இந்த மண்ணிலே! மறக்கலாமா அவற்றை? நம் வீட்டிற்குள் இருக்கும் செல்வச் செழிப்பை மறந்து விட்டு, 'அந்த வீட்டைப் பார், இந்த வீட்டைப் பார்' என்று சொல்லிக் கொண்டு இருக்கிறோம்.

சுகம் தரும் வீடு நம் வீடுதான்.

திருமணங்கள் இன்டர்நெட்டிலும் நிச்சயிக்கப்படுகின்றன!

பொதுவாக, ''மணமகன் மற்றும் மணமகள் தேவை'' போன்ற விளம்பரப் பகுதிகளை நாளிதழ்களிலும், வாரப் பத்திரிகைகளிலுமே பார்த்திருக்கின்றோம். மணப்பந்தல் ஒருங்கிணைப்பு வேலைகளை பல தனியார் நிறுவனங்கள் தமிழகத்தில் செய்து வந்தாலும், உலக அளவிலும் இப்போது இது தொடங்கியுள்ளது மகிழ்ச்சிக்குரியது தானே! தகவல் தொடர்பின் மிகப் பெரிய சக்தியான இன்டர்நெட்டில் http ://www.transindia.com என்ற தலத்தில் மணமேடை பகுதி அமைக்கப்பட்டுள்ளது.

சென்னை இராயபுரத்தைச் சேர்ந்த முருகவேல் என்ற இளைஞர் அமெரிக்காவின் நியுஜெர்சியில் வசித்துக் கொண்டு இப் பணியைச் செய்து வருகின்றார். அமெரிக்க தமிழ்வாசிகளுக்கு இந்த இன்டர்நெட் தலம் பெரும் ஆதரவாக உள்ளது.

''தமிழர்கள் பக்கம்'' என்ற தலைப்பில் அமைக்கப்பட்டுள்ள இந்த இன்டர்நெட் மணமக்கள் பகுதியில் நம்முடைய பெயர், உயரம், எடை, மதம், கல்வி, தற்போது வசிக்கும் ஊர் (நாடு), வயது, வேலை, பொழுதுபோக்கு அம்சம், முகவரி, தொலைபேசி எண், ஈமெயில் முகவரியென அனைத்தையும் பதிவுசெய்து கொள்ளலாம். மேலும் நம்மைப் பற்றிய சிறப்பம்சத்தை (விசேஷ குறிப்புகள்) 250 வார்த்தைகளாகவும் இந்த இன்டர்நெட் பகுதியில் பதிவுசெய்து கொள்ளலாம். மேலும் பெண்களின் பெயரை குறிப்பிட விரும்பாதவர்களுக்கென சிறப்பு வசதியாக குறியீட்டு எண்ணும் அளிக்கப்படுகிறது.



இந்த இன்டர்நெட் தலத்தில் வரன் வேண்டி பதிவு செய்வதற்கோ அல்லது நாம் மணமக்கள் பகுதியை பார்வையிடுவதற்கோ கட்டணம் எதுவும் வசூலிக்கப்படாதது இந்த அமைப்பின் சிறப்பம்சமாகும். இந்த இன்டர்நெட்டில் சுமார் 1250 பேர் தங்களுடைய பயோடேட்டாவை பதிவுசெய்துள்ளனர்.

தமிழர்களை உலக அளவில் ஒருங்கிணைக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள இந்த இணையத்தளத்தின் வாயிலாக தமிழ் வாழ்த்து, தமிழர் பண்டிகைகளுக்கான அறிவிப்புகள், தமிழ் தின காலண்டர், மாத காலண்டர் ஆகியவற்றை தமிழிலேயே அமைக்கப்பட்டுள்ளது. இன்னும் பல தகவல்களும் இப்பகுதியில் உலா வருகிறது.



— ஆண்ட்டோ பீட்டர்

சந்தேகமே இல்லை. இன்று
ஜான்ட்டி ரோட்ஸ் உலகின்
மிக சுறுசுறுப்பான கிரிக்கெட் வீரராவார்;
ஆனால் நீண்ட நாட்களுக்கு அல்ல.



என் மகன் அவர் இடத்தை பிடிப்பான்
"பி என் ஸிஸ்டம்" உதவியுடன்.

LG

PN System ரெஃப்ரிஜிரேட்டர்

[illegible]

பி என் ஸிஸ்டத்தின் செயலாற்றல் ஈடு இணையற்றது. இது உணவுப் பொருட்களை புத்தம் புதிதாகவும், நீண்ட நாட்கள்வரை போஷாக்கு உள்ளதாகவும் பராமரிக்கிறது. அதனால்தான் குடும்பத்தினர் எப்போதும் ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியுடனும் இருக்கிறார்கள்.



பி என் ஸிஸ்டத்தின் அனுகூலங்கள்*

சிறப்பம்சங்கள்	செயலாக்கம்	LG GR 412M	BPL BR 485L	Daewoo FR 530
[illegible]	[illegible]	✓	✗	✗
[illegible]	[illegible]	✓	✗	✗

[illegible]

நியூஸ் ஸ்டால்

முந்தைய அரசுகளில் கூட, மத்திய அமைச்சர்கள் தங்கள் சொத்துக் கணக்குகளை காபினெட் செயலாளரிடம் ஆண்டுதோறும் காட்ட வேண்டும் என்ற நடைமுறை இருந்தது. ஆனால் இப்போது பொது மக்கள் பார்வைக்கும் இந்தக் கணக்குகள் வைக்கப்பட வேண்டும் என்று அரசு முடிவெடுத்துள்ளது. இதன்படி 39 மத்திய அமைச்சர்களில் பெரும்பாலானவர்கள் தங்கள் சொத்துக் கணக்கை சமர்ப்பித்துள்ளனர். அப்படி அளிக்கப்பட்ட சிலரது சொத்து விவரங்கள் இதோ.




• மகிழ்ச்சிக் கடலில் கும்ப்ளே

அத்வானி – ஹரியானாவில் ஒரு ஃப்ளாட். வங்கிக் கணக்குகள், இன்சூரன்ஸ் பாலிஸிகள். ஜார்ஜ் பெர்னான்டஸ் – அசையாச் சொத்து எதுவுமில்லை. பயன்படுத்தும் கார் டாக்ஸி யூனியனுடையது, தற்போது தங்கியுள்ள ஃப்ளாட்டின் உரிமையாளர் பம்பாய் தொழிலாளர் சங்கம். மிக அதிக சொத்துக்கள் கொண்டவர் என்று கருதப்படும் ராம்ஜெத்மலானி தன் கணக்கைச் சமர்ப்பிப்பதற்கு அதிக அவகாசம் கேட்டுள்ளார்.

மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ள ஷிர்பூர் என்ற இடத்தில் உள்ள சர்க்கரை ஆலை ஒன்று வைட்டமின்-ஏ சத்து அடங்கிய சர்க்கரையைத் தயாரிக்கப் போகிறதாம்! இன்றைய தேதியில் மேற்கிந்தியத் தீவுகளிலும் கயானாவிலும் மட்டும்தான் வைட்டமின் சத்து கொண்ட சர்க்கரையைத் தயாரிக்கிறார்கள்.

நார்வேயிலுள்ள சார்ட்லாண்ட் என்ற நகரில் உள்ள எல்லா வீடுகளுக்கும் வயலட் வண்ண பெயிண்ட் அடிக்கப்படுகிறது. வரும் புத்தாண்டுத் தொடக்கத்தில் அங்கு எல்லா வீடுகளும் ஒரே நிறம் கொண்டதாக இருக்குமாம். ஆகாய விமானத்திலிருந்து பார்க்கும்போது இது ஆனந்தமான காட்சியாக இருக்கும் என்கிறார்கள்.

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீபின் அழைப்பை ஏற்று டெல்லியிலிருந்து லாகூருக்கு விடப்பட்ட பேருந்தில் இந்தியப் பிரதமர் வாஜ்பாய் பயணம் செய்தார். இந்த நல்லுறவு நீடிக்கும் வகையில் பாகிஸ்தானிலிருந்து பல வி.ஐ.பிக்கள் அடங்கிய குழு ஒன்று இதே பஸ்ஸில் டெல்லிக்கு வரப்போகிறது. அது மட்டுமல்ல பங்களாதேஷோடு நல்லுறவை



• பங்களாதேஷ்-பாரதம்-பஸ்



வளர்க்கும் வகையில் டாக்கா-கல்கத்தா நடத்தில் பஸ் விடப்பட்டிருக்கிறது.

ஒரே இன்னிங்ஸில் பத்து விக்கெட்டுகள் எடுத்தவர் என்ற பெருமை இதுவரை இங்கிலாந்தைச் சேர்ந்த ஜிம் லேக்கர் என்பவருக்கு மட்டுமே இருந்தது. இப்போது அந்தப் பெருமை நம் அனில் கும்ப்ளேவுக்கும் உரித்தாகி விட்டது. டெல்லியில் நடைபெற்ற பந்தயத்தில் பாகிஸ்தானிய அணிக்கு எதிராக ஆடும்போது இந்த சாதனையைப் புரிந்திருக்கிறார் இவர்.

ஜென்னி எனப்படும் கழுதையின் பால், தாய்ப்பாலைப் பல விதங்களிலும் ஒத்திருப்பதாக விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதே வித சத்துகள் இருப்பதோடு பக்கவிளைவுகளும் ஏதுமிருப்பதில்லை என்று அறிவித்திருக்கிறார் தேசிய பால் ஆராய்ச்சி மையத்தின் இயக்குனரான டாக்டர் யாதவ்.

ஒரு நிறுவனத்தில் பியூனாக இருக்கக் கூடத் தகுதி பெறாதவர் அந்த அமைப்பின் தலைவராக உயர முடியுமா? அந்த வித்தை நம் நாட்டிலேயே சமீபத்தில் நடந்திருக்கிறது. 'வித்யா பிரசார் மண்டல்' என்ற அமைப்பின் கீழ் இயங்கும் கல்வி நிறுவனமொன்றில் பியூன் வேலைக்கு விண்ணப்பித்த ஒருவருக்கு தகுதியின்மை காரணமாக வேலை மறுக்கப்பட்டது. நாளடைவில் அவர் அரசியலில் சேர்ந்து பெரிய ஆளாகிவிட, அமைச்சர் என்கிற பதவி காரணமாக மேற்படி அமைப்புக்குத் தலைவராகும் வாய்ப்பு அவருக்கு வந்திருக்கிறது. இந்தச் செய்தியை அவரே ஒரு பொதுக் கூட்டத்தில் கூறியிருக்கிறார்!

இன்னமும் கம்யூனிஸத்தின் பிடியில் உள்ள ஒருசில நாடுகளில் க்யூபாவும் ஒன்று. அண்டை நாடான அமெரிக்காவுக்கும் இதற்கும் ஏழாம் பொருத்தம். இந்த நிலையில் சில பிரமிக்கும்படியான நிகழ்வுகள் நடந்துள்ளன. வாடிகனுக்குச் சென்று போப்பை சந்தித்திருக்கிறார் க்யூபாவின் தலைவர் ஃபிடல் காஸ்ட்ரோ. பிறகு தன் நாட்டுக்குத் திரும்பியவுடன் மூன்னூறு (அரசியல்) கைதிகளை விடுவித்திருக்கிறார். மனமகிழ்ந்த அமெரிக்கா க்யூபாவுக்கு உணவு மற்றும் மருத்துவ உதவிகளை செய்ய சம்மதித்திருக்கிறது.

பிரபல மூத்த இசைக் கலைஞர் டி.கே. பட்டம்மாளுக்கு பத்ம விபூஷண் விருது வழங்கப்பட்டுள்ளது. தவிர



• விருது பெறும் மூத்த கலைஞர்

மத்தியப் பிரதேச அரசின் பெருமைமிகு காளிதாஸ் சம்மான் என்ற பரிசும் இம்முறை இவருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

சமீபத்திய ரயில்வே பட்ஜெட்டில் தமிழ்நாட்டில் புதிதாக மூன்று ரயில்கள் துவங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. தினமும் சென்னையிலிருந்து திருப்பதிக்கு சதாப்தி எக்ஸ்பிரஸும், சென்னையிலிருந்து கௌஹாத்திக்கு வாரம் இருமுறை ஒரு எக்ஸ்பிரஸும், கோவையிலிருந்து டெல்லிக்கு வாரம் ஒருமுறை ஒரு எக்ஸ்பிரஸும் விரைவில் செல்லத் தொடங்குமாம்.

— ஜி.எஸ்.எஸ்.

நட்பு வட்டம் (கருத்து – அரங்கம்) நட்பு வட்டம் (கருத்து – அரங்கம்)
நட்பு வட்டம் (கருத்து – அரங்கம்) நட்பு வட்டம்
நட்பு வட்டம் (கருத்து – அரங்கம்) நட்பு
நட்பு வட்டம் (கருத்து –
நட்பு வட்டம்

அலமேலு
அண்ணாமலை
மயிலாடுதுறை

'தாங்கள் 'கிழம்' குறுநாவலுக்காகப் பரிந்து பேசுவது, எங்கள் இதயங்களில் பல பட்டாசுகளை பற்றவைக்கிறது. டாக்டர் கிருஷ்ணனின் ஒவ்வொரு வார்த்தையும் அழுத்தமாகவும், ஆணித்தரமாகவும் அத்தனை வாசகர்களின் (அட்லீஸ்ட் 80%) இதயத்தையும் பிரதிபலிப்பதாக இருக்கிறது.

'இல்லங்களில் அன்பு, தியாகம், பொறுமை இவை வேண்டும் என வற்புறுத்துவோமே' என்கிறீர்கள் ஏன்? இவையெல்லாம் பெண்களுக்கு மட்டும்தான் தேவையா? ஆண்களுக்குத் தேவையில்லையா? 'கிழத்தின்' – நாயகன் கணேசனுக்கு இதெல்லாம் தேவையில்லையா? அம்மாவை வழிக்குக் கொண்டு வராமல் 'அரக்கத்தனத்தை ஆட்சியாக்குவது' சரியா?

ஆசிரியர் : ...யப்பா, இப்படியாக ஏகப்பட்ட கடிதங்கள். இன்னும் கோபம் தீராத வாசகிகள். போனால் போகிறது என விட மாட்டேன் என வரிந்து கட்டிக் கொண்டு களத்தில் இறங்கியிருக்கிறார்கள்.

இத... இதத்தான் நான் எதிர்பார்த்தேன் என சொல்லணும் போல இருக்கு. 'சிறுமை கண்டு பொங்குவாய்!' என பாரதி சொன்னான். ஆணும் பெண்ணுமாக எத்தனை பேர் 'ஆஹா, இந்த மாதிரி ஒரு போக்கை நீங்க ஆதரிக்கலாமா' என உரிமையோடு சண்டைக்கு வருவதைப் பார்க்கும் போது ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கிறது.

ஆக, பவானியைப் போல இருக்கும் பெண்களுக்காக நம் நெஞ்சில் கருணை சுரக்கிறதே, அது தான் வேண்டும். இந்தக் கருணை எல்லோரிடமும் பரவட்டும். அதைத் தான் நான் பிரார்த்திக்கிறேன். சரி, இதோடு இந்த விவாதத்தை முடித்துக் கொள்ளலாமே!

லோகநாதன், சென்னை.

பிள்ளைகள் தங்கள் பெற்றோரை வயதான காலத்தில் தங்களுடன் வைத்து பேணிக் காக்க வேண்டியது அவசியம் மற்றும் கடமையும் கூட. ஆனால் பல காரணங்களால் அது பல வீடுகளில் முடியாமல் போகிறது.

அப்போது தன் பெண்ணிடம் இருந்தால் என்ன தவறு? தனியாக பெண், மாப்பிள்ளை என்றில்லாமல் கூட்டுக் குடும்பமாக மாமியார், மாமனாருடன் இருக்கும் பெண் தன் வயதான, தனியே விடப்பட்ட தாயார்/தந்தையை வைத்துக் கொள்வது என்பது சரிதானே? இதில் அந்தப் பெண்ணை பெற்றவருக்கு எந்தவித அவமானமோ அல்லது தரக்குறைவோ இருக்க சாத்தியமா?

ஒன்றுமில்லை. இதில் அவமானப்படவோ, வருத்தப்படவோ ஒன்றுமேயில்லை. பெண்ணின் வீட்டுக் கூட்டுக் குடும்பத்திலே இவர்களுக்கும் இடமுண்டு. எல்லாவற்றிற்கும் மனம்தான்

ஆசிரியரோடு

காரணம். மனதிலே நட்பையும் அன்பையும் வளர்த்துக் கொண்டு தாராளமாக இருக்கலாம்.

இவர் இருந்தால் அவர் இருக்கக் கூடாது என்பதும், தாய் 'டாமினேட்' செய்கிறாள் என்பதும் தவறான போக்குகள். வெளியுலகிலே நாம் எவ்வளவோ மாறி விட்டோம். அந்த நாகரீகப் போக்கு மனதளவிலும் கண்டிப்பாக வர வேண்டும்.

அ. ஷண்முகசுந்தரம், சென்னை – 64.

கடந்த சில ஆண்டுகளாகதான் நம் நாட்டில் 'வேலண்டைன் தினம்' என்பதாக ஒன்று அறிமுகமாகி, ஆண்டுக்கு ஆண்டு அது புதிய பரிமாணங்களைப் பெற்று பிரபலமாகி வருகிறது. காதலர்கள் வாழ்த்துகளை, பரிசுகளைப் பரிமாறிக் கொள்வதில் துவங்கி, கணவன் மனைவியரே கூட, தங்கள் திருமண நாளைக் கொண்டாடுவது தவிர, தங்கள் 'அன்பை' வெளிப்படுத்தும் நாளாக இதையும் கொண்டாடத் துவங்கியிருக்கிறார்கள்.

நம் நாட்டில் கணவன் – மனைவி பந்தம் ஒரு ஜன்மத்துக்கும் பிணைக்கப்பட்ட பந்தமாகவே திகழ்கிறது. உண்மைக் காதலில் 'நீ இன்றி நானில்லை' உனக்காக எதையும் இழப்பேன்' என்ற வாயால் சொல்ல வேண்டியதில்லை.

வாழ்ந்து காட்டினார்கள்.

அப்படியிருக்க, நாம் இத் தினத்தைக் கொண்டாடுவது நம் கலாச்சாரத்துக்கு ஒத்துப் போகிறதா? இதில் ஒருவகை போலித்தனம் இல்லையா? இது நமக்குத் தேவையா?

தேவையா என்றெல்லாம் பார்த்துக் கொண்டிராமல் சில விஷயங்கள் நம் நாட்டில் புகுந்து விடுகின்றன. அவற்றுள் இதுவும் ஒன்று. என்னுடைய தோழி ஒருமுறை சொன்னார்,

"நாங்கள் மேலைநாடுகளுக்குப் போயிருந்த போது அங்கே ஒருவர், 'இந்த வேலன்டைன்டே வேடிக்கையாக இருக்கிறது. உண்மையில் இது ஒரு துக்கதினமாகக் கொண்டாடப்பட வேண்டிய நாள்' என்றார். அதாவது நாமெல்லாம் திவசம் செய்வோமே அது மாதிரி இது. ஆனால் நம்ப நாட்ல ரொம்ப பாப்புலராவிட்டது."

வேடிக்கைதான். சரியான காரணம் தெரியாமல் பலவற்றைச் செய்கிறோம். காலப்போக்கில் இந்த ஆர்ப்பாட்டம் ஓய்ந்துவிடும் என்று நினைக்கிறேன்.

ஒரு உரையாடல்

லக்ஷ்மி ஸ்ரீநிவாஸன், சென்னை – 24.

தங்களின் இரண்டு பணிகளை (குடும்பத் தலைவி மற்றும் பத்திரிகையாளர்) எப்படி திருப்திகரமாக செய்ய முடிகிறது..? மறக்க முடியாத பள்ளித் தோழி... வாசகி...?

நீங்கள் அடிக்கடி அனுப்பும் நட்புமயமான கார்டுகளை ரசிப்பதுண்டு. 'நான் மந்த்ராலயம் போனேன்', 'எங்கள் வீட்டில் இப்படி ஒரு சம்பவம் நடந்தது', 'ம.ம. ஆபீஸ் வழியாகப் போனேன், பேப்பர் இறக்கிக் கொண்டிருந்தார்கள்' இப்படி ஏதாவது எழுதிக் கொண்டே இருக்கிறீர்கள்.

உங்களைப் போன்ற பல சகோதரிகளின் இப்படிப்பட்ட ஆத்மார்த்தமான தொடர்புகள் தான் நீங்கள் கேட்ட கேள்விகளுக்கு பதில் என்று சொல்லலாம். பல தோழிகள் தங்களுக்கு நேர்ந்த துன்பங்கள், அனுபவங்களை எனக்கு எழுதித் தெரிவிக்கும் போது அந்த முகமறியாத நட்புக்களால் நான் மெய்சிலிர்க்கிறேன். உங்களுடைய உறவுகள் ஆசிரியர் – வாசகியர் எனும் உறவினும் ஆழமான பந்தமாக நான் மதிக்கிறேன். இவைதான் என்னை இன்னும் வேகமாக செயல்பட வைக்கிறது.

சரி, இருக்கட்டும் ஏதோ பேட்டி போல இப்படிப்பட்ட பர்சனல் கேள்விகளைத் தவிர்த்து விடலாமே! நிறைய இருக்கே பேச.

வத்சலா வேலூர்

மீண்டும் ஒரு சரிகாஷாவாக துர்கா இறந்து போய் இருக்கிறாரே! இந்த சவ்டீசிங்கிற்கு ஒரு முடிவே இல்லையா?

பதில் : துர்காவைப் பற்றிப் படித்த துக்கம் இன்னும் ஆறவில்லை. நம் நாட்டு இளைஞர்கள் எத்தனை தூரம் சீரழிந்து போயிருக்கிறார்கள் என்பதை நினைக்கும் போது வருத்தப்பட மனம் போதவில்லை. எத்தனை சுயமைத்தனத்தை அவர்கள் வளர்த்துக் கொண்டு இருக்கிறார்கள். முன்னேறத் துடிக்கும் நம் இளம்பெண்கள்; கஞ்சா, போதை என சீரழிந்து கொண்டிருக்கும் இளைஞர்கள் என இரு துருவங்களாக அவர்களின் பாதை போய்க் கொண்டு இருக்கிறது.

பெண்கள் பள்ளிகளிலே படிப்போடு தற்காப்புக் கலையை கட்டாயப் பாடமாக போதிக்க வேண்டும். கராத்தே போன்ற கலைகள் அடிக்க மட்டுமல்ல, அது மனதிற்கு மிகுந்த நிதானத்தையும் தைரியத்தையும் கூட கொடுக்கிறது. எனவே இளம்பெண்கள் வாழ்க்கைக்கு மிகவும் உபயோகமாக இருக்கும்.

எங்கே பார்த்தாலும் இளைஞர்களை எந்த வகையில் எல்லாம் கெடுக்க முடியுமோ அந்த வகையில் எல்லாம் கெடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். சினிமா, கவர்ச்சிப் போஸ்டர்கள், டீ.வி. இத்யாதிகள் சாக்கடையாக வழிந்தோடுகிறது. அதிலிருந்து சில சமயம் உயிரைப் பறிக்கும் வாயுக்கள் வெளிவருவது போன்றதுதான் இவ்வகைச் சம்பவங்கள்.

சாக்கடையை நாம் என்றைக்கு சுத்தம் செய்யப் போகிறோம்?

நட்பு வட்டம்

நட்பு வட்டம் (கருத்து –

நட்பு வட்டம் (கருத்து – அரங்கம்)

நட்பு வட்டம் (கருத்து – அரங்கம்) நட்பு

நட்பு வட்டம் (கருத்து – அரங்கம்) நட்பு வட்டம்



சொன்னவர்கள் யாரும் புகைப்படங்கள் தரத் தயாராக இல்லை. இங்குள்ள படங்கள் சும்மா 'லே-அவுட்'டுக்காக.

வெள்ளைக் குதிரையில் வந்தானா ராஜகுமாரன்?

விபரம் தெரிந்த நாள் முதல் ஒவ்வொரு பெண்ணும் காணுவது ஒரு அழகான கனவு – அது கல்யாணக் கனவு – கல்யாணமான பிறகு தான் வாழும் ஆனந்த மயமான வாழ்க்கையைப் பற்றிய கனவு.... எதிர்கால வாழ்க்கையைப் பற்றிய எதிர்பார்ப்புகளை தேக்கி வைத்துக் கொண்டிருக்கும் ஆசைக் கனவு...

இவர்கள் கனவில் கண்ட சுந்தர புருஷன் வெள்ளைக் குதிரை மீதேறி வந்து இவர்கள் கைத்தலம் பற்றினானா? அல்லது நிஜ வாழ்க்கை தங்கள் எதிர்பார்ப்புகளிலிருந்து மாறுபட்டிருந்ததா? அதை எப்படி ஏற்றுக் கொண்டார்கள் இப்பெண்கள்.. கேட்டுப் பார்ப்போமே, என்ன சொல்லு கிறார்கள் என்று...

மீனாட்சி (வயது 76) : "எங்க காலமே வேற.. விபரம் தெரிஞ்ச நாள் முதலா கல்யாணத்திற்குப் பிறகு புகுந்த வீட்டாருடைய மனம் கோணாமல் நடந்து கொண்டு பிறந்த வீட்டுப் பெயரைக் காப்பாற்றுவதே முக்கியம் என்று சதா சர்வ காலமும் எங்களுக்குப் போதிக்கப்பட்டது.. புரியாத வயதிலேயே திருமணம். இதிலே கனவாவது, கற்பனையாவது... கல்யாணம் பற்றி பயம்தான் அதிகம் இருந்தது. புருஷனை விட புக்ககத்தார் நல்ல மாதிரியானவர்களாக இருக்க வேணுமே என்ற கவலைதான் அதிகம் இருந்தது. அன்பான மாமியார் கிடைத்ததிலேயே பாதிக் கிணறு தாண்டி விட்டது போல ஒரு தைரியம். கணவரின் உண்மையான மனசும், சுபாவமும் தெரிந்து கொள்ளும் முன் கையில் இரண்டு குழந்தைகள். கணவர் என்பவர் அந்தப் பெரிய குடும்பத்தில் ஒரு அங்கத்தினர். அவ்வளவுதான்.

மிக இளம் வயதிலேயே கல்யாணம் ஆனதால் புக்ககத்திற்கேற்ப என்னை மாற்றிக் கொள்வது அதிக சிரமமாகத் தெரியவில்லை.

சமையல், பேச்சு உட்பட எல்லாமே கணவர் வீட்டாரின் பழக்கம் அப்படியே வந்து விட்டது. வந்தாக வேண்டும்! இல்லாவிட்டால் பிரச்னைதான்.

அப்போதெல்லாம் கூடத் தெரியவில்லை. ஆனால் இந்தத் தலைமுறையைப் பார்க்கிறபோது தான் தோன்றுகிறது...



இன்றைய இளம் தம்பதியருக்கிடையே இருக்கும் பரஸ்பர அன்னியோன்யம் அந்த நாளைய மனிதர்களான எங்களிடம் இளம் வயதில் இல்லையோ என்று...

மனைவியை குடும்பத்தாருக்கு எதிரே பெயர் சொல்லிக் கூப்பிடவே அவர்களுக்கு யோசனை... "ஏய்" என்றுதான் பொதுவில் அழைப்பார். தனியே மனைவியோடு வெளியே போய் வருவது கனவில்தான். ஏன், மாமியார் மாமனாரை மீறி பெண்டாட்டிக்கு இவர் பூக்கூட வாங்கித் தந்ததில்லை.

இதற்குக் காரணம், அன்றைய வாழ்க்கை முறைதான். எதுவானாலும் எதிர்த்துப் பேசாமல் ஏற்றுக் கொண்டு நாங்கள் வாழ்ந்ததால் பெரிய ஏமாற்றங்கள் இல்லை..."

சுதா ஜார்ஜ் (வயது 33) : "எங்களுடையது காதல் திருமணம். ஆபீசில் ஏற்பட்ட பழக்கம். பதினோறு மாதங்களுக்குப் பிறகு சட்டென்று ஒரு நாள் ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக் கொண்டோம். என் வீட்டில் சம்மதம் கிடைக்காது – எதிர்ப்புகளும் கூடுகிறது என்பதால் செய்த அவசரக் கல்யாணம். ஒரே மாதத்தில் பெற்றோர்கள் மனம் இளக குடும்பங்கள் ஒன்று சேர்ந்தன.

காதலிக்கும் காலத்தில் இருவருமே எங்கள் சிறந்த குணாதிசயங்களைத்தான் அடுத்தவருக்குக் காட்டினோம். அதனால் தானோ என்னவோ, திருமணமான பிறகு அடிக்கடி உரசல்கள், வார்த்தை தடிப்புக்கள் ஏற்படும். ஆனாலும், வந்த வேகத்திலேயே கோபத்தை பிசுபிசுக்கச் செய்து விடுவோம். காரணம், "எனக்காக தன் குடும்பத்தை விட்டு வந்தவன்/வந்தவர்" என்ற எண்ணம்.

கணவனை மனதார ஏற்றுக் கொள்ளும் அளவு அவர் பெற்றோரையும், உடன் பிறந்தோரையும் ஏற்றுக் கொள்வது கஷ்டம். இது தான் நிஜம். அது என்னவோ, மதம், வழிபாடு, உணவு முறை வாழ்க்கை முறை என்ற பலவித மான வித்தியாசங்கள், மாமனார், மாமியார் இருக்கும் ஊரில் இருந்தவரை தலைதூக்கி மனதை வருத்தும். உத்தியோகம் மாறுதல் பெற்று வெளியூர் வந்த பின், பிரச்னைகள் பெரிதும் குறைந்து விட்டன.

இளம் வயசில் பல வித சினிமாக்கள், காதல் கதைகள் படித்துப் படித்து, ஒருவித ரோமாண்ட்டிக் கணவனை கற்பனை செய்து கொண்டு விடுகிறோம். ஆனால் உண்மையில் கணவர்கள் கல்யாணமான பிறகு "They take the wife for granted". பிறந்த நாளை மறந்து விடுவார்கள், திருமண நாளை நினைவில் வைத்துக் கொள்ள மாட்டார்கள் – ஆனால் அவர்களுடைய பாஸ் வீட்டுப் புதுமனைப் புகு விழா தேதியை கரெக்ட்டாக நினைவில் வைத்துக் கொள்வார்கள். ஆண்களுடைய Priorities வேறு... இது போன்ற சின்னச் சின்ன எதிர்பார்ப்புகளை தெரிவித்தால் சிரித்து ஒதுக்கித் தள்ளி விடுவார்கள்.

அதனால் தானோ என்னவோ, "ஆண்கள் செவ்வாயிலிருந்தும், பெண்கள் வெள்ளியிலிருந்தும் வந்தவர்கள்" என்று சொல்லுகிறார்கள்.

பரஸ்பர விட்டுக் கொடுத்தலும், யதார்த்தத்திற்கேற்ப மாற்றிக் கொள்ளும் மனநிலையும் இருந்தால் பல பிரச்னைகள் சுலபமாக முடிந்து விடும். எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவர் மேல் ஒருவருக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தால் போதும். வாழ்க்கை 'ஸ்மூத்'தாகப் போகும்".

பானுமதி (30 வயது) வீட்டு வேலை செய்பவர் : "எங்க வீட்டுக்காரரு என் அத்தை மகன் தான். ஆனா கலியாணத்துக்கு முன்னாடி அதிகம் பார்த்ததில்லை.

புருஷன் கோபக்காரனாக இல்லாம, என்னை உட்கார வச்சி சோறு போடறவனாய், கெட்ட பழக்கம் இல்லாதவனாய் இருக்கணும் என்று ரொம்ப ஆசைப்பட்டேன்.

நான் நாலு அண்ணன்களுக்குப் பிறகு பிறந்த ஒரே பொண்ணு. ரொம்ப அருமை. கலியாணம் ஆனவுடனேயே ரொம்ப அதிர்ச்சியாக இருந்தது. இங்கே அத்தையும் வேலைக்குப் போனாங்க. என்னையும்போகச் சொல்லிட்டாங்க. என் வீட்டுக்காரருக்கு நிலையான வேலை கிடையாது. கோபம் ஜாஸ்தி. போதாக் குறைக்கு குடிப் பழக்கம் வேற... ஊதாரித்தனம் வேற...

கலியாணம் ஆன புதிசுல மனசு ஒடிஞ்சு போயிட்டேன். வவுத்துல குழந்தை வேறு ஆயிப் போச்சு. ஆனால் மாமியார் நல்லவங்க. ஒரசுத்தியும் நல்ல மாதிரி. இப்போ குழந்தைங்க பெரிசாயிருச்சு... இவரும் குடியை குறைச்சிகிட்டாரு. ஒழுங்கா வேலைக்குப் போறாங்க.

வீட்டில் மோர் அதிகமாகி விட்டதா. புளிக்கவிடாதீர்கள். துளி உப்பு சேர்த்து ஐஸ்ட்ரேயில் கியூப் ஆக வைத்து எடுத்து, வேண்டும் போது குளிர்ந்த நீர் சேர்த்து விளாவ மோரும் வீணாகாது, விருந்தாளியையும் கவனித்த திருப்தி.

– லக்ஷ்மி ஸ்ரீனிவாசன்



எனக்கோ புள்ளைங்களுக்கோ ஒண்ணுன்னா துடிச்சுப் போயிடுவாரு.

குடியை ஒரேயடியா விட்டுட்டா சந்தோஷப்படுவேன்" என்கிறார்.

அடுத்த ஜன்மம் என்று ஒன்றிருந்தால் மீண்டும் இதே கணவரை மணந்து கொள்வாயா என்றால், "இதே இருந்துட்டுப் போவட்டும்மா. வேறு இன்னொருத்தன் எப்படி இருந்து தொலைவானோ?"

தெரிந்த பேய் தெரியாத தேவதையைவிட மேல் என்பது இவள் கருத்தோ?

"இவரும் நல்லவருதாம்மா..." என்கிறாள் பானுமதி.

கீதா (வயது 40) : "எங்களுடையது லேட் மேரேஜ். நான் டீச்சர் வேலை செய்து வந்தேன். அவர் பிசினஸ். இது பெரியவர்களாய் நடத்தி வைத்த பக்கா அரேஞ்ச்ட் மேரேஜ். கல்யாணத்துக்கு முன்னாடி ஓரிரு முறைகள் தான் சந்திச்சிருக்கோம். பார்க்க ஓரளவு நன்றாக இருப்பார் – ஆனால் நான் அழகுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தது கிடையாது. நன்றாகப் பழகுவார்.

ஆனால், கல்யாணத்திற்குப் பிறகுதான் எத்தனை எத்தனை கருத்து வேற்றுமைகள்... யோசித்துப் பார்த்தால் பைசா பெறாத விஷயங்களுக்குத்தான் சச்சரவுகள் சண்டைகள் வரும். சில சமயம் சலிப்பாக இருக்கும். ஆனாலும் விட்டுக் கொடுத்துப் போய் விடுவோம். அதிகம் விட்டுக் கொடுப்பது நான்தான். சண்டைகள் வந்தால் கூட அவை சீக்கிரமே சமாதானமாகி விடுகிறது – நடுவில் பிறர், குறிப்பாக In-Laws தலையிடாமல் இருந்தால்.

எங்களுக்குள் அடிக்கடி தோன்றிய கருத்து வேற்றுமைக்குக் காரணம் எங்கள் வயது தானோ என்று கூட நினைப்பேன். வயது அதிகம் ஆக ஆக, ஆணுக்கும் பெண்ணுக்கும் வலுவான எண்ணங்களும், உறுதியான Egoவும் ஏற்பட்டு விடுவதும் ஒரு காரணம்.

கல்யாணமாகி ஓரிரு வருடங்களில் புரிந்து கொள்ளுதல் அதிகமாகி சண்டைகள் குறைந்து விட்டது.

ஆரம்ப மோதல்களுக்குக் காரணம் – ஒரு ஆணோ, பெண்ணோ, பிறந்ததிலிருந்து நேற்று வரை முற்றிலும் மாறுபட்ட சூழ்நிலையில் வளர்ந்து வாழ்ந்து வந்ததுதான். பல வருடங்களாக ஏற்பட்ட பழக்க வழக்கங்களும் எண்ணங்களும் ஓவர் நைட்டில் மாறாது. பரஸ்பரம் புரிந்து கொண்டு விட்டுக் கொடுத்தால் வாழ்க்கை சுகமானதாகும்.

நம் கனவுகளையே நினைத்து ஏங்கிக் கொண்டு, நிஜத்தை உணர்ந்து நம்மை மாற்றிக் கொள்ளாவிட்டால் பிரச்னைதான்."

போட்டி : **உஷா ஸ்ரீகுமார்**

2

ஒரு முக்கியப் பின்னணி

அனுவின் முகத்தில் தெரிந்த மகிழ்ச்சிப் பெருக்கை பாஸ் அளக்காமல் இல்லை.

''நீ இன்னும் உன் புரொஃப்ஷனல் வாழ்வில் நிறைய உயர வேண்டியிருக்கிறது. அதற்கான முதற்படியாக இப் பயணம் அமையலாம்.''

''தாங்க்யூ சார்''

''உன்னுடைய உழைப்பை உன் திறமையின் விளைவுகளை நான் அனுபவித்துக் கொண்டிருக்கிறேன் அனு. என் பதவி உயர்வுகளுக்குப் பின் உள்ள உன் பங்களிப்புகளுக்கு நான் நன்றி தெரிவிக்க வேண்டும் என்றால் அதற்கு ஒரே வழி உன்னை நான்கு பேர் முன்பு அடையாளம் காட்டி விடுவதுதான்....''

''சார் நீங்க என்னை ரொம்ப புகழ்றீங்க.''

''இல்லை அனு. நீ என் மகள் மாதிரி. உன் உயர்வு என் இலட்சியம். அதோடு இந்த முறை உன்னை ரீஜனல் ஆபீஸுக்கு அழைப்பதற்கு இன்னொரு முக்கிய காரணமும் இருக்கிறது.

அனு கேள்விக்குறியாய்ப் பார்த்தாள்.

''அடேயப்பா! என்ன நடிப்பு! உனக்குத் தெரியாதாக்கும் அந்தக் காரணம்?''

அனு மறைக்க முயன்றும் முகத்தில் குங்குமச் சிவப்பு.

'வள் வள்' என்று குரைத்து வரவேற்றது அந்த பொமரேனியன் நாய்க்குட்டி.


சட்டென்று பயந்து போய்ப் பின்வாங்கினான் ராஜேஷ்.

'ஏய் மில்க்கி...'' என்றபடி ஓடி வந்து அதனைக் கையில் அள்ளி ஏந்தியபடி நிமிர்ந்த மாதவி ராஜேஷைப் பார்த்துப் புன்னகைத்தவளாக, ''வாங்க'' என்றாள். அவள் கைகளில் தஞ்சம் அடைந்திருந்த அந்த நாய்க்குட்டி 'ர்ர்ர்' என்ற உறுமலை விழுங்கிக் கொண்டு ராஜேஷை முறைத்தது.

''வாடா. அது ஒண்ணும் செய்யாது'' என்று தைரியம் சொல்லி உள்ளே இழுத்தான் அன்பரசு.

தயங்கியபடி உள்ளே நுழைந்து ஷூவைக் கழற்றினான் ராஜேஷ்.


வேதமூர்த்தியும் ராஜ



பெ. நாயகி

கண்டேன்!

லக்ஷ்மியும் வந்து வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றார்கள். அவர்களின் கால்களைத் தொட்டு வணங்கினான் ராஜேஷ். வடக்கே கற்ற நல்ல பழக்கம்!



"பிரயாணமெல்லாம் சௌகரியமா இருந்ததா?"

"அப்பா எப்படி இருக்காங்க?"

"இந்தப் பக்கம் வரவே கூடாதுன்னு இருக்காங்களா?"

கேள்விகள். கேள்விகள். இவை பதில் எதிர்பார்த்துக் கேட்கப்படும் கேள்விகள் அல்ல. அன்பை, அக்கறையை, ஆவலை, ஆதங்கத்தை வெளிப்படுத்துவதற்காகக் கேட்கப்படும் விசாரிப்புகள்.

ராஜேஷுக்குத் தெரியும்.

அழகான புன்னகையில் சகலத்தையும் ஏற்றுக்கொண்டவனாக, "நேராக எங்க கம்பெனி கெஸ்ட் ஹவுஸுக்குப் போய்க் குளித்து விட்டு ஃப்ரஷ் ஆகிட்டு வரலாம்னு சொல்லிப் பார்த்தேன். அன்பரசு கேட்கவே இல்லை" என்றான்.

"அதெப்படிப்பா. நீங்க திங்கட் கிழமை தான் ஜாயின் பண்ணனும்னு அவனுக்குத் தெரியும். அதற்காகவே இன்னிக்கு லீவு போட்டுட்டு உட்கார்ந்திருக்கான். எப்[illegible] விடு

வான்?"

"என்னது, 'நீங்க'ளா? என்னை அன்பரசு வோட ஃப்ரண்ட்டுங்கற ஸ்டேஜ் தாண்டி உங்க குடும்பத்துல ஒருத்தனா நினைக்கறதா இருந்தா வாடா போடான்னு கூப்பிடுங்க. இல்லைன்னா உடனே நான் இடத்தைக் காலி பண்றேன்."

வேதமூர்த்தியும் ராஜலக்ஷ்மியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு சந்தோஷமாய் புன்னகைக்க, "சரிதான்டா. வந்தவுடனேயே எல்லோரையும் கவிழ்க்கணும்னு பிளான் பண்ணாதே. வா" என்றபடி அவனைத் தன் அறைக்குள் தள்ளிக் கொண்டு போனான் அன்பரசு.

முதுகுப் பக்கம் மீண்டும் ஒரு செல்ல 'வள்'

"ஷ்ஷூ மில்க்கி! அது நம்ம வீட்டு ஆள் தான்டா. வேத்து ஆள் இல்லை. சத்தம் போட்டு மிரட்டக் கூடாது. தெரியுமா?" என்று மாதவி சொல்லிக் கொண்டிருப்பது கேட்டது.

ஒருமுறை திரும்பிப் பார்க்க விழைந்த மனதை அடக்கியவாறு நடந்தான் ராஜேஷ்.

ராஜேஷுடைய அப்பா மாணிக்கமும் வேதமூர்த்தியும் ஆதிகால நண்பர்கள். வேத மூர்த்திக்கு மதுரைதான் பூர்வீகம். அப்போது ராஜேஷின் அப்பா மதுரையில்தான் இருந் தார். வேதமூர்த்தி இன்ஜினியரிங் படித்த போது மாணிக்கம் அவருடைய அப்பாவின் துணிக்கடை பிஸினஸுக்கு உதவியாக இறங்கி விட்டார். தொழில் நிமித்தமாக அடிக்கடி சூரத், பரோடா, அகமதாபாத் என்று குஜராத் துக்குப் போய் வந்து கொண்டிருந்தபோது அங்கே அகமதாபாத் மணிநகரில் பரம்பரை யாக செட்டில் ஆகிவிட்டிருந்த தமிழ்க் குடும் பம் ஒன்றுடன் தொடர்பு ஏற்பட்டது மாணிக் கத்துக்கு. துணி கொள்முதலில் ஆரம்பித்து துணிந்து அவர் வீட்டுப் பெண்ணையே விரும்பிக் கல்யாணம் செய்து கொள்வது வரை தொடர்பு நீடித்துப் போனது.

மாணிக்கத்தின் அப்பாவுக்கு தன் ஒரே மகன் இப்படிச் செய்து விட்டதில் வெறுப்பு இருந்தாலும் அட்லீஸ்ட் தமிழ்க் குடும்பத் திலாவது பெண் எடுத்தானே என்று ஓர் ஆறு தல். மாணிக்கத்துக்கு அதன்பின் தமிழ்நாடு வரப் பிடிக்காமல் போய் விட்டது. அப்பா வையும் அழைத்துக் கொண்டு அகமதாபாத்தி லேயே செட்டில் ஆகிவிட்டார். பிஸினஸும் சூடுபிடித்து நல்ல வரும்படி இருந்ததால் அரை குஜராத்தியாகவே ஆகிப் போனார்.

மாணிக்கத்தின் மனைவி வடக்கேயே பிறந்து வளர்ந்தவள் என்றாலும் நடை உடை பாவனை பழக்கங்களில் கொஞ்சமும் தமிழ் மணம் குறையாமல் இருந்ததில் மாமனாருக்கு மிகவும் திருப்தி. முதன் முறையாக அவர் வேண்டாவெறுப்பாக அகமதாபாத் போன போது வீட்டின் வாசலில் வரவேற்ற கோலமே அவரை அசைத்து விட்டது. அதிகாலை எழுதல், தினசரி பூஜை, சுத்தமான ருசியான தமிழ்ச் சமையல், வீடு நிறைய தமிழ்ப் புத் தகங்கள், மகனைத் தமிழில் பேசவும் எழுதவும் வைத்த விதம் எல்லாமாக அவளுடைய இமேஜை அவர் அபிப்ராயத்தில் இமயத்துக்கு உயர்த்தியது. அவருக்கே கொஞ்ச நாளில் தமிழ்நாடு மறந்து போனது.

மாணிக்கத்துக்கு தமிழ்நாட்டுடன் மற்ற உறவுகள் கொஞ்சம் கொஞ்சமாக விடுபட்டுப் போனாலும் வேதமூர்த்தியுடன் மட்டும் கடிதம் மற்றும் தொலைபேசி வாயிலான தொடர்பு தொடர்ந்து கொண்டிருந்தது. ஆழ யோசித்தால் வேதமூர்த்தி ராஜலக்ஷ்மி கல் யாணத்திற்கு மட்டும்தான் மாணிக்கம் தமிழ் நாட்டுக்கே வந்து போனார்.

அதன்பின் மாணிக்கத்தின் தந்தை, அடுத்த சில ஆண்டுகளில் மனைவி என்று மரண ரூபத்தில் பேரிடிகள் அவரைத் தாக்கிய நேரங்களில் வேதமூர்த்தி குடும்பத்துடன் அகமதாபாத் போய் மாணிக்கத்துக்கு ஆறுதலாக இருந்திருக்கிறார். ராஜேஷும் அன்பரசுவும் ஒரே வயது என்பதால் அவர் களின் நட்பு இயல்பாக ஏற்பட்டது. மாதவி அப்போதெல்லாம் ரொம்ப சின்னப் பெண்.

அந்தக் கட்டத்தில் மாணிக்கத்தை மது ரைக்கு வந்து விடும்படி வற்புறுத்திப் பார்த் தார் வேதமூர்த்தி. அவர் கேட்பதாக இல்லை. மனைவி பிறந்து வளர்ந்து வாழ்ந்த ஊரை விட்டுப் பிரிய மனமில்லை என்று மறுத்து



ஷூ லேஸின் ஓரம் பிரிந்து விட்டால் ஓரங்களை உருகிய மெழுகுவர்த்தியில் நனைத்துவிட்டு விரல்கள் நடுவே உருட்டினால் ஷூ லேஸ்களின் ஓரங்கள் பிரியாமல் பத்திரமாக இருக்கும்.

– உஷா

நம் இருவரைப் பற்றி ஒரு அற்புதமான விஷயம் உள்ளது.

உண்மையில் நாங்கள் ஒருவரே.



அந்த மழலைச் செல்வம் தான் உங்கள் உலகம். அவனுக்குத் தாருங்கள்
ஒரு அன்பளிப்பை. அதை வாஞ்சையுடன் போற்றி மகிழ்வான் என்றென்றும்.

சில்ட்ரன்ஸ் கிஃப்ட் குரோத் ஃபண்ட்.

உங்களின் ஒரு அங்கமே உங்கள் மழலைச் செல்வம் அவனது அங்கத்தில் நீங்களும் ஒன்றாகத் திகழ்கிறீர்கள். இந்த பந்தத்தைக் கொண்டாட அவனுக்கு யூடிஐ-ன் சில்ட்ரன்ஸ் கிஃப்ட் குரோத் ஃபண்டை அன்பளிப்பாகத் தாருங்கள். 15 வயதிற்குட்பட்ட எந்த ஒரு குழந்தைக்கும் ஆண்டிற்கு 12 % உறுதிப்படுத்தப்பட்ட வருவாய். வருவாய் தானாகவே மறுமுதலீடு செய்யப்படும். முதலீடு செய்யப்பட்ட ரூ.10,000 வளர்ந்து 21 ஆண்டுகளில் குறைந்தபட்சம் ரூ.1,08,000 ஆகிறது. குறைந்தபட்சம் முதலீடு ரூ.2,000. உச்ச வரம்பு கிடையாது. மேலும் விவரங்களுக்கு உங்கள் அருகாமையிலுள்ள யூடிஐ கிளையை, முக்கிய பிரதிநிதியை அல்லது முகவரை அணுகவும். உங்கள் குழந்தையின் எதிர்காலம் உங்கள் கையில் இப்பொழுதே அதைப் பத்திரப்படுத்துங்கள்.

யூனிட் ட்ரஸ்ட் ஆஃப் இந்தியா

உங்கள் வளமான நாளைக்கு

இப்போது : திட்டம் விற்பனைக்காக மீண்டும் திறக்கப்பட்டுள்ளது

மியூச்சுவல் ஃபண்டுகளில் மற்றும் செக்யூரிட்டிகளில் செய்யப்படும் அனைத்து முதலீடுகள் சில இடர்களுக்கு உட்பட்டவை. செக்யூரிட்டி மார்க்கெட்டுகளை பாதிக்கும் காரணங்களால் திட்டங்களின் என் ஏ வி ஏறவும், இறங்கவும் செய்யலாம். கடந்த கால செயலாற்றல் எதிர்கால விளைவுகளைக் குறிப்பிடுவதாகக் கருதலாகாது. சி ஜி ஜி எஃப் என்பது திட்டத்தின் பெயரே தவிர திட்டத்தின் தரத்தை, எதிர்கால வாய்ப்புகளை அல்லது ஆதாயங்களை ஒரு வகையிலும் குறிப்பிடுவதாகக் கருதலாகாது. திட்டத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்படும் என்று உத்தரவாதமும் வழங்கப்பட மாட்டாது. முதலீடு செய்யும் முன் வழங்கு பத்திரத்தை தயவு செய்து படிக்கவும்.

மண்டல அலுவலகம் : 29, இராஜாஜி சாலை, சென்னை 600 001. போன் : 517101. **கிளை அலுவலகம்** : கோயம்புத்தூர் போன் : 214973. சென்னை போன் : 517101, 517190 மதுரை போன் : 738186 திருச்சி போன் : 760060

SAATCHI & SAATCHI - 009/99 C TAM B

விட்டார். மறுமணமும் செய்து கொள்ளாமல் ஒரே மகனைத் தன் மனைவி கனவு கண்டபடி வளர்ப்பதிலேயே கவனம் செலுத்தி வாழத் தொடங்கினார்.

அதன் பின்பான ஆண்டுகளில் வேத மூர்த்தி, குடும்பத்துடன் அகமதாபாத் போகும் வாய்ப்புகள் இல்லாமல் போயின. வேதமூர்த்தி மட்டும் தன் கம்பெனி வேலை விஷயமாக பம்பாய்க்கோ ஜெய்ப்பூர்க்கோ போக நேர்ந் தால் அகமதாபாத் போய் நண்பரை ஒரு நடை பார்த்து வருவது வழக்கமாகி இருந்தது.

ராஜேஷுக்கும் அன்பரசுவுக்கும் நெருக் கம் தொடர இயற்கையே வழிவகுத்துத் தந்தது.

இருவருமே இன்ஜினியரிங் படிப்புக்கு அவரவர் மாநிலங்களில் இடம் கிடைக்காமல் ரீஜனல் இன்ஜினியரிங் கல்லூரிகளுக்கான பொது விண்ணப்பத்தில் வெளி மாநில கோட் டாவில் வாரங்கல்லில் இடம்கிடைத்து சேர்ந் தனர். நான்கு வருடங்களில் அவர்களின் நட்பு இறுகிப் போனது.

ஒவ்வொரு விடுமுறையின்போதும் அன் பரசு ராஜேஷை மதுரைக்கு அழைப்பான். அப்பாவைப் பிரிந்திருப்பது கஷ்டம் என்று காரணம் கூறி அகமதாபாத் பறந்து விடுவான் ராஜேஷ். அன்பரசு மட்டும் ஓரிரு முறை அகமதாபாத் போயிருக்கிறான்.

அன்பரசுக்கு மதுரை டிவிஎஸ் நிறுவனத்தி லேயே வேலை கிடைத்து விட்டது. ராஜேஷ் அகமதாபாத்தை தலைமையகமாகக் கொண்ட இந்தியாவின் நம்பர் ஒன் ரெப்ரிஜிரேஷன் கம்பெனியான நெப்டியூன் நிறுவனத்தில் சர்வீஸ் பிரிவில் சேர்ந்தான். தன் திறமை அறிவு ஈடுபாட்டால் வெகு சீக்கிரமே பதவி உயர்வுகள் பெற்று ஆறு வருடங்களில் அதே பிரிவின் பயிற்சியாளன் நிலைக்கு உயர்ந்திருந் தான்.

அந்த நிறுவனத்தின் தெற்கு மண்டல சர்வீஸ் சென்டர்களுக்கு தலைமையகம் மதுரையில் இருந்தது. இப்போது ராஜேஷ் மூன்று மாதங்கள் இங்கே தங்கி, கடந்த ஓராண்டின் கஸ்டமர்களின் குறைகளை நிவர்த்தி செய்யவும் புதிய டிரெயினி இன்ஜினி யர்களுக்கான பயிற்சியை மேற்பார்வை இடுவதுமான பணிக்காக வந்திருக்கிறான்.

"இன்னிக்கு வீட்ல ஏதோ விசேஷம்னு தோணுது. என்னன்னு நான் தெரிஞ்சுக் கலாமா?" என்று கேட்டான் டிபன் மேஜை யில் ராஜேஷ்.

மற்றவர்கள் வியப்புடன் ஒருவரை யொரு வர் பார்த்துக் கொள்ள, "அண்ணன் வரும் வழியிலேயே உளறி இருப்பான்" என்றாள் மாதவி மெல்லிய குரலில்.



அவசரத்திற்கு...

நம் வீட்டில் ஃபிரட்டிற்கு தடவும் ஜாம் இருந்தால் போதும். சிறிதளவு எடுத்துக் கொண்டு அதனுடன் தண்ணீர் சேர்த்து மிக்ஸியில் ஒரு சுற்று சுற்றினால் "மிக்ஸட் ப்ரூட்" ரெடி. ஐஸ் துண்டுகளை சேர்த்து விருந்தினருக்குக் கொடுக்கலாம். சுவையாக இருக்கும்.

– ஆர். வித்யா

"சேச்சே! நான் ஒண்ணுமே சொல்லலை."

"ஸோ, அப்ப நான் நினைச்சது சரிதான். அங்கிள்! நீங்களே சொல்லுங்க."

அவர் ராஜலக்ஷ்மியைப் பார்க்க, "அம்மா! நீங்களாவது சொல்லுங்க" என்றான் சஸ்பென்ஸ் தாங்க முடியாமல்.

"இன்னிக்கு சாயங்காலம் மாதவியைப் பெண் பார்க்க வர்றாங்க தம்பி."

"ஐ.ஸீ. கங்கிராட்ஸ்" என்றான் ராஜேஷ்.

மாதவி நிமிர்ந்து அவனை அரை விநாடி பார்த்து விட்டு பார்வையைத் திருப்பிக் கொண்டாள்.

வேதமூர்த்தி ஆபீஸ் போய் விட பகல் பொழுது முழுதும் ராஜலக்ஷ்மி அடுப்பு வேலைகளில் பிஸியாக இருந்தாள்.

"ஏண்டா அம்மாவே தனியா எல்லாம் பார்த்திட்டிருக்காங்க. நாமும் ஏதாவது ஹெல்ப் பண்ணலாமே" என்று அழைத்துப் பார்த்தான் ராஜேஷ்.

"போடா! வேற வேலையில்லை?" என்று படுக்கையில் சாய்ந்து கொண்டு டீ.வி.யைப் போட்டான் அன்பரசு.

ராஜேஷ் தனியாகவே அடுக்களைக்குச் சென்றான்.

"எதுவும் வேணுமா தம்பி?"

"என்னம்மா, நான் உங்களைக் கேட்க நினைத்த கேள்வியை நீங்க கேட்கறீங்க. நான் ஏதாவது உதவி செய்யட்டுமா?"

"ஐயோ என்ன தம்பி இது? நீங்க ஏன் இங்கெல்லாம் வர்றீங்க? போய் அன்பரசு கூட பேசிட்டிருங்க" என்று பதறினாள் ராஜலக்ஷ்மி.

அவள் பேச்சையே காதில் வாங்காமல் அங்கே இருந்த முட்டைக்கோஸையும் கத்தி

யையும் பார்த்தான் ராஜேஷ்.

"என்ன முட்டைக்கோஸ் பொரியலா?"

"ம்"

"எப்படி செய்வீங்க?"

''அது தெரிஞ்சு என்ன பண்ணப் போறீங்க?"

"அட, சொல்லுங்கன்னா..."

"என்ன, நறுக்கி வேக வச்சு தேங்காப்பூ போட்டு தாளிச்சு இறக்க வேண்டியதுதான்."

"நான் சொல்ற மாதிரி செஞ்சு பாருங் களேன். கேரட், பீட்ரூட் எல்லாம் கிரேட் பண்ற ட்ரே இருக்குல்ல? அதில் இதையும் சீவி துருவல் எடுங்க. வேக வைக்காம நேரடி யாவே வாணலில தேங்காய்ப் பூவோட சேர்த்து வதக்கிப் பாருங்க. சொத சொதன்னு ஈரமில்லாமல் தனித்தனியா இருக்கும். வேக வைக்கிறதுல வீணாகிப் போகும் சத்தும் இதில் தங்கும்."

ராஜலக்ஷ்மி ஆச்சர்யமாகப் பார்த்தபடி நின்றாள்.

"உங்களுக்கு..."

"என்னது உங்களுக்கா?"

"அப்படியே சொல்றேன் தம்பி."

"அப்போ நான் கிளம்பறேன். நீங்க அன் பரகவையும் என்னையும் பிரிச்சுப் பார்க் கறீங்க."

''சரி. உனக்கு சமையல் தெரியும்னு அன்பரசு சொல்லுவான். இப்படி டிப்ஸ் தர்ற அளவு எக்ஸ்பர்ட்டுன்னு தெரியாது.''

"ஒண்ணு பண்ணும்மா. இன்னிக்கு சாயங் காலம் வரப் போகிறவங்களுக்கு ஸ்வீட், காரம், எப்படி செய்யணும்னு அவர்கிட்டேயே டிப்ஸ் கேட்டு பண்ணிப் பாரு. நீ வழக்கமா உன் ஸ்டைல்ல செய்யற ஐட்டங்களைச் சாப்பிட்டு யாரும் சம்பந்தத்துக்கு ஒத்துக்கு வாங்கன்னு தோணலை" என்று கமெண்ட் அடித்தாள் உள்ளே வந்த மாதவி.

"வெட்டிப் பேச்சு பேசாதடி. என்னிக்கா வது ஒரு பொழுது அடுக்களைப் பக்கம் எட் டிப் பார்த்திருப்பியா? தாயில்லாத ஆம்ப ளைப் பையன் பொறுப்பா என்னென்னவோ தெரிஞ்சிருக்கார் பாரு."

"அவ்வோதான். அம்மா க்ளீன் போல்ட்."

சாயங்காலம் மொத்தம் ஆறுபேர் வந்தார்கள்.

டாக்டர் பையன், பையனுடைய தாய், தந்தை, தங்கை, தாய்மாமன் இன்னொரு பெண் என்று ஆறு பேரும் உட்கார்ந்து பல காரம் சாப்பிட்டார்கள். அழைத்து வந்திருந்த தரகர் இந்த சம்பந்தம் எப்படியாவது முடிந்து விட வேண்டும் என்கிற பரபரப்பைக் காட்டி யபடி இருந்தார்.

அலங்கரிக்கப்பட்டிருந்த மாதவியைப் பார்த்தார்கள். அவளுடைய படிப்பு முதலான மேல் விவரங்கள் பேசினார்கள்.

இரண்டு குடும்பங்களின் பூர்வீக விவரங் கள் அலசிப் பார்த்து இரண்டு தலைமுறை களுக்கு முன்னால் ஏதோ உறவுச் சங்கிலியின் ஒரு கண்ணி இருவரையும் இணைப்பதை பரஸ்பரம் பரிமாறிக் கொண்டு ஆச்சர்யப்பட் டார்கள்.

"ஒரு நிமிஷம்" என்று அனுமதி கேட்டு இரண்டு இரண்டு பேராக வெளியே போய்ப் பேசி வந்தார்கள்.

கடைசியாக தரகரை அழைத்துப் போய் பையனுடைய தந்தையார் பேசிவிட்டு வந்து உட்கார்ந்தார்.

வேதமூர்த்தி வீட்டார் அவர்களுடைய ஒவ்வொரு அசைவையும் டென்ஷனுடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பொது ஆளான ராஜேஷ் எந்தவித உணர்ச்சியையும் வெளிக் காட்டாமல் நடப்பதைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

உள் அறையில் அடைக்கப்பட்டிருந்த மிக்கி வீக்வீக் என்று வித்தியாசமான குரலில் கத்திக் கொண்டிருந்தது.

"எங்களுக்கு பரம சந்தோஷம். எல்லாம் பிடிச்சிருக்கு. இந்த சம்பந்தம் நல்லபடியாக முடியும்னு நம்பறோம்" என்றார் பையனின் அப்பா.

வேதமூர்த்தியின் முகம் மலர்ந்தது.

''ஒரு விஷயம்...'' என்று இழுத்தார் பையனின் தாய்மாமன்.

சட்டென்று எல்லோர் முகமும் இறுக்க மாக, "சொல்லுங்க" என்று ஊக்கினார் வேத

பெருங்காயக் கட்டியை, பொரித்து எடுக்கும் பொழுது எண்ணெய் கூட ஆரம்பிக்கும் பொழுதே போட்டால்தான், மேலும் உள்ளும் ஒன்றுபோல் பொரிந்து இருக்கும். எண்ணெய் நன்கு காய்ந்து போட்டால் மேல்புறம் கறுத்துப் போனால் கூட உட்புறம் பச்சையாகவே இருக்கும்.

- ஆர். திரிபுரசுந்தரி



மூர்த்தி.

"சின்ன விஷயம்தான். உங்க மனசிலும் கூட அப்படி ஒரு எண்ணம் ஏற்பட்டிருக்க லாம். இப்போ பொதுவில் பேச வேண் டாம்னு பார்க்கறோம். நாங்க போனதுக்கப் புறம் தரகர் சொல்லுவார். அவர் சொல்ற தைக் கேட்டுக் கொண்டு கலந்து ஆலோசித்து ஒரு முடிவு சொன்னீங்கன்னா நல்லா யிருக்கும்."

எல்லோரையும் சஸ்பென்ஸில் ஆழ்த்தி விட்டு எழுந்து விடைபெற்றுச் சென்றார்கள் ஆறு பேரும்.

தரகர் அவர்களுடன் தெருமுனை வரை போய் விட்டுத் திரும்பி வரும் வரை வேத மூர்த்தி வீட்டில் யாரும் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளக் கூட இல்லை.

தரகர் திரும்பி வந்து சொன்ன விஷயம் இதுதான்.

பையனுக்கு ஒரு தங்கை இருக்கிறாள். அவள் பி.காம் படித்துவிட்டு இப்போது சும்மாதான் இருக்கிறாள். அவர்களுக்கு பெண் கொடுத்து பெண் எடுக்கும் விதமான எண்ணம் இருக்கிறது. அதற்காகவே அந்த மாதிரி பையனும் இருக்கிற வீடாகப் பார்த் துத்தான் பெண் பார்க்கவே போகிறார்கள்.

"அதை முதலிலேயே சொல்லியிருக்க லாமே" என்று கேட்டான் அன்பரசு.

வேதமூர்த்தி அவனைப் பார்வையால் அடக்கி விட்டு தரகரிடம் மேற்கொண்டு பேசச் சொன்னார்.

"அவங்க முதலில் சொல்றதில்லைங்க. அவங்க வீட்டுப் பெண்ணை சாதாரணமாக பையனின் தங்கை என்கிற விதத்தில் மட்டும் கூட்டிப் போறது வழக்கம். அவளுக்கு அந்த வீட்டுப் பையன் பிடித்தால் மட்டுமே மேற் கொண்டு பேசறதுன்னு இந்த ஏற்பாடு. இங்கே அந்த டாக்டருக்கும் மாதவியைப் பிடிச்சுப் போச்சு. அவர் தங்கைக்கும் அன்பரசுவைப் பிடிச்சுப் போச்சு. அதனால் ரெட்டைச் சம்பந்தத்துக்கு அவங்க ரெடி. நீங்க விருப்பப்பட்டா முறைப்படி அவங்க பெண்ணை நீங்க சொல்ற நாளில் போய்ப் பார்த்து உறுதி பண்ணிக்க அவங்க ஏற்பாடு பண்றாங்களாம்."

"அன்பரசு! உனக்கு வந்த திடீர் அதிர்ஷ் டத்தைப் பார். கங்கிராட்ஸ்" என்று கிசுகிசுத் தான் ராஜேஷ் அன்பரசுவின் கையைப் பிடித்து ரகசியமாக உலுக்கியபடி.

"சோ. இது நடக்கவே கூடாது" என்று முணுமுணுத்தான் அன்பரசு.

அவன் முகம் இதுவரை ராஜேஷ் என்றுமே பார்த்திராத அளவு கலவரப்பட்டி ருந்தது.

(தொடரும்)

“உலகில் யாரும் எளிதில் நிச்சயமாகச் சொல்ல முடியாதது ஒன்று உண்டு! அது பெண்கள் மனத்தில் என்ன நினைக்கிறார்கள் என்பதுதான்!” இப்படி சொன்னவர் யார் தெரியுமா? பிரபல மனோதத்துவ நிபுணரான லிங் மன் ஃப்ருட் என்பவர்தான். ஆனால் அதை ஓரளவிற்கு யூகித்து சொல்லக்கூடிய திறமை அந்த பெண்ணின் தாய்க்கு உண்டு.

சிறு குழந்தையாக பிறந்ததிலிருந்து வளர்ந்து குமரியாகும் வரை ஒரு பெண்ணிற்குத் தாய் தான் சிறந்த வழிகாட்டி; உற்ற தோழி. எழுத, படிக்க, பேச, நடக்க சொல்லிக் கொடுக்கும் அம்மா, பருவ வயதை எட்டும் பெண்ணிற்கு, அவள் உடலில் ஏற்படக் கூடிய மாற்றங்களை பற்றி முன்னெச்சரிக்கையாக எடுத்துக் கூறுகிறாள். எதனால்? பருவமடையும் பெண் அந்த நிலையைக் கண்டு பயந்து கொள்ளக் கூடாதே என்ற ஆதங்கத்தில்தான்.

அதே தாய், திருமணம் நிச்சயமாகும் வயதில் அல்லது திருமணம் நிச்சயம் ஆகிவிட்ட பெண்ணிடம் மனம் திறந்து பேசுவதுண்டோ? அநேகமாக இதற்கு இல்லை என்ற பதில்தான் பெரும்பான்மையாக இருக்கும். இது சரியா? இந்த விஷயத்தைப் பற்றியும், மேலும் சில விஷயங்களையும் திருமணமாகப் போகும் பெண் தெரிந்து கொள்ள வேண்டாமா...

முன்னாளில் நூற்றுக்கு தொண்ணூறு சதவிகித திருமணங்கள் பெற்றோரால் பார்த்து நிச்சயிக்கப்பட்டு நடந்தவையாக இருந்தது. அதில் மணமக்களுக்கு திருமணத்திற்கு முன்

மணமாலையை ஏற்க மனப்பக்குவம் இருக்கிறதா?



ஒருவரையொருவர் பார்த்துப் பேசிக் கொள்ள வாய்ப்பு அதிகம் இல்லை. இதனால், மணம் செய்து கொள்ளப் போகும் ஆண்மகனின் குணத்தைப் பற்றியோ, நடவடிக்கைகளையோ திருமணத்திற்கு முன் தெரிந்து கொள்ளப் பெண்ணால் முடியாது. ஆனால் இந்த நாட்களில் காதல் கல்யாணம் செய்து கொள்வது சகஜமாகி விட்டது. பெண்கள் படிக்கும் இடங்களில், பணி புரியும் இடங்களில் பல பண்புள்ள வாலிபர்களுடன் பேசிப் பழக வாய்ப்புகள் அதிகமாகி விட்டன. ஒரு வயதிற்கு மேல் தங்கள் மனநிலை, சூழ்நிலைக் கேற்ற கணவனைத் தேர்த்

தெடுக்கும் மனப்பக்குவம், தைரியம் பெண்களுக்கு வந்து விட்டது!

இன்னொரு பக்கம் பார்த்தால், பெற்றோர் ஜாதகம், குலம், கோத்திரம் பார்த்து நிச்சயிக்கும் மாப்பிள்ளையிடம், பெண் சுதந்திரமாக பேசி, பழகி, பின் திருமணம் செய்து கொள்ளும் நிலையும் அதிகமாகிக் கொண்டு வருகிறது. இன்னும் சிலர், வெளிநாட்டில் உள்ள மாப்பிள்ளைகளை தேர்ந்தெடுக்கும் போது பெண் போனில் பேசி, ஈ-மெயில் விலாசத்தில் தொடர்பு கொண்டு ஓரளவிற்கு பழகிக் கொள்ளும் வாய்ப்பும் அதிகரித்து வருகிறது. இவ்வளவும் இருக்க, திருமணமாகி மணவாழ்க்கை மனநிறைவும் மகிழ்ச்சியும் பூத்துக் குலுங்கும் சோலையாக இருப்பதற்கு பதில், சிலருக்கு பாலைவனமாகிப் போகிறது. எதனால்? மனதில் ஏற்படுத்திக் கொண்ட பல வித எதிர்பார்ப்புகள் நிறைவேறாத காரணத்தினால்தான்!

கல்லூரிப் படிப்பை முடித்த உடனேயே புவனாவிற்குக்



கல்யாணம் நிச்சயமாகி விட்டது. வேலைக்குப் போகும் வாய்ப்பு கூட இல்லை. திருமணமான முதல் இரவு மனதில் குறுகுறுப்புடனும், வெட்கத்துடனும் இருக்க வேண்டியதற்கு பதில் புவனாவிற்கு மனமெங்கும் பயம். கண்களில் மிரட்சி. சமாளித்துக் கொண்டு உள்ளே சென்றாலும், கணவன் பாஸ்கர் அவளருகே வந்ததுமே புவனா அழத் தொடங்கி விட்டாள். முதலில் விசும்பலாகத் தொடங்கி பின் பயத்தால் அவள் நடுங்கவே, பாஸ்கர் கண்ணியமாக ஒதுங்கிக் கொண்டான். தொடர்ந்து ஒவ்வொரு நாளும் இதே நிகழ்ச்சி. நாள் முழுவதும் பாஸ்கருடனும், அவன் உறவினர்களுடனும் சகஜமாகப் பழகிய புவனா, இரவு வந்ததுமே மாறி விடுவாள். இந்த நிலைக்குக் காரணமென்ன? சுபாவமாக அமைய வேண்டிய உறவு ஏன் இல்லை?

மணம் செய்து கொள்ளப் போகும் பெண்களுக்கு முக்கியமாக தாம்பத்திய உறவைப் பற்றி ஏற்படும் பயம் தான். சிறு வயதிலிருந்தே அதைப் பற்றி வீட்டிலோ, கல்



லூரியிலோ பேசுவது கிடையாது. அதைப் பற்றிக் குறிப்பிடுவதே தவறு என்ற எண்ணத்தினால், புதுமணப் பெண்ணின் மனதில் 'முதல் இரவு' என்ற சொல்லே பயமேற்படுத்துவதாக இருக்கிறது. இதைப் பற்றித் தனது தோழிகள் மூலம் தெரிந்து கொண்டு விட்டால் கவலையில்லை. இல்லையெனில், ஒரு தாய்தான் மகளுக்கு இதைப் பற்றி கூச்சப்படாமல் எடுத்துக்கூற வேண்டும்.

தாம்பத்திய உறவு என்பது அருவருக்கப்பட வேண்டிய விஷயமில்லை. இதே எண்ணத்துடன் கணவருடன் உறவு கொண்டால், அவர்கள் இல்லற வாழ்க்கை இனிமையாக இருக்காது. உடல் அழகு, அமைப்பு, இளமையின் பொலிவு ஆகியவை இந்த உறவில் இனிமை கூடச் செய்யும் என்பது உண்மை. ஆனாலும் இவை மட்டுமே முக்கியமானவை அல்ல. கணவனின் உணர்வை மனைவியும், மனைவியின் உணர்வை கணவனும் மதித்து விட்டுக் கொடுத்து நடக்க வேண்டும். இதுவே இல்லற வாழ்க்கை வெற்றியடைய முதற்படி என்பதை ஒரு அம்மா பெண்ணுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

'இல்லற வாழ்க்கையைப் பற்றியும் தாம்பத்திய உறவைப் பற்றியும் வளர்ந்த பெண்ணிடம் பேச என்கிறீர்களே? அது எப்படி முடியும்?' என்று நீங்கள் கேட்கலாம். முடிந்துதான் ஆக வேண்டும்! மாறாக இன்று நம்மில் பலர், பெண்களிடம், "ஆண்களிடம் அதிகம் பழகாதே! தப்பாக எதுவும் நடந்து விட்டால், நீதான் கெட்டுப் போய் விடுவாய். அவனுக்கு பாதகம் ஒன்றுமில்லை!" என்றுதான் கூறுகிறோம். இது சரியான அறிவுரைதான். ஆனால் இதில் பயன்படுத்தப்படும் வார்த்தைகளினால், பெண்ணானவள் ஆண்களுடன் ஏற்படும் நெருங்கிய உறவு என்பது மிகத் தப்பான விஷயம் என்றும், ஆண் மகன் என்பவன் தன்னை கெடுக்கவே வந்தவன் என்றும் நினைக்கிறார்கள்.

இன்று உறவினைப் பற்றி விஞ்ஞான ரீதியாக மனதில் தவறான கருத்துக்கள் பதியாத வகையில் எளிமையான புத்தகங்கள் விரிவாகவும் விளக்கத்துடனும் கிடைக்கின்றன. அவற்றைத் தேர்ந்தெடுத்து வளர்ந்த, மனமுதிர்ச்சியடைந்த உங்கள் பெண்ணிடம் கொடுத்துப் படிக்கச் சொல்லுங்கள். அதுவே அவளது இல்லற வாழ்விற்கு ஒரு நல்ல முன்னுரையாக அமையக்கூடும். அதோடு இதைப் பற்றி பேச மேலும் உங்களுக்குத் தயக்கமாக இருந்தால், மணமாகப் போகும் பெண்ணின் அக்கா, அண்ணி போன்றவர்கள் மனம் விட்டுப் பேசலாம்.

ஷோபனா ஒரு நல்ல செல்வாக்கான குடும்பத்தில் பிறந்தவள். அவளது அறிவும், அழகும் அர்விந்தைக் கவர்ந்தது. அர்விந்தின் இளமையும், கௌரவமான படிப்பும் பதவியையும், கலகலப்பாக இனிமையாக பழகும் சுபாவத்தையும் கண்டு மயங்கி ஷோபனா அர்விந்தைக் காதலித்து மணந்தாள். அனைவரும் கண்டு வியக்கும்படியும் பொறாமைப்படும்படியும் திருமணம் நடந்தது. ஒரு மாத காலம் ஓடியது. அன்று திடீரென தாய் வீட்டிற்கு வந்த ஷோபனா, "இனி நான் அங்கு போகப் போவதில்லைம்மா! அர்விந்திற்கு என்னிடம் பிரியமே இல்லை. நான் ஏமாந்து விட்டேனம்மா!" என்று அம்மாவை கட்டிக் கொண்டு அழுதாள்.

இந்த நிலைக்குக் காரணமென்ன? அதிகமான எதிர்பார்ப்புதான். சினிமாவிலும், தொலைக்காட்சியிலும் பார்ப்பது போல் கணவன் என்பவன் திருமணமான பிறகும் காதலனாகவே இருந்து கொண்டு, மனைவியுடன் எப்போதும் உல்லாசமாக பொழுதைக் கழிக்க வேண்டுமென்று நினைக்கிறார்கள். இது நடைமுறையில் முடியுமா? பிறகு அவர்கள் உத்தியோகம், குடும்பம் எல்லாம் என்ன ஆவது? தங்களுடைய சிறு சிரமங்களையும், பாதிப்புகளையும் கூட கணவன் புரிந்து கொண்டு பரிவு காட்ட வேண்டும் என்று நினைப்பது பெண்களின் இயல்பு. ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்கு வேண்டுமானால் "பாவம்! உனக்கு ரொம்பச் சிரமம்!" என்ற அனுதாப வார்த்தைகளும் அணைப்பும் கிடைக்கும். ஆனால் அதைத் தினம் தினம் எதிர்பார்த்தால்? ஏமாற்றம்தான்! இப்படி இன்றைக்குப் பல பெண்கள் சீக்கிரம் வாடிப் போய்விடுகிறார்கள். அந்த ஏமாற்றத்தினால் இந்த மனிதர் எப்

சிறு குழந்தைகளுடன் ரயில், பஸ் பிரயாணம் செய்யும் நபர்கள் கையுடன் ஒரு சிறிய புனல் (பால் குக்கருடன் தருகிறார்களே, அது போல) கொண்டு சென்றால் பாட்டிலில் ஜலம், பால் விடும் போது ரயில் ஆட்டத்தில் சிந்தாமல் விடலாம்.

– பி. விஜயலட்சுமி



பார்த்தோம் சொல்கிறோம்

திருச்சியில் இருக்கும் ஐயப்பன் கோவிலில் அனாவசியமாக எதற்கும் பணம் வாங்குவதில்லை. மிகவும் சுத்தமாக கோவிலை வைத்திருப்பதுடன் பூஜைகள் வெகு சிறப்பாக நடக் கின்றது. கரும்பலகையில் ஒரு நல்ல கதை, நாம் அவசியம் சொல்ல வேண்டிய ஒரு சுலோகம் என்று எழுதி வைத்திருக்கிறார்கள்.

இவர்கள் பிரசாதம் தரும் விதம் நன்றாக உள்ளது. பிரசாதம் காகித தட்டில்/தொன்னையில் தரப்படுகிறது. அருகிலேயே குப்பை போடுவதற்கு ஒரு டப்பாவும் வைத்திருக்கிறார்கள். ஏன் சென்னையில் ஒரு கோவிலும் இத்தனை சுத்தமாக இருப்பதில்லை.

மேலும் இந்த ஐயப்பன் கோவிலில் அமைதியான சூழல். யாரும் பேசுவதில்லை. ஆங்காங்கே அழகான வரிகளில் பக்தர்களுக்குக் கட்டளைகள். கோயில் இருக்கும் அந்தத் தெருவையே சுத்தமாக வைத்திருக்கிறார்கள்!

சென்னையில் பிரசித்தி பெற்ற கபாலீஸ்வரர் கோவிலின் மதில் சுவர்களின் அருகில் சிறுநீர் கழிக்கிறார்கள், எச்சில் துப்புகிறார்கள். கோவிலின் உள்ளேயும் பிரசாதம், தேங்காய்ப் பழம் சாப்பிட்டு விட்டு அசுத்தம் செய்கிறார்கள். இறைவன் இருக்கும் இடம் புனிதமானது. நிசப்தமாக இறைவனை வழிபட்டு இறைவன் ஸ்தலத்தை சுத்தமாக வைத்துக் கொள்ள பக்தர்களாகிய நாம்தான் முன்வர வேண்டும். பல கோவில்களில் இந்த அவல நிலைதான். திருச்சி ஐயப்பன் கோவிலை பார்த்துவிட்டு வந்த பிறகு மற்ற கோவில்களையும் இதுபோல் பராமரிக்கும் காலம் எப்போது வரும் என என் மனம் ஏங்கியது.

— உஷா

படிப்பட்டவர்? இவளுடைய அன்பு உண்மையானதா? அல்லது நாம் தவறு செய்து விட்டோமா? போன்ற சந்தேகங்கள் தோன்றும்.

நடைமுறை வாழ்க்கைக்கு ஏற்ற வகையில் கணவரின் பதவி, கூட்டுக் குடும்பமாக இருந்தால் அந்தச் சூழ்நிலை, வயதிற்கேற்ற கண்ணியம் ஆகியவற்றுடன் ஒத்துப் போய் நடந்து நல்ல பெயரெடுக்க உங்கள் மகளை ஓரளவு வளைந்து கொடுக்கச் சொல்லுங்கள். இது திடீரென்று வராது. இந்த வளைந்து கொடுக்கும் சுபாவம், சிறு வயதிலிருந்து பழக்கினால்தான் வரும். இருந்தாலும் பரவாயில்லை! சிலருக்கு பிறந்த வீட்டில் தனியாக இருந்து பழகியிருக்கக் கூடும். அவர்களை திடீரென மாற்ற முடியாது. மெதுவாக சூழ்நிலைக்கு ஏற்ப பழகிக் கொள்ள அறிவுறுத்துங்கள். உங்கள் மகள் மிக அழகாக சூழ்நிலைக்கேற்றபடி நடந்து கொள்வதில்லை, அவள் கணவனுக்கு அவள் மீது காதலும், அன்பும் பல மடங்காக உயர்வதை, அவளது முகத்தில் தெரியும் செழுமை உங்களுக்குக் காட்டிக் கொடுக்கும்!

ராதிகா தங்கையின் திருமணத்திற்காக சென்னை வந்திருந்தாள். இரண்டு வருடங்களுக்கு முன் சந்திரனை மணந்து அமெரிக்கா சென்றவள் இப்போதுதான் வந்திருக்கிறாள். அவளுடைய தாய் கஸ்தூரி, இரண்டாவது மகளின் திருமணத்தின் வேலைகளில் ஈடுபட்டிருந்தாலும், தாயின் மனதோரத்தில் பெரிய பெண் ராதிகாவின் கண்களில் உற்சாகமில்லாதது போன்ற உணர்வு ஏற்பட்டது. தானே சொல்லட்டும் என்று பொறுமையாயிருந்தாள்.

அக்காவும் தங்கையும் இரண்டு வருட கதையைப் பேசித் தீர்த்தனர். திருமணமாகப் போகும் தங்கை லாவண்யாவிடம், "நீ ரொம்ப அதிர்ஷ்டசாலி. கல்யாணம் நிச்சயமாகி திருமணம் நடக்கவிருக்கும் இரண்டு மாத காலத்தில் அவரது குணங்களையும் புரிந்து கொண்டிருப்பாய். திருமணமாகிப் போவதும் பெரிய குடும்பத்தில். கலகலப்பாக இருக்கும். என்னைப் போல் இல்லை!" என்றாள் ராதிகா.

"அப்படியா சொல்கிறாய்? எனக்கு உன்னைப் போல் திருமணம் செய்து கொண்டு அவரை மட்டும் கூட்டிக் கொண்டு அமெரிக்காவிற்கு ஓடிப் போய் விட முடியவில்லையே என்று வருத்தம் தெரியுமா?"

தனது இரு பெண்களும் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டுக் கொண்டு அங்கு வந்து அமர்ந்தாள் கஸ்தூரி.

"ஏம்மா ராதிகா! நீ சந்தோஷமாயில்லையா?"

"அப்படியில்லைமா! சந்திரன் வந்து பார்த்து கல்யாணம் செய்து கொண்டு அழைத்துப் போனது, எல்லாம் பத்து நாட்களில் ரொம்பவும் வேகமாக முடிந்து விட்டது. அவருடைய பழக்க வழக்கங்கள் பற்றிப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஒன்றிற்கு மேல் ஒன்றாக அதிர்ச்சி. முதலிரவில் சந்திரன் சிகரெட் பிடிப்பதைப் பார்த்தது முதல் அதிர்ச்சி. இதெல்லாம் இன்றைய இளைஞர்களின் வாழ்க்கையில்

சகஜம்தான். ஆனால் அதை ஏற்றுக் கொள்ளக் கூடிய பெண்களைத்தான் அவர்கள் தேர்ந்தெடுக்க வேண்டும். இல்லையெனில் ஒவ்வொரு வழக்கத்தையும் ஏற்றுக் கொள்ள நான் படுவதைப் போல் கஷ்டப்படுவார்கள். வெளிநாடாகப் போய்விட்டதால் இவற்றைப் பற்றிப் பேசி பரிமாறிக் கொள்ளக் கூட தோழிகளோ, உறவினர்களோ இல்லை."

அமெரிக்கா போன்ற மேல் நாடுகளுக்கு சென்றால், ஒன்று இயந்திர வாழ்க்கைக்கு பழகிக் கொள்ள வேண்டும். உறவினர், நண்பர்கள், பண்டிகை உல்லாசம் இவை அனைத்தும் அங்கும் உண்டு. ஆனால் இரண்டாம் பட்சமாகத்தான். படிப்பதும், வேலைக்குச் செல்வதையும் பிரதானமாக ஏற்றுக் கொள்பவர்கள்தான் இந்தச் சூழ்நிலைகளில் வாழத் தெரிந்தவர்கள். ராதிகாவைப் போல் தோழிகள்,



அரிசி உப்புமா செய்யும்போது, தாளிதம் செய்த உடன் ஜலம் விடுகிறோம் அல்லவா? அப்போது ஒரு கைப்பிடி உளுத்தம் பருப்பை ஊற வைத்து சிறிது கரகரப்பாக அரைத்து அந்த ஜலத்தில் விடவும், பிறகு அரிசிக் குருணையைப் போட்டு உப்புமா கிளறவும். ருசியும், மணமும் கூடி இருக்கும்.

– விஜயலட்சுமி

பண்டிகை விழாக்கள், திரைப்படங்கள் இன்றி வாழ விரும்புவோருக்கு அந்த இடம் சரியானதல்ல. வெளிநாட்டு வரன் என்று வேகமாக முடிவை எடுத்து விடாதீர்கள். இந்தியாவிலும் பல நல்ல மாப்பிள்ளைகள் இருக்கின்றனர். ராதிகா போன்றவர்கள் தங்கள் வாழ்க்கையை மட்டும் அல்லாது சந்திரன் போன்றவர்களின் வாழ்க்கையையும் பாதிக்கின்றனர்.

எனவே திருமணத்திற்கு முன் உங்கள் மகளுடன் அவன் எப்படிப்பட்ட வாழ்க்கையை தேர்ந்தெடுக்க விரும்புகிறான் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். பெற்றோர் பார்த்து வைத்த பெண் என்று அவசரமாக மணம் செய்து கொண்டு, பிறகு அவர்கள் தனிமையில் வாடுவதையும், படிக்கவோ வேலைக்குச் செல்லவோ முடியாத காரணத்தால் அழுது அடம் பிடிப்பதையும், பார்த்து வழிபுரியாமல் வேதனையை அனுபவித்துக் கொண்டிருக்கும் ஆண்கள் பலர் இருக்கின்றனர். இவ்வாறு கணவன் மனைவியிடையே அடிப்படைக் கருத்து ஒற்றுமை இல்லாது போனால் இல்லற வாழ்க்கை எப்படி இனிமையாக அமைய முடியும்?

தாய் என்ற ஸ்தானத்திலிருந்து, ஒரு பெண்ணிடம் கணவன் என்ன எதிர்பார்க்கக் கூடும் என்பதைப் பற்றி அன்பாக, தெளிவாக, கண்ணியமாக எடுத்துச் சொல்லுங்கள். வீட்டை நன்றாகப் பராமரித்து, உறவினர்களுடன் ஒத்துப் போகப் பழக வேண்டும். எல்லாக் கணவன்மார்களும் மனைவி நல்ல ருசியான உணவை சமைத்துப் பரிமாற வேண்டும் என்றுதான் எண்ணுகிறார்கள். அதனால் அடிப்படை சமையலையும், வித்தியாசமான சமையல் குறிப்புகளை அடங்கிய புத்தகங்களையும் கட்டாயம் வாங்கித் தாருங்கள். இப்போது சமையல் குறிப்புகள் சி.டி. ராம் டிஸ்க்கில் கூட வெளி வருகிறது!

சற்று வளமான செல்வ நிலையில் உள்ள கணவர்கள் மனைவிக்கு மற்றவர்கள் முன் நன்கு பழகக்கூடிய இனிய பண்புகள் இருக்க வேண்டுமென நினைக்கிறார்கள். தங்களுடைய பதவி, வாழ்க்கை நிலை, தனது முன்னேற்றம் தனது நண்பர்களின் நட்புறவு, தங்களது பிரயாணம் ஆகியவற்றில் மனைவி பங்கு கொள்ள வேண்டும் என நினைக்கிறார்கள். அவற்றைப் பற்றி எடுத்துக் கூறி உங்கள் மகளை தயார் செய்யுங்கள். திருமணம் நிச்சயமாகும் தருணத்தில் பெண்ணை மணக்கப் போகும் ஆணுடன் பேச அனுமதியுங்கள். அப்போது அவளால் வித்தியாசமான ஆண் சுபாவங்களைப் புரிந்து கொள்ள முடியும். சில நாட்கள் கண்ணியமாகப் பழகுவதன் மூலம் கணவனாகப் போகும் வாலிபனின் விருப்பு வெறுப்புகள், பழக்க வழக்கங்களைப் பற்றி பெண் தெரிந்து கொள்ளக்கூடும்.

இல்லறம் என்பது கணவன் – மனைவி இருவரும் இணைந்து அன்புடனும், பண்புடனும், மகிழ்ச்சியுடனும் நடத்த வேண்டிய ஒன்று. கணவன் மனைவி இருவருமே ஒருவரைப் பற்றி மற்றொருவருக்கு அறிமுகமில்லாமல் தொடங்கும் ஒரு முக்கியமான செயல். இந்த வினோதமான செயல் வெற்றி பெறுவதற்கு இருவரின் ஒத்துழைப்பும் வேண்டும். கவிஞர் கூறியது போல் வண்டி ஓட இரண்டு சக்கரங்களும் சரியாக அமைய வேண்டும். அந்த சக்கரத்தில் ஒன்றாக திகழப் போகும் உங்கள் மகன் குறையேதுமின்றி, கலக்கமேதும் இல்லாமல், இருக்க வேண்டும்.

தொகுப்பு : **ராஜ்யஸ்ரீ சந்திரசேகர்**

இம்மாத இல்லத்தரசி

பொருள் : சுற்றுலா உணவு

முதல் பரிசு

டூர் புளியோதரை டிலைட்

சுற்றுலாவிற்கு எடுத்துச் செல்லும் கலவை சாதங்களில் முதலிடம் புளியோதரைக்குத்தான். 'புளியோதரை தயாரிக்க எங்களுக்குத் தெரியாதா?' என கேட்காதீர்கள். ஒவ்வொருவர் தயாரிக்கும் முறையும், பக்குவமும், ருசியும் மாறுபடுகிறது. புளியோதரை எக்ஸ்பர்ட்டான என் மாமியார் தயாரிக்கும் முறையை இங்கே தருகிறேன். சமையலறை கடப்பக்கல் மேடையில் சாதத்தைப் போட்டு, அவர் புளியோதரை கலக்கும் போது, பெருமாள் கோவில் மடப்பள்ளியில் இருக்கும் தெய்வீக உணர்வு எனக்கு ஏற்படும். அவ்வளவு சிரத்தையும், கவனமும் ருசியும் அதில் இருக்கும்.

சுற்றுலா செல்வதற்கு ஒரு வாரம் அல்லது 10 நாட்கள் முன்பே உங்களுக்கு நேரம் இருக்கும்பொழுது, இந்த புளிக்காய்ச்சலையும், புளியோதரைப் பொடியையும் தயார் செய்து வைத்துக் கொள்ளுங்கள். சரியான பக்குவத்தில் தயாரிக்கப்பட்டால், இவைகள் ஆறு மாதமானாலும் கெடாது. வேண்டும் பொழுது சாதத்தை மட்டும் வடித்துக் கொண்டு புளியோதரை தயார் செய்து விடலாம்.

புளிக்காய்ச்சல் தயாரிக்கும் விதம் :

தேவையான பொருட்கள் :

நல்ல தரமான புளி - 150 கிராம்.
உப்பு - தேவையான அளவு.
கடுகு - 1 ஸ்பூன்.
சீரகம் - 1 ஸ்பூன்.

• சியாமளா



வெந்தயம் - 1 ஸ்பூன்.
நல்லெண்ணெய் - குழிகரண்டியில் 2,
மிளகாய் வற்றல் - 15

முதலில் நல்ல தரமான புளியை தண்ணீரில் நன்கு ஊறவைக்கவும். தேவையான உப்பு சேர்க்கவும். புளியைக் கரைத்து வடிகட்டி வைத்துக் கொள்ளவும். அடுப்பில் வாணலியில் நல்லெண்ணெய் விட்டு முழு மிளகாய் வற்றலை நன்கு வறுத்து, பின் கடுகு, சீரகத்தைப் பொரித்து, கரைத்த புளி ஜலத்தை சேர்த்து கொதிக்க விடவும். பாதி வெந்தவுடன் பச்சை வெந்தயத்தை சேர்க்கவும். அடுப்பை சிம்மில் வைத்து, புளிக்காய்ச்சலை கொதிக்க விடவும். நன்கு இளறி விட வேண்டும். 'தளக்கு', 'தளக்கு' என கொதி வந்து, எண்ணெய் மேலே வரும் சமயம் புளிக்காய்ச்சல் தயார் என்று அர்த்தம். அடுப்பை மூடி, நன்கு ஆறியவுடன் பாட்டிலில் எடுத்து வைக்கவும்.



• சரோஜா

புளியோதரை பொடி தயார் செய்யும் விதம் :

தேவையான பொருட்கள் :

கொத்துமல்லி விதை (தனியா) - 6 டீஸ்பூன்.
மிளகாய் வற்றல் - 15 - 20
வெந்தயம் - 1 டீஸ்பூன்,
பெருங்காயம் - சிறிய துண்டு.



• உமா ஜெயந்தி

அடுப்பை சிம்மில் வைத்து வெறும் வாணலியில் வெந்தயத்தை சிவக்க வறுத்து எடுத்து வைத்துக் கொள்ளவும். வாணலியில் சிறிது எண்ணெய் விட்டு பெருங்காயத்தைப் பொரித்து எடுத்துக் கொள்ளவும். பின் மி. வற்றல், தனியாவை நன்கு வறுத்து, எண்ணெயில்லாமல் ஒட்ட வடித்து எடுக்கவும். ஆற வைத்து எல்லா சாமான்களையும் மிக்ஸியில் நைஸ் பொடியாக்கவும். இதுவே புளியோதரைப் பொடி. பக்குவமாக தயாரித்தால் இந்தப் பொடி ஆறு மாசம் வரை சிக்கு வாசனை இல்லாமல் நன்றாக இருக்கும்.

இப்போது புளிக்காய்ச்சலும், புளியோதரைப் பொடியும் தயார். இனி சாதம் வடித்து புளியோதரை கலக்க வேண்டியதுதான் பாக்கி.

புளியோதரை கலக்கும் விதம் :

தேவையான பொருட்கள் :
புளிக்காய்ச்சல் - தேவையான அளவு.
புளியோதரைப் பொடி - தேவையான அளவு.
உதிர் உதிராக வடிக்கப்பட்ட சாதம் - தேவையான அளவு.
மஞ்சள் பொடி, நல்லெண்ணெய், பச்சை கருவேப்பிலை, நிலக்கடலை - தேவையான அளவு,
முந்திரி, கடலை பருப்பு, உளுத்தம் பருப்பு.

• சி. அலமேலு




சமையலறை கடப்பைக் கல் மீதோ அல்லது தாம்பாளத்திலோ நன்கு சூடான, உதிர் உதிராக வடிக்கப்பட்ட சாதத்தைப் பரவலாக கரண்டியால் எடுத்துப் போடவும். அதன் மீது மஞ்சள் பொடியை பரவலாக தூவி, நல்லெண்ணெயை பரவலாக சேர்த்து, பச்சை கருவேப்பிலையையும் பரவலாக போடவும். சாதத்தை ஆற விடவும். பின் தேவையான புளிக்காய்ச்சலை சாதத்தில் போட்டு சாதம் குழையாமல் கரண்டியால் கலக்கவும். பின் புளியோதரைப் பொடியையும், இட்டமான அளவு உப்பு சேர்த்து கலக்கவும். நிலக்கடலை, முந்திரி, கடலை பருப்பு, உளுத்தம் பருப்பை எண்ணெயில் வறுத்து புளியோதரையில் சேர்க்கவும். சூப்பர் புளியோதரை இப்பொழுது ரெடி.

உருளைக்கிழங்கு சிப்ஸ், பொரித்த அப்பளம், வறுத்த வடாம், மெலிதாக தட்டப்பட்ட உளுந்து வடை (ஆஞ்சநேயர் கோவில் வடை.) இவைகளில் ஏதேனும் ஒன்று இந்த பெருமாள் கோவில் புளியோதரைக்கு சூப்பர் காம்பினேஷன். சுற்றுலாவிற்கு உகந்த உணவு இது.

• சாந்தகுமாரி



- சியாமளா
ராஜகோபுரம்,
சென்னை - 1



ரூ. 420 விலை மதிப்புள்ள இங்கிலீஷ் கோர்ஸ் இலவசம் கோடை விடுமுறை வாய்ப்பு...

இந்த கோர்ஸ் மற்றும் [illegible] விலையின் விபரங்கள்

டிவிஷன்-1	டிவிஷன்-2	டிவிஷன்-3	இவை அனைத்தும்	ஃப்ரீ !
ரூ. 110	ரூ. 140	ரூ. 170		

டிவிஷன்-1 : (பேசிக் இங்கிலீஷ் கோர்ஸ்) A-B-C-D யில் இருந்து ஆங்கிலம் கற்பிக்கப்படும். ஆங்கிலம் சிறிதும் தெரியாதவர்களும் இந்த கோர்ஸ் மூலம் தொடக்க நிலை ஆங்கிலம் கற்க முடியும். அனைவருக்கும் சுலபமாக புரியும் விதத்தில் ஆசிரியர் உங்கள் முன்பு இருந்து கற்றுத் தரும்படியான உணர்வை உங்களுக்கு ஏற்படுத்தும். இந்த கோர்ஸின் ஃபீஸ் ரூ. 110/- மட்டுமே.

டிவிஷன்-2 : (இங்கிலீஷ் கிராமர் கோர்ஸ்) : இலக்கணம் இல்லாத மொழி, உப்பு இல்லாத உணவைப் போன்றது. அதுபோல இலக்கணம் இல்லாத மொழி, தவறுகள் இல்லாதவாறு சுலபமான முறைகளில் நீங்களே மற்றொருவருக்கு கற்றுத் தரும் வண்ணம் மிக அழகாக கற்பிக்கப்படும். இந்த கோர்சின் ஃபீஸ் ரூ. 140/- மட்டும்.

டிவிஷன்-3 : (இங்கிலீஷ் ரைட்டிங் மற்றும் ஸ்பீக்கிங் கோர்ஸ்) : ஆங்கிலம் சுலபமாக எழுதவும் மற்றும் படிக்கவும் கற்றுத்தரும் ஈசி இங்கிலீஷ் கோர்ஸ். தடுமாற்றமின்றி பேசவும் மற்றும் தவறுகள் இன்றி உங்கள் எண்ணங்களை ஆங்கிலத்தில் வெளிப்படுத்தவும் மிகவும் நவீனமான கோர்ஸ். இந்த கோர்ஸ் மூலமாக நீங்கள் ஆங்கிலத்தில் சுலபமாக எழுதவும் படிக்கவும் முடியும். இந்த கோர்சின் ஃபீஸ் ரூ. 170/-.

லேட்டஸ்ட் டெக்னாலஜி உதவியுடன் தயாரிக்கப்பட்ட கோர்ஸ்



கோர்சை இலவசமாக பெற நியமனமான நிபந்தனைகள்

• இந்த கோர்சை இலவசமாக பெற ஒரு கூப்பனை கட்டாயமாக அனுப்ப வேண்டும். • ஜெராக்ஸ் மற்றும் கார்டுகளின் மீது எழுதி அனுப்புபவர்களுக்கு கோர்சை அனுப்ப முடியாது. • உங்களுடைய நண்பருக்கு இந்த கோர்ஸ் தேவைப்பட்டால், மற்றொரு பத்திரிகையிலுள்ள கூப்பனை எழுதி அனுப்ப வேண்டும். • இந்த கோர்ஸ் முழுவதும் ஃப்ரீ ! ஆனால் இதை அனுப்புவதற்கு ஆகும் செலவுகளை நீங்களே ஏற்க வேண்டும். • கவரின் மீது தற்பொழுதைய விலையின் படி உள்ள 3 ரூ கொண்ட ஸ்டாம்ப்பை ஒட்ட வேண்டும். • கோடை விடுமுறை நாட்கள் முடிந்து போவதற்குள் இக்கூப்பனை அனுப்ப வேண்டும். • கோடை விடுமுறை நேரத்தில், விளம்பரத்திற்காக, நாங்கள் வழங்கும் இந்த வாய்ப்புக்கு தடை ஏதும் நேரிட்டால் அதன் முழு பொறுப்பும் எங்களுடையது ! இதனைக் குறித்து கடித போக்குவரத்திற்கு அவகாசம் கிடையாது. • எக்காரணத்தைக் கொண்டாவது இக்கோர்ஸை உங்களுக்கு அனுப்பித்தர முடியாவிட்டால் எந்த வகையிலும் நாங்கள் அதற்கு பொறுப்பாளிகள் அல்ல. • நாள்தோறும் ஆயிரக்கணக்கானவர்களுக்கு இக்கோர்சை அனுப்ப வேண்டி இருக்கும். அதனால் குறைந்தது மூன்று வாரங்கள் கால அவகாசம் எங்களுக்கு தேவையாக இருக்கும்.

இக்கூப்பனை உடனே நிரப்பி அனுப்பவும்

STUDENT'S ENGLISH INSTITUTE (Tamil Division)

P.B. No. 8569, 15/1, Parthasarathipuram Extn., T. Nagar, Chennai - 600 017. 339

எனக்கு ரூ. 420/– விலைமதிப்புள்ள டிவிஷன் 1,2,3, மொத்த பாடங்களை இலவசமாக அனுப்பவும் தபால் செலவுகள் + பேக்கேஜ் ஃபார்வார்டிங் செலவுகள் + அட்வர்டைசிங் மெயின்டெனென்ஸ் செலவுகளுக்காக 100 ரூபாயை தபால்காரரிடம் செலுத்தி பெற்றுக் கொள்கிறேன் என உறுதி கூறுகிறேன். இதுபோன்ற அபூர்வமான வாய்ப்பை அளித்துக் கொண்டிருக்கும் உங்களுக்கு எங்களின் நன்றி.

(முக்கிய அறிவிப்பு : கம்ப்யூட்டரில் பத்திரப்படுத்துவதற்காக உங்கள் விலாசத்தை தெளிவாக, புரியும் விதத்தில் ஆங்கிலத்தில் எழுதவும்.)

என் பெயர் ____________________

என் முகவரி ____________________

____________________ பின்கோடு

இரண்டாம் பரிசு

ஆல் இன் ஒன் சேன்ட்விச்

தேவையான பொருட்கள் :

பிரட் ஸ்லைஸ் (பிளெயின்) - 10

முளைவந்த தானியங்கள் சன்னமாக நறுக்கிய பீன்ஸ், பட்டாணி, கேரட், காலி பிளவர் போன்ற காய்கறிகள் - 1 கப்,

வெங்காயம் சன்னமாக நறுக்கியது - ½ கப்,

நன்றாக வெந்து கட்டியில்லாமல் மசித்துத் தேவையான அளவு உப்பு சேர்த்த உருளைக் கிழங்கு - 1 கப்,

கிரீன்சட்னி - பொதினா + 2 பச்சை மிளகாய் (அ) பச்சை கொத்துமல்லி + 2 ப. மிளகாய் சேர்த்து அரைத்தது - ½ கப்,

மைதா சாஸ் - 1 கப்,

துருவிய சீஸ் - 1 கப்,

மிளகுப் பொடி - 1 ஸ்பூன்,

காய்கறிகளை வதக்க ரீபைண்ட் ஆயில் - 4 ஸ்பூன்

மைதா சாஸ் தயாரிக்கும் முறை :

¼ கப் மைதாவுடன் ஒரு கப் பால் சேர்த்து கட்டியில்லாமல் கரைத்துக் கொண்டு வாண லியில் 2 ஸ்பூன் வெண்ணெய் போட்டு உருகியவுடன் (வெண்ணெயாக வரும்போதே) கரைத்த மைதாவைக் கொட்டி இரண்டு நிமி டங்கள் கிளறினால் ஜெல்லி பதத்தில் மைதா சாஸ் ரெடி.

வாணலியில் ரீபைண்ட் ஆயில் காய்ந்ததும் வெங்காயத்தைப் போட்டு நன்கு வதக்கியபின் காய்கறிகளையும் முளைவந்த தானியங் களையும் சேர்த்துத் தேவையான அளவு உப் பும் சேர்த்து வதக்கவும். சிறிது தண்ணீர் தெளித்து மூடி வைத்தால் விரைவில் நன்றாக வெந்து விடும். பிறகு மசித்த உருளைக் கிழங்கையும் சேர்த்துக் கலக்க வேண்டும்.

பிரட் ஸ்லைஸில் முதலில் ஒரு ஸ்பூன் மைதா சாஸ் நன்றாகத் தடவி லேசாக மிளகுத் தூள் தூவி அதன் மேல் இரண்டு ஸ்பூன் காய் கறிக் கலவையை சீராகப் பரத்த வேண்டும். அதற்கு மேல் கிரீன் சட்னி ஒரு ஸ்பூன் எடுத் துப் பரத்த வேண்டும். அதற்கு மேல் மீண்டும் ஒரு ஸ்பூன் மைதா சாஸ் தடவி ஒரு ஸ்பூன் சீஸ் தூளையும் தூவி மற்றொரு பிரட் ஸ்லைஸை அதன் மேல் வைத்து கையால் இலேசாக அழுத்த வேண்டும். பக்கங்களில் காய்கறிகள் பிதுங்கி வரக் கூடாது. பக்கங் களில் இடைவெளி இருந்தால் மைதா சாஸ்

ஸ்ரீ டிராவல்ஸ்

12/A ரெட்ஹில்ஸ் ரோடு, கொளத்தூர், சென்னை – 99.
Ph: 5378620/5584866 Fax: 5584866
E-மெயில் : Sritrave@ md3.vsnl.net.in

அனல் பறக்கும் கோடையில் குளு குளு மலைப் பிரதேசங்கள்!

ST 4 புறப்படும் தேதி 21.04.1999

சென்னை – கல்கத்தா – டார்ஜிலிங் – கேங்க்டாக் (சிக்கிம்) – காத்மாண்டு (நேபாளம்) – வாரணாசி – அலகாபாத் – சென்னை.

பயணத் தொகை ரூபாய் 6,600/- 13 நாட்கள்

ST 5 புறப்படும் தேதி 7.05.1999

சென்னை – ஆக்ரா – டில்லி – சிம்லா – குலு – மணாலி – சண்டிகார் – ஹரித்துவார்– ரிஷிகேஷ் – டில்லி – சென்னை.

பயணத் தொகை ரூபாய் 5,600/- 12 நாட்கள்

மேற்கண்ட இரண்டு சுற்றுலாக்களிலும் நட்சத்திர ஹோட்டலில் பிரபல திரைப்பட சிரிப்பு நடிகர்கள் திரு. ராக்கெட் ராமநாதன், திருமதி. காந்திமதி, திரு. ஓமக்குச்சி நரசிம்மன் ஆகியோர் கலந்து கொள்ளும் சிற(ரி)ப்பு நடைபெறும்.

ST 6 *பக்தி மணம் பரப்பும் பரவச இறை உலா!*

புறப்படும் தேதி 24.05.1999

சென்னை – காசி – சாரநாத் – அலகாபாத் – ஜம்மு வைஷ்ணவி தேவி – அமிர்தசரஸ் – ஹரித்துவார் – ரிஷிகேஷ் – கர்ணபிரயாக் – ருத்ரபிரயாக் – பத்ரிநாத் – கேதாரிநாத் – டில்லி – ஆக்ரா – சென்னை.

பயணத் தொகை ரூபாய் 6,600/- 15 நாட்கள்

ரிஷிகேஷில் திருமிகு. ராமானுஜச்சாரியார் அவர்களின் சிறப்புரை மற்றும் புது டெல்லியில் ஐந்து நட்சத்திர ஹோட்டலில் திருவாளர். சுகி. சிவம் அவர்களின் ஆன்மீக சொற்பொழிவும் நடைபெறும்.

- அனைத்து இடங்களிலும் தரமான ரூம் வசதிகள்
- டூர் முழுவதும் சைவ உணவு
- எல்லா இடங்களிலும் நுழைவுக் கட்டணம் உட்பட
- நட்சத்திர ஹோட்டலில் பிரத்தியேக விருந்து

உடனடியாக முன் பணம் ரூபாய் 3,000/- செலுத்துபவர்களுக்கு மட்டுமே கண்டிப்பாக இடங்கள் கிடைக்கும்.

அனைத்து கிரெடிட் கார்டுகளும் ஏற்றுக் கொள்ளப்படும்.

L.T.C. வசதி உண்டு

(இரயிலில் **II tier A/C** வேண்டுபவர்களுக்கு பிரத்யேக வசதி செய்து கொடுக்கப்படும்)

ஒருமுறை ஸ்ரீ டிராவல்ஸ் மூலம் பயணம் செய்திடுங்கள்.

சுகமான அனுபவம் உங்களுக்கு காத்திருக்கிறது.

ஏமாற்றத்தைத் தவிர்க்க! உடனே முந்துங்கள்!

தடவி நிரப்பலாம். பிறகு டோஸ்டரிலோ, தவாவிலோ சுட்டு எடுக்கலாம். தொட்டுக் கொள்ள எதுவும் தேவையில்லை. பக்கத்தி லிருக்கும் இடங்களுக்கு சுற்றுலா போகும் போது எடுத்துச் செல்ல ஏற்ற உணவு. இவ்வித மாகத் தயாரிக்கப்படும் சேண்ட்விச் சிறந்த சத்துமிக்க ஆகாரம்.

– சி. அலமேலு,
சென்னை – 92.

மூன்றாம் பரிசு

காஞ்சிபுரம் இட்லி

தேவையான பொருட்கள் :

புழுங்கல் அரிசி – ஒரு ஆழாக்கு,
உ. பருப்பு – ஒரு ஆழாக்கு,
பெருங்காயத் தூள் – அரை தேக்கரண்டி,
சுக்குப் பொடி – ஒரு தேக்கரண்டி,
மிளகு ஒன்று இரண்டாக பொடி
செய்தது – ஒரு மேஜை கரண்டி,
சீரகம் – ஒரு மேஜை கரண்டி,
நல்லெண்ணெய் – அரை கப்,
நெய் – நாலு மேஜை கரண்டி,
தயிர் (புளிப்பாக இருந்தால்
சுவை அதிகம்) – ஒரு கப்,
உப்பு – ஒன்றரை தேக்கரண்டி.

செய்முறை :

அரிசி பருப்பு இரண்டையும் ஒன்றாகக் கலந்து சுமார் மூன்று மணி நேரம் ஊற வைத்து, சாதா இட்லிக்கு அரைப்பதை விட சிறிது உறப்பாக தண்ணீர் விடாமல் கெட்டி யாக அரைத்துக் கொள்ளவும். பிறகு மேற் கூறிய பொருட்களை மாவுடன் கலந்து ஓரிரவு வைக்கவும். மறுநாள் கட்டூரி அல்லது தம்ள ரில் உட்பக்கம் எண்ணெய் தடவி முக்கால் பாகத்திற்கு மாவை ஊற்றி குக்கரில் வெயிட் போடாமல் பதினைந்து அல்லது இருபது நிமி டம் வேகவைக்கவும். பிறகு தென்னங்குச்சி அல்லது காய் வெட்டும் கத்தியால் இட்டி லியின் நடுவே குத்திப் பார்க்க மாவு ஒட்டா மல் வரவேண்டும். அப்படி வந்தால் இட்டிலி வெந்து விட்டது என்று அர்த்தம். பிறகு கத்தியை இட்டிலிக்கும் தம்ளருக்கும் இடையே விட்டு கீறி தம்ளரை கவிழ்த்து தட் டினால் இட்டிலி வெளியே வந்துவிடும். பிறகு அதை எடுத்து வட்ட வில்லைகளாக போட்டு இரண்டு வில்லைகளுக்கு நடுவே மிளகாய்ப் பொடி எண்ணெய் தடவி பிளாஸ்டிக் கவரில் அல்லது அலுமினிய ஃபாயிலில் சுற்றி வைத் துக் கொண்டால் டப்பா அல்லது பாத்திரம் என்று பாரம் சுமக்காமல் வயிறு ஆங்க சாப்பிட்டு விட்டு கவரை குப்பைத் தொட் டியில் எறிந்து விட்டு ஹாயாக சுற்றுலாவை தொடரலாமே!

– சரோஜா பாஷ்யம்,
நியூயார்க்.

நான்காம் பரிசு

‘கரகர’ சீடையும், ‘மொறு மொறு’ துக்கடாவும்

பக்குவமாக மாவு தயாரித்தல் : (முதல் நிலை)

சலித்து வைத்துள்ள கோதுமை மாவு (1 கிலோ வரை), மைதா மாவு (1. கி வரை) இவற் றைத் தனித்தனிப் பாத்திரங்களில் போட்டு,

என் சிநேகிதி வீட்டுத் திருமணத்தின்போது, மாப்பிள்ளை மண்டபத்துக்குள் நுழையும் சமயம், மணப் பெண்ணே ஆரத்தி எடுத்தாள். அதுவும் எப்படி?

ஒரு தட்டில் நடுவில் மருக்கொழுந்து இலைகளை பொடியாக வெட்டி வட்டமாகப் பரப்பி, அதற்கு அடுத்தாற் போல் மல்லிகையை வட்டமாகப் பரப்பி, அதற்கு அடுத்து கேந்திப்பூவின் இதழ்களை உதிர்த்து வட்டமாகப் பரப்பி, நடுவில் (பச்சைக் கலரில்) அகல் விளக்கை ஏற்றி அலங்கரித்திருந்தது. மிகவும் அருமையாக இருந்தது.

பிறந்த நாள் போன்ற வைபவங்களில் இப்படி அலங் கரித்த தட்டை வைத்தால் எவ்வளவு அழகாக இருக்கும்?

– என். கோமதி



வேட்டில் வேகவைக்கவும். ஆறியபின் கட்டிகளை உடைத்து (மிக்சியில் போட்டால் நிமிடத்தில் மாவாகி விடும்). சலிக்கவும். இந்த மாவை வெயிலில் காயவைத்து, டப்பாவில் போட்டு அழுத்தி, மூடி வைத்துக் கொண்டால் 2, 3 மாதங்கள் வரை நன்றாக இருக்கும். தேவையான போது எடுத்துப் பயன்படுத்தலாம்.

கரகர சீடை

தேவையான பொருட்கள் :

வேட்டில் வேகவைத்த கோதுமை மாவு (அ) வேட்டில் வேகவைத்த மைதா மாவு - 6 கப்,
பச்சை வேர்க்கடலை பருப்பு - 2 கப்,
தேங்காய்த் துருவல் - 2 கப்,
தேங்காய் எண்ணெய் - 1 கப்,
வெள்ளை எள் (சுத்தம் செய்யப்பட்டது) - 1 டீஸ்பூன்,
உப்பு, பெருங்காயம், பட்டை மிளகாய்ப் பொடி - தேவையான அளவு,
எண்ணெய் - பொரிப்பதற்கு.

செய்முறை :

தேங்காய் எண்ணெய் அல்லது கொழுப்பு நீக்கப்பட்ட எண்ணெயைக் காய்ச்சி, மாவில் விட்டுக் கிளறி, 2 மணி நேரம் அப்படியே வைக்கவும். பின் ஒன்றிரண்டாக நிலக்கடலை (வேர்க்கடலை) யைப் பொடிக்கவும். தேங்காயைத் துருவவும். பெருங்காயத்தைத் தண்ணீரில் கரைத்து, உப்பு, மிளகாய்ப் பொடி, தேங்காய்த் துருவல், எள் பொடித்த வேர்க்கடலை ஆகிய எல்லாவற்றையும் மாவில் போட்டு, தகுந்த அளவு தண்ணீர் விட்டு, (சாதாரணமாக சீடை மாவு தயாரிக்கும் பக்குவத்தில்) பதமாக மாவு பிசையவும். வழ வழப்பாக உருட்டாமல், சிறு சிறு உருண்டைகளாக உருட்டி, பதமாகக் காய்ச்சிய எண்ணெயில், பொன்னிறமாகப் பொரித்து எடுக்கவும்.

இதே மாவை, உருண்டையாக உருட்டாமல், தட்டையாகத் தட்டியும் எடுக்கலாம். (தட்டைக்குச் சிறிது பொட்டுக் கடலை மாவு அல்லது வறுத்த உளுத்தம் மாவு, ஊறவைத்த கடலைப் பருப்பு, கருவேப்பிலை சேர்க்கலாம்.) தட்டைகளில் 2, 3 இடங்களில் சிறு ஊசியால் குத்தி, வேகவிட்டால் மிகவும் கரகரப்பாக இருக்கும்.

'மொறுமொறு' துக்கடா

தேவையான பொருட்கள் :

வேட்டில் வேகவைத்த மைதா மாவு அல்லது வேட்டில் வேகவைத்த கோதுமை மாவு - 6 கப்,
தேங்காய் எண்ணெய் (அ) கொழுப்பு நீக்கப்பட்ட சமையல் எண்ணெய் - 1 கப்,
உப்பு, சீனி - தேவையான அளவு,
எண்ணெய் - பொரிப்பதற்கு.

செய்முறை :

தேங்காய் எண்ணெய் அல்லது கொழுப்பு நீக்கப்பட்ட எண்ணெயைக் காய்ச்சி, மாவில் விட்டுக் கிளறி, 2 மணி நேரம் அப்படியே வைக்கவும். பின் அதில் ஒரு சிட்டிகை உப்புப் போட்டு, சப்பாத்தி மாவு போல பதமாகப் பிசையவும். அதை அப்பளங்களாக இட்டு, கத்தியால் சிறு சிறு துண்டுகளாக வெட்டவும். பக்குவமாகக் காய்ச்சிய எண்ணெயில், பொன்னிறமாகப் பொரித்து எடுக்கவும்.

சீனியைப் பாகுகாய்ச்சி ஏலப் பொடி போட்டு, பொரித்த துக்கடாக்களை அதில் போட்டுப் புரட்டிப் புரட்டி எடுத்து வைக்கவும். இதுவே மொறு மொறு இனிப்புத் துக்கடா.

காரத் துக்கடா

தேவையான பொருட்கள் :

வேட்டில் வேகவைத்த கோதுமை மாவு (அ) வேட்டில் வேகவைத்த மைதா மாவு - 6 கப்,
தேங்காய் எண்ணெய் அல்லது கொழுப்பு நீக்கப்பட்ட எண்ணெய் - 1 கப்,
பெருங்காயம், உப்பு, பட்டை மிளகாய்ப் பொடி - தேவையான அளவு,
எண்ணெய் - பொரிப்பதற்கு.

செய்முறை :



பட்டுப் புடவைகளை சுத்தம் செய்த பிறகு ஒரு பக்கெட் தண்ணீரில் ஒரு கரண்டி எலுமிச்சை ரஸத்தைப் பிழிந்து பிறகு பட்டுத் துணிகளை அலசவும். புதிய புடவை போல் பளபளப்பாக இருக்கும்.

- பி. விஜயலக்ஷ்மி.

எண்ணெயைக் காய்ச்சி மாவில் விட்டுக் கிளறி, 2 மணி நேரம் வைக்கவும். பின் அதில் தண்ணீர், மிளகாய்ப் பொடி, பெருங்காயத் தண்ணீர், உப்பு சேர்த்து, பக்குவமாக (சப்பாத்தி மாவு போல) பிசையவும். அதை அப்பளங்களாக இட்டு, கத்தியால் சிறு சிறு துண்டுகளாக வெட்டவும். பக்குவமாகக் காய்ச்சிய எண்ணெயில் பொன்னிறமாகப் பொரித்து எடுக்கவும். இதுவே மொறு மொறு காரத் துக்கடா.

பின்குறிப்பு : வேட்டில் வேகவைத்தல் :

குக்கரின் அடியில் (சாதாரணமாக சமைப்பதற்குச் செய்வது போல) தண்ணீர் விடவும். (குக்கரில் வைக்க ஏற்ற பாத்திரங்களில்) கோதுமை மாவு, மைதா ஆகியவற்றைச் சலித்து, தனித்தனிப் பாத்திரங்களில் போட்டு, தட்டுப் போட்டு மூடவும். பின் குக்கர் மூடியால் மூடி, எரியும் அடுப்பில் வைக்கவும். சாதம் வேக ஆகும் நேரம் வரை அடுப்பில் வைத்துப் பின் இறக்கவும்.

இந்தப் பதமான மாவு கொண்டு, கொழுக்கட்டை, பஜ்ஜி போன்றவைகளும் தயாரிக்கலாம்.

– உமா ஜெயந்தி, பெங்களூர்.

ஐந்தாம் பரிசு

காரட் சிப்ஸ் வடை

தேவையான பொருட்கள்

அரிசி – 1 தம்ளர்,
கடலை பருப்பு – ¾ தம்ளர்,
துவரம் பருப்பு – ½ தம்ளர்,
பாசிப் பருப்பு – ஒரு கைப்பிடியளவு,
பச்சை மிளகாய் – 4,
வற்றல் மிளகாய் – 5,
காரட் – 2,
பெருங்காயம் – சிறிது,
கருவேப்பிலை – 1 பிடி,
கடுகு – ஒரு டீஸ்பூன்,
தேங்காய் – ¼ மூடி,
உப்பு – தேவைக்கேற்ப

செய்முறை :

அரிசியைக் கழுவி ஊறவைக்கவும். பருப்புகள் ஒவ்வொன்றையும் தனித்தனியாக ஊறவைக்கவும். காரட்டை நன்றாகத் துருவி வைத்துக் கொள்ளவும். தேங்காயை இலேசாகக் கீறி சிறு துண்டுகளாக்கி வைக்கவும்.

அரை மணி நேரம் கழித்து அரிசியையும், வற்றல் மிளகாயையும் மிக்ஸியில் ஒன்றிரண்டாக அரைக்கவும். பிறகு அதிலேயே மூன்று பருப்புகளையும் தண்ணீரைப் பிழிந்து போட்டு ஒன்றிரண்டாக அரைக்கவும். துருவிய காரட்டைப் போடவும். தேங்காய்த் துண்டுகளையும் போடவும்.

வாணலியில் கடுகு, ப. மிளகாய், பெருங்காயம், கருவேப்பிலை தாளித்து மாவில் கொட்டி தேவையான உப்பு சேர்த்துக் கிளறவும். மாவு ரொம்ப கெட்டியாக இல்லாமல் சிறிது தளர்ந்து இருக்க வேண்டும்.

வாணலியில் எண்ணெய் வைத்து நன்கு காய்ந்ததும் கரண்டியால் மாவை எடுத்து வடை ஷேப்பில் விடவும். அடுப்பை பெரிதாக்கி இரண்டு முறை திருப்பிப் போட்டு சுமாராக வெந்ததும் அடுப்பை நிதானமாக வைத்து நன்றாக வெந்து பொன்னிறமாக ஆனவுடன் எண்ணெய் வடித்து எடுக்கவும். இந்த வடை இரண்டு நாட்களுக்குக் கெடாது. சுவைக்கு சுவை. பருப்புகளின் சத்து. சாப்பாடு சாப்பிட்டாற்போல் திருப்தியாக இருக்கும்.

தொட்டுக் கொள்ள ஒன்றுமே தேவையில்லை. அப்படித் தேவையானாலும் சாதாரண தேங்காய் சட்னி போதும். அபார ருசியாக இருக்கும்!

– சாந்தகுமாரி ஸ்வாமிநாதன்,
சென்னை – 44.



அதிக வயிற்றுப் போக்காக இருந்தால் கொஞ்சம் சுண்ட வத்தலை எடுத்து நெய்யில் அல்லது எண்ணெயில் வறுத்து சுடச்சுட சாதத்தில் போட்டுக் கலந்து ரெண்டு வாய் சாப்பிட்டால் வயிற்றுப்போக்கு நிற்கும். அல்லது கெட்டியாக தயிர் சாதம் பிசைந்து சுண்ட வத்தலை வறுத்து அத்துடனும் சாப்பிடலாம். இது என் அனுபவம்.

– பி. விஜயலட்சுமி




காதல் அரும்பும்போது...

தை மாதம் பிறந்து பொங்கல் பண்டிகையின் இனிமையும் சுவையும் மறைவதற்கு முன்பே இரண்டு மூன்று வருடங்களாக நகர்ப்புறங்களின் இளைய சமுதாயம் புது உற்சாகத்துடனும் கண்களில் வண்ணக் கனவுகளுடனும் ஒரு புதிய பண்டிகையை வரவேற்கிறார்கள்!

காலை பனி விலகியும் விலகாமலும் இருக்க இளம்பனியினூடே பரவும் ரம்மியமான காதல் உணர்வுகள் இப்பொழுதெல்லாம் வருடத்திற்கு ஒருமுறை பெப்ரவரி மாதம் 14-ம் தேதியன்றைக்குக் காதலர்கள் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

சமுதாயத்தில்தான் எத்தனை பெரிய மாற்றம்? இரகசியமாக இரண்டு தனிநபர்களுக்குள் நடக்கும் விஷயமான காதலை இன்று உலகமே போற்றிக் கொண்டாடுகிறது!

• ஜோவின் ஜோஸ்



காதலர்கள் தினத்தை இளைஞர்கள் கொண்டாடுவதை பார்த்தால் ஆச்சரியமாக இருக்கிறது. ஒருபுறம் சிகப்பு நிற ரோஜாப்பூ காதலுக்குக் கட்டியம் கூறுகிறது என்றாலும் மறுபுறம் ஈமெயிலில் கவிதை நயம் நிறைந்த காதல் தூது உலகெங்கிலும் பரிமாறிக் கொள்ளப்பட்டு வருகின்றன.

'சைபர் ஸ்பேஸ்' என்று அறியப்படும் தனி கம்ப்யூட்டர் உலகம் மூலம் காதலர்கள் தங்கள் காதலையும் கடிதங்கள் மற்றும் பரிசுப் பொருட்களையும் பரிமாறிக் கொள்கிறார்கள். சமுதாயத்தின் அதிவேகமான தொழிற்கலை முன்னேற்றத்துடன் காதல் என்ற மென்மையான விஷயமும் புதுமை பெற்று காதலுக்கு ஒரு நவீன அந்தஸ்து அளித்திருக்கிறது.

ஒருபுறம் இன்டர்நெட் மூலம் காதல் தோன்றுமளவிற்கு நாம் முன்னேறியிருக்கிறோம் என்றாலும் காதல் என்னும் ரம்மியமான உணர்ச்சிகள் தான் இன்றைக்கும் நம்மை இயந்திர மனிதர்களாக மாற விடாமல் பாதுகாத்து வருகின்றனவோ என்று தோன்றுகிறது.



"அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்'' – பார்வைகளின் மூலம் இரண்டு உள்ளங்கள் ஆயிரமாயிரம் பரிமாற்றங்கள் நடந்து வந்த நுண்ணியமான காதல்... இன்றைக்கோ... தோள் மீது கை போட்டுக்

கொண்டு உலகறிய 'இதுதான் என் காதலி பார்!' என்று பைக்கில் வலம் வருமளவிற்குக் காதல் மாறித்தான் போயிருக்கிறது!

காதலை வெளிப்படுத்துவதில் எத்தனை தான் மாற்றம் ஏற்பட்டிருந்தாலும் காதல் வயப் பட்டவர்களின் மென்மையான, இன்பமான உணர்ச்சிகள் மட்டும் மாறவே மாறாது. அன் றைக்கும் இன்றைக்கும் காதல் வயப்பட்டவர் கள் படும் அவஸ்தைகளும், இன்பங்களும் வித்தியாசம் இல்லாமல்தான் இருக்கிறது.

காதலர்களின் மனம் படும் பாட்டை பாரதியார் வெகு துல்லியமாகவும் அழகாகவும் கூறியிருக்கிறார்.

தூண்டிற் புழுவினைப் போல் - வெளியே
சுடர் விளக்கினைப் போல்,
நீண்ட பொழுதாக - எனது
நெஞ்சந் துடித்த தடீ

காதலைப் பற்றி இன்றைய இளைஞர்கள் சிலரை ஓரங்கட்டி விசாரித்த போது காதலின் தீவிரம் இன்றைக்கும் அப்படியே இருப்பதாகத் தான் தோன்றுகிறது.

ராமன் விவேகானந்தா கல்லூரியில் பி.காம். இரண்டாம் ஆண்டு படிக்கும் மாணவர், "ஒரு சிறிய மொட்டு எப்படி மெலல மெல்ல மலர்ந்து நாளாவட்டத்தில் பூவாக மாறுகிறதோ அப்படித்தான் காதல் வளருகிறது. அது பூவாக மாறும் போது இரண்டு நெருக்கமானவர்களின் இதயங்களிலிருந்து வெளிப்படும் வெளிச்சத்தி னால் தேஜஸ் அடைகிறது. காதல் என்பது இயற்கையின் கலை திறன் என்னும் அற்புதத் தின் விளைவு" என்று கவிதையாக பேசுகிறார்!

லக்ஷ்மி மீனாட்சி காலேஜில் இரண்டாம் ஆண்டு பட்டப் படிப்பு படிக்கும் மாணவி- "இவ்வுலகில் சமூகப் பொருளாதார வளர்ச்சி யின் ஆரம்பத்தையாவது நாம் கண்டுபிடித்து விடலாம். ஆனால் காதலின் மூலகாரணத்தை எவராலும் கண்டறிய முடியாது" என்கிறார் இவர்.

காதல் உணர்ச்சி ததும்பும் விஷயம்
காதல் என்பது சிறந்த, உன்னதமான உணர்வு
காதல் என்பது சந்தோஷம்"

என்று கவிதை பாணியில் காதலைப் பற்றி தன் அபிப்பிராயத்தைக் கூறியவர் மேலும் கூறுவது - "மனதளவில் மிகுந்த திருப்தியைக் கொடுக்கும் காதலை இந்தப் பிரபஞ்சத்தில் ஒவ்வொரு ஜீவராசியும் அனுபவிக்க வேண் டும்."


எம்.ஓ.பி. வைஷ்ணவா கல்லூரியில் பட்டப் படிப்பு படிக்கும் சந்தியா- "காதலை அனு பவிக்கத்தான் முடியும். அதன் தன்மையைப் பற்றிச் சில வார்த்தைகளில் கூற முடியாது. ஆனால் கண்டதும் காதல் என்பது அபத்தம். ஒருவரைப் பார்த்துப் பழகாவிட்டால், அவ ரைப் பற்றித் தெரிந்து கொள்ளாவிட்டால் எப் படிக் காதலிக்க முடியும்?"

காதலைப் பற்றிய கருத்து நம் இளைஞர் களின் மத்தியில் எத்தனை ஆழமாக இருக் கிறது? காதல் என்பது ஓர் உன்னதமான விஷ யம் என்று இன்றைக்கும் இளைஞர்கள் காத லுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

ஒருவரையொருவர் புரிந்து கொண்டு, விட்டுக் கொடுத்துக் கொண்டு, ஒருவர் கஷ் டத்தில் மற்றவர் பங்கு கொண்டு, தியாகங்கள் பல செய்து, மற்றவர் சந்தோஷத்தையே பிர தானமாக நினைத்து... இப்படிக் காதல், நீறுற்று போல் மனதிற்குள் உறங்கிக் கிடக்கும் மனித நேயத்தைத் தட்டி எழுப்புகிறது.

இந்தக் காலத்து இளைஞர்களிடம் காதல் எப்படி அரும்புகிறது? அவர்கள் எப்படிப் பட்டவர்களைக் காதலிக்கிறார்கள்? இந்தக் கேள்விகளுக்கு பதில் சொல்கிறார்கள் ஹிந்துஸ் தான் இன்ஜினீயரிங் கல்லூரியில் இறுதி யாண்டு படிக்கும் மாணவிகள்...

ஜினி ஜார்ஜின் கண்கள் அவரது உள்ளத் தில் பூட்டிக் கிடக்கும் காதலை வெளிப் படுத்துகின்றன. "சில காலம் பழகியபின்தான் நாம் ஒருவரைக் காதலிக்கிறோமா என்று புரி யும். காதல் என்பது தன்னிச்சையாகத் தோன்று கிறது. ஒருவரிடம் நமக்குப் பிரத்தியேகமான உணர்வுகள் உண்டாகின்றன. அப்போதுதான் நாம் அவரைக் காதலிக்கிறோம் என்று புரிகிறது. என்னைப் பொறுத்தவரை ஒருவருடைய வெளித் தோற்றத்தை விட அவருடைய கொள் கைகள்தான் முக்கியம் என்பேன்" என்கிறார் ஜினி.



நகப்பாலீஷ் போட்டுக் கொண்டபின் கை விரல்களை நீரில் நனைத்து விட்டால் சட்டென்று உலர்ந்துவிடும். ஆபீஸ் மற்றும் ஃபங்ஷன்களுக்குக் கிளம்பும் சமயம் நகப்பாலீஷ் போட்டுக் கொள்ள நினைப் பவர்கள் இவ்வாறு செய்யலாம்.

– உமா

மூலநோயா ? கவலை வேண்டாம் !



கத்தியின்றி
இரத்தமின்றி
வலியின்றி
சிகிச்சை பெற்று
ஒரு மணி நேரத்தில்
வீடு திரும்பிவிடலாம்

அதிநவீன லேசர் சிகிச்சை அளிக்கும்
இந்தியாவின் ஒரே சிறப்பு மருத்துவமனை

ஆர். எஸ். மருத்துவமனை

மூல நோய் சிறப்பு சிகிச்சை மையம்

722 - ஜஹாங்கிரான் தெரு,
காதர்பேட்டை, வாணியம்பாடி - 635 751
வேலூர் மாவட்டம்
தொலைபேசி எண் : 04174-33404 33406



டாக்டர் ரியாஸ் யின்

" நலமா சுகமா "

வியாழன்தோறும் மாலை 6.30 மணிக்கு
ராஜ் டிவி யில்
காணத் தவறாதீர்கள்

டாக்டர். பி. ரியாஸ் அஹ்மத் MB BS., MS., DNB., எழுதிய
" மூல நோய்க்கு முடிவு " நூல்
எல்லா புத்தக கடைகளிலும் கிடைக்கும்

காதலில் பொருளாதார அந்தஸ்து முக்கியமா? என்று நாம் வினவ, அவர் வேடிக்கையாக. "நாங்கள் ஒருத்தரை முதலில் பார்க்கும் போது அவருடைய ஷூவைதான் முதலில் பார்ப்போம்" என்றார். பிறகு, "கிட்டத்தட்ட ஒரே அந்தஸ்துள்ளவர்களுடன் நாம் பழகுவதனால் காதலும் ஒருவிதத்தில் அதே அந்தஸ்துள்ளவர்களிடம் உண்டாகிறது" என்றார்.

"ஒருவன் எப்படி டிரெஸ் செய்து கொள்கிறான், எப்படிப் பார்ப்பவர் கவனத்தை ஈர்க்கும்விதமாக நடந்து கொள்கிறான் என்றெல்லாம் முதலில் கவனிப்போம்" என்றார் ஜினி.

"என்னை 'நானாக' முழுவதுமாக ஏற்றுக் கொள்வது மிகவும் முக்கியம்" என்று கூறும் ஜினி "காதலுக்காக வேலையை விட்டு விடும்படி நேர்ந்தால் தாராளமாக செய்வேன்" என்கிறார். ஆனால் வேறு ஏதாவது தொழிலையோ எனக்குப் பிடித்த வேலையையோ நிச்சயம் செய்வேன்.

வாழ்க்கையில் பணம்தான் எல்லாமே என்று சொல்ல முடியாதே? சந்தோஷம்தான் முக்கியம். அதற்காக வேலையை விட்டு விடும் சூழல் வந்தால் நாம் அட்ஜஸ்ட் செய்வதில் தவறில்லை" என்று கூறும் ஜினியின் பெற்றோர் அபுதாபியில் இருக்கிறார்கள்.

ஜினியின் தோழி பிரதிமா விஸ்வநாத்தின் பெற்றோர் அந்தமானில் இருக்கிறார்கள். அவர் சொல்லுகிறார். "நான் கண்டதும் காதலுங் கறதை நம்பவில்லை. நான் விரும்பும் ஒருவன் குறைந்தது ஒரு பி.ஈ. அல்லது அதற்கு மேல் படித்திருக்க வேண்டும். நட்புடன் பழக வேண்டும். அவன் எப்படி பேசுகிறான், பழகுகிறான் என்றெல்லாம் பார்த்து விட்டுத் தான் ஒரு முடிவிற்கு வர முடியும். வேடிக்கையாக பேசுபவர்களை எனக்குப் பிடிக்கும்." என்று கூறும் பிரதிமாவும் காதலுக்காக தன் வேலையை விட்டு விடும்படியான சூழல் வந்தால் தயார் என்கிறார்.

பிரதிமாவுக்குத் தெரிந்த ஒரு பெண் சமீபத்தில் ஆஸ்திரேலியாவில் வாழும் ஒருவனை இன்டர்நெட் மூலமாகக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டிருக்கிறாள். "இருவரும் என்கேஜ்மெண்ட்டுக்கு முன் பார்த்துக் கொள்ளவேயில்லை. ஆனால் இப்போது சந்தோஷமாக இருக்கிறார்கள். டச் வுட்" என்கிறாள் பிரதிமா.

இவர்களுடன் படிக்கும் ஜோவின் ஜோவின் எதிர்பார்ப்பு வேறுவிதமாக இருக்கிறது.

"நான் ஒருவனை விரும்பும்படி நேர்ந்தால் ஒரு லைஃப் லாங் கமிட்மெண்டைதான் எதிர்பார்ப்பேன். எங்களது உறவு நிரந்தரமான உறவாக இருக்க வேண்டும். ஓரளவிற்கு அழகு முக்கியம்தான். ஆனாலும் அவனுடைய



பூஜையறையில் சுலபமான சுவாமி பாடல், காயத்திரி ஜபம், என்பன போன்ற 4 வரி, 8 வரிக்குள் உள்ள பாடல்களை, அழகாக எழுதி ஒட்டி வைத்தால் நம் குழந்தைகள் குளித்து முடித்த வுடன் பூஜை அறைக்குச் சென்று அதைப் பார்த்துச் சொல்வார்களே. இல்லா விட்டால் சுவாமி கும்பிடுகிறேன் என்று ஏதோ ஒரு நிமிடம் கும்பிட்டுவிட்டு வந்து விடுகிறார் கள்.

– விஜயகுமாரி திருமூலர்

குடும்பப் பின்னணி என்னுடைய பின்னணி யுடன் ஒத்துப் போக வேண்டும். நான் யாரைப் பார்த்தாலும் என் கண்முன் முதலில் என் பெற் றோர் தோன்றி விடுவார்கள். நான் ஹாஸ்டலில் சேர்ந்து படிக்கக் கிளம்பிய போது என் அம்மா என்னிடம், 'நீ யாரை வேண்டுமானாலும் காதலி. ஆனால் அவனும் நம் மதத்தைச் சேர்ந்த, நம் பாஷையை பேசுபவனாக இருக்க வேண்டும்' என்று கூறினார்.

அதனால் இவன் முதலில் என் பெற்றோர் போட்ட கண்டிஷனுக்குப் பொருந்துவானா என்று யோசித்துப் பார்ப்பேன். இதுவரைக்கும் அப்படி யாரும் கிடைக்கவில்லை.

"எனக்கு சற்று 'மாடர்னாக' இருக்கப் பிடிக் கும். அதே மாதிரி அவனும் மாடர்னாக இருக்க வேண்டும்.' வேலையைக் காதலுக்காக நானும் விட்டு விடத் தயார். இன்னும் சொல்லப் போனால் அவன் மட்டும் பணக்காரனாக இருந்தால் நானே சந்தோஷமாக வேலையை விட்டு விடுவேன். எனக்கு வீட்டை நேர்த்தியாக வைத்துக் கொண்டு குழந்தைகள் குடும்பம் என்று இருக்கத்தான் பிடிக்கும்" என்கிறார் இந்த இளம்பெண்.

அடுத்த நூற்றாண்டின் காதல்?

ஒருபுறம் நம் பக்கத்து இளைஞர்கள் காத லுக்கு ஒரு உன்னதமான அந்தஸ்தை அளிக்க மற்றொருபுறம் சற்று முற்போக்கான நகர்ப்புறங் களில் புதியதாக ஒரு அலை உருவாகிக் கொண் டிருக்கிறது. இளைஞர்கள் அவர்கள் விரும்பும் பெப்ஸியை காலி செய்துவிட்டு 'கேனை' தூக்கி எறியும் அதே வேகத்துடன் தாங்கள் 'காதலிப்ப வர்களை'யும் எறிந்து விடுகிறார்கள்.

சில இடங்களில் காதல் ஒரு தாற்காலிக விஷயமாக மாறி வருகிறது. "நான், எனக்கு, என்னை என்ற மூன்று சொற்கள்தான் காதலில் இப்போதுள்ள நவநாகரிக சமூகத்தின் தாரக மந்திரம். 'காதல் என்பது ஒரு முக்கியமான விஷயம்தான். ஆனால் அதைவிட முக்கியமான விஷயம் என் வேலை, என் வாழ்க்கை, நான்' என்று சில இளைஞர்கள் யோசிக்க ஆரம்பித்து விட்டார்கள். பொருளாதார அந்தஸ்தின் அறிகுறிகளான கார், பணம், செல்போன் போன்ற விஷயங்கள் பிரதானமாகி விட்டன.

'காதல் தொடரும் வரையில் நல்ல அனுபவம்தான்' என்று காதலுக்கு ஒரு தாற்காலிகமான முத்திரை குத்தப்பட்டு வருகிறது. அடிக்கடி 'காதல்' வலையில் விழுவதும் எழுவதுமாக சிலர் இருக்கிறார்கள். புதிய புதிய அனுபவங்களைத் தேடி அலைகிறார்கள்.

அதிவேகமாக முன்னேறிக் கொண்டிருக்கும் அடையாளமாகக் காதலும் இந்தக் காலத்துக் குழந்தைகளின் வாழ்க்கை ஓட்டத்தை பிரதிபலிக்க ஆரம்பித்து விட்டது. எதிலும் ஒரு வேகம்! தீவிரம்!

கடைக்குச் சென்று ஒரு பவுடரோ பர்ஃப்யூமோ வாங்குவதைப் போன்ற சாதாரணமான விஷயமாக காதலும் நவநாகரிக இடங்களில் மாறிவிட்டது. விதவிதமான ஆடைகளை உடுத்திக் கொண்டு பெரிய பெரிய ஹோட்டல்களிலும் டிஸ்கோவிலும் 'காதலர்'கள் ஆனந்தமாகப் பொழுதைக் கழிக்கிறார்கள். ஒன்றாக இருக்கும் வரையில் காதலை வெளிப்படையாகப் பரிமாறிக் கொள்கிறார்கள்.

ஆண்களிடம் கார், செல்போன் போன்ற விஷயங்களைப் பார்த்து விழும் பெண்கள் காதலின் மூலம் பல உயர்ந்த பொருட்களை காதல் பரிசுகளாகப் பெற்று களிக்கிறார்கள். ஒரு காதலனோ காதலியோ இருந்தாலே 'அந்தஸ்துள்ள விஷயம்' என்று நினைக்கும் ஒரு சிறு கும்பல் காதலுக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் வருத்தமே தருகிறது. இவர்களைப் போன்ற மேலோட்டமாக இருக்கும் இளம் வளராமவிருக்க இறைவனைப் பிரார்த்திப்போம்!

மற்றொரு பக்கம் கவலைக்குரிய வேறு ஒரு விஷயமும் 'காதலில்' நடக்க ஆரம்பித்திருக்கிறது. காதல் கனிந்து திருமணத்தில் முடிந்தால் குடும்பம் குழந்தை என்று நேரம் செலவிட்டு தொழிலில் முன்னேற்றம் பாதிக்கப்பட்டு விடும் என்று சில படித்த பெண்கள் காதலித்து விட்டு இந்தப் பந்தமே போதும் என்று இருந்து விடுகிறார்கள். அவர்களது சுதந்திரமும் சுய வளர்ச்சியும் அவர்களுக்கு முக்கியமாகப் போய் விடுகிறது!

ஆனால் இப்படிப் பல ஆண்டுகளாகத் திருமண பந்தமில்லாமல் ஒன்றாக வாழும் சிலர் கொஞ்சம் மனமுதிர்ச்சி அடைந்த பிறகு தங்கள் காதலுக்கு ஒரு நிரந்தரமான அந்தஸ்தை கொடுப்பதற்குத் தயாராகி விடுகிறார்கள்.

திருமணம் செய்து கொள்ளாமல் சேர்ந்து வாழும் பெண்களுக்கு 'மருமகள்' 'மனைவி' போன்ற பொறுப்புகள் இல்லை. ஆணின் குடும்பத்தினரிடம் எந்தவிதமான பொறுப்போ கட்டுப்பாடோ இருப்பதில்லை. அவளுடைய வேலையில் எவரும் மூக்கை நுழைக்க முடியாது.


'நான்' என்ற தனி நபரின் சுதந்திரம் முக்கியமாகக் கருதப்படுவதால்தான் சில நவநாகரிக சமூகங்களில் இப்படிப்பட்ட ஒரு புதிய போக்கு தொடங்கியிருக்கிறது. திருமண பந்தத்தில் சரிசமமாக நடத்தப்படாததனால்தான் சில படித்த வேலை பார்க்கும் பெண்கள் திருமண பந்தத்திற்குள் பிரவேசிக்க பயப்படுகிறார்கள். அவர்களுக்கு இந்தப் புதிய ஒப்பந்தம் வசதியாக இருக்கிறது. மேலும் இப்போதெல்லாம் பொறுமை குறைந்து விட்டதனாலும் அனுசரித்துப் போகும் தன்மை பலவீனத்தின் அடையாளமாகக் கருதப்படுவதனாலும் இந்தப் போக்கு உண்டாகியிருக்கலாம்.

ஆனால் மனமுதிர்ச்சி அடையும் போது உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் திருப்தி தரும் இந்த மாதிரியான தாற்காலிக பந்தம் கடைசியில் திருமணம் என்ற புனிதமான பந்தத்தில் தான் போய் முடிகிறது

— ஸ்வாதி

சிலர் குழந்தைகள் அழும்போது, அதற்கான காரணத்தைக் கண்டுபிடித்து அதைப் போக்காமல், குழந்தையின் வாயில் ரப்பரை வைத்து அழுகையை நிறுத்துவார்கள். இப்படி செய்யப்படும் குழந்தைகளும் விரல் சப்பும் குழந்தைகளும் பின்னால் பயந்தவர்களாகவும் கோழைகளாகவும் ஆகிவிடுவார்கள்.

— உமா



உங்களுக்கும் இங்கிலீஷ்ல பேசணும்னு ஆசையா இருக்கா?



மடமடன்னு இங்கிலீஷ்ல பேசணும்னு ஆசையாத்தான் இருக்கு. ஆனா... ஏதாவது தப்பா பேசிடுவோமோன்னு பயமா இருக்கு. இது தானே உங்க ப்ராப்ளம்?

Don't worry!

விவேகானந்தாவின் 'ஸ்போக்கன் இங்கிலீஷ் டிரெயினிங் கோர்ஸ்'ல சேர்ந்து நீங்க ஈஸியா இங்கிலீஷ் பேசக் கத்துக்கலாம்.

இன்னும் எதுக்கு யோசிக்கிறீங்க?

பயிற்சி விவரத்தை படிச்சுப் பார்த்து கூப்பனை கட் பண்ணி உடனே அனுப்புங்க. பாடங்கள் **V.P.P.** மூலமா உங்க வீட்டுக்கே வந்துடும்.

அப்புறம் என்ன?

பாடங்களைப் படிச்சு பிராக்டிஸ் பண்ணி மடமடன்னு இங்கிலீஷ்ல பேச ஆரம்பிங்க.

ஸ்போக்கன் இங்கிலீஷ் டிரெயினிங் கோர்ஸ்

இங்கிலீஷ் வார்த்தைகளை ஓரளவு எழுத படிக்கத் தெரிந்தவர்கள் **ஸ்போக்கன் இங்கிலீஷ் டிரெயினிங் கோர்ஸில்** சேர்ந்து இலக்கணப் பிழையின்றி வாக்கியங்களை அமைக்கக் கற்றுக் கொண்டு இங்கிலீஷில் மிகச் சரளமாகப் பேசப் பயிற்சி பெறலாம்.

இலக்கணம் மற்றும் **உரையாடல்** பயிற்சிப் பாடங்கள் அடங்கிய இக்கோர்ஸில் சேர்ந்து பயிற்சி பெறக் கட்டணம் **ரூ. 395/-** மட்டுமே.

அடிப்படை (Basic) & ஸ்போக்கன் இங்கிலீஷ் டிரெயினிங் கோர்ஸ்

இங்கிலீஷ் வார்த்தைகளை எழுத படிக்க இயலாதவர்கள் அடிப்படையிலிருந்து தொடங்கி ஆங்கில வார்த்தைகளை ஸ்பெல்லிங் மிஸ்டேக் இல்லாமல் எழுத படிக்க கற்றுக் கொண்டு இங்கிலீஷில் மிகச் சரளமாகப் பேசப் பயிற்சி பெறலாம்.

அடிப்படை மற்றும் **ஸ்போக்கன் இங்கிலீஷ் டிரெயினிங் கோர்ஸில்** சேர்ந்து பயிற்சி பெறக் கட்டணம் **ரூ. 525/-** மட்டுமே.



உரையாடற்பயிற்சி செய்து பழக பாடங்களுடன் ஆடியோ கேசட் இலவசம்.

கீழ்க்காணும் கூப்பனைப் பூர்த்தி செய்து இன்றே அனுப்புங்கள். பாடங்களையும், கேசட்டையும் V.P.P. மூலம் உடனே அனுப்புகிறோம். தகவல் கிடைத்ததும் தபால் அலுவலகத்தில் பணத்தைச் செலுத்திப் பாடங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

இதோ கூப்பன்

☐ நான் விவேகானந்தாவின் ஸ்போக்கன் இங்கிலீஷ் டிரெயினிங் கோர்ஸில் சேர விரும்புகிறேன். பாடங்களை V.P.P.யில் அனுப்புங்கள். ரூ.395/- செலுத்திப் பெற்றுக் கொள்கிறேன்.

☐ நான் அடிப்படை (Basic) மற்றும் ஸ்போக்கன் இங்கிலீஷ் டிரெயினிங் கோர்ஸில் சேர விரும்புகிறேன். பாடங்களை V.P.P.யில் அனுப்புங்கள். ரூ. 525/- செலுத்திப் பெற்றுக் கொள்கிறேன்.


தேவையான கட்டத்தில் ✓ குறிப்பிடுங்கள்

பெயர்:..

முகவரி:..

....

....பின்கோடு



VIVEKANANDA INSTITUTE

MMA

9, மேட்லி ரோடு, தி.நகர், சென்னை - 600 017.

INDIA'S No. 1 ENGLISH TRAINING INSTITUTE

விவேகானந்தாவின் நேர்முகப்பயிற்சி மையங்கள்: **சென்னையில்: தி.நகர், தாம்பரம், தண்டையார்பேட்டை, கீழ்ப்பாக்கம், போரூர்.**
மதுரை, திருச்சி, கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி, ஈரோடு, திருப்பூர், குன்னூர், திண்டுக்கல், தஞ்சாவூர், அரக்கோணம், வேலூர் மற்றும் பாண்டிச்சேரி.
* சேலத்தில் எங்களது நேர்முகப்பயிற்சி மையம்: F 18 கிபேர்லாண்ட்ஸ், சேலம்-16 என்ற புதிய விலாசத்தில் இயங்கி வருகிறது.

அருளகம்



தீர்க்க முடியாத நோய்களுக்கும், தாங்க முடியாத பிரச்சனைகளுக்கும் தீர்வு காண இறைவேத பரிகாரங்களால் மட்டுமே தீர்க்க முடியும்.

மனக்குழப்பம், குடும்பத்தில் குழப்பம், திருமண வியாபார தடை, புத்திர பாக்கியம், பில்லி சூனியம், கிரக தோஷங்கள், தீய சக்தியால் ஏற்படும் பிரச்சினைகள், தடைபடும் அனைத்து பிரச்சினைக்கும் தீர்வு காண இன்றே அணுகுவீர்.

Arulagam, M.Mohamed Abbas,

Ap 1447, 1st Sector, 2nd street, K.K. Nagar,
Chennai - 600 078. (Near hotel Saravana Bhavan)
Phone: 4714347 Cell:9841022174

குறிப்பு:

* வெளியூர், வெளிநாடுகளில் வசிப்பவர்கள் தங்கள் பிரச்சினை தீர்க்க தங்கள் பெயர், தங்கள் தாயார் பெயருடன் தங்கள் பிரச்சனைகளை எழுதி ஆலோசனை பெறவும்

எங்களின் லட்சியம் உங்களைக் கவலையின் கண்களிலிருந்து தப்புவிப்பதுதான்.

"3 வருட இடுப்பு வலியிலிருந்து ஆப்ரேஷன் இன்றி குணமடைந்தேன் !!!..."



S. ராணி

திருமதி S. ராணி
No. 303, எஸ்.கே.எஸ் நகர்,
குறிஞ்சிபாடி,
நெய்வேலி - 607 302.

கடந்த மூன்று வருடங்களாக இடுப்பில் வலி இருந்து வந்தது. இதனால் குனிந்து நிமிரும் பொழுதும், சிறிது தூரம் நடக்கும் பொழுதும், உட்கார்ந்து எழுந்திரிக்கும் பொழுதும், மாடிப்படி ஏறி இறங்கும்பொழுதும், பிடிப்புடன் கூடிய வலி இருந்தது. ஆங்கில மருத்துவரிடம் சென்று C.T Scan எடுத்துப் பார்த்த போது, இடுப்பில் கடைசி இரண்டு எலும்புகள் விலகி இருப்பதாக கூறினார்கள். (L4, L5, DISC PROLAPSE) இதற்கு சில மருந்துகளையும், இடுப்பில் போட்டு கொள்வதற்கு Belt-ம் எழுதிக் கொடுத்தார்கள். இருப்பினும் வலி நிற்கவில்லை. பின்பு ஆப்ரேஷன் (Operation) செய்தால் குணமடையும் என்று கூறினார்கள். அப்பொழுது "MARC HERBAL CARE (P) LTD.," நிறுவனத்தின் விளம்பரத்தை செய்தித்தாள்களில் கண்டு நானும் எனது கணவரும் அங்கு சென்றோம். டாக்டரின் ஆலோசனைபடி அவர்கள் கொடுத்த மூலிகை பவுல்டிஸை (Poultice) வெளிப்பிரயோகமாக தினமும் தவறாமல் தடவி வந்தேன். 9 வார தொடர்ச்சியான சிகிச்சைக்குப் பிறகு தற்பொழுது எனது வலிகள் அனைத்தும் நீங்கி பரிபூரண நிவாரணம் அடைந்தேன். நன்றி.

- ❒ காலம் காலமாக வேதமகரிஷிகள் சித்தர்களால் கண்டுபிடித்து பரிசோதித்து அனுபவப்பட்டு வெற்றி கண்ட ஆயுர்வேத மூலிகை மருத்துவமுறைப்படி எங்களது நிறுவனம் ஒரு வெளிப்பிரயோக மூலிகை பவுல் டைஸ் (Poultice) கொண்டு ஆர்த்திரைட்டிஸ், ஸ்பாண்டிலைட்டிஸ், தோள்பட்டை வலி, முதுகுவலி, குதிக்கால்வலி, கைகால் மூட்டுவலி ஆகியவைகளுக்கு தகுதிவாய்ந்த அனுபவம் மிக்க ஆயுர்வேத, சித்தா மற்றும் அலோபதி மருத்துவர்களின் மேற்பார்வையின் கீழ் சிகிச்சை அளித்து வருகிறோம்.
- ❒ ஒருவரைப்போல் மற்றொருவரது உடல்வன்மை இருப்பது இல்லை என்பது யாவரும் அறிந்த உண்மை எனவே கால மாற்ற விளைவுகளால் மனிதனின் உடல்வன்மையில் ஏற்படும் மாறுதல்களுக்கு ஏற்ப சிகிச்சையும் பலன்களும் வேறுபடலாம் என்பதை MARC HERBAL CARE (P) LTD நன்கு உணர்ந்துள்ளன.

கலந்து ஆலோசிக்க இப்போதே தொடர்பு கொள்க
தொலைபேசி
346683

காலை 9 மணி முதல், இரவு 7 மணி வரை
வாரத்தில் 7 நாட்களும் திறந்திருக்கும்.

MARC ஹெர்பல் கேர் (பி) லிமிடெட்
32, செயின்ட் தெரசா வீதி, பாண்டிச்சேரி - 1.
(ராமன் தியேட்டர் எதிர் வீதி, ஃபார்சூன் பேக்கரி எதிரில்)
Fax : 91-413-346683

Adviko • Ph: 225918.

இல்லறம் இனிக்க....

குடும்பம் என்பதை எத்தனை அவசிய மான ஒன்று எனச் சொல்லும் கிருபானந்த வாரியார் சுவாமிகள் பெண்ணின் சிறப்புக் களைச் சொல்லி ஆண்களுக்கு அறிவுரையும் கூறுகிறார்.

பக். 108, விலை ரூ. 17.00

(குகஸ்ரீ வாரியார் பதிப்பகம், 107, சிங்கண்ணத் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600 002.)

திருமணப் பொருத்தம்

ஒவ்வொரு பொருத்தம் பற்றி விரிவாகவும், அங்காரகதோஷம் போன்றவற்றையும் விளக்கு கிறார் மயிலை பூபதிராஜன்.

பக். 80, விலை ரூ. 15.00

காரம் செய்து நீக்குவது எப்படி எனக் கூறுபவர் எம்.ஜி. அண்ணாதுரை.

பக். 112, விலை ரூ. 30.00

(மாற்று மருத்துவ சிகிச்சை மையம், 60, ஜீவன்லால் நகர், திருவொற்றியூர், சென்னை - 600 019.)

இரை

எஸ். யாதவ நாராயணன் எழுதிய சிறுகதைத் தொகுப்பு. அடித்தட்டு மக்கள் மனத்தின் ஆசைகளையும் அனைவரின் உணர்வு களையும் வடித்துக் காட்டியிருக்கிறார்.

பக். 92, விலை ரூ. 20.00

ஸ்ரீ ஷெல்ஃப்

எண் கணித ஜோதிடம்


நியூமராலஜி எனப்படும் 'எண் கணிதப்படி பலன்கள் கூறுகிறார் மயிலை பூபதிராஜன்.

பக். 72, விலை ரூ. 15.00

(இரண்டும் - யமுனா பிரசுரம், 18/1 ராஜா பாதர் தெரு, தி.நகர், சென்னை - 600 017.)

எளிய வாஸ்து பரிகாரங்கள்

வாஸ்துவால் குறை இருப்பின் அதனை பரி



ஸ்ரீதுர்க்கை துதி அமுதம்

ஸ்ரீ மங்கள சண்டிகா ஸ்தோத்திரம் மற்றும் பஜனைப் பாடல்கள். தொகுப்பு டி. எம். பூதலிங்கம்.

விலை ரூ. 10.00

(குமரிப் பதிப்பகம், 8, நீலா தெற்கு வீதி, நாகப்பட்டினம் - 611 001.)

பெண்களைப் பற்றிய பொன்மொழிகள்

சாக்ரடீஸ், பெர்னார்ட்ஷா, புத்தர் என ஏராளமான பெரியோர்களின் பொன்மொழி களைத் தொகுத்துத் தந்துள்ளவர் மணி மேகலைப் பிரசுர ஆசிரியர் குழு.

பக். 96, விலை ரூ. 18.00

நெஞ்சு புதிது

கவிதைத் தொகுப்பு. வாழ்வின் சொந்தங் களைக் கூறுபவர் ஜோசப் குமார்.

(இரண்டும் - மணிமேகலைப் பிரசுரம், 14,

தணிகாசலம் சாலை, தி. நகர், சென்னை - 600 017.)

காதற் பெருமான்

சமீப காலமாக தமிழகத்து மகான்களை தன் சக்திவாய்ந்த ஆன்மீக எழுத்துக்களால் நம் மக்களுக்குப் புரியவைத்துக் கொண்டிருக்கும் பாலகுமாரனின் மற்றொரு கதை. இதில் அருணகிரிநாதர் மற்றும் ஒரு குறு நாவல்.

பக். 252, விலை ரூ. 50.00

(விசா பப்ளிகேஷன்ஸ், 55, வெங்கட் நாராயணா சாலை, தி. நகர், சென்னை - 600 017.)

தஞ்சாவூர் ஓவியம்

பல படங்களுடன் எப்படிச் செய்ய வேண்டும் எனவும் விளக்குபவர் கே. ஜி. காமராஜன்.

பக். 80, விலை ரூ. 25.00

காற்றே கனலே

கர்நாடகாவில் உள்ள தமிழர்களின் கலாசார பின்னணியில் அவர்களின் வாழ்வினைக் கூறும் நாவல்.

பக். 296, விலை ரூ. 55.00

(இரண்டும் - கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை - 600 017.)



நீதி சாஸ்திரம்

மஹாபாரதம், மனுஸ்ருதி, பர்த்ருஹரி ஆகிய க்ரந்தங்களில் இருந்து எடுத்துத் தொகுக்கப்பட்ட நீதி ஸ்லோகங்கள். பொருளுடன் தொகுத்திருப்பவர் வெ. கணபதி சர்மா. பல அற்புதமான விஷயங்கள் சொல்லப்பட்டுள்ளன.

பக். 89, விலை ரூ. 20.00

(டி. நரசிம்மன், ஸ்ரீ ஹனுமான் புக் ஸ்டால், மாம்பலம் ரயில்வே ஸ்டேஷன், சென்னை - 600 033.)

ஆயர்பாடி அமுதம்

பாகவதத்தில் இருந்து சில கதைகளை எடுத்துக் கவிதைகளாக்கித் தந்திருப்பவர் காசினி வேந்தினி இராமானுஜம்.

பக். 224, விலை ரூ. 65.00

(திருநெல்வேலி ஸ்ரீ நம்மாழ்வார் சபா, D107-F, சங்கீதா காலனி, அண்ணா மெயின் ரோடு, கே.கே. நகர், சென்னை - 600 078.)

ஹிந்தி மொழிப் பயிற்சி

ஹிந்தியினை இலக்கண முறையுடன் கற்க உதவும் நூல். தக்ஷிண பாரத ஹிந்தி பிரசார சபாவின் முன்னாள் பொதுச் செயலர் வி.எஸ். ராதா கிருஷ்ணன் எழுதியுள்ளார்.

பக். 278, விலை ரூ. 50.00

(பாரதி கல்வி நிலையம், ப்ளாட் 11, 26 ப்ரோமெனேட் ரோடு, திருச்சி - 1.)

சம்ப்ரதாய விரத பூஜா விதானம்

விநாயக பூஜை, அச்வத்த நாராயண பூஜை என முப்பத்தி எட்டு விதமான பூஜைகளை செய்யும் முறை மந்திரங்கள் என விரிவாக தொகுத்துள்ளவர் சாஸ்திரி.

பக். 432, விலை ரூ. 35.00

(கிரி டிரேடிங் ஏஜென்ஸி, 58/2 டி.எஸ்.வி. கோயில் தெரு, மயிலாப்பூர், சென்னை - 600 004.)

கர்ப்பவதிகளுக்கு அவசியமான கையேடு

கர்ப்பத்தால் ஏற்படுகின்ற மாற்றங்கள் முதல் பலவற்றையும் விளக்குபவர் என். ஜனார்த்தனன்.

பக். 142, விலை ரூ. 27.00

(நர்மதா பதிப்பகம், 10/7, ராஜா பாதர்

கரோலினா எனும் ஸ்பிருலினா



Carolina

A FOOD SUPPLEMENT

ஸ்பிருலினா பற்றி நம் அனைவருக்கும் பல சந்தேகங்கள் உண்டு. அவற்றுக்கு விடை தேடி சென்னையின் பிரபல **டாக்டர் கே.ஸ்ரீ. ஸ்ரீதர்** அவர்களை அணுகினோம். அவர் ஹோலிஸ்டிக் டிரெண்ட்ஸ் எனும் நிறுவனத்திற்கு ஆலோசகராக இருக்கிறார். அவர் மேற்பார்வையில் **கரோலினா** எனும் ஸ்பிருலினா தயாரிக்கப்படுகிறது. ஆச்சர்யமான விஷயம், அவர் கடந்த மூன்று வருடத்தில் மூன்று லட்சம் ஸ்பிருலினா மாத்திரைகளை நோயாளிகளுக்கு வழங்கியுள்ளார். வாருங்கள் **டாக்டர் கே.ஸ்ரீ. ஸ்ரீதர்** அவர்களை சந்திப்போம்.

கே. : கரோலினா, ஸ்பிருலினா இரண்டும் ஒன்றா? இது ஆஸ்துமாவிற்கு பயன்படுமா?

பதில் : ஸ்பிருலினா எனும் கடல்பாசி **கரோலினா** என்ற பெயரில் வெளி வருகிறது. இதை ஆஸ்துமா நோயாளிகள் தொடர்ந்து சாப்பிட்டால் இதில் உள்ள நோய் எதிர்ப்பு தன்மை காரணமாக நோயாளி சக்தி பெறுகிறார். நிச்சயம் கொடுக்கலாம். இதை எந்த விதமான மருந்தோடும் சேர்த்து சாப்பிடலாம். நல்ல பலன் கிடைக்கும்.

கே. : நான் ரொம்ப குண்டாக இருக்கிறேன் என்று வருத்தப்படும் பெண்களுக்கும் உடம்பை ட்ரிம்மாக வைத்துக் கொள்ள விரும்பும் காலேஜ் பெண்களுக்கும் கரோலினா பயன்படுமா?

ப. : நாம் உண்ணும் உணவில் போதுமான ஊட்ட சத்துக்கள் இருப்பது இல்லை. **கரோலினா**வில் புரோட்டீன் 70 சதவீதம் உள்ளது. மேலும் B_{12} B_6 போன்ற சக்திகள் உள்ளன. தினமும் ஒரு வேளை உணவை உண்ணாமல் கரோலினா மூன்று அல்லது நான்கு கேப்சூல்கள் சாப்பிட்டால் போதுமானது. இது உடம்புக்கு தேவையான சக்தியை அளித்துவிடும். எனவே மாதம் 30 வேளை உணவை கட் பண்ணிவிடுகிறோம். ஆனால் ஊட்ட சக்தியை இயற்கையாக **கரோலினா**வில் இருந்து பெற்று விடலாம். எனவே பக்க விளைவுகள் இன்றி உடல் இளைக்க, வாய்ப்பாகிறது.

கே. : வேறு எதற்கு கரோலினா கொடுக்கலாம்?

ப. : **கரோலினா**வில் நரம்பு விட்டமின்கள் இருப்பதால் நிச்சயமாக குழந்தைகளுக்கு கொடுக்க வேண்டும். இதனால் அவர்களுக்கு அடிக்கடி நோய் வருவது குறையலாம். சர்க்கரை நோயாளிகளுக்கு இது அற்புத Supportive therapy யாகும். மேலும் கர்ப்ப காலத்தில் தாய்ப்பால் கொடுக்கும் போதும், மெனோபாஸ் எனப்படும் மாதவிடாய் நிற்கும் சமயத்திலும் இதை கொடுக்கும்படி எங்கள் க்ளினிக்கில் பரிந்துரைக்கிறேன்.

கே. : இது பற்றிய புத்தகம் கிடைக்குமா?

ப. : **கரோலினா** பற்றி முழு விபரம் அறிய ஆவலாக இருப்பவர்களுக்கு **இலவசமாகவே கரோலினா** பற்றிய புத்தகம் கிடைக்கும். கீழ்கண்ட முகவரிக்கு ரூ. 5 தபால் தலை அனுப்பி இலவசமாக பெறலாம். மேலும் நேரத்தை பயனுள்ளதாக செலவழிக்க நினைக்கும் பெண்கள் **கரோலினா நெட்வொர்க்**கில் பங்கேற்று விநியோகஸ்தர் ஆகலாம். இதற்கு முன்பணம் எதுவும் கட்ட வேண்டாம்.

பேட்டி : **கானமஞ்சரி சம்பத்குமார்**

தொடர்பு முகவரி : திருமதி சாந்தி இளங்கோவன்;

ரேடியன்ட் மார்கெட்டிங் சர்வீசஸ்,

G - 12 MIG 120 Flats, 11th Avenue அசோக் நகர், சென்னை - 83. போன் : 4711911, 4746364

E-Mail : radiant_m@yahoo.com

— ADVT

தெரு, பாண்டிபஜார், தி. நகர், சென்னை - 600 017.)

ஸ்ரீ அரவிந்தர் பொன்மொழிகள்

மகான் அரவிந்தரின் பொன் மொழி களைத் தொகுத்துள்ளவர் சூர்யகுமாரன்.
பக். 104, விலை ரூ. 21.00

ஸ்ரீ அன்னை பொன் மொழிகள்

பாண்டிச்சேரி அன்னையின் பொன் மொழிகளைத் தொகுத்துள்ளவர் சூர்யகுமரன்.
பக். 104, விலை ரூ. 21.00
(இரண்டும் - ஸ்ரீ சக்ரா பப்ளிகேஷன்ஸ், 8/1 கங்கையம்மன் கோயில் தெரு, இராயப் பேட்டை, சென்னை - 600 014.)

விடியாமல் முடியாது

கவிதைத் தொகுப்பு. ஆசிரியர் காரை மைந்தன்.

'போதும் வாழ்க்கை
வாழ்ந்து பார்த்தது
பாவி சிங்களவனுக்கும்
என் சேகம் வேண்டாமிது'

பக். 96, விலை ரூ. 20.00
(விழுதுகள் வெளியீடு, 5, தென்கரை வீதி, கோட்டுச்சேரி, காரைக்கால் - 9.)

அனந்தனைப் பாடிய ஆழ்வார்கள்

பனிரெண்டு ஆழ்வார்களின் சரித்திரங் களையும் பக்தியில் தோய்த்துத் தருபவர் நாகர்கோவில் கிருஷ்ணன்.
பக். 256, விலை ரூ. 50.00
(குமரன் பதிப்பகம், 2, முத்துகிருஷ்ணன் தெரு, தி. நகர், சென்னை - 600 017.)

பிறவிப்பயன் பெற பிரார்த்தனைக் களஞ்சியம்

விநாயகர் அகவல், வள்ளலார், அருணகிரி யார் பாடல்கள் என பல பிரார்த்தனைப் பாடல்களின் தொகுப்பு.
பக். 75, விலை ரூ. 17.00

தொடத் தொடத் தங்கம்

தங்கம் நோக்கிப் படையெடுக்கும் மனித மனங்களின் பலவீனங்களை அடிப்படை யாகக் கொண்ட சுவாரஸ்யமான மர்ம நாவல். வேகமான கதைக்கு ஆசிரியர் இந்திரா சௌந்தர்ராஜன்.
பக். 392, விலை ரூ. 85.00
(இரண்டும் - திருமகள் நிலையம், 55, வெங்கட் நாராயணா சாலை, தி. நகர், சென்னை - 600 017.)

மகளிர் மன்றம்


கிராமப்புற மகளிர் விழிப்புணர்வைக் கருத்தில்கொண்ட தொகுப்பு. கதையைப் போலப் பல தெரிந்து கொள்ள வேண்டிய செய்திகளைக் கூறியுள்ளார் ஆசிரியர் மு. குப்புசாமி.
பக். 376, விலை ரூ. 70.00
(ஜெயசக்தி பதிப்பகம், 57, பம்மல் நெடுஞ் சாலை, பம்மல், சென்னை - 600 075.)


இதோ கோடைக்காலம் நெருங்குகிறது. செயற்கை குளிர்பானங்களில் உள்ள ரசாயன பொருட்கள் நம் வயிற்றின் உள் சுவர்களை அரித்து விடுகிறதாம். அதைத் தவிர்த்து இயற்கை குளிர் பானங்களான பானகம், இளநீர், எலுமிச்சை ஜூஸ், மோர் அதிகம் குடிக்கலாமே. குளிர்ச்சிக்கு குளிர்ச்சி. செலவோ மிச்சம். கோடைக்காலத்தில் மோர் புளிக்காமல் இருக்க வாழை இலையை சிறிதாக நறுக்கிப் போட்டு வைக்கலாம். அல்லது பச்சை மிளகாய் காம்பை மோரில் போட்டு வைத்தால் புளிக்காமல் இருக்கும்.

- ஸ்யாமளா



உ
ஓம் நம: சிவாய
ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹா பெரியவா துணை





• பொன்னூர் சிவன் கோவில்

Sri Brihannayaki Sametha

Sri Aapath Sahaayeswara Swami Temple, Ponnur

(Iraivan Narpani Mandram, Ponnur, Mayiladuthurai Taluk, Tamil Nadu)

AN APPEAL

The ancient village of Ponnur, situated about 6.5 kms. northwest of Mayiladuthurai Railway Junction in Naagai District (erstwhile Thanjavur Dist.) witnessed an unprecedented gathering of devotees on the early morning of Friday, the 2nd May 1997 when the Mahakumbhabhishekams of Sri Brihannaayaki Sametha Sri Aapathsahaayeswara Swami temple, Sri Kariamaanicka Perumal temple, Sri Maariamman temple, Sri Ayyanaar temple and the newly built Sri Kaamaakshi temple (in the outskirts of the village) were performed in the immediate presence of Their Holiness Sri Dharmapura Aadheenam and Sri Tiruvaavaduthurai Aadheenam. The blessings of Sri Kanchi Sankaracharyas and the munificent donations of so many devotees across the country ensured the grand success of these Kumbhabhishekams — a memorable event that is still talked about by the people of not only Ponnur, but also of adjoining villages and towns in the area.

History has it that the great Tamil saints Sri Thirunaavukkarasar (Appar Peruman) and Sri Gnanasambhandar worshipped and sang in praise of the presiding deity of the village Sri Aapath Sahaayeswara Swami. THIRU ANNIYUR is the name given to Ponnur village in Thevarams. The 68th Pontiff of Sri Kanchi Kamakoti Peetam Sri Sri Sri Chandrasekharendra Saraswathi Swamigal, fondly called as Maha Periyava, visited this village years ago to worship the shrines of this ancient temple. His Holiness Sri Sri Sri Sankara Vijayendra Saraswathi Swamigal, the 70th Pontiff of Sri Kanchi Kamakoti Peetam also visited Ponnur to worship in the temple, a few years ago. It now becomes the duty of devotees to see to the proper upkeep of the temples in Ponnur and the regular performance of Poojas in all the temples.

People belonging originally to this Ponnur village (and also nearby villages like Ramapuram and Pandur) are enjoined by tradition to perform Poojas periodically to the village deities given the name of Anju Pidari, especially when there is a marriage in the family or an auspicious occasion like Shashtiabdapoorthi, etc. To enable the pilgrims visiting Ponnur village on such occasions to enjoy comfortable accomodation for a short stay, it is proposed to construct a small guest house with basic amenities like toilet, bathroom etc. also to keep vessels for preparing Naivedhyams for these Poojas. This accommodation will be of help to others also who come only to worship and go. A family of the village has readily donated a piece of housing plot in North Street to the Iraivan Narpani Mandram, Ponnur to construct this building on it. Another family has given a generous donation towards the initial expenses of this construction. This guest house is likely to cost about Two lakhs of rupees as on date. Donations for this project are welcome from the natives of Ponnur village and other devotees scattered all over the globe.

Coming to the Nitya Pooja mentioned already, devotees are requested to contribute a sum Rs. 1,000/- (Rupees one thousand only) for this purpose, by way of cheque or D/D drawn in favour of Iraivan Narpani Mandram, (payable at Chennai) and they may be sent to the Chennai address as given below with a covering letter giving the names of family members and their Nakshatras which are to be mentioned in the Sankalpa before the start of Nithya Pooja on any day desired by the devotees (once a year). Interest accrued on these contributions will go to meet the expenses of Nithya Pooja all through the year hereafter including the Dakshinas for the Gurukkal, Bhattachariar and Poojari who perform the Poojas. Those who cannot affored it are welcome to contribute their mite to the corpus of this Nithya Pooja fund and earn the Grace of the deities of Ponnur. Prasadams for this Nithya Pooja sponsors will be sent after the Samvatsarabhishekam (anniversary of the Kumbhabishekam according to the Hindu calendar) every year.

IRAIVAN NARPANI MANDRAM
Ponnur, Pandur (P.O.) Mayiladuthurai Taluk.

Cheques and Demand Drafts drawn in favour of "IRAIVAN NARPANI MANDRAM" may please be sent to:
Sri. V. Rajamani No. 1, Second Cross Street, E.K. Raghava Reddiar Colony, Jafferkhanpet, Chennai - 600 083.



கடல் அலைகள் பெரிய இரைச்சலுடன் வந்து கரையைத் தொட்டுக் கொண்டிருந்தன. கடல் அலைகள் மட்டுமல்ல. உதயாவின் மனதிலும் எண்ண அலைகள் பெரிதாக சத்தம் போட்டுக் கொண்டிருந்தன. உதயா இலங்கையில் உள்ள நகை வியாபாரியின் மகள். செல்வந்தரின் மகளாக இருந்தாலும் அவள் உள்ளம் நாடியது அறிவும், பண்பும் நிறைந்த மதிவாணனைத்தான். சாதாரண குடும்பத்தில் ஒரு மருமகனை தேர்ந்தெடுக்க உதயாவின் தந்தை சம்மதிக்கவில்லை. பெற்றோரின் சம்மதத்துடன் நடைபெற வேண்டிய திருமணம் நண்பர்களிடையே நடந்தேறியது. பெற்றோரின் கண்முன் இருந்தால் மன வருத்தம் ஏற்படும் என எண்ணி, இந்தியா வந்து சேர்ந்தனர் உதயா – மதிவாணன் தம்பதியினர். மதிக்கு பாண்டிச்சேரியில் நல்ல வேலை கிடைக்கவே தம்பதிகள் இருவரும் பாண்டிச்சேரியில் குடியேறினர்.

"நாம் செய்தது சரியா, தவறா என்று புரியவில்லை மதி. காதல் வேகத்தில் கல்யாணம் செய்து கொண்டு விட்டோம். குடித்தனம் என்று வரும் போது மனம் பரிதவிக்கிறது."

"பயப்படாதே உதயா! நம் உறவினர் துணை இல்லாவிட்டாலும் தெய்வம் துணையிருக்கும். வாழ்க்கையை ஆரம்பிக்கும்போதே பயப்பட்டால் எப்படி?

வேறு ஊழத்தாலும் வாழ்

வாழ்க்கையில் நாம் சாதிக்க வேண்டியது எத்தனையோ இருக்கிறது. ஆனால் எதையும் சாதிக்கலாம், நம் அன்பில் விரிசல் ஏற்படாத வரையில்'' கண்களில் நீர் பனிக்க மதி உதயாவை அணைத்துக் கொண்டான்.

அவர்கள் வாழ்க்கை இனிமையாகவே நடந்து வந்தது. அவர்களது அன்பின் அடையாளமாக உதயாவின் வயிற்றில் குழந்தை உருவாகியது. மதியின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. உதயாவிற்கும்தான்! ஆனால் மனதோரத்தில் பிரசவ



நேரத்தில் தானும் மதியும் தனியாக சமாளிக்க வேண்டுமே என்று கவலையும் உடன் எழுந்தது. நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக உதயாவின் வயிற்றில் குழந்தை வளர்ந்து வந்தது. பத்து மாதங்கள் உருண்டோடியதே தெரியவில்லை உதயாவிற்கு. குழந்தையை சுமக்கும் பாரம் கூட உதயாவிற்குத் தெரியாத அளவிற்கு மதி அவளை அன்பு மழையில் நனைய வைத்தான். பிரசவ நேரத்தில் அருகிலிருக்க வேண்டும் என லீவு போட்டுப் பார்த்துக் கொண்டான். உதயாவிற்கு வலி ஏற்பட்டதும் மருத்துவமனையில் சேர்த்தான்.

''நீங்கள்தான் உதயாவின் கணவரா?'' டாக்டர் பரபரப்புடன் கேட்டார்.

"ஆமாம் டாக்டர்! உதயாவிற்கு ஒன்றுமில்லையே?"

''அவளுக்குப் பிரசவம் நார்மலாக நடக்க வழியில்லை. குழந்தை குறுக்கில் இருக்கிறது. ஆபரேஷன் செய்ய வேண்டும். இதற்கு சம்மதம் என இந்த இடத்தில் கையெழுத்திடுங்கள்'' என்றார் டாக்டர்.

எதுவுமே யோசிக்கக்கூட தெரியவோ புரியவோ இல்லை மதிக்கு. ஆபரேஷன் நடந்தாலும் குழந்தை ஆரோக்கியமாகப் பிறந்தது.

"பார்த்தாயா உதயா நம் மகளை! அப்படியே குட்டி உதயா!'' என்று பூரித்தான் மதி.

''உங்களுக்கு ரொம்ப செலவு வைச்சுட்டேன் இல்லை!''

"என்னம்மா நீ! பிழைத்து வந்ததோடு குட்டி ராஜகுமாரியையும் கூட்டி வந்திருக்கிறாய். செலவைப் பற்றி பேசுகிற நேரமா இது?'' என்று செல்லமாக உதயாவைக் கடிந்து கொண்டான்.

தங்கள் வாழ்வில் இன்பம் சேர்க்க வந்த மகளை அன்பாக கீதா என்று பெயரிட்டனர். பெயருக்கேற்ற அவர்கள் வாழ்வின் இன்ப இசையை பெருக்கிக் கொண்டிருந்தாள் குழந்தை கீதா. ஆபரேஷன் நடந்ததால், அதிக வேலையோ,சிரமமான வேலையோ செய்ய உதயாவை விடவேயில்லை மதி. சில மாதங்கள் உருண்டோடின. குழந்தை ஆரோக்கியமாக வளர்ந்து வந்தாள். செல்லக் குழந்தை கீதாவின் பிறந்த நாளை எளிமையாகக் கொண்டாட திட்டமிட்டு, நெருங்கிய நண்பர்களை அழைத்தனர்.

"எப்படியிருக்கே உதயா? குழந்தை கீதாவோடு நேரம் சரியாயிருக்கிறதா? உன்னைப் பார்க்கவே முடியவில்லை" கேட்டது வந்திருந்த தோழி அருணா.

"உதயா மட்டுமல்ல! ஆபீஸ் முடிய வேண்டியதுதான். மதியைப் பார்க்கவே முடியாது. அடுத்த நிமிடம் காணாமல் போய் விடுவார். அன்பு காட்டுவது அதிகமாக உன் மீதா? குழந்தை மீதா?'' கேலி செய்தாள் மதியுடன் வேலை செய்யும் லலிதா.

"கண்டிப்பாக உதயா மீதுதான்! பாரேன், அதான் அன்பின் அடுத்த அடையாளமாக உருவாகி விட்டது போலிருக்கிறதே!''

• டாக்டர். ராஜ்குமார்



க்கை இழவேண்டாம்!

''அப்படியா! எனக்குச் சொல்லவே இல்லை உதயா நீ. எத்தனை மாதம்?'' லலிதா கேட்டதும் உதயாவின் கண்களில் நீர் சேர்ந்து முகம் அவமானத்தில் கறுத்தது.

''அப்படி ஒன்றுமில்லை லலிதா! கீதா பிறந்த போது ஆபரேஷன் செய்ததால், வயிறு அப்படியே நின்று விட்டது. பார்க்க அதனால் எப்போதும் ஐந்து மாதம் போலிருப்பது எனக்கே அசிங்கமாக இருக்கிறது!''

''இதைப் பற்றிக் கவலைப்பட ஒன்றுமில்லை உதயா! நல்ல டாக்டரைப் பார்த்தால், இந்த நிலையைச் சீராக்கும் அறுவை சிகிச்சையை செய்து கொள்ளலாம். இல்லாவிடில் நாளடைவில் வலியும், அசௌகரியமும் ஏற்படும். நீ உடனே நல்ல டாக்டரைப் பார்!'' என்று கூறினாள் லலிதா.

மதியுடன் இதைப் பற்றிப் பேசிய உதயா, தங்களின் பண நிலையை மனதில் கொண்டு அரசாங்க மருத்துவமனையில் ஒரு டாக்டரைப் பார்த்தாள்.

"உங்களுக்கு அடிவயிற்றில் உள்ள சதையும் கொழுப்பும் நகர்ந்து வெளியே தள்ளியிருக்கிறது. இதை ''இன்சிஷனல் ஹெர்னியா'' என்று கூறுவோம். இதைச் சரிசெய்ய ஒரு அறுவை சிகிச்சை செய்து சரியாக்கலாம்'' என்றார் டாக்டர்.

குறிப்பிட்ட தேதியில் உதயாவிற்கு ஹெர்னியா அறுவை சிகிச்சை நடந்தது. வயிற்றில் ரணம் ஆற என மருந்துகள் கொடுக்கப்பட்டன. நல்ல சமயத்தில் ஆபரேஷன் செய்து கொண்டு விட்டோம் என உதயாவிற்கு பெரிய நிம்மதி. ஆனால் இந்த நிம்மதி சில காலம் கூட நீடிக்கவில்லை. என்ன காரணம் என்று தெரியாமல் அடிவயிற்றில் வலி ஏற்படவே திரும்ப மருத்துவ உதவியை நாட வேண்டி வந்தது. இந்த முறை பணம் செலவானால் பரவாயில்லை என தனியார் மருத்துவமனையில் இரண்டாம் முறை அறுவை சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

குழந்தை கீதாவை சமாளிப்பது ஒருபுறமும், மருத்துவமனையில் உதயாவை கவனிப்பது ஒருபுறமும் என மதி திண்டாடிப் போனான். ஏதோ நண்பர்களின் உதவி இருந்ததால் சமாளித்துக் கொண்டான்.

"என்னால் உங்களுக்கு ரொம்ப கஷ்டம். நான் வயிறு தெரிந்தாலும் பரவாயில்லைன்னு விட்டிருக்கலாம். எதையோ ஆரம்பிக்க, மேலும் மேலும் பிரச்னைகள்தான் அதிகமாகிக் கொண்டே போகிறது."

"இல்லைம்மா! நல்ல வேளையாக யாரோ சொல்லியதன் பேரில் ஹெர்னியாவை சரிசெய்ய ஆபரேஷன் செய்து கொண்டோம். இல்லாவிட்டால் சில சமயம் சிறுகுடல் வெளியே வந்து, சாப்பிடவும் முடியாம, மலம் கழிக்கவும் முடியாமல் போய் விடுமாம். அடிவயிற்றில் உனக்கு வலி ஆரம்பித்தது கூட அதற்கான அறிகுறிதான். அதனால் நல்ல சமயத்தில் வந்து விட்டோம். இதோடு விட்டு விட்டால் சரி. மருத்துவமனை என்ற பெயரைக் கேட்டாலே பயமாயிருக்கிறது!"

ஒருவழியாக ஹெர்னியா ஆபரேஷன் திரும்பச் செய்யப்பட்டு, அதிகமாக இருந்த சதை நீக்கப்பட்டு வயிற்றில் 'மெஷ்' ஒன்று பொருத்தப்பட்டு சிகிச்சை முடிந்து வீடு திரும்பினாள் உதயா. குழந்தையைக் கூட தூக்கக் கூடாது என்று மருத்துவர்கள் கூறியிருந்ததால் மிகக் கவனமாக உதயாவைக் கவனித்துக் கொண்டான் மதி. உதயாவின் உடல்நிலை சிறது சிறிதாகத் தேறி சாதாரண வாழ்க்கை வாழத் தொடங்கினாள்.

இரண்டு மாதங்கள் ஆன பிறகு மறுபடி 'செக்கப்' செய்ய வரச் சொல்லியிருந்தார் டாக்டர். அன்றைய தினம் காலையில் குளித்து விட்டு புடவை கட்டிக் கொள்ளும் போது வயிற்றில் ஒரு பகுதி அழுந்தியதும் சீழ் வழியத் தொடங்கியது. இதைக் கண்ட உதயாவிற்கு 'குபீர்' எனப் பயம் தொற்றிக் கொண்டது. ''கடவுளே! எல்லாம் சரியாகி விட்டது என நினைத்தேனே? இப்போது சீழ் வருகிற தென்றால் ரணம் ஆறவில்லையா? இப்படி மதியை மேலும் மேலும் சிரமப்படுத்தும்படி என் உடல்நிலையை ஏன் சீர்குலையச்,




லட்டு பாஸந்தி

நான்கு அல்லது ஐந்து லட்டை மிக்ஸியில் பொடித்துக் கொள்ளவும். அரை லிட்டர் பாலை சுண்டக் காய்ச்சி அரைத்த விழுதை பாலில் கலந்து சூடாகச் சாப்பிடலாம். பிரிஜ் வைத்துள்ளவர்கள் உள்ளே வைத்து ஜில்லென்று சாப்பிட, லட்டு பாஸந்தி வெகு ஜோர்.

– நிர்மலா வெங்கட்

ஜிங்லர்ஸ்


உங்கள் அருமைக் குழந்தையின் பட்டு மேனிக்கு இதமான, விசேஷ மெத்தை.



உங்கள் குழந்தைக்கு சிறப்பான கவனம் தேவை. இதை மனதில் கொண்டு, முழு ஈடுபாட்டுடன் தயாரிக்கப்பட்ட ஜிங்லர்ஸ் மெத்தையை உங்கள் குழந்தைக்கு அளிக்கிறோம். மென்மையான ஜிங்லர்ஸ் குழந்தை-மெத்தை பல ஒப்பற்ற சிறப்பம்சங்கள் கொண்டது.



● எளிதில் துவைக்கலாம், விரைவில் உலரும் ● சர்வதேச தொழில் நுட்பம் ● மென்மையான பாலிஃபைபர் கொண்ட உட்புறம் ● 100% பருத்தியினாலான மேல்பாகம்




● காற்றுப்புகும் அமைப்பு உள்ளதால் வெப்ப எரிச்சல், தடிப்பு ஏற்பட வாய்ப்பே இல்லை ● உட்புறம் ஈரத்தினால் கெட்டியாகாமல் மென்மையாக இருக்கும் ● பல அளவுகளில், மனதிற்கினிய வண்ணங்களில் கிடைக்கிறது.

ஜிங்லர்ஸ்-உங்கள் அரவணைப்புக்கு ஈடான அழகிய மெத்தை.

Jinglers®

India's first real washable baby bed



Mfrs. Utility Textiles,
P.B. No.6858
Chennai - 600 040 Ph : 6211974

Distributor for Mayiladuthurai, Thanjavur, Nagapattinam, Thiruvarur, Pattukkottai, Pudukottai, Mannargudi, Trichy, Cuddalore,.Chidambaram, Neyveli :
M/s. SIBI Agencies, OA/3, Durgaiamman Koil Street, Senthangudi, Mayiladuthurai - 609 001 Phone : 26142

Available at :

CHENNAI : ● ***T. Nagar*** : Naidu Hall; Ratna Stores; Witco; Murugan Dresses; New Burma Fancy Stores; Krishna Thulasi; Flora; ***Mylapore*** : Vitan Departmental Stores; Trishla Apparels; Garments Centre; London Stores ● ***Purasalwalkam*** : London Stores; Ayisha The Upstairs; Libas; Naidu Hall, Sahiras Readywear; Baby's World; Twinkle ● ***Kilpauk*** : Mummy Daddy ● ***Kodambakkam*** : Sekar Dresses ● ***Anna Nagar*** : Naidu Hall; Witco; Sharaz; Yeses Super Market ● ***Tambaram*** : Lucky Apparels; Lucky Dresses; Roja Departmental Stores ● ***Egmore*** : Fashions ● ***Padi*** : Seematti ● ***Aminjikarai*** : Shabnam; Alankar Silk Palace ● ***Mount Road*** : London Stroes, Kiddies Corner ● Old Washermenpet: Shopping Singapore ● ***Parrys*** : Novelty gift Palace ● ***Adyar*** : Super Shoppe ● **COIMBATORE** : Saravana's; Sri Land; Grand Bazzar; Ganapathy Bed Mart; Shoba; Small Wonders; Jack & Jill ● **SALEM** : Milan; Aunty Uncle; five Star Readymades; Royal Home Decors; Ramyaa Esteem; Ramya shopping Plaza; Ramya; Princy furniture Hall ● **ERODE** : Bharani Readymades; Nandini Sarees and Readymades; Sri Krishna silks; Santhi Dresses ● **OOTY** : *Coonoor* : Yogesh Garments ● **KRISHNAGIRI** : New Rani Dresses ● **MADURAI** : M.S.P. Raja Enterprises; Milan; Daddy Mummy; Remuki; Kiddy's Corner; Shabnam Agencies; Benzers; Balaji Readymades; Roopmilan; Rahimas; Rainbow Readymades; Designs; Sathyam; Alankar Traders ● **DINDIGUL** : Priya; Shabnam; Singapore Plaza; Sivalakshmi Readymades ● **RAMNAD** : Mummy Daddy; India Readymades; Designs; Faridas ● **TIRUVELVELI** : Pothy's Garments, Roopam Readymades; R.M.K.V ● **TUTICORIN** : Students Readymade Emporium, Jasmine Readymades; Milan ● **PONDICHERRY** : Shabnam; Kiddys

செய்தாய்?'' என அழத் தொடங்கினாள்.

சாயங்காலம் டாக்டரைப் பார்த்ததும், ரணம் ஆற என சில மாத்திரைகள் எழுதிக் கொடுத்தார்.

''ஆபரேஷன் செய்து எல்லாம் சரி செய்தாகி விட்டது. ரணம் ஆறாமல்தான் சீழ் வந்தது. அல்லது அங்கு கட்டி ஏதாவது ஏற்பட்டு அதில் சீழ் வந்திருக்கலாம். கவலைப் படாதீங்க! சரியாகிவிடும்'' என்றார்.

ஆனால் நிலைமை சரியாகவில்லை. வயிற்றில் ஆங்காங்கே துவாரங்கள் வழியே சீழ் வந்து கொண்டேயிருந்தது. அவற்றைத் துடைத்து ஆங்காங்கே ப்ளாஸ்த்திரி போட்டுக் கொண்டாள் உதயா. மருத்துவமனையிலுள்ள டாக்டரோ, இதற்கு மேல் செய்வதற்கொன்றுமில்லை என கைவிரித்து விட்டார். ஒவ்வொரு நாளும் இதே வேலையாக செய்து வந்த உதயாவிற்கு மனமொடிந்து போயிற்று. நாளடைவில் நிலை மோசமாகி, உதயாவே சுத்தம் செய்து கொள்ள முடியாத நிலையில், ஒவ்வொரு நாளும் சுத்தம் செய்து ப்ளாஸ்த்திரி போடுவது மதியின் வேலை ஆயிற்று. ஆனால் மதிக்கு இது சிரமமாகவோ, அருவருப்பாகவோ இல்லை. இதற்கு அவன் அவள் மேல் கொண்டிருந்த அபாரமான அன்புதான் காரணமோ என்னவோ!

ஒருநாள் உதயாவிற்கு சென்னையில் இருந்து ஒரு கடிதம் வந்தது. பிரித்துப் பார்த்தால், தன் கல்லூரித் தோழி மாலினி எழுதியிருந்தாள். வரும் ஞாயிற்றுக்கிழமை பாண்டிச்சேரி வருவதாகவும், இரண்டு நாள் தங்க இருப்பதாகவும் மாலினி எழுதியிருந்தது உதயாவின் மனத்தில் உற்சாகத்தை எழுப்பியது.

ஞாயிற்றுக் கிழமை வந்தது. மாலினியும் வந்தாள். தோழிகள் இருவரும் ஒருவரையொருவர் பார்த்து மகிழ்ந்தனர். ஆசை தீர பேசித் தீர்த்தனர். இலங்கையில் கண்டியில் உள்ள உதயாவின் பெற்றோர், உறவினர்கள் பற்றிப் பேசுகையில் உதயாவின் மனம் கலங்கியது. நிலைமையின் மாற்றத்தைக் கண்டு பேச்சை மாற்றினாள் மாலினி.

''என்ன உதயா! வாழ்க்கை எப்படியிருக்கிறது! மதி உன்னை நன்றாகக் கவனித்துக் கொள்கிறாரா?''


''அதில் எனக்கு எந்தக் குறையுமில்லை! மதி போல் ஒரு கணவர் கிடைக்க நான் நிறைய புண்ணியம் செய்திருக்க வேண்டும்.''

''குழந்தை கீதா பள்ளிக்கூடம் போக ஆரம்பித்தாகி விட்டதே! குட்டி உதயாவைப் போல் குட்டி மதி வேண்டாமா?'' என்று மாலினி கேட்டதும், அதுவரை அடக்கி வைத்திருந்த அழுகை பெரிதாக வெளிப்பட மாலினியின் மடியில் முகம் புதைத்து அழத் தொடங்கினாள் உதயா.

''என்ன உதயா? ஏன் அழறே? உனக்கு என்ன கவலை? நான் ஏதாவது தப்பாகக் கேட்டு விட்டேனோ?''

''இல்லை மாலினி! என் இயலாமையினால்தான் நான் அழுகிறேன். உலகில் உள்ள மற்ற ஆண்களைப் போல் என் மதி கிடையாது. அவர் மிகவும் பொறுமைசாலி. என் உடல்நிலை சரியில்லாததால், எங்களிடையே தாம்பத்திய உறவே கிடையாது. மதி என்னைத் தொடுவதே, என்னுடைய புண்களுக்கு மருத்துவம் செய்யத்தான்! அன்பாக இருந்த எங்கள் இல்லறத்தில் என் உடல் நிலையினால் விரிசல் விழுந்து விட்டது. ஆனால் மதியின் அன்பு குறையாமலிருப்பதால் ஒரு குற்ற உணர்வு என்னை வாட்டி வதைக்கிறது!'' என மனம் விட்டுப் பேசினாள் உதயா.

பாவம் திருமண நிகழ்ச்சியில் பாடுபவர்கள். யாருமே கேட்க மாட்டார்கள். ஆனால் என் தோழி மகன் திருமணத்தில் கச்சேரி வைக்க வில்லை. மாறாக மெல்லிய ஒலியில் ஃப்ளூட் இசை காற்றில் தவழ்ந்து வரும்படி வைத்து விட்டார்கள். வந்தவர்கள் சிலர் பேசிக் கொண் டிருந்தார்கள். இருப்பினும் காதில் இனிமையாக இந்த ஃப்ளூட் இசை பின்னணியில் மெதுவாக ஒலித்துக் கொண்டேயிருந் ததால் ஒருவித அமைதியை சந்தோஷத்தை அளித்தது. இதுமாதிரி கல்யாண ரிசப்ஷனில் மற்றவர்களும் செய்யலாமே.



— கீதா



பலவிதமான காய்களைப் போட்டு மோர்க் குழம்பு வைத்திருப்பீர்கள். மாறுதலுக்கு தக்காளி போட்டு செய்து பாருங்கள். இதற்கு புளித்த மோர் விடாமல் நல்ல மோர் விட வேண்டும், தக்காளியில் புளிப்பு இருப்பதால். விடாமல் செய்யத் தொடங்குவீர்கள்.

– சரளா

"உன் உடல்நிலையை நல்ல டாக்டரிடம் காட்டி சரிசெய்து கொள்ளக் கூடாதா?"

"நான் டாக்டர் எல்லாம் கைவிட்ட நிலையிலிருக்கிறேன் மாலினி! பாண்டிச்சேரியில் உள்ள நல்ல மருத்துவமனையில்தான் ஆபரேஷன் நடந்தது. என்னுடைய விதி, மேலும் மேலும் ரணமாகிக் கொண்டே வருகிறது."

"நீ எதற்கும் நான் சொல்லும் டாக்டர். ஜே. எஸ். ராஜ்குமாரை சென்னையில் உள்ள அவரது மருத்துவமனையில் சென்று பார். உனக்குக் கட்டாயம் நல்ல வழி பிறக்கும். வெளிநாடுகளில் இருந்து வந்து அவரிடம் பலர் சிகிச்சை செய்து கொள்கின்றனர். நான் கூட இப்போது சென்னையில் அவரிடம் சிகிச்சை பெற்ற பிறகுதான் இங்கு வந்தேன்" என்று உதயாவிடம் டாக்டரின் விலாசத்தைத் தந்தாள்.

மதியிடம் விவரத்தைக் கூறியபோது கடைசி முறையாக டாக்டர். ராஜ்குமாரையும் தான் பார்த்து விடுவோமே என எண்ணி குழந்தை கீதாவுடன் சென்னை வந்து சேர்ந்தனர். மருத்துவமனையில் உதயாவினை பரிசோதித்து, ஸ்கான் செய்து பார்த்தார் டாக்டர்.

"நான்கு வருடமாகவா இப்படி சீழ் வடிவதைப் பொறுத்துக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார் டாக்டர்.

"ஆமாம் டாக்டர். சீழ் வடிவது முன்பை விடச் சற்று குறைந்த மாதிரி இருந்ததால், சரியாகிவிடும் என்ற ஒரு நம்பிக்கையில் இருந்தோம். ஆனால் நிலைமை மோசமாகி

விடவில்லையே தவிர, சரியாகவில்லை'' என்று மதி கூறினாள்.

''அவங்களுக்கு சீழ் எவ்வளவு வழிகிறது என உங்களுக்கு எப்படித் தெரியும்?'' மதியிடம் டாக்டர் கேட்டார்.

''நான்தான் அவளுக்கு தினமும் சுத்தம் செய்து மருந்து போடுவேன். அதனால் ரணம் என்ன அளவிலிருக்கிறது என்பது தெரியும்'' என்றாள் மதி.

இப்படி ஒரு அதிசயக் கணவரா? என மிக ஆச்சரியமாகப் பார்த்தார் டாக்டர்.

''உங்கள் பிரச்னை என்ன என்பது ஸ்கான் செய்ததில் தெளிவாகி விட்டது. இந்த நிலைமை சரியாக்க ஒரு அறுவை சிகிச்சை செய்தாக வேண்டும். அதற்கு தயாராகிக் கொண்டு மருத்துவமனையில் அட்மிட் ஆகி விடுங்கள். கவலைப்பட வேண்டாம்'' என்றார்.

''இன்னொரு அறுவை சிகிச்சையா! வேண்டாம் டாக்டர்! ஏற்கெனவே இருமுறை செய்து வயிறு ரணம்தான் ஆயிற்றே தவிர, நிலைமை சரியாகவில்லை. அதனால் ரணம் ஆற மருந்து மாத்திரைகள், ஊசிகள் போன்ற சிகிச்சை செய்யுங்கள். ஆபரேஷன் வேண்டாம் டாக்டர்! என்னால் தாங்க முடியாது. மதியால் பணம் செலவு செய்யவும் முடியாது. குழந்தையை சமாளிக்கவும் முடியாது!'' என கெஞ்சினாள்.

''சில ஆன்டிபையாடிக் மாத்திரைகள் எழுதித் தருகிறேன். ஆனால் அறுவை சிகிச்சை செய்து கொள்வதுதான் உங்கள் ப்ரச்னைக்கு சரியான தீர்வு. யோசித்துக் கொண்டு திரும்பி வரலாம்'' என்று மருந்து எழுதித் தந்தார் டாக்டர். ஆனால் அவர்கள் கட்டாயம் திரும்பி வருவார்கள் என்று நம்பினார். உதயாவின் நிலை அப்படியே இருந்ததால், பணத்திற்கும் ஏற்பாடு செய்து கொண்டு வந்து உதயாவை அட்மிட் செய்தான் மதி.

வழக்கமாக மருத்துவமனையில் நடக்கும் அறுவை சிகிச்சைக்கு அவருக்கு உதவி செய்யும் டாக்டர். செல்வக்குமார், டாக்டர் இளையகுமார், டாக்டர். ஸ்ரீதர் மற்றும் மயக்க மருந்தளிக்கும் நிபுணர் டாக்டர் ஜான் சுரேஷ் ஆகியோர் வந்து சேர்ந்தனர்.

உதயாவின் வயிற்றுப் பகுதி திறக்கப்பட்ட உடனேயே, சீழ் பிடித்து ரணமாவதன் காரணம் டாக்டருக்கு தெளிவுபட்டது. முந்தைய ஆபரேஷனில் வயிற்றின் சதை நீக்கப்பட்டு, வயிற்றின் சுவரை பாதுகாக்க 'மெஷ்' எனப்படும் வலை ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அந்த 'மெஷ்' உதயாவின் உடலோடு ஒத்துப் போகாததால், இன்ஃபெக்ஷன் ஏற்பட்டு, சீழ் பிடித்து, பல துவாரங்கள் மூலம் வெளிப்பட்டிருந்தன. இதனால் முதலில்

கோடைக் காலத்தில் தண்ணீர் தாகம் அதிகம் எடுத்து நாக்கு வறண்டு கொண்டேயிருக்கும். கையில் ஒரு கவரில் கொஞ்சம் கற்கண்டை எப்பொழுதும் வைத்துக் கொள்ளுங்கள். தேவையான பொழுது ஒரு கற்கண்டை வாயில் போட்டால் நா வறட்சி அடங்கும். உடலின் சக்தியும் கூடுதலாகும். தண்ணீர் இல்லாத சமயத்தில் இது மிகவும் உதவும்.

— ஆர். ஜெயலெட்சுமி.



'மெஷ்' நீக்கப்பட வேண்டியிருந்தது. 'மெஷ்' ஒடிந்து போயிருந்ததால், சிறு துண்டுகளாக இருந்த அவற்றை சிரத்தையாக நீக்கினர். பிறகு அதனால் ஏற்பட்ட இரத்தப்போக்கை சரியாக்கத் தொடங்கினார். மெஷ்ஷை ஒட்டி சில பாதைகள் மூலம் சீழ் வயிற்றின் மேற்புறத்தில் வந்திருந்ததால், அந்த பாதைகளையும் (Tracks) நீக்கினார். இதனால் மேலும் இரத்தம் பீறிட்டது. Nd : YAG laser என்ற நூதன லேசர் கருவி கொண்டு மின்சார கரண்டை செலுத்தி இரத்தப்போக்கு நிறுத்தப்பட்டது. பிறகு அதிகமாக இருந்த தோல் பகுதி, பாதிக்கப்பட்டிருந்த திசுக்கள் நீக்கப்பட்டன. இறுதியில் வயிற்றின் சுவர் சீராக்கப்பட்டது – மெஷ் இல்லாமலேயே!

மற்ற நோயாளிகளுக்கு இதுபோன்ற சிகிச்சை செய்யப்பட்ட பிறகு காயம் ஆற திறந்து வைக்கப்படும். ஆனால் உதயாவிற்கு எளிதில் இன்பெக்ஷன் ஏற்படும் தன்மை இருந்ததால் வயிற்றுப் பகுதியை, ஆன்டிபையாடிக் திரவங்களால் பலமுறை கழுவி சுத்தம் செய்த பிறகு தோலை மேல்புறம் மூடி விட்டார். இதனால் மற்றொரு ஆதாயமும் உண்டு. பொதுவாக நான்கு முதல் ஆறு வாரங்கள் வரை ரணம் ஆற சமயமெடுக்கும். உதயா ஏற்கெனவே நிறைய சிரமப்பட்டிருந்ததால் வயிற்றை மூடி விட்டதால் ரணம் சீக்கிரம் ஆறி விடக்கூடும். ரணம் ஆற மூன்றுவித மருந்துகள் கொடுக்கப்பட்டன. ஒன்று ஸ்ட்ராங்கான விட்டமின்கள். இரண்டாவது ஸ்ட்ராங் ஆன்டிபையாடிக்ஸ். மூன்றாவது ஸ்ட்ராங் 'ப்ரேயர்ஸ்' – ஆழ்ந்த பிரார்த்தனைகள்.

டாக்டர் வியக்கும்படி, பத்து நாட்களில் ரணம் ஆறி, வயிறு ஒட்டிய நிலைக்கு வந்து விட்டது. வயிற்றில் சீழ் இல்லை, சுருக்கம் இல்லை. சிறுகுடல் சரியான நிலைக்கு வந்து விட்டதால், வயிறு தூக்கிக் கொள்ளவும் இல்லை.

''உங்களுக்கு உடம்பு சரியாயிடுச்சும்மா! நீங்கள் பாண்டிச்சேரி திரும்பிப் போகலாம். சாதாரணமாக சாப்பிடலாம்; நடக்கலாம். கவலைப்படாம வாழலாம்!'' என்றார் டாக்டர்.

''ரொம்ப தாங்க்ஸ் டாக்டர்! நான் ஆபரேஷன் மூலம் சரியாகி விடும் என்று நம்பவே இல்லை. என் தோழி மூலம் நான் தெய்வத்தையே நேரில் பார்த்து விட்டேன்'' என்று ஆனந்தத்தில் அழுதாள் உதயா.

''மிஸ்டர் மதிவாணன்! இனிமேல் நீங்கள் ஒரு நர்ஸ் போல் உங்கள் மனைவிக்கு பணிவிடை செய்ய வேண்டாம். மற்ற கணவர்களைப் போலவே உங்கள் மனைவியுடன் அன்பாக இல்லறம் நடத்தலாம். ஆனால் ஜாக்கிரதை! வயிற்றில் நிறைய ஆபரேஷன்கள் நடந்து விட்டதால் குழந்தை உருவாகாமல் மட்டும் பார்த்துக் கொள்ளுங்கள். வேறு எந்தத் தடையுமில்லை!'' என்று நகைச்சுவையுணர்வோடு மதிவாணனின் கைகளைக் குலுக்கினார் டாக்டர் ராஜ்குமார். அவரை நன்றியுணர்வோடு நிமிர்ந்த பார்த்த மதியின் கண்கள் கலங்கியிருந்தன!

டாக்டர். ராஜ்குமார் கூறுகிறார்....

''இன்சிஷனல் ஹெர்னியாவை சீர் செய்யும் போது வயிற்றில் அறுவை சிகிச்சை செய்து, சிறுகுடலை உட்புறம் தள்ளி, வயிற்றின் உள்ளே அமைந்துள்ள முன்புற சுவர் போன்ற தோலை ஒன்றன் மேல் ஒன்றை வைத்து இணைத்து தைத்து விடுவோம். இதனால் உள்ளிருந்து அழுத்தம் அளிக்கப்பட்டாலும், இரண்டு சுவர்கள் போல் இருப்பதால் வெளியே வர முடியாது. அதற்கு மீறி வெளியே வரும் போல் இருந்தால் அடுத்த முயற்சியாக, மீன் வலை போன்ற 'மெஷ்' எனப்படும் வலை வைத்து தைத்து விடுவோம். பிறகு அந்தப் பகுதியில் உள்ள நார் போன்ற டிஷ்யூக்கள் வலையோடு பின்னிக் கொண்டு ஒரு கெட்டியான சுவராக உருவாகி விடுகிறது.

'மெஷ்' எனப்படும் இந்த வலை தொண்ணூறு சதவிகிதத்திற்கும் மேற்பட்டோருக்கு எந்த பிரச்னையையும் தருவதில்லை. என்னிடம் 'இன்சிஷனல் ஹெர்னியா'விற்காக வலை பொருத்தப்பட்ட ஐநூறு பேரில் ஒருவருக்குத்தான் ஒத்துக் கொள்ளவில்லை. ஆனால் அதற்காக 'மெஷ்' பொருத்தப்படுவது தவறு என்றோ ஆபத்து என்றோ கருதக் கூடாது. பெரிய பெரிய இருதய அறுவை சிகிச்சைகளில் கூட 2 முதல் 5% வரை நோயாளிகள் இறந்து விடுகின்றனர். அதற்காக ஆபரேஷன் செய்யாமலிருக்க முடியுமா? அப்படியே 'மெஷ்' பிரச்னை ஏற்படுத்தினாலும் அதை நீக்கி விடலாம்.

'ஹெர்னியா' பற்றி மேலும் சில குறிப்புகள் :

ஹெர்னியா ஏற்படாமலிருக்க –

1. உடல் பருமனாகாமல் இருக்க வேண்டும்.
2. தீவிரமான இருமலுக்கு உடனடி சிகிச்சை பெற வேண்டும்.
3. மலச்சிக்கல் இல்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.
4. சிறுநீர் கழிக்க சிரமப்படாமல் இருக்க வேண்டும்.
5. புகை பிடிக்காதீர்கள்.
6. அதிக எடையைத் தூக்காதீர்கள்.
7. அப்பெண்டிசைடிஸ், கர்ப்பத் தடை ஆபரேஷன், குழந்தை பிறக்க சிசேரியன், கர்ப்பப் பையை நீக்கும் ஆபரேஷன் போன்ற வயிற்றில் செய்யப்படும் அறுவை சிகிச்சைகளுக்குப் பிறகு 'இன்சிஷனல் ஹெர்னியா' ஏற்படுகிறது. இதனை பாரம்பரியமாக செய்யும் முறையான – வயிற்றை திறந்து சரிப்படுத்தும் வகையைத் தவிர, 'லாப்ரோஸ்கோபி' முறையிலும் சரிசெய்யலாம். இதில் மிக எளிய முறையில் சிறு துவாரங்கள் செய்து, சிறுகுடல் உள்ளே தள்ளப்பட்டு வலை வைத்து சிகிச்சை செய்யலாம். அடுத்ததாக 'லாப்ரோஸ்கோப்' கருவி உள் வரை செல்லாமல் மேல்புறத்தில் உள்ள தோலையும், சதையையும் எடுத்து தைத்து விடலாம். இதனால் வலையைத் திரும்பி தொடப் போவதில்லை. அதனால் 'சீழ்' பிடிக்கும் வாய்ப்பு குறைவு!

டாக்டர் ராஜ்குமார் பேட்டி

கதைத் தொகுப்பு :

ராஜ்யஸ்ரீ சந்திரசேகர்

இம்மாத இல்லத்தரசி

சமையல் கூப்பன்

பொருள் : மசாலா **கடைசி தேதி : 15.4.99**


என்ற தலைப்பில் சமையல் குறிப்பை இதனுடன் அனுப்பியுள்ளேன். இச் சமையல் குறிப்பு இதுவரை எந்தப் பத்திரிகையிலும் வெளியானதல்ல என்று உறுதி கூறுகிறேன்.

கையொப்பம்

சென்னையில் முதல் முறையாக

பாண்டி பஜார் ஃபாத்திமா பிளாசாவில் உள்ள

புதிய



NARAYANA PEARLS AND JAIPUR JEWELS

அறிமுகப்படுத்தும்

அழகிய கோலாபூர் நகைகள்

Semi precious stoneல்
செதுக்கிய கடவுள்
சிற்பங்களும் கிடைக்கும்.

விதவிதமான வண்ண
மாலைகளுடன்

20% தள்ளுபடி
கோலாப்பூர் நகைகளை தவிர

முழுநேர ஜோதிட ஆலோசனை, ராசிக்கேற்ப கற்கள் பரிந்துரைக்கப்படும். எங்கள் கடையில் வாங்கிய ராசி கல் திருப்தி அளிக்கவில்லை எனில் நீங்கள் அதை திரும்ப கொடுக்கலாம் அல்லது மாற்றிக்கொள்ளலாம்.

எல்லாவித ஃபேஷன் நகைகள் இங்கு கிடைக்கும்

2nd Choice and Rolex Gold guaranteed கவரிங் வளையல்கள் இங்கு கிடைக்கும்.

உங்கள் பழைய ஃபேஷன் நகைகளை புதிய நகைகளுக்கு மாற்றிக்கொள்ளலாம்.

இங்கு ஜெய்ப்பூர் மாலைகள் மற்றும் ரூபி, பச்சை, கோமேதகம் மற்றும் நீலம் மாலைகள் கிடைக்கும்.

ஞாயிற்றுகிழமையில் காலை 11.00 மணி முதல் மாலை 6.00 வரை கடை திறந்திருக்கும்.

ரூ.1,000க்கு
மேல் பொருட்கள் வாங்குவோருக்கு
கவர்ச்சிகரமான பரிசுகள்

NARAYANA pearls and Jaipur Jewels

Fathima Plaza, 78, Pondy Bazaar,
Between Hotel Hameedia & Blue Star Opticals,
Chennai - 600 017. Ph.: 8258714.

சுற்றுலா ப்ரியர்களுக்கு

உண்மையான தொடர்புகள்

டீன் ஏஜ் என்றாலே ஆட்டம், பாட்டம், நுனி நாக்கு ஆங்கிலம், அரட்டை, இப்போது கம்ப்யூட்டர் இப்படித்தான் பொதுவாக எல்லோருக்கும் ஒரு எண்ணம். இலக்கற்று கம்ப்யூட்டர் கிளாஸில் சேருவது இப்போதைய ஃபேஷனா அல்லது பெற்றோர்களின் நிர்பந்தமா என்று தெரியவில்லை. என் மகனின் (18 வயது) 'அட்வெஞ்சர் கிளப்' அனுபவங்களை அவன் எனக்கு சொல்லிய போதுதான் தங்கள் குழந்தைகளைக் கம்ப்யூட்டர் கிளாஸ், கோச்சிங் கிளாஸ் என்று மூடிய சூழ்நிலையில் வளர்க்கும் பெற்றோர்களுடன் இதைப் பகிர்ந்து கொள்வது அவசியம் என நினைத்தேன்.

"நாங்கள் சென்னையிலிருந்து இரயிலில் ரேணுகுண்டா போய்ச் சேர்ந்தோம். அங்கிருந்து பஸ்ஸில் மாமண்டூர். இப்படி இங்கே சென்னைக்கு அருகே இவ்வளவு அழகான காடு இருப்பது இத்தனை நாளாக நமக்குத் தெரியவில்லை.

இந்த வனவுலாவை ஏற்பாடு செய்தவர் ஒரு முன்னாள் இராணுவ மேஜர். இவர் தன் அனுபவங்களை அவ்வப்போது சொல்லும்போது நமக்கு மெய்சிலிர்க்கிறது. நாம் சின்ன விஷயங்களுக்கு ஏன் இவ்வளவு அலுத்துக் கொள்கிறோம் என்று தோன்றுகிறது. எங்களை காட்டிற்குள் ஜீப்பில் இரவு அழைத்துச் சென்றார். அற்புதமான அனுபவம் இந்த நைட் டிரைவ். ஒருவர் தொழிலதிபர் மற்றும் வன விலங்கு ஆராய்ச்சியாளர். இன்ஜினியரான இவர் வன விலங்குகளின் மேல் உள்ள காதலால் தன் வாழ்நாளை ஆய்வுகளிலேயே செலவழித்துக் கொண்டிருப்பவர்.



"சமையலுக்கு ஆள் இல்லையா? எடு கரண்டியை"

என்று இவரே சமைக்கத் தொடங்க அவருடன் எல்லோரும் சேர்ந்து கொண்டோம். இவருக்கு இந்தியாவில் உள்ள ஒவ்வொரு வனப் பகுதியும் அங்குள்ள வன விலங்குகளும் பறவைகளும் அத்துபடி. அங்கே போன அனுபவங்களை அவர் சொல்லும்விதம் அதைவிட சுவாரசியமானவை.

தொழில்முறை புகைப் படக்காரர் ஒருவர். சின்னச் சின்ன பூக்களையும், எறும்பையும், பூச்சிகளையும் ரசித்து அவர் புகைப்படம் எடுக்கும் விதம் நமக்குள்ளும் ஒரு ரசிப்புத்தன்மையை ஏற்படுத்துகிறது. அது மட்டுமல்ல. கேமரா ஆங்கிள், லைட்டிங் என்று பலவற்றை விவரமாக எங்களுக்கு விளக்கினார். இன்னும் விளம்பரத்துறை, வியாபாரத் துறை, கட்டிடக் கலை வல்லுநர் என்று பல துறைகளிலிருந்தும் வந்திருந்தார்கள். இப்படிப் பல துறைகளில் உள்ளவர்களுடன், அதுவும் நான் பார்த்துப் பழகாத புதியவர்களுடன் ஒன்றாக நான்கு நாட்கள் இருந்த அனுபவம் இங்கே நான் எத்தனை வகுப்புகள் சென்றாலும் கிடைக்காது.

இயற்கையோடு ஒன்றிய நான்கு நாட்கள். சுற்றுப்புறம் முழுவதும் பசுமையும் அமைதியும். மின்சாரம் கிடையாது. தண்ணீரும் முப்பது அடி கீழே இறங்கி எடுத்து வர வேண்டும். ஆனால் எங்களுக்கு எதுவுமே பெரிதாகத் தெரியவில்லை.

எனக்கு. இது ஒரு நல்ல மாறுதல் மற்றும் பேட்டரி சார்ஜர்" என்றான்.

சொல்லுக்கடங்காத சந்தோஷத்தை முகத்தில் தேக்கி அவன் கூறியது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. குழந்தைகளை நம்முடைய கண்ணோட்டத்திலேயே வளர்க்காமல் பிறருடன் பழகி விரிந்த கண்ணோட்டத்துடன் வளர விடுங்கள். தாத்தா பாட்டி என்று கிராமங்களுக்குக் கூடப் போக முடியாத குழந்தைகளுக்கு இயற்கையை அறிமுகப் படுத்துவது இதைப் போன்ற சுற்றுலாக்களே. "அட்வென்சர் கிளப்" போன்ற அமைப்புகள் நமக்கு மனிதத் தொடர்புகளையும் இயற்கையுடன் கூடிய தொடர்புகளையும் ஒருங்கே நமக்கு ஏற்படுத்துகின்றன.

நம் குழந்தைகளுக்கு நாம் முதலில் மனிதத் தொடர்புகளை ஏற்படுத்துவோம். நிச்சயம் அவர்கள் ஒருநாள் தொலை தொடர்பு உலகில் உயரத்தை அடைவார்கள்.

– சித்ரா மோகன், சென்னை.





என்னைக் கவர்ந்த அமெரிக்கா

அமெரிக்காவில் எனக்குப் பேரன் பிறந்திருப்பதால் நானும் என் கணவரும் அமெரிக்கா சென்று, என் பேரனையும் பார்த்து விட்டு அநேக இடங்களையும் சுற்றிப் பார்த்து வந்தோம். ஒரு நயாகரா நீர்வீழ்ச்சி என்ன, ஒரு சுதந்திரதேவி சிலை என்ன, ஒரு ஹாலிவுட் ஸ்டுடியோ என்ன... சொல்லிக் கொண்டே போகலாம். ஆனால் இவையெல்லாவற்றையும் விட என்னைக் கவர்ந்த, பிரமிக்க வைத்த அம்சங்கள் அநேகம். மேலும் வித்தியாசமானதும் கூட.

முதலாவதாக அந்த தேசத்து சாலை ஒழுங்கு விதி முறைகள். சாலைகளைப் போவதற்கும் வருவதற்கும் இரண்டாகப் பிரித்திருக்கிறார்கள். ஒவ்வொரு சாலையிலும் நான்கு அல்லது 5 'லேன்'கள் உண்டு. ஒவ்வொரு காரும் அதனதன் லேனில் 80 கி.மீ. வேகத்தில் நூல் பிடித்தாற்போல் 'சர்சர்' என்று போய்க் கொண்டேயிருக்கும். ஆனால் ஒரு வாகனத்திற்கும் மற்றொரு வாகனத்திற்கும் போதுமான இடைவெளி விட்டுத்தான் போவார்கள்.

ஒருவர் 'லேன்' மாற வேண்டுமானால் வெகு தூரத்திலிருந்தே முன், பின் வாகனங்களின் தூரத்தைக் கணக்கிட்டு, 'இன்டிகேடர்' போட்டுக் கொண்டு மாறுகிறார்கள். 'ஹார்ன்' அடிப்பதே கிடையாது! 'ஓவர் டேக்' என்ற ஒரு 'கான்செப்ட்' கிடையவே கிடையாது. முடியவும் முடியாது. அறிவிப்புப் பலகைகள் ஆங்காங்கு கொட்டை எழுத்தில் பார்க்கலாம். அடுத்த வெளியேறு பாதை எங்கு வருகிறதோ, அதற்கு இரண்டு மைல் முன்னாலிருந்தே அறிவிப்புப் பலகைகள் பார்க்கலாம். எல்லாமே ஒரு வழிப்பாதை என்பதால் நாம் போக வேண்டிய 'எக்ஸிட்'டை தவற விட்டு விட்டால், திரும்ப எத்தனையோ மைல்கள் போய்த்தான் திரும்ப முடியும். 'யு' டர்ன், 'ரிவர்ஸ்', வித்தைகளெல்லாம் செய்ய முடியாது!

சாலைகளின் எண்கள், போகுமிடத்தின் அறிவிப்புகள் எல்லாம் கொட்டை எழுத்தில் ஆங்காங்கு எழுதியிருப்பதால், நம்மூர் போல் கொஞ்ச தூரத்திற்கு ஒரு தடவை, வாகனத்தை நிறுத்தி, யாரிடமாவது வழி கேட்கும் தேவை கிடையாது. முக்கியமாக பாதசாரிகளுக்கு முதல் சலுகை. நாம் ஓரிடத்தில் நடந்து குறுக்கே போக வேண்டியிருந்தால், சிக்னல் இல்லாத இடமானாலும் சரி, நமக்கு வழி விட்டு, அத்தனை கார்களும் நிற்கும். அவர்கள் எப்போதும் அவசரப்படுவதில்லை. சாலை விதிகளை மீறுவதுமில்லை.

அதனால் விபத்துகளும் மிக மிகக் குறைவு. இந்த விதிகளில் பாதியையாவது கடைப் பிடித்தால், நம் நாட்டில் விபத்துகளை ஓரளவு தடுக்கலாமே என்ற ஆதங்கம் தோன்றுகிறது.

இரண்டாவதாக, உடல் ஊனமுற்றோர்களுக்கு, அமெரிக்கர்கள் காட்டும் சலுகையும், மதிப்பும் அலாதி. எங்கும் அவர்களுக்கு முதலுரிமை. பஸ்ஸிலோ, ரயிலிலோ, அவர்கள் ஏறியாயிற்று என்று தெரிந்த பிறகே வண்டியைக் கிளப்புவார்கள். ஏதாவது ஒரு 'ஷோ' நடக்கிறதென்றால் முதலில் ஊனமுற்றவர்களை அழைத்துப் போய் முன்வரிசையில் உட்கார வைத்து, அவர்களுக்கு வசதிகள் செய்த பிறகுதான் மற்றவர்களை உள்ளே விடுகிறார்கள்.

நாம் எங்கெல்லாம் சென்று எதையெல்லாம் ஆனந்தமாக அனுபவிக்கிறோமோ, அதில் சிறிதும் குறையாமல், சக்கர நாற்காலிகளில் அமர்ந்து அவர்களும் ரசிக்கிறார்கள். சாலையின் பிளாட்பாரமோ, அல்லது கடைகளின் நுழைவாயிலிலோ, சக்கர நாற்காலியை ஏற்ற, அனுகூலமாக இருக்குமாறு 'ஸ்லோப்'புகள் செய்து விட்டிருக்கிறார்கள். உடல்நலம் மிகக் குன்றியவர்கள் கூட, பலவித குழாய்களின் இணைப்புடன் எல்லா இடத்திற்கும் வந்து, பொழுதுபோக்குகிறார்கள். அதைப் பார்க்கும்போது, நம்மையறியாமல், நம் தேசத்தில் உடல் ஊனமுற்றவர்களுக்கு எந்த விதமான பொழுதுபோக்கும் இல்லாமல் முடங்கிக் கிடப்பதை நினைத்து ஒருகணம் மனம் ஏங்குவது நிஜம்.

இதே போல் எங்கு செல்லும் போதும் குழந்தையுடன் இருப்பவர்களுக்கு முதல் சலுகை. அவர்களுக்கும் தள்ளுவண்டியில் குழந்தையை உட்கார்த்தி எங்கு வேண்டுமானாலும் தள்ளிக் கொண்டு போக வசதியான சாலை அமைப்புகள், கடைகளின் உள் அமைப்புகள் எல்லாம் பாராட்டத்தக்கது.

மூன்றாவதாக சுத்தம், சுத்தம், சுத்தம். சாலைகளோ, கடை வீதிகளோ, ஸ்டேஷன்களோ எங்கு திரும்பினாலும் சுத்தம். ஒரு சிறு பையன் கூட மிட்டாயைத் தின்று விட்டு, காகிதத்தை குப்பைக் கூடையைத் தேடிப் போய்ப் போடுவான். குழந்தையிலிருந்தே அந்த மாதிரி சுகாதாரத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து பழக்குகிறார்கள். அதே போல் எங்கு போனாலும் 'ரெஸ்ட் ரூம்' (டாய்லட்). ஆண்கள் தெருவோரங்களில் அசிங்கம் செய்வதும், பெண்கள் வீடு வந்து சேரும் வரை வயிறு வலிக்க திண்டாடுவதும் இங்கு இல்லை.

எங்கும் எதற்கும் வரிசை (க்யூ). யாரும் யாரையும் இடித்துக் கொண்டோ, தள்ளிக் கொண்டோ முன்னால் போக முயற்சிப்பது கிடையாது. ரெஸ்ட் ரூமிற்குக் கூட க்யூ. நாம் ஏதோ கவனித்துக் கொண்டு, க்யூவை விட்டு சற்றுத் தள்ளி நின்றால் கூட, நம்மிடம், "நீங்கள் வரிசையில் இருக்கிறீர்களா?'' என்று கேட்டு, தெரிந்து கொண்டு, பிறகு வரிசையில் போய் நிற்கிறார்கள். நம்மூரில் பஸ்ஸில் முண்டியடித்து ஏறும் காட்சி கண்முன் வந்தது, தவிர்க்க இயலவில்லை!

கடைசியாக, மனிதர்களின் ஓர் அபூர்வமான பண்பு. நம்மை, முன்பின் தெரிந்திருக்க வேண்டிய அவசியமேயில்லை. ரோடிலோ, கடைகளிலோ எங்கேயானாலும் சரி, நம்மை நேருக்கு நேர் பார்க்கும்போது ஒரு 'ஹலோ' அல்லது 'ஹாய்' புன்சிரிப்புடன் சொல்லத் தவறுவதேயில்லை. அப்பொழுது நம்மையறியாமல் 'நாம் இங்கு அன்னியரல்ல. நாமும் இவர்களில் ஒருவர்' என்ற ஒட்டுணர்வு ஏற்படுகிறது. நாம் கடைகளில் நுழையும்போது நமக்குப் பரிச்சயமே அல்லாதவர் நமக்காகக் கதவைத் திறந்து பிடித்துக் கொண்டு நிற்பது, சாமானைத் தூக்கும் போது "can I help you" என்று கேட்கும் பரிவு... இன்னும் எத்தனை

தோழியைக் காணச் சென்றிருந்தேன். அவள் வீட்டு மாடியில் இருந்தாள். ஒருபுறம் வெயிலில் ஜவ்வரிசி வடாம் காய்ந்து கொண்டிருந்தது. பக்கத்திலேயே சில (ரோஸ் நிற) மொய் கவர்களும் இறைந்து கிடந்தன. காரணம் கேட்டபோது தோழி சொன்னாள் :

"எங்க வீட்டுல இந்தக் கவர் நிறைய செலவாகும். ஜவ்வரிசி வடாம் போட்டப்போ மாவு கொஞ்சம் மிச்சமாகவும், இதன் முனையிலே தடவி காய வெச்சுட்டேன். இது காய்ஞ்சவுடனே தேவைப்படறப்போ முனையிலே தண்ணி வெச்சே ஒட்டிடலாம் பாரு'' என்றாள். அட இதில இப்படி வேற ஒண்ணு இருக்கா என்று வியந்து போய் பாராட்டி விட்டு வந்தேன்.



— ஆர். சுந்தரவள்ளி

எத்தனையோ. என்னை ஈர்த்த பண்புகளைச் சொல்லிக் கொண்டே போகலாம்!

– விஜயாராஜன், பெங்களூர்.

ஜெய்ஹிந்த்!

நான் கடந்த ஆறு வருடங்களாக சுவிட்சர்லாந்து நாட்டில் உள்ள ஜெனிவா நகரில் கணவர், குழந்தைகளுடன் வசித்து வருகிறேன். என்றைக்குமே, நம் இந்தியாவைப் போல ஒரு உயர்ந்த பண்பாடுள்ள, அருமையான நாடு எதுவுமே இருக்க முடியாது என்பது என் எண்ணம். இந்த நாடுகளில் இருக்கும் பலப்பல ஒழுங்குகள், கட்டுப்பாடுகள் நம் நாட்டில் இல்லை. உண்மைதான். ஆனால் நம் நாட்டில் இருக்கும் மனிதநேயம், அன்பு, நட்பு மனப்பான்மை மேலைநாடுகளில் இல்லை. இதை நான் இவ்வளவு ஆணித்தரமாகச் சொல்லக் காரணம், சொல்ல வைத்த காரணத்தை எழுதுகிறேன்.

1996-ம் வருடம் ஏப்ரல் மாதம். நான், என் கணவர், என் பெண் (7 வயது), பையன் (11 மாதக் குழந்தை) நால்வரும் லண்டனுக்குப் பயணமானோம். உலக அதிசயத்தில் ஒன்றைப் பார்க்கலாம் என்ற ஆசையிலும், தரமிக்க சாதனங்கள் வாங்க லண்டன் ஒரு நல்ல இடம் என்று சொன்னதின்பேரிலும் பாங்கிலிருந்து கணிசமான தொகையை எடுத்துக் கொண்டோம். வீட்டிலிருந்து கிளம்பி ஏர்போர்ட்டிற்கு செல்வதற்குள் சமயமாகி விட்டது. கணவரின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க ஆரம்பித்தது. எப்படியோ அரக்கப் பரக்க விமானத்தில் ஏறி அமர்ந்தோம். கணவரின் நேரம் தவறாமை பற்றிய லெக்சரை காதுகள் கேட்டாலும் மனம் என்னவோ ஒரு விமானமே கடைசி பயணிகளான எங்களுக்காகக் காத்திருந்ததில் ஒரே பெருமை!

சுமார் ஒன்றரை மணி நேரம் கழித்து லண்டன் ஹீத்ரு ஏர்போர்ட்டிற்கு வந்து சேர்ந்தோம். தங்க வேண்டிய ஹோட்டலுக்கும் வந்தோம். சுமார் 5.30 மணி வரை இளைப்பாறினோம். பக்கத்தில் உள்ள இடங்களுக்குச் சென்று பார்த்து வந்தோம். பத்து நாள் தங்கப் போகிறோமே, வாங்குவதைப் பிறகு வாங்கிக் கொள்ளலாம் என்று நினைத்தோம், வந்தோம். அன்றைய பொழுது கழிந்தது.

மறுநாள் எழுந்தோம். காலை உணவை முடித்தோம். முதுகுப் பையில் குழந்தைக்குத் தேவையான சாமான்கள், குடிக்கத் தண்ணீர் போன்றவை எடுத்துக் கொண்டோம். குழந்தைக்குப் படுக்க, உட்கார என்று வசதியான Pram வண்டியையும் எடுத்துக் கொண்டோம். வானம் மப்பும் மந்தாரமாகத் தான் இருந்தது. கிளம்பி சின்னப் பார்க்குகள், மிருகக் காட்சிச் சாலை என்றெல்லாம் பார்த்துக் கொண்டு மதியம் சாப்பாட்டிற்கு ஒரு இந்திய உணவகத்திற்கு வந்து சேர்ந்தோம். சாப்பிட்டோம்.

நான் சாப்பிட்டு முடித்து கை அலம்பும் போதுதான் கவனித்தேன். என் சிகப்புக் கல் மோதிரம் இல்லாததை. ஒரே பயம், பரபரப்பு. அதை உதறி இதை உதறிப் பார்த்தால் எங்கேயும் இல்லை. மோதிரம் காணாமல் போன கவலையை விட குழந்தையுடன் டாய்லெட் சென்றிருக்கும் கணவர் வருவதற்குள் மோதிரம் கிடைத்து விட வேண்டும் என்று வேண்டாத தெய்வமில்லை. ஆனால் எந்தத் தெய்வத்திற்கும் என் வேண்டுதல் கேட்கும் முன் என் முன்னே என் கணவர். வந்தவர் என்ன விஷயம் என்று கேட்க, என் பெண் சொல்ல, 'பொறுப்பில்லை. பொருளோட அருமை தெரியலை' என்று 'பூஜா காலஹா'தான். கடைசியில் இரண்டு மேஜை தள்ளி தரையில் கிடந்த மோதிரத்தை கண்டு பிடித்துக் கொடுத்தாள் என் பெண் துப்பறியும் நிபுணி. என் மோதிரம் எப்படி அங்கே கிடந்தது என்பது கடவுளுக்கே வெளிச்சம்.

பிறகு அங்கிருந்து நேராக நேச்சுரல் ஹிஸ்டரி ம்யூசியம் சென்றோம். பிரமித்தோம். குழந்தைகளுக்கு என்று பலவிதமாக புத்தகங்களை வாங்கி விட்டு பெருமிதத்துடன் வெளியில் வரும் போது மணி 5. சரியான மழை. முதுகுப்பை சரியான கனம் புத்தகங்களால். மழையில் குழந்தையை Pramல் வைத்துக் கூட்டி வர முடியாது என்பதால் குழந்தையையும் பையையும் அவரும்,



மைதா மாவுடன் ரவை கலந்து தோசை வார்க்கும் போது உருளைக் கிழங்கு, கேரட், வெள்ளரிக்காய் இவற்றைத் துருவிப் போட்டு வார்த்தால் ருசி அதிகமாகும். குழந்தைகள் விரும்பிச் சாப்பிடுவர்.

- லட்சுமி சுந்தரம்

மில்க் குக்கரில் பால் காய்ச்சுவது போல சாதமும் வடிக்கலாம். ஒரு கப் அரிசிக்கு மூன்று கப் தண்ணீர் விட்டு சாதம் வைத்தால் மல்லிகைப் பூ போல சாதம் கிடைக்கும். கேஸ் அடுப்பைச் சின்னதாக வைப்பது மிகவும் அவசியம். குக்கர் போல பயம் இருக்காது. சூடும் அதிக நேரம் தாக்குப் பிடிக்கும்.

— ரேவதி வாசுதேவன்.



பெண்ணையும் Pramஐ நானுமாக எடுத்துக் கொண்டு நடந்தோம் பஸ் ஸ்டாப்பை நோக்கி.

இதற்குள் இருட்டவும் தொடங்கியது குளிர்காலம் என்பதால். இதற்குள் மணியும் ஆறாகி விட்டது. அரை மணி நேரம் பஸ்ஸில் பயணித்து வந்து சேர்ந்தோம். சரியான குளிர். மழை. குடை வேறு இல்லை. எல்லோரும் அரை தெப்பம் மழையினால். ஒருவழியாக 7.15க்கு நாங்கள் போக வேண்டிய பஸ்ஸும் வந்தது. ஏனோ தெரியவில்லை. மழையினாலோ, என்னமோ நாங்கள் இருந்த ஸ்டாப்பிங்கில் நிற்க வேண்டியிருந்தும் அந்த பஸ் நிற்கவேயில்லை. நான் நினைக்கிறேன், எங்களை கெட்ட நேரம் துரத்துவது தெரியாமல் ஜோக் அடித்துக் கொண்டும் சிரித்துக் கொண்டிருந்தோம் அன்று என்று.

கடைசியாக ஒருவழியாக அடுத்த பஸ் அரை மணி நேரம் கழித்து வந்தது. அன்று ஞாயிற்றுக் கிழமை என்பதால் அரை மணிக்கு ஒரு தரம்தான் பஸ். அதனாலோ என்னவோ சரியான கூட்டம். டிக்கெட் வாங்க வேண்டி நானும் என் பெண்ணும் Pramடன் முன் பக்கத்தில் ஏறிக் கொள்ள, என் பையனுடன், கணவர் நடுவில் ஏறிக் கொண்டார். விதி யாரை விட்டது?

நாங்கள் இறங்க வேண்டிய பஸ் ஸ்டாப்பிற்கு இரண்டு ஸ்டாப்பிற்கு முன் 'ஐயோ! பர்ஸ்! பர்ஸ்!' என்று என் கணவரின் கதறல் கேட்டது. நம்பவும் முடியாமல் நம்பாமல் இருக்கவும் முடியாமல் திணறி, அழுது டிரைவரிடம் ஏதாவது செய்யுங்கள் என்று சொன்னதற்கு, அந்த டிரைவரின் பதில் என்ன தெரியுமா? கூலாக, "I can't help it". எடுத்துப் போன அத்தனை பணம், கிரெடிட் கார்ட்ஸ், பாங்க் கார்ட்ஸ் மற்றும் முக்கியமான அத்தனையும் ஒரே நிமிடத்தில் காலி.

பஸ்ஸில் எங்களுடன் பயணித்த இரு ஆங்கிலேய பெண்மணிகள் சொல்கிறார்கள். தங்களுக்கு முன்பே தெரியுமாம். அங்கே ஒரு பிக்பாக்கெட்காரன் நின்றதும் பணத்தை எடுத்ததும். ஏன் இதை எங்களுக்கு சமிக்ஞை காட்டவில்லை என்றதற்கு, அது அவர்கள் வேலை இல்லையாம், நாம்தான் கவனமாக இருக்க வேண்டுமாம். இதுவா மனிதநேயம்?

நல்லவேளையாக எங்களுடைய டிக்கெட்ஸ், பாஸ்போர்ட் எல்லாம் ஹோட்டல் ரூமில் வைத்திருந்தோம். பணம் போன ஷாக்கில் என் கணவர் கதறிய கதறல் இருக்கிறதே! கொடுமை! சிறுகச் சிறுக சேமித்து வைத்த பணம் எப்படியோ போய் விட்டது. மறுநாள் சாப்பாட்டிற்கு காசு இல்லை ரூ. 160வை தவிர. நம்புவீர்களா? அழுது அழுது வீங்கின கண்களுடன் தொலைந்து போன பொருளைக் கண்டுபிடிக்கும் ஏஜென்ஸியிடம் சென்று முறைவிட்டோம். ஆனால் இன்று வரை சிறிய துண்டு பேப்பர் கூட கிடைக்கவில்லை. பதிலுமில்லை. வேறுவழியில்லாமல் போன இரண்டாம் நாளே ஜெனிவாவிற்கு கவலைகளுடனும் சோகங்களுடனும் வந்து சேர்ந்தோம். இன்னும் அந்த ஷாக்கிலிருந்து எங்களால் மீள முடியவில்லை.

நான் சில காலமாக பல புத்தகங்களில் லண்டனுக்குப் போய் வந்த பலரின் அனுபவத் துணுக்குகளைப் படிக்கிறேன். எல்லோரும் ஒரே மாதிரியாக ட்ரான்ஸ்போர்ட் ஸிஸ்டம், ஒழுங்கு, கட்டுப்பாடு என்று எழுதி நம் இந்தியாவின் நிலைமையை ஒப்பிடுகிறார்கள். நம் நாட்டில் இல்லாததைத்தான் ஒப்பிடுகிறார்களே தவிர மனிதநேயம், பண்பாடு நம் நாட்டில் இருக்கு என்பதையும் உதவி செய்யும் மனப்பான்மை நம் நாட்டினருக்குத்தான் அதிகம் என்பதையும் ஏன் ஒப்பிடுவதில்லை?

எங்களுக்கு லண்டனில் ஏற்பட்ட இந்தச் சம்பவம் நம் நாட்டில் ஒரு குக்கிராமத்து பஸ்ஸில் நடந்திருந்தால் கூட பத்துப் பேர் அந்தத் திருடனைப் பிடிக்க ஓடியிருப்பார்கள், பத்துப் பேர் எங்களை ஆசுவாசப்படுத்தியிருப்பார்கள். தெம்பைக் கொடுத்து இருப்பார்கள். இதைப் போல் மேலைநாட்டு மிக முக்கியமான நாகரீகமான 'இது எங்களுக்கு தேவையில்லாத விஷயம்' என ஒதுங்கியிருக்க

வானமே எல்லை



சீட்டைக் கட்டினோம் வீட்டைக் கட்டினோம்!

கடன் வாங்கக்கூடாது என்ற கொள்கை உடைய என் கணவருக்கு வீடு வாங்கக் கடன்பட்டது கவலை தந்தது. கடனிலிருந்து மீள ஸ்ரீராமில் ரூ.10,000 சீட்டு சேர்ந்து சேமித்தோம். சீட்டைத் தள்ளியெடுத்து ஸ்ரீராமிலேயே டெபாசிட் செய்தோம்.

3 வருடங்கள் கழித்து ரூ.10,600 கிடைத்தது. 40 மாதங்களுக்கும் சேர்த்து கசரு போக கட்டிய தொகை ரூ.8,500க்குள்தான். ரூ.2,000 நிகர லாபம். கூடுதல் போனஸாக நான்கு வெள்ளிக் காசுகள்.

முதல் பரிசு

பின்னர் ஸ்ரீராமிலேயே ரூ.1,00,000 சீட்டு சேர்ந்தோம். சீட்டு தள்ளியெடுத்த பணம் மற்றும் பழைய வீட்டை விற்ற பணம் எல்லாம் சேர்த்து திருச்சி டவுனிலேயே புதுவீடு வாங்கினோம்.

குழந்தைகளின் பூணூல் கல்யாணம், படிப்புச் செலவு, பண்டிகை மற்றும் விசேஷங்கள் முதலிய பல்வேறு செலவுகளை சமாளிக்க எங்களுக்கு உதவியது ஸ்ரீராம் சிட்ஸ்தான். நாம் சேரும் சீட்டைத் தள்ளியெடுப்பதனால் எந்தத் தவறும் கிடையாது. தள்ளி எடுத்த பணத்தை எவ்வாறு செலவு செய்கிறோம் அல்லது முதலீடு செய்கிறோம் என்பதைப் பொறுத்தே நிகர லாப நஷ்டங்கள் அமையும் என்பது நான் அனுபவபூர்வமாக உணர்ந்த பாடம்.

திருமதி. வாலாம்பாள்
திருச்சி - 14.

ஸ்ரீராம் சிட்ஸ்

மாட்டார்கள்.

கல்கத்தா நகரில் விளையாடிக் கொண்டிருந்த ஒரு குழந்தையின் மேல் ஏறிவிட்ட லாரி டிரைவரையும் அந்த கராஜு மக்களையும் பொது மக்கள் அடித்து நொறுக்கி விட்டனர். ஏன்? ஏதாவது முன்விரோதமா அல்லது ஆசையா? இதோ ஒரு சகோதரி தனது சுற்றுலாவின் போது ('நானும் கணுப்பொங்கல் கொண்டாடுகிறேன்' - மங்கையர் மலர் பிப்ரவரி மாத இதழ்) தனக்கு உதவிய அர்ஜுன் சிங்கைப் பற்றி எழுதியிருக்கிறார். கேட்பதற்கும் பார்ப்பதற்கும் பெருமையாக இருக்கிறது.

அதுதான் நம் நாட்டின் மண்ணின் பெருமை. மனித நட்பு, நேயம், சகோதர பாசம் செத்து விடவில்லை என்பதற்கு எடுத்துக்காட்டு. பல குறைகள் இருந்தாலும் எந்த நாட்டிலும் காண முடியாத மனிதவளம் நம் நாட்டில்தான் உள்ளது. நான் இந்தியனாக இருக்க பெருமைப்படுகிறேன். அடுத்த ஜென்மத்தில் பிறந்தால் இந்தியனாகவே பிறக்க ஆசைப்படுகிறேன்.

- நளினா சுப்ரமணியம்,
ஸ்விட்சர்லாந்து.

மங்கையருக்கு மணமுடிக்கும் மணமுடிச்சநல்லூரர்

சென்னையிலிருந்து தென்மேற்கே தாம்பரத்திலிருந்து காஞ்சிபுரம் செல்லும் வழியில் 5 கி.மீ. தொலைவிலும், காஞ்சியிலிருந்து 47 கி.மீ. தொலைவிலும், வல்லக்கோட்டையிலிருந்து 30 கி.மீ. தொலைவிலும் முடிச்சூர் எனும் மணமுடிச்சநல்லூர் ஸ்ரீ வித்தியாம்பிகை ஆலயம் உள்ளது. இந்த மணமுடிச்சநல்லூர் திருத்தலத்தில் ஸ்ரீபீமேஸ்வரர் ஸ்ரீவித்யாம்பிகை மிகவும் அழகான தோற்றத்தில் காண்போர் கண்களுக்குப் பிரத்யட்ச தெய்வமாகக் காட்சி தருகின்றனர்.

திருமணப் பருவம் வந்தும் உரிய காலத்தில் நடக்க வேண்டிய திருமணம் நாகதோஷம், பிற தோஷங்களால் தடைபட்டால், இந்த ஆலயத்திற்கு வந்து செல்வதன் மூலம் தீரும் என்கின்றனர். அதாவது திருமணமாகாமல் வெகு நாட்களாக வரன் கைகூடாத பெண்கள் இந்த ஸ்ரீவித்யாம்பிகை ஆலயத்திற்கு வந்து, ஒரு கொம்பு மஞ்சளை அம்பிகை சந்நிதி முன்பாக பிரார்த்தனை செய்து விட்டு அதை மஞ்சள் கயிற்றில் கட்டி, ஆலயத்திலுள்ள கம்பியில் கட்டி விட்டு, ஆலயத்தின் முன்பாக உள்ள நாகர் மேடையைச் சுற்றி வந்து வழிபட்டால் விரைவில் திருமணம் கைகூடுமாம். இப்படியாகப் பல பெண்கள் தமிழகம் மட்டுமின்றி வெளிமாநிலங்களிலிருந்தும், ஜாதி மத பேதமின்றி அம்பிகையை வழிபட்டு நல் வாழ்க்கை அமையப் பெறுகின்றனர்.

சுமார் 1300 ஆண்டுகளுக்கு முன்பு, பொட்டல் வெளியாக இருந்து வந்த இவ்வூரில் காமேஸ்வரன் என்றொரு பக்தன் வாழ்ந்து வந்தான். 30 வீடுகளே இருந்த அச் சமயத்தில் அவனுக்கு ஒருநாள் வழியில் ஒரு சிவலிங்கம் தென்பட்டது. அதைத் தனியே வைத்து பூஜித்து வந்தபோது, அவ்வூரில் விஸ்வம் என்பவர் தனது ஒரே மகள் வாசுகி என்பவளை உற்றார் உறவினர் உதறி விட்ட நிலையில் திருமணப் பருவத்திலுள்ள அவளை வைத்துக் கொண்டு தவித்தார். காமேஸ்வரனையும், வாசுகியையும் சேர்த்து வைக்க ஸ்ரீபீமேஸ்வரரும் ஸ்ரீவித்யாம்பிகையும் திருமணக் கோலத்தில் காட்சி தந்து இருவருக்கும் திருமணம் முடித்து வைத்ததாய் ஐதீகம். மணக்கோலத்தில் காட்சி தந்து அருள் கொடுத்ததால் இந்த முடிச்சூர் - மணமுடிச்சநல்லூரர் என்ற சிறப்புப் பெயர் பெற்று விளங்குகிறது. ஸ்ரீ என்றால் லக்ஷ்மி, வித்யா என்றால் சரஸ்வதி, அம்பிகை என்றால் பார்வதி. இந்த மூன்று பேரும் சேர்ந்த ரூபம்தான் ஸ்ரீவித்யாம்பிகை ஆவாள்.

பல்லவர் காலத்துக் கட்டடக் கலைக்கு எடுத்துக்காட்டான இத் திருக்கோயில் சிவாலய மூர்த்திகள் பைரவர், சிவசூர்யன், முருகன் ஆகிய சுவாமிகள் ஓசை தரும் சந்திரகாந்தக் கற்களால் ஆனவை. பல ஆண்டுகளுக்கு முன் காஞ்சிபுரத்தை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த பல்லவ மன்னனின் கனவில் அம்பிகை தோன்றி முடிச்சூர் பகுதியில் ஒரு கோயில் கட்டச் சொன்னதாகவும், அம்மன்னன் தனது அரண்மனை தச்சர் ஹரிதா





ஊறுகாய் விளம்பரங்களில் ஆர்வம் காரணமாய் விரலால் ஊறுகாய் எடுத்து சாப்பிடுகிறார்கள். அதைப் பார்த்து வீட்டில் உள்ள வாண்டுகளும் அப்படிச் செய்கிறார்கள். இதனால் விரைவில் ஊறுகாய் கெட்டுப் போய்விடும். இதை ஊறுகாய் விளம்பரதாரர்கள் கவனிப்பார்களா?

– கீதா குருராஜன்.

சரைக் கொண்டு கோயில் எழுப்பியபோது, இரு வயதான தம்பதியர் இருட்டும் நேரத்தில் கோயிலின் வாசலில் வந்து நின்றனர். அவர்களுக்கு உணவளித்து மண்டபத்தில் உறங்க வைத்து விட்டு, மறுநாள் வந்து பார்க்கையில் சுவாமி, அம்மனின் வஸ்திரங்களை அவர்கள் அணிந்து கொண்டு, இவ்வூரில் வந்து பிரார்த்திக்கும் பெண்களுக்கு விரைவில் திருமண பாக்கியம் கிட்டுமென்று அருள் வாக்கு சொன்னதாகவும், அதன்படியே ஹரிதாசர் பிரார்த்திக்க அவரின் இரண்டு பெண்களுக்கும் விரைவில் திருமண ஏற்பாடுகள் ஆனதாகவும் வரலாறு.

சிவவிஷ்ணு ஆலயமாக அமைந்துள்ள இத்தலத்தில் ஸ்ரீதேவி பூமி தேவி ஸமேத தாமோதரப் பெருமாளும் வீற்றுள்ளார். மனபேதங்கள் இருந்தால் பிரம்மதீர்த்தத்தில் நீராடி பெருமாளையும், ஸ்ரீயோக அனுமாரையும் வணங்கினால் மனபேதலிப்பு நீங்குகிறது. கணவனைப் பிரிந்து பெண்கள் சேர்வதும், ஆலய தரிசனம் செய்வோர் வாழ்க்கையில் புத்தொளி பெற்றுச் செல்வதும் முடிச்சூர் என்னும் மணமுடிச்ச நல்லூர் ஸ்ரீவித்யாம்பிகை ஆலயச் சிறப்பாகும்.

கடந்த 20.6.97 அன்று ஆலயத்தை சுத்தப் படுத்த தோண்டியபோது, பார்வதி பரமேஸ்வரன் திருமணக் கோலத்தில் காட்சி தரும் விக்கிரகம் கிடைத்தது. இது 23.6.97–ல் கோயிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

பேருந்து வழித்தடம் : தாம்பரத்திலிருந்து 55, 80, 55 V

பிராட்வேயிலிருந்து : L 18, B51

–ஆர். சாந்தா, சென்னை.

மகாகாளேஸ்வரர் ஆலயம் – உஜ்ஜையின் (மத்தியப் பிரதேசம்)

நம் பாரத நாட்டில் மக்கள் யாவரும் தரிசித்து பிறவிப் பயனடைய எண்ணற்ற ஆலயங்களில் ஆதியும் அந்தமுமில்லா சிவபெருமான் காட்சி தந்து அருள்பாலித்து வருகிறார். இவைகளில் பன்னிரண்டு முக்கிய ஸ்தலங்கள் ஜோதிர்லிங்க க்ஷேத்திரங்கள் என்று வழங்கப் படுகிறது. இவற்றில் ஏழு க்ஷேத்திரங்கள் முக்தி அளிக்கும் ஸ்தலங்கள் என்றும் இந்த க்ஷேத்திரத்தில் ஈசுவரனை பக்தி சிரத்தையுடன் தரிசிப்பவர்களுக்கு மறுபிறவி இன்றி நற்கதியடைவார்களென்றும் ஐதீகம் உள்ளது. இவ்வாறு மேற்கூறிய இரண்டும் ஒருங்கே வாய்ந்த க்ஷேத்திரம் மகாகாளேஸ்வரர் எழுந்தருளியுள்ள அவந்திமாநகர் எனும் உஜ்ஜையினி நகரமாகும்.

இந் நகரம் மிகத் தொன்மையானதும், அநேக ஆலயங்களைக் கொண்ட புனிதமும் இனிமையுமானதாகவுள்ளது. நம் தேசத்தில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை விமரிசையாகக் கொண்டாடப்படும் கும்பமேளா, நான்கு க்ஷேத்திரங்களில் உஜ்ஜையினி சிறப்பானதொன்றாகும். இந் நகரை ஒட்டி (அருகில்) க்ஷிப்ரா (சிப்ரா) என்ற வற்றாத நதி பாய்ந்து கொண்டிருக்கிறது. இந் நதியில் கும்பமேளா சமயம் லட்சக்கணக்கான மக்கள் புனித நீராடி தங்கள் பிதுர்களுக்கு சிரார்த்தம், தானம், தருமம் முதலியன செய்கிறார்கள்.

இந்த நதியில் முக்கியமான இடம் ராம் காட் எனப்படுகிறது. இதற்கு சமீபம் பல கோவில்கள் உள்ளன. சைவமும் வைஷ்ணவமும் ஒருங்கே திகழ்ந்து பிரசித்த வாய்ந்த நகரம் உஜ்ஜையினி. இந் நகர மையப் பகுதியில் மிகவும் விஸ்தாரமான இடத்தில் மகாகாளேஸ்வரர் ஆலயம் மிகவும் வனப்புமிக்கதாக – பளிங்குக் கற்களால் நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது.

இங்குள்ள பிரசித்தி பெற்ற ஆலயங்களில் அந்நாட்டு அரசன் விக்கிரமாதித்யனின் குல தெய்வமான வரசித்தி மாதா மந்திர் (கோவிலாகும்) பக்தர்கள் வேண்டும் வரமளிக்கும் மாதாஜி என்று அனைவராலும் போற்றி வணங்கப்படுகிறது. இங்கு அகல் விளக்கு ஏற்றும் தீப தூண்கள் இரண்டு மிக உயரமாகக் கட்டப்பட்டுள்ளது. நவராத்திரி சமயம் விசேஷமான பூஜைகளும் தீபஜோதியும் செய்யப்படுகிறது. இதற்கு சமீபம் சந்தோஷி மாதா ஆலயம் உள்ளது. குவாலியர் ராணியால் கட்டப்பட்டுள்ள கோபால் மந்திர் மிகவும்

வனப்புமிக்கதாக உள்ளது.

மகாகாளேஷ்வர் ஆலயத்திற்குள் பால அனுமான், பிள்ளையார், நரசிம்மசுவாமி, பாண்டுரங்கன், துவாரகை கிருஷ்ணன் ஆகிய தனி சந்நிதி அமைக்கப்பட்டு பூஜைகள் செய்யப்பட்டு வருகிறது.

மகாகாளேஷ்வருக்கு அபிஷேகம் ஆராதனை அலங்காரம் ஒவ்வொரு நாளும் விடியற் காலம் நான்கு மணியிலிருந்து ஆறரை மணி வரை செய்யப்படுகிறது. மசான சாம்பல் அபிஷேகம் விசேஷமானது. சிவஸ்தோத்திரம் வேதமந்திரங்களுடன் உடுக்கை வாத்தியம் ஒலிக்க மிகப் பெரிய ஜால்ரா, சாமரம் வீசுதலுடன் நைவேத்தியம் தீபாராதனை செய்யும் காட்சியைக் காண ரொம்பவும் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

இக்கண்கொள்ளாக்காட்சியைக் காண பக்தர்கள் ஆண்கள் மட்டும் கர்பக்கிரஹத்திற்குள் சென்று தரிசிக்க அனுமதிக்கப்படுகிறது. சட்டை பனியன் எதுவுமின்றி வேட்டியை கீழ்ப்பாச்சியாக மடித்து கட்டிக் கொள்ள வேண்டும். எவ்வித கட்டணமும் வசூலிப்பது இல்லை. ஜாதி பாகுபாடில்லாமல் கர்பக்கிருகத்திற்குள் செல்ல (இடம் உள்ள வரை) அனுமதிக்கப்படுகிறது. ஆராதனை முடிந்ததும் அபிஷேக விபூதியும் மலர்களும் பிரசாதமாக அனைவருக்கும் வழங்கப்படுகிறது.

ஆண்கள் யாவரும் கர்பக்கிரகத்திலிருந்து துரிதமாக வெளியே வந்ததும் பெண்கள் கர்பக்கிரகத்திற்குள் சென்று பால், ஜலம் - மலர்களைக் கொண்டு தாங்களே அபிஷேகம் ஆராதனை செய்யலாம். சிவலிங்கத்தை இரு கரங்களால் தொட்டு அணைத்து ஆலிங்கனம் செய்யலாம். அங்குள்ள உண்டியலிலோ ஆராதனை தட்டிலோ அவரவர் இஷ்டம் போல் காணிக்கை அளிக்கலாம். அலங்காரத்திற்கு வில்வமும் ரோஜா மலர்களும் சாத்தப்படுகிறது. இந்த விடியற்கால பூஜையில் கலந்து கொள்வது மிகப் பெரிய பாக்கியமாகக் கருதப்படுகிறது.

கட்காளி கோவில்

மகாகவி காளிதாசர் விரும்பி வணங்கி காவியம் இயற்ற அருள்பெற்ற காளி கோவில் இது. கல்கத்தா காளி போன்றே காட்சி தரும் இக் கோவில் அவசியம் தரிசிக்க வேண்டியதாகும். உஜ்ஜையின் ரயில் நிலையத்திலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் இக் கோவில் உள்ளது. ஆட்டோ வாகன வசதி உள்ளது.

பட்டினத்து சுவாமிகளும் அவர் பூஜித்த பிள்ளையாரின் மகிமையும்

நம் பட்டினத்து சுவாமிகள் வடநாடு புனித யாத்திரை சென்ற சமயம் உஜ்ஜையினுக்குச் சென்று மகாகாளேஷ்வர் தரிசனம் செய்து மேலே கூறியுள்ள காளி கோவிலுக் கருகினுள் பிரசித்தி வாய்ந்த பிள்ளையார் கோவில் பிரதான வாயிலுக்கருகிலுள்ள அமைதியான இடத்தில் அமர்ந்து தியானத்தில் ஆழ்ந்து மெய்மறந்திருந்தார்.

அந்த நாட்டு மன்னன் பார்த்ருஹரி என்பவன் அரசாண்டு வந்துள்ளான். அரண்மனையில் கள்வர் சிலர் புகுந்து விலையுயர்ந்த நகைகளையும் பொற்காசுகளையும் களவாடிக் கொண்டு வந்து அவர்கள் அரண்மனைக் காவலர்களிடம் பிடிபடாமல் தப்பினால் இந்த பிள்ளையாருக்கு முத்து மாலையைக் காணிக்கையாக அணிவிக்கிறோம் என்ற வேண்டுதலின்படி ஒருமித்து மாலையை அவசரக் கோலத்தில் பிள்ளையார் கழுத்தில் போடுவதாக நினைத்து அங்கு தியானத்திலிருந்த பட்டினத்து சுவாமிகள் கழுத்தில் போட்டு விட்டு ஓடி விட்டார்கள்.

இவ்விஷயம் ஒன்றுமறியாமல் தொடர்ந்து தியானத்திலேயே ஆழ்ந்திருந்த சுவாமிகள் கழுத்திலிருந்த முத்து மாலையைப் பார்த்த அரண்மனைக் காவலர்கள் இவர்தான் கள்வன் என்று அரசன் முன் கொண்டு சென்றனர். தீர விசாரணை எதுவும் செய்யாத மன்னன் பட்டினத்து சுவாமிகளுக்குத் தூக்கு தண்டனை வழங்கி அதனை நிறைவேற்ற ஆணை

அரிசி, பருப்பில் வண்டு வராமல் இருக்க வேப்பிலை, நொச்சி இலைகளை போடுகிறோம். அவைகளை அப்படியே போட்டால் கசப்புத்தன்மை நாளடைவில் அவற்றுடன் கலந்து விடும். இதைத் தவிர்க்க பஞ்ச்சிங் மெஷினால் துளையிடப்பட்ட பாலிதீன் கவரில் அவற்றைப் போட்டு அரிசி டின்னில் போட்டால் ஒன்றுடன் ஒன்று கலக்காது. தேவையில்லையென்றால் கவருடன் தூக்கிப் போடலாம்.

- என். கல்பனா





படுக்கை விரிப்புகள், தலையணை உறைகளை தோய்த்த பிறகு, இரண்டாவது முறை அலசும் பொழுது, சில துளிகள் 'ஷேம்பு'வை சேர்த்து அலசினால், காய்ந்ததும், கமகமவென துணிகள் மணக்கும். அழுக்கும் நீங்கி துணிகளும் பளிச்.. பளிச்..

– போரூர். ஆர். சீதா

விட்டான். அவ்வாறே காவலர்கள் சுவாமிகளை தூக்கில் இட(ஏற்ற) அழைத்துச் சென்றனர். சுவாமிகள் தான் நிரபராதியென்று மனமுருகி பாடல் ஒன்றினைப் பாடினார். அச்சமயம் அந்த தூக்கு மரம் தீப்பிடித்து எரிந்து சாம்பலாகி விட்டது.

இதைக் கேள்வியுற்ற மன்னன் சுவாமிகளின் மகிமையை உணர்ந்து அவரது சீடராகி அவருக்குத் தக்க மரியாதை செய்ததாக வரலாறு கூறப்படுகிறது. பிற்காலத்தில் இம்மன்னன் இத்தலத்திலேயே மோட்ச கதி அடைந்ததாகவும் கூறப்படுகிறது. இந்தப் புகழ்வாய்ந்த பிள்ளையார் கோவில் நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது. இக் கோவிலும் தரிசிக்க வேண்டியதாகும்.

பொது :

இந் நகரம் துப்புரவாக பராமரிக்கப்பட்டு வருகிறது. இதர வடநாட்டு புனிதஸ்தலங்களில் காணப்படும் கூச்சல் குழப்பம் போன்றவைகள் இங்கு இல்லை.

இங்கு இறைவன் வழிபாட்டில் ஈடுபாடும் அமைதியான சூழ்நிலையும் உள்ளது. பொதுவாக மக்கள் இனிமையாகப் பழகுகிறார்கள். நாம் அதிகம் விரும்பிச் சாப்பிடாத சுக்கா ரொட்டியும், டால், சப்ஜி போன்றவைதான் சாப்பிடக் கிடைக்கிறது.

வடநாட்டிற்கே உரிய இனிப்பு வகைகள் ஏராளமாகக் கிடைக்கிறது. சுத்தமாக தயாரிக்கப்படுவதுடன் சிறிது விலை மலிவாகவும் உள்ளது. டெம்போ பயணிகள் வண்டியில் அனைத்து இடங்களுக்கும் இரண்டு, மூன்று ரூபாய் கட்டணத்தில் சென்று வரலாம்.

சென்னையிலிருந்து ரயில் மார்க்கம் ஜெய்ப்பூர் எக்ஸ்பிரசிலும், கொச்சியிலிருந்து புறப்பட்டு சென்னை வழியாக இந்தூர் செல்லும் எக்ஸ்பிரஸ்ஸிலும் உஜ்ஜையினி சென்றடையலாம்.

– கே. எஸ். லக்ஷ்மி நாராயணன்,
வேலூர் – 6.

சென்ற இதழில்...

பாலாஜி தனக்குக் கிடைக்க இருக்கும் வேலைக்கான டெபாஸிட் தேடி தெரிந்தவரைப் பார்க்க வருகிறான். பணம் கிடைக்காத நிலையில் சோர்ந்து திரும்பும் வேளையில், காதலித்து வீட்டை விட்டுப் போய் திருமணம் செய்து கொண்ட தங்கையைச் சந்திக்கிறான். அவள் தான்செய்தது சரி என வாதிடுகிறாள்...

இனி...

பாசம்



"ரசஞ்சாதம், பருப்புத் தொகையல், வத்தக் கொழம்பு, சுட்ட அப்பளம் இதானே நம்ம நித்திய விருந்து. இதுல காரும், பங்களாவும் கொண்ட மாப்பிள்ளையையா தேடிட முடியும்? அது போகட்டும். நானா தேர்ந்தெடுத்த வாழ்க்கை எப்படிப்பட்டதுன்னு நேர்ல வந்து நீ பாக்கணும். வா... அப்பவாவது என்னைப் புரிஞ்சுப்பே" பிடிவாதமாய் பாலாஜியை அழைத்துப் போனாள் அவள்.

கோகிலாவின் வீடு அருகிலேயே தான் இருந்தது. விசாலமான அந்த வீட்டை விழி விரிய நிமிர்ந்து பார்த்தபடியே வந்தான்.

"அத்தையும்... அவரும், வெளியே போயிருக்காங்க. நீ உள்ள வா..." அவள் அவனை உற்சாகமாய் உள்ளே அழைத்துச் சென்றாள்.

ஜில்லென மாம்பழ ஜூஸை அவன் எதிரே வைத்து விட்டு அமர்ந்தாள்.



பழத்தால் அறியப்படுகிறது

பா. உஷாராணி

"நடந்ததெல்லாம் போகட்டும். இப்ப உன்னைப் பத்திச் சொல்லு. நீ இந்த ஊர்ல வேலை ஏதும் பார்க்கறியா? கூப்பிடக் கூப்பிட திரும்பாம, அப்படி என்ன சிந்தனைல வந்தே?"

"வேலை விஷயமாத்தான் வந்தேன். வேலை கிடைச்சிருக்கு. டெபாசிட் கட்டச் சொல்றாங்க. ஒரு அஞ்சாயிரம் கொறையுது. அதுக்காகத்தான் அப்பா நண்பர் வேதகிரி யைப் பார்க்க வந்தேன். அவர் யாத்திரை போயிட்டார். அந்த டென்சன்ல வந்ததால நீ கூப்பிட்டது கேட்கலை'' பேசிக் கொண்டே வந்தவன் சட்டென நாக்கைக் கடித்துக் கொண்டான்.

"என் கஷ்டம் உனக்கெதுக்கு? வந்தாச்சு. வீட்டைப் பார்த்தாச்சு. நான் கிளம்பறேன்'' அவனுக்கு அப்பா ஞாபகம் வந்து விட்டது. சாப்பிடாது காத்திருப்பாரோ என நெருடல் மனசுள்.

''அவங்கெல்லாம் வரட்டும். எல்லோ ரையும் பார்த்துட்டுப் போ. அப்படியென்ன அவசரம்'' என கோகிலா நிறுத்தி வைக்க பிரயத்தனப்படுகையில்...

"ஹேய்... பாலாஜி... நீங்க என்ன... எங்க வீட்டுல..."

தகதகவென்ற நிறம், ரோமானிய மூக்குடன், வரிசைப் பற்கள் தெரிய சிரித்தபடி வந்தவனை பாலாஜியும் ஆச்சரிய மாய்ப் பார்த்தான்.

''அட... ஸ்டெபிதானே நீங்க. நாம காலேஜ் முடிச்சே ஆறு வருஷத்துக்கு மேலாயிட்டது. என்னை சரியா ஞாபகம் வச்சிருக்கீங்களே...''


''மறக்கக்கூடிய ஆளா நீங்க? அசப்புல இந்தி நடிகர் அமீர்கான் போலவே நீங்க இருக்க, 'அமீர்கான், அமீர் கான்'னு உங்களை சுத்திச் சுத்தி வந்து எக்கச்சக்கமா ஜொள்ளு விட்டதெல்லாம் மறக்க முடியுமா என்ன? காலேஜ்லைஃபே ஜாலிதான். இல்லையா...''

"ஸ்டெபி இவர்தான் என் அண்ணா... பாலா ஸ்டெபி என் நாத்தனார்'' என்றான் கோகிலா இருவருக்கும் இடையே புகுந்து.

''ஓ அப்ப நாம நெருங்கி வந்துட்டோம் பாலாஜி. கோபமெல்லாம் மறந்து இப்பத்தான் கோகிலாவை பார்க்க வரணும்னு தோணுச்சா? காலம் மன காயங்களை ஆத்தும்னு சொல்றது சரிதானே...'' கலகலவென சிரித்தபடி ஸ்டெபி கேட்க என்ன பதில் சொல்வது எனத் தெரியாமல் மௌனமாய் இருந்தான் அவன்.

அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு அவன் வீடு வந்த போது அப்பா நினைத்தபடியே சாப்பிடாமல் காத்திருந்தார்.

"ஒரே அடம் குழந்தை மாதிரி. போன காரியம் என்னாச்சோன்னு அவஸ்தையில். நீ வந்த பிறகுதான் சாப்பிடுவேன்னு சொல்லிட்டார்''



ஒருநாள் என் குழந்தை லீக் ஆகும் மை பேனாவுடன் பிரிட்ஜ் கதவைத் திறந்து விட்டாள். கதவு முழுவதும் மை ஆனதில் எதைக் கொண்டு துடைத்தும் சரியாக வில்லை. பிறகு பல் தேய்க்கும் பேஸ்ட்டைக் கொண்டு பஞ்சை வைத்துத் துடைத்தேன். ஒரு நொடியில் மை கறை தெரியாமல் போனது.

— சித்ரா வரதராஜன்.

என்றார் ஜனனியின் அப்பா மூர்த்தி.

"உனக்கு சாப்பாடு வச்சுட்டுப் போயிருக்கா ஜனனி. நான் பரிமார்றேன். அப்படியே அப்பாகிட்ட ஒக்காந்து முதல்ல சாப்பிடு. நான் அவருக்கு சாதத்தை கையில உருட்டி வச்சுக்கிறேன். சாப்பிட்டுட்டு அப்புறம் பேசலாம்" அவர் பாத்திரங்களோடு வர சட்டென நெகிழ்ந்து போனான்.

அன்றாட மூன்று வேளை உணவிற்கே தத்தளித்துக் கொண்டிருந்தாலும் சக மனிதர்கள் துன்பப்படுவதைக் கண்டு தாளாது உதவிக்கு ஓடும் மூர்த்தியின் குணம் அவனை நெகிழ்த்த வைக்கும். இத்தனைக்கும் அதிக வருமானமில்லாத கோயில் ஒன்றில் அர்ச்சகராகத்தான் இருக்கிறார் அவர்.

"தனக்காக மட்டுமே வாழறவன் மனுசங்களிலேயே ரொம்பக் கேவலமானவன். ஒரு மரம் அதன் பழத்தால் அறியப்படுகிறது. மனுசன் மனுஷத்தன்மையால் அறியப்படுவான்னு உங்கப்பாதான் அடிக்கடி சொல்வார். இரத்த உறவுகள் மட்டும்தானா சொந்தம்? எல்லா மனுஷங்களுமே சொந்தக்காராதான் நமக்கு. வேறெந்த உதவியும் செய்ய முடியாவிட்டாலும், சரீர ஒத்தாசையைக் கூடவா மத்தவங்களுக்கு செய்ய முடியாது?" கண்களைக் குறுக்கிக் கொண்டு அவர் கேட்கையில் வாயடைத்துப் போகும் அவனுக்கு.

மறுநாள் மனசு நிறைய கவலையோடு டுடோரியல் கல்லூரி மாடியில் அவன் பாடம் எடுத்துக் கொண்டிருக்கையில் கோகிலா வந்து நின்றாள்.

அப்பாவிற்கு முடியவில்லை எனத் தெரிந்து தாளாமல் பார்க்க வந்து விட்டாளா... அய்யய்யோ... கோபம் மாறாமல் இருக்கும் அப்பா முன் இவளை எப்படி நிறுத்துவது... அவன் யோசித்தபடியே அவளை ஏறிட்டான்.

"நேத்து சொன்னியே. அஞ்சாயிரம் ரூபாய்க்காக வேதகிரியைப் பார்க்க வந்ததா... அதான் இன்னிக்கு பேங்க்குக்கு போயிட்டு, நேரா இங்க வர்றேன். இதுல அஞ்சாயிரம் இருக்கு பாலா. எடுத்துக்கோ" நூறு ரூபாய் தாள்களை அவன் முன் நீட்டினாள் அவள்.

அவன் திணறிப் போனான். இரத்த பாசம் என்பது இதுதானா? கேட்கவேயில்லை. இப்படிப் பணத்துடன் ஓடி வருகிறாளே?

"உனக்கொரு கஷ்டம்னா அது எனக்கில்லையா பாலா. நான் கொடுக்கற நிலைல இருக்கையில நீ ஏன் ஊரார்கிட்ட கையேந்தணும்? இரக்கமில்லாது பெத்த அப்பாதானே எனக்குக் காரியம் பண்ணார். நீயில்லையே? என்னை வெறுக்காதே பாலா. உலகத்துல யார் வேணும்னாலும் வெறுக்கட்டும். நீ என்னை வெறுக்காதே. என் கூடப் பொறந்தவன்னு சொல்லிக்க எனக்கு நீ வேணும். உன் பாசம் வேணும்" அவள் சொல்ல, அவனுக்குக் கண்கள் கலங்கி நீர் தளதளத்தது.

"உன் வீட்டுல ஏதும் சொல்ல மாட்டாங்களா கோகி. இத்தனை பணத்தோட வந்தருக்கியேம்மா..."

"ப்ச்... இது என் பணம்தான். பினாயில் எல்லாம் வீட்டுலயே தயாரிக்கக் கத்துக்கிட்டிருக்கேனில்ல. உனக்குத் தர நான் யாரைக் கேட்கணும்?"

சின்ன வயசில் நண்பர்கள் யாரேனும் அடித்து இவன் அழுதால் அவ்வளவுதான். "யாருடா என் அண்ணாவை அடிச்சது? பேத்துருவேன் மூஞ்சியை" என ரவுடி கணக்காய்ச் சண்டைக்குக் கிளம்பும் சின்ன வயசு கோகிலா அவன் கண்முன் வந்து நின்றாள். தன்னை விட மூன்று வயது சின்னவளான தங்கையின் அப்போதைய ஆளுமையை நினைத்து இன்று சிரிப்பு வந்தது. அடலசன்ட் பருவத்தில் இவள் செய்த தவறுக்காக இவளை அறவே வெறுத்து ஒதுக்கி விட்டோம் நாங்கள். சே.. சட்டென மனசு இளகி, நின்றது.

"உட்காரு கோகி... காப்பி... வாங்கிட்டு வரச் சொல்றேன்."

"சரி... ஆமாம் பாலா. உனக்கும் வயசு ஏறிட்டே போகுது. அப்பா வரன் ஏதும் பாக்கிற ஐடியால இருக்காரா இல்லையா?"

"அவர் எழுந்து போய்ப் பார்க்கிற நிலைமையிலா இருக்கார்? ஆனா இப்ப நம்ம வீட்டுக்கு எதுக்க இருக்கற மூர்த்தியோட பெண் ஜனனியைப் பேசலாம்னு நினைக்கிறார். உனக்குக் கூட அவங்களைத் தெரியும். நெடுநெடுன்னு வளர்த்தியா இருப்பாரில்லையா மூர்த்தி...."

"இரு... இரு... கோவில் அர்ச்சகர்தானே அவர். அவர் பெண் ஜனனி... ஓ... நினைவுக்கு வர்றது. அந்தப் பெண் போலியோ அட்டாக்கோ எதுவோ, வலது காலைக் கொஞ்சம் சாய்ச்சு நடப்பாளே. அட கஷ்டமே! அப்பா தான் மூளை கெட்டுப் போய் நொண்டிப் பொண்ணைக் கை காட்டினா. நீயும் யோசிக்காது தலையாட்டிடறதா? நடக்க மாட்டாதவ சித்தப்பா வீட்டுல பொண் எடுத்தா மாதிரி" அவளின் குரலில் ஆவேசம் வெளிப்பட்டது.

"அப்படிச் சொல்லாத கோகி. ஜனனி சுயநலமில்லாத தங்கமான பெண். அம்மாவைத் துள்ளத் துடிக்க வாரிக் கொடுத்துட்டு, அப்பாவையும் முடமா பார்த்துண்டு, நான் ஒத்தையா துடிச்சப்போ, என் தோள் சுமையை பாதியா குறைச்சவ. நல்ல மனுசங்க. முகம் சுளிக்காது சரீர ஒத்தாசையை இன்னமும் செய்யற மனுஷர்கள்."

"இருக்கட்டுமே... அதுக்காக ஜீவனைத் தர முடியுமா? நன்றிக்கடன் செய்யணும்னா அதுக்கு எத்தனையோ வழியிருக்கு. அவங்க உழைப்பைத் தந்தாங்கன்னா, அதுக்கு ஈடா ஏதேனும் பண உதவி செய்தா போச்சு. காலம் பூரா நொண்டிப் பொண்ணை சுமக்கணும்னு உனக்குத் தலையெழுத்தா பாலா. உனக்கென்ன குறை. வேற பொண்ணா கிடைக்காது?"

"கிடைக்கறது அமிர்தம்னு நெனைக்கிறேன்."

"என்ன அப்படிச் சொல்லிட்ட, உனக்கென்ன குறைச்சல்? அழகு இல்லையா, படிப்பு இல்லையா, இப்ப வேலையும் கிடைக்கப் போகுது. பின்ன என்ன, துலக்கி வச்ச குத்துவிளக்காட்டம் அழகா, வசதியான பொண்ணா நா பேசறேன். நீ மட்டும் சரின்னு சொல்லு. உன் காலேஜ் ப்ரண்ட் அதான்.. என் நாத்தனார் ஸ்டெபியை உனக்கு முடிக்கிறேன்."

அதிர்ந்து போனவனாய் அவன் அவளைப் பார்த்தான்.

"எம்.சி.ஏ. முடிச்சிட்டு, வேலைக்குப் போய் கைநிறைய சம்பாதிக்கிறா ஸ்டெபி. அவங்க குடும்பத்துல பாதிப் பேர் கலப்புத் திருமணம் பண்ணவங்கதான். அதான் ஸ்டெபிக்கு 'எம்மதமும் சம்மதம். அழகும், குணமும், தகுதியும்தான் முதல் விருப்பம்னு' குறிப்பிட்டு பேப்பர்ல மேட்ரிமோனியலுக்குக் கூட விளம்பரம் தந்தாச்சு. ஆனா வந்த யாருமே ஸ்டெபிக்குப் பொருத்தமாயில்ல. நேத்து நீ வந்துட்டுப் போனதிலிருந்து நாள்பூரா உன் பேச்சுதான் அவளுக்கு. எத்தனை புகழறா தெரியுமா உன்னை?"

கோகிலா கூர்மையாய் அவனைப் பார்த்தாள்.

"இப்ப சொந்தமா வீடு கட்ட இடம் கூட வாங்கிப் போட்டுருக்கா அவ. இன்னும் ஆறு மாசத்துல வீடு கட்டுறதுக்கான வேலையைக் கூட ஆரம்பிச்சிறலாம்னு நினைச்சிட்டிருக்கா. கொஞ்சம் நெனைச்சுப் பாரு. எந்தத் தவமும் பண்ணாம கற்பக விருட்சம் உன் கைக்கு வரும் பாலாஜி. ரெண்டு பக்கத்துல ஒரு பக்கம் நொண்டி. மாட்டை நிறுத்தி நுகத்தடி பூட்டினா வண்டி ஓடுமா? கலப்புத் திருமணத்திற்கு வரவேற்பு பெருகிட்ட காலம் இது. சாதியையும், மதத்தையும், இன்னும் ஏன் நாம கட்டிட்டு அழணும்?"

"நீ மட்டும் சம்மதம்னு சொன்னேன்னு வச்சுக்கோ. அவங்க வீட்டுலயும் சந்தோஷமா சம்மதிக்கறவங்கதான். தெரிஞ்ச இடமா வேற இருக்கில்லையா? உள்ளங்கைல வச்சு தாங்குற மனசுதான் அவங்களுக்கு. எனக்குக் கூட, அங்க கௌரவமும் கூடும். தாகத்துக்கு ஒரு சோடா கூட வாங்கிக் குடிக்க முடியாம, தெருப் பைப்புல குனிஞ்சு நீ தண்ணி குடிச்சதைப் பார்த்தப்போ எம்மனசு அசிங்கப்பட்டது எனக்குத்தான் தெரியும். நாம அனுபவிக்கிறதுக்குத்தான் வாழ்க்கை. கஷ்டப்படறதுக்கு இல்லை. நல்லா யோசனை பண்ணி சம்மதம்னு சொல்லு. இப்ப அவசரமில்ல. அவங்ககிட்ட உனக்காக நான் பேசத்

திருமணக் கோலத்தில் இருக்கும் மாப்பிள்ளை, திருமாலுக்குச் சமம் என்பதால், மாமனார் மாப்பிள்ளையின் பாதங்களை அலம்பி பாத பூஜை செய்வது நம்மிடையே இருக்கும் ஒரு சம்பிரதாயம். மஹாராஷ்டிரத்தில், மாப்பிள்ளைக்குப் பெண்ணின் பெற்றோர் செய்வது போலவே, மாப்பிள்ளையின் பெற்றோர்கள், வீட்டுக்கு வரவிருக்கும் மணப்பெண்ணை லக்ஷ்மியாக பாவித்து பாதபூஜை செய்கிறார்கள்.

- பத்மாவதி முத்துக்குமார்



தயாரா இருக்கேன்."

பாலாஜி வாய் விட்டுச் சிரித்தான்.

"நல்லாத்தான் திட்டம் போட்டிருக்கே கோகி. சரி... உன்னோட யோசனையெல்லாம் கொண்டு போய் அப்பாட்ட சொன்னேன்னு வை, என்னை ரொம்ப மெச்சிப்பார்னு நினைக்கிறியா?"

"ப்ச்... அப்பா என்ன அப்பா. நா அவரோட சம்மதமோ, அபிப்பிராயமோ கேட்க வரலை. உன் முடிவைச் சொல்லு. வாழ்க்கை பூரா அப்பாவைக் கட்டிட்டு அழுவியா? இது ஒன் வாழ்க்கை. அதைத் தீர்மானிக்கறது நீ மட்டுமா தான் இருக்கணும். உன் பசிக்கு நீதான் சாப்பிடணுமேயொழிய அப்பாவா சாப்பிட முடியும்? இப்போ உன் தயவுல தானே அவர் வாழுறார். அப்புறம் அவர் சம்மதம் உனக்கெதுக்கு? நான் தைரியமா முடிவெடுத்த மாதிரி நீயும் எடு. அப்பா உன் முடிவை ஏத்துக்கிட்டா சரி. இல்லைன்னா அந்த மனுஷனை உதறிட்டு வெளில வா. வயிறு காஞ்சா வெட்கம் தன்னால போயிடும் பாங்க. அவரா உன் காலடிக்கு வந்துதான் ஆகணும். பைசா பிரயோசனமில்லாத, முடமா கிடக்கிறவருக்கா போய் பயந்து சாவுற..."

பாலாஜி விருட்டென எழுந்து நின்றான். இருகரம் கூப்பி அவளைக் கும்பிட்டான்.

"முதல்ல உன் பணத்தை எடுத்துக்கிட்டு இப்படியே போ வெளில. எனக்கு வேலை கிடைக்காம போனாலும் பாதகமில்லை. உன் பணத்தால அது கிடைக்க வேண்டாம். இப்பவே இந்த இடத்தை விட்டுப் போயிடு. இல்லைன்னா உன் கழுத்தை நெறிச்சுக் கொன்னாலும் கொன்னுடுவேன்."

"ஏய்.... நா இப்ப என்ன சொல்லிட்டேன்னு இத்தனை... கோபப்படுறே... உன் நன்மைக்கு..."

"பெரிய 'நன்மைக்கு சொல்ல வந்துட்டே. தன் குழந்தையை பசியோட எதிர்ல உட்கார்த்தி வெச்சிட்டு தன் பசிக்காக எந்தத் தாயும் சாப்பிடுவாளா? அப்படிச் சாப்பிடறவ நல்ல தாயா இருக்க மாட்டா. என்னோட குழந்தையை விட்டுட்டு என்னை அப்படிச் சாப்பிடறதுக்குக் கூப்பிடறயா நீ? எத்தனை அரக்கத்தனம் உனக்கு? எங்குழந்தை எப்படிப் போனா என்னன்னு சுகபோகம் கொண்டாடுற மனசு எனக்கில்லை.

என்ன பார்க்கிறே? என் அப்பாதான் எங்குழந்தை. அவர் சந்தோஷம்தான் என் சந்தோஷம். அவரை வெறுமே அப்பாவா நினைச்சிருந்தா உன்னை மாதிரி தன் சுகந்தான் பெரிசுன்னு எந்தக் கவலையுமில்லாம உதறிட்டு வந்துடலாம். ஆனா நீயில்லை நான். நாமெல்லாம் மனுசங்க. விலங்குகள் இல்ல. எங்கடா, இரை கிடைக்கும்னு சதா அலையறதுக்கு. போ.. போயிடு. எங்கள் அத்தனை பேரையும் உதறிட்டு கட்டிய புடவையோட போன உன்னை வரவேற்று ஆதரிச்சு எவ்வளவு உயரத்திலே சுதந்திரமா, வளமையா வச்சுருக்காங்களே அந்த அன்பான உன் மாமியார் வீட்டுக்காரங்களை, உன்னை நேசிக்கிறவங்களையாவது பிரதிபலன் பாக்காம நேசிக்கக் கத்துக்கோ."

அவன் விடுவிடுவென உள்ளே போய்விட, அவள் வெகுநேரம் தலையைக் குனிந்தபடியே நின்றிருந்தாள்.

முருங்கைப் பூவின் மகிமை

உங்கள் வீட்டுத் தோட்டத்தில் இருக்கும் முருங்கை மரத்திலிருந்து உதிரும் பூக்களை வீணாக்காமல் பொறுக்கி எடுத்து வந்து கொஞ்சம் வெங்காயத்தையும் ஒரு கேரட்டையும் பொடிப் பொடியாக நறுக்கி முருங்கைப் பூவோடு சேர்த்து வைத்துக் கொள்ளுங்கள். அடுப்பில் வாணலியைப் போட்டுச் சிறிது எண்ணெய் விட்டு கடுகு, உ. பருப்பு, கொஞ்சம் (ஒரு ஸ்பூன்) சாம்பார்ப் பொடியும் போட்டு நறுக்கி வைத்துள்ள முருங்கைப் பூ, கேரட், வெங்காயம் எல்லாவற்றையும் ஒன்றாகப் போட்டு வேண்டிய அளவு உப்புப் போட்டு நன்கு வதக்கி எடுத்து குழந்தைகளுக்கு சாதத்திற்குத் தொட்டுக் கொள்ளப் போட்டால் அந்த வாசனையில் நிறைய சாப்பிட்டு விடுவார்கள். அதோடு அவர்களுக்குப் பல் சொத்தையாகும் வாய்ப்பு வராது. முருங்கைப் பூவில் சுண்ணாம்புச் சத்து அதிகம் இருப்பதால் பெரியவர்களுக்கு வரும் மூட்டி தேய்மானம், இடுப்பு எலும்பு தேய்மானம் எல்லாவற்றிற்கும் இது ஒரு அரிய மருந்து.

— லலிதாம்பாள்.





வண்ணத்துப் பூச்சி!

"பேச்சுக் கிடமே
தடி!-நீ
பெண் குலத்தின் வெற்றியடி
ஆச்சர்ய மாயை யடி!-
என்றன்
ஆசைக் குமாரி யடி!"

துள்ளித்திரியும் அழகிய வண்ணத்துப்பூச்சியை ஞாபக மூட்டுகிறாள் அச்சிறுபெண். தினமும் ஒவ்வொரு புதிய மலரைத் தேடி... திரியும் பட்டாம்பூச்சியைப் போல் இந்தப் பெரும் உலகில் புதிய புதிய அனுபவங்களை ஆவலுடன் தேடும் ஒன்பது வயது சிறியப் பெண் வனிதா பால சுப்ரமணியன்.

சமீபத்தில் குழந்தைகளுக்காக எடுக்கப்பட்ட படமான 'மல்லி' என்னும் செய்திப்படத்தை மணிரத்தினத்தின் அபிமான ஒளிப்பதிவாளரான சந்தோஷ் சிவன் இயக்கியிருக்கிறார். இப்படத்தின் உயிர்நாடி 'குக்கு' என்னும் சிறுமி. குக்குவின் பாத்திரத்தை ஏற்று வெளுத்துக் கட்டியிருக்கிறாள் வனிதா.

முதுமலைக்காட்டில் இயற்கையான சூழலில் செட்டுகள் போடாமல், கண்களில் பளீரென்று அடிக்கும் லைட்டிங் இல்லாமல்... நடிப்பவர்களுக்கு முக ஒப்பனை இல்லாமல் எளிமையாக, வித்தியாசமாக எடுக்கப்பட்ட படம் மல்லி. இதில் வரும் குக்கு பாத்திரம் ஒரு குறும்புக்காரச் சிறுமியைப் பற்றியது. அப்படியே தத்ரூபமாக பார்ப்பவர் மனம் கவரும் வண்ணம் அதற்கு உயிர் கொடுத்திருக்கிறாள் சிறுமி வனிதா. இருபது நாட்கள் ஒதுக்கப்பட்ட படப்பிடிப்பை பதின்மூன்றே நாட்களிலும் இரண்டு நாட்கள் எடுக்க வேண்டிய டப்பிங்கை இரண்டே மணி நேரங்களிலும் ஊதித் தள்ளியிருக்கிறாள் வனிதா.

வனிதா ஒரு சிறந்த நடிப் பாற்றல் உள்ள சிறுமி மட்டு மல்ல. சின்னத்திரையிலும் நடிக் கிறாள். மாடலிங் செய்கிறாள். கடந்த மூன்றாண்டுகளாக பரதம் பயின்று வருகிறாள். நீச்சல், யோகா பயிற்சி மற்றும் ஸ்கேட்டிங்கும் செய்கிறாள். இதைத் தவிர சைக்கிள் ஓட்டுவது, செஸ், கேரம் விளையாடுவது புதிர் மற்றும் க்ராஸ் வோர்ட் போட்டிகளில் பங்கேற்பது தபால் தலை மற்றும் நாணயங்கள் சேகரிப்பது... எனிட் ப்லைட்டன் கதைப் புத்தகங்கள் படிப்பது என்று இன்னும் எத்தனையோ விஷயங்களில் உற்சாகத்துடன் ஈடுபடுகிறாள்.

எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தது போல் இந்த ஒன்பது வயது சிறுமி கராத்தேயில் கறுப்பு பெல்ட் பெற்றவள். உலக அளவில் கராத்தேயில் முதலாவதாகத் தேர்ந்தெடுக்கப்பட்

டிருக்கிறாள். சரி இத்தனையெல்லாம் செய்கிறாளே படிப்பில் எப்படியோ என்று கேட்கிறீர்களா? வனிதா வகுப்பிலேயே முதலாவதாக வரும் மாணவி.

இதெல்லாம் என்ன பெரியக் காரியம்? என்று இத்தனை விபரங்களுக்கு அப்புறமும் கேட்பவர்களுக்கு ஒரு விஷயம் சொல்ல வேண்டும். வனிதா என்னும் இந்த அசாதாரணமான சிறுமி தனது சின்னஞ்சிறிய வாழ்க்கையில் எவருக்குமே நடந்திருக்க முடியாத பயங்கரமான அனுபவங்களை சந்தித்து முட்கள் நிறைந்த பாதையைக் கடந்து கடும் உழைப்பு மற்றும் தன்னம்பிக்கையினால் வெற்றி கண்ட அதிசயப் பெண்.

வனிதாவின் குடும்பம் மும்பாயில் வசித்துக் கொண்டிருந்தது. அவளது அப்பா திரு. பாலசுப்ரமணியம் சவூதி அரேபியாவில் பணியாற்றிக் கொண்டிருந்தார். ஏழு மாதக் குழந்தையான வனிதாவிற்கு வயிற்றுப் போக்கும் ஜுரமும் உண்டாக மும்பாயில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றாள்.



குழந்தையை வீட்டிற்கு அழைத்து வந்த சில நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் சமையலறையில் பாத்திரங்கள் உருண்டு விழுந்தபோது குழந்தையிடம் சத்தம் கேட்டதற்கான அறிகுறி ஏற்படவில்லை. அவளது தாய் மீனாவிற்குச் சந்தேகம் தோன்றவே பல விதமான சத்தங்கள் எழுப்பிப் பார்த்தார். ஆனால் குழந்தையிடம் எவ்வித மாற்றமும் இல்லை.

உடனே காது கேளாதவர்கள் மருத்துவமனைக்கு குழந்தையை எடுத்துச் சென்ற மீனாவிற்கு அதிர்ச்சியான செய்தி காத்திருந்தது. உடல் நிலை சரியில்லாதிருந்த போது அதிகமாக செலுத்தப்பட்ட ஏதோ ஒரு மருந்து அவளது கேட்கும் சக்தியை பாதித்திருந்தது! அதிர்ச்சியடைந்த மீனா உடனே கணவருக்குத் தகவல் அனுப்பினார்.

இதன் பிறகு இந்தக் குடும்பமே ஆட்டம் கண்டது. சவூதியில் பாலசுப்ரமணியத்திற்கு தூக்கமில்லாத பயங்கரமான ராத்திரிகள். தனது அருமை மகளை எல்லோரும் கேலி செய்வதால் அவள் அவதியுறுவதைப் போல் பயங்கரமான கனவுகள்!

இந்த சமயத்தில் மீனாவின் உறவினர் ஒருவர் சென்னையில் காது கேளாத குழந்தைகளுக்கு ஒரு பிரத்தியேகமான பள்ளி இருப்பதாகவும் அதில் குழந்தைகளுக்குப் பேச கற்றுத் தருவதாகவும் ஒரு செய்தித்தாளில் வந்திருந்த விபரத்தை அனுப்பினார்.

குழந்தையின் எதிர்காலத்தை முன்னிட்டு தான் இருபது ஆண்டுகளாகப் பழகியிருந்த மும்பாயை விட்டுவிட்டு தான் பார்த்துக் கொண்டிருந்த வேலை மற்றும் உறவினர்கள் அனைவரையும் விட்டுவிட்டு வனிதாவுடன் சென்னைக்கு ஜாகை மாறினார் மீனா. முதல் மகன் வருண் மும்பாயில் ஒரு உறவினர் வீட்டிலிருக்க கணவர் சவூதியில் இருக்க குடும்பம் சிதறிப் போனது.

சென்னை அவர்களுக்குப் புதிய இடம். பாலசுப்ரமணியன் வேலையை ராஜினாமா செய்துவிட்டு சென்னைக்கு வந்துவிட்டார். இருவருக்குமே இரண்டு ஆண்டுகளாக வேலை கிடைக்காத கஷ்டமான சூழல். கடைசியில் பாலசுப்ரமணியத்திற்கு ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை கிடைத்தது. குடும்பம் ஒன்று சேர்ந்துவிட்டதால் இனி என்ன தான் கஷ்டம் வந்தாலும் தைரியமாக எதிர்த்து நிற்கக் கூடிய மனோநிலை அந்த நால்வருக்கும் உண்டானது.

அடையாறில் உள்ள பால வித்யாலயாவில் வனிதா சேர்ந்து படித்தாள். ஒரே ஒரு மொழிதான் கற்க முடியும் என்பதால் ஆங்கிலம் கற்றுக் கொண்டால் உலகில் எங்கு வேண்டுமானாலும் பிழைத்துக் கொள்ளலாமே என்று எண்ணி அவள் பெற்றோர் அவளுக்கு ஆங்கிலத்தில் பயிற்சியளிக்கத் தீர்மானித்தனர்.

காது கேட்கும் சக்தி இல்லாவிட்டாலும் அவள் ஒரு புத்திசாலிப்



பெண் என்பதை அவளது பெற்றோர் அவளுக்குப் பதிய வைத்தனர். அண்ணன் வருண் பிரபலமான குழந்தை மாடலாகவும் சின்னத் திரை மற்றும் சினிமாவில் குழந்தை நட்சத்திரமாக இருந்தான். கர்நாடக சங்கீதத்திலும் கீ போர்ட் வாசிப்பதிலும் பேர் பெற்றான். வருண் வனிதாவிற்கு முன் மாதிரியாக திகழ அவள் தனது பயத்தையும் தயக்கத்தையும் போக்கி பல விஷயங்களைக் கற்றுக் கொள்வதில் தனது உடற்குறையை மறந்து முழு மூச்சுடன் ஈடுபட்டாள்.

பெசண்ட் நகரில் உள்ள செயிண்ட் ஜான்ஸ் என்னும் சாதாரணமான குழந்தைகள் படிக்கும் பள்ளியில் இடம் கிடைத்தது. பள்ளியில் அவளது உற்சாகமும் நட்பும் பல குழந்தைகளை அவளது நண்பர்களாக ஆக்கியது. அவளது திறமைகள் பரிமளிக்கத் தொடங்கியது அப்போதுதான்.

கராத்தேயில் (உடற்குறையுள்ளவர்கள்) உலக அளவில் சேம்பியன். அதுவும் இத்தனை சிறிய வயதில். கராத்தேயில் கறுப்பு பெல்ட் பெறுவதற்காக இருபத்தி நான்கு கி.மீ. ஓட வேண்டும். அனாயசமாக ஓடி பலரை ஆச்சரியத்திற்குள் ஆழ்த்தினாள் வனிதா.

இந்தச் சிறுமிக்குப் பல பரிசுகளும் பெருமை சேர்க்கும் பட்டங்களும் கிடைத்திருக்கின்றன. தற்சமயம் சின்னத்திரையிலும் நடிக்கிறாள். 'மல்லி' படத்திற்காக முதுமலைக் காட்டில் படப்பிடிப்பிற்காகச் சென்ற அனுபவம் அற்புதமாக இருந்ததாகக் கூறுகிறாள் வனிதா.

சந்தோஷ் சிவனைப் பற்றி அவள் கூறுகிறாள், "அவர் மிகவும் கெட்டிக்காரர். பலவிதமான முகபாவங்களை வெளிப்படுத்தி எப்படி நடிக்க வேண்டும் என்பதை மிகவும் எளிதான முறையில் கற்றுக் கொடுத்தார்" என்கிறாள் இனிமையான குரலில்.

வாஸ்தவத்தில் மல்லி படத்திற்காக அவளது அண்ணனைத் தேர்ந்தெடுக்கத் தான் சென்றிருந்தனர் சந்தோஷ் சிவன் குழுவினர். ஆனால் வனிதாவின் துடிப்பும் கள்ளமில்லா சிரிப்பும், துறுதுறுவென்று நீர்க்குமிழியைப் போல் பொங்கும் உற்சாகமும் அவர்களைக் கவர்ந்தன. வனிதா தேர்ந்தெடுக்கப்பட்டாள்.

சந்தோஷ் சிவன் வனிதாவிற்காக திரைக் கதையில் மாற்றங்கள் செய்தார். அவள் நடிப்பைப் பார்த்து அதிசயித்த சந்தோஷ் சிவன் 'மல்லி' படத்தை வனிதாவுக்கு சமர்ப்பணம் செய்திருக்கிறார்.

"இந்தப் படத்தில் எனக்குப் பிடிக்காத ஒரே விஷயம் என் அப்பாவின் பாத்திரம்தான். அவர் ஒரு கண்டிப்பான வாட்ச்மேனாக நடிக்கிறார். குக்குவை விளையாடப் போவதற்கு அனுமதிக்க மாட்டார்" என்று கலகலவென்று சிரிக்கிறாள் வனிதா.

வனிதாவின் பிரகாசமான புன்னகையில் அவளது முகமே ஒளிமயமாகிறது. இந்தப் புன்னகையின் பின் நிறைந்திருக்கும் கடும் உழைப்பு, மனோதிடம் மற்றும் தன்னம்பிக்கை பார்ப்பவர் கண்ணுக்குப் புலப்படாது.

"நான் பெரியவளான பிறகு காலேஜுக்குப் போக வேண்டும். பிறகு ஆஃபீஸுக்குப் போவேன். சம்பாதித்து என்னை நானே பார்த்துக் கொண்டு ஏழை எளியவர்களுக்கு உதவி செய்வேன்" என்று தன் வருங்காலக் கனவைப் பற்றி நம்மிடம் மின்னும் கண்களுடன் கூறி விடைகொடுக்கிறாள் சிறுமி வனிதா.

மனம் தளராமல் முயன்றால் எத்தனை தடைகளையும் கடந்து சாதனை பெறலாம் என்பதற்கு வனிதா ஒரு உதாரணம். விரைவில் நடைப்பெற உள்ள உலக கராத்தே சேம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்று இந்தியாவுக்குப் பெருமை சேர்க்க வேண்டும் என்ற வண்ணக் கனவுடன் வெற்றியின் நுழைவாயிலில் நிற்கிறாள் இச்சிறுமி.

தகுந்த ஸ்பான்ஸர்கள் கிடைத்தால் உலக சேம்பியன் பட்டத்தை வெல்லுவாள் என்று கூறுகிறார் தந்தை பாலசுப்ரமணியன். வனிதாவின் ஆசை நிறைவேறும் என்ற நம்பிக்கையுடன் கிளம்புகிறோம். இந்த அருமையான மல்லியின் சுகந்தம் நம்மை பின் தொடர்ந்து நீண்ட நேரம் சுற்றிச் சுற்றி வந்தது.

பேட்டி: **ஸ்வாதி**

அட்டை வண்ணப்படம் : **சந்தோஷ் சிவன்**

பெரிய பச்சை மிளகாய்களை சிறிது நேரம் கொதிக்கும் நீரில் போட்டு எடுக்கவும். கடலை மாவில் தகுந்த உப்பு, பெருங்காயம் போட்டு இந்த பச்சை மிளகாயை பஜ்ஜிகளாக தோய்த்துப் போடவும். மிளகாய் பஜ்ஜி ருசியாக இருக்கும்.

- ரி. விஜயலக்ஷ்மி.



ஸ்ரீ துர்க்கை அம்மன் துணை

✆ Res : 6430076 ✆ Shop : 8281327

தனலக்ஷ்மி சாரீஸ்



உயர்தர சுங்குடி தயாரிப்பாளர்

Dealer Original Ranee Sarees

நாங்கள் 100's Bazar quality, 100's special, 120 Superior quality ஆகியவை அதிக கெட்டி சாயத்துடன் தயார் செய்கின்றோம். இதனால் குறைந்த விலையுள்ள புடவையும் நீடித்து உழைப்பதற்கு உத்தரவாதம் தருகிறோம்.

எங்களிடம் 6 கெஜம், 7 கெஜம், 9 கெஜம், 10 கெஜம் அதிக அளவில் தயார் செய்வதால் அதிக varities கிடைக்கும். தனலட்சுமி தேவேந்திரா சாரீஸ், High quality with blows Bathik Sarees, Mercerised Cotton with Jari and thread work and with rich pallu also avilable. மற்றும் Banthini prints, Gold print, Latest Screen printing designs, Block prints, Chudithar sets, Apoorva printed polycot, Screen printed polycot, Block printed polycot, Chettynadu Sarees, Fancy Pollachi Cotton, Negamam Cotton, Mangalagiri Cotton, Bengal Cotton, Silk Cotton, Guntur Sarees, Rasipuram Cotton, Bangalore printed Silks and Polysilk (Latest arrival) Karishma Sarees, Surat Synthetic Sarees are available.

இப்பொழுது Original Ranee Sarees கிடைக்கும். புதிதாக குறைந்த எடையுள்ள 6 கெஜம், 9 கெஜம் புடவைகள் தயார் செய்கிறோம். இது விலையும் மிகக் குறைவாகவும் நல்ல தரத்துடனும் இருக்கும். மற்றும் சேலம் வேஷ்டிகள், டவல்கள், மேட்சிங் ப்ளவுஸ்கள், உயர்தர ஈரோடு காட்டன், Semi Gadwal கிடைக்கும். பட்டுப் புடவை போன்ற தோற்றம் கொண்ட உயர்ரக கைத்தறி காட்டன் புடவை with rich pallu மற்றும் ordinary Pallu. உயர்தர காட்டன் நூலால் தயாரிக்கப்படுகிறது.

அமைதியான சூழல், திருப்தியான வாடிக்கையாளர் சேவை, car parking வசதி. நியாயமான விலையில் எல்லா புடவைகளுக்கும் உத்திரவாதம் உண்டு.


நெ. 1, கோபாலகிருஷ்ண ரோடு (டாக்டர் நாயர் ரோடு,
Second left from Pondy Bazzar turning) தி.நகர், சென்னை -17.

Bus No - 9A,10,47A, 47D (Power office Bus stop. Dr. Nair road)

Our Coimbatore branch

P.R. Shanthi, No.15, Siva Sakthi Colony,
Thondamuthur Road, Vadavalli, Coimbatore 641 041. ✆ 424981

ஏப்ரல் 1 முதல் 10வரை சிறப்புத்தள்ளுபடி விற்பனை



கலியுக வசிஷ்டர் என்று 'பரமாச்சார்யாளிடம்' பட்டம் பெற்ற ஊத்துக்காடு சங்கர கனபாடிகளின் பேரனும், கடந்த எட்டு வருடங்களாக வைதீக காரியங்களை மிகச் சிறந்த முறையில் நடத்தி வருபவருமான திருவல்லிக்கேணி ராஜு சாஸ்திரிகள் திருமண மந்திரங்களின் முக்கியத்துவத்தையும் அதில் தவிர்க்க வேண்டியவற்றையும் நமக்கு விளக்குகிறார் :-

''விவாகம் மூலம்தான் நான்கு ஆஸ்ரமங்களில் சிறந்ததான கிருஹஸ்தாஸ்ரமத்தைப் பெற முடியும். பிரம்மச்சரிய ஆஸ்ரமத்திலும், சந்நியாசிகளும் அவர்களே தங்கள் உணவை சமைக்கக் கூடாது. கிருஹஸ்தர்களிடம்தான் பிக்ஷை வாங்கலாம். தேவதைகள் கூட மனிதனின் இல்லற வாழ்க்கையை விரும்புவதால்தான் கிருஹஸ்தாஸ்ரமத்தில் செய்யும் பற்பல உயர்ந்த யாகங்களின் ஹவிர்பாகங்களை திருப்தியுடன் பெற்றுக் கொள்ளுகிறார்கள். திருமணம் ஆனால்தான் பித்ருக்கள், தேவதைகள், பந்துமித்ரர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யும் அதிகாரம் கிடைக்கின்றது.

தாலி கட்டி முடிந்தவுடன் மணமக்களோடு கை குலுக்காதீர்கள்!

''இப்போதைய திருமணங்களில் தாலி கட்டி முடிந்தவுடன் பெரும்பாலோர் மேடைக்கு ஓடி வந்து பரிசு கொடுத்து கைகுலுக்கி விட்டு, வேகமாக சாப்பிட்டு விட்டு அவசரமாகப் போய் விடுகிறார்கள். தாலி கட்டிய பிறகு செய்யப்படும் ஹோமங்களும், சப்தபதியும் முடிந்த பிறகே கைகுலுக்கலாம்... இதற்கெல்லாம் காரணங்கள் இருக்கின்றன. இவற்றை இளைய சமுதாயத்திற்கு எடுத்துச் சொல்லும் போது அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள்'' என்கிறார்கள் பெரியவர்கள்.



திருமணத்தில் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் அர்த்தமுண்டு. சுருக்கமாக உங்களுக்கு அதைச் சொல்கிறேன். முதல் நாள் விரதம். தான் கற்ற வேதங்கள் பூர்த்தி அடைந்து பிரம்மச்சரியத்திலிருந்து விடுபடும் நிகழ்ச்சி இது. இன்றைக்கு படிப்பு என எடுத்துக் கொள்ளலாம். விரத சமயத்தில்தான் கண்ணாடி

• திருமதி பேபி பட்டாபிராமன்

பார்த்தல், மை, பொட்டு இட்டுக் கொள்ளுதல் போன்ற இகபர சுகங்கள் கிடைக்க ஆரம்பிக்கும். அதுவரை அலங்காரங்களில் நாட்டம் கொள்ளக் கூடாது என்று வைத்திருந்தது எத்தனை சிறப்பு!

தொடர்ந்து நாந்தி எனும் நிகழ்ச்சி மூலம் பித்ருக்களை அழைத்து அவர்களது ஆசி வேண்டி, பிறக்கப் போகும் சந்ததிகள் உடல் ஊனமின்றி ஆரோக்கியத்துடன் பிறக்கவும் வாழ்வு சிறக்கவும், ஸகல காரியங்களும் தடையின்றி நடக்கவும் பிரார்த்தனை செய்து கொண்டபின் பித்ருக்கள் வந்து போனபின் **புண்ணியாகவசனம்** எனும் சுத்தம் செய்து முடிக்கிறோம்.

அதன்பின் பாலிகை தெளித்தல், பஞ்ச பூதங்களெனும் ஐந்து சக்திகளைக் கொண்ட பயறு, உளுந்து, நெல், எள்ளு, கடுகு எனும் ஐந்து வகை தானியங்களை ஆண்கள் விதைத்தாலும் நீரூற்றி செழிக்கச் செய்வது பெண் தானே எனும் தாத்பர்யம் அதில் உள்ளது. **காப்புக் கட்டுதல்** எனும் ரக்ஷா பந்தனம் என்பது துர்தேவதைகள் காற்று, கருப்பு, பில்லிசூன்யம் எனும் தீய சக்திகள் நம்மைத் தாக்காமல் ஜுரம் வராமலும், காயம் படாமலும் எந்த ஆபத்திலும் சிக்காமலும் காவல் காக்கவே, வேதமந்திரங்களை உச்சாடனம் செய்து மணமகனைக் காக்க வலது கையிலும் பெண்ணுக்கு இடதுகையிலும் கட்டி வெளியே செல்லக் கூடாதென நம் நன்மைக்கே வைத்தனர்.

இந்தச் சமயம் இருவரும் மகாவிஷ்ணு, மகாலக்ஷ்மியாகவே பாவிக்கப்படுகிறார்கள். எனவே நல்ல சிந்தனையுடன் தங்களை மனதாலும், உடலாலும் புனிதர்களாக வைத்துக் கொள்ள வேண்டும். சில இடங்களில் மணமக்கள் ஒருவருக்கொருவர் சீண்டிக் கொள்வது எல்லாம் நடக்கும். இவற்றைத் தவிர்த்துத் தாங்கள் ஆசாரத்தோடு நோன்பு நோற்பது எதிர்கால இல்வாழ்வுக்கு நல்லது.

அடுத்து **நிச்சயதார்த்தம்**. அந்தக் காலத்தில் வாக்கினால் (வார்த்தையால்) முடிவு செய்ததை காலப்போக்கில் எழுதிப் பலர் முன் படிப்பதாக மாறியுள்ளது. சாட்சிகளை வைத்துக் கொண்டு செய்வதும் நல்ல தற்குத்தானே? மாப்பிள்ளை அழைப்பு எனும் ஜானவாசமும் தொடர்ந்து மணமகன் கோவிலுக்குச் சென்று வருவதும் அப்படித்தான். இவைகள் எல்லாம் கூடியிருக்கும் பந்துமித்ரர்களின் சந்தோஷத்துக்காக ஏற்பட்டது. பெண் பார்த்தவுடனே நிச்சயதார்த்தம் முடிந்து விட்டாலும் மறுபடியும் திருமணத்தன்று முதல் நாளும் இவைகளைச் செய்வது நடைமுறையில் வந்துள்ளது. அதனால் ஜானவாசம் நிச்சயதார்த்தம் இவற்றைச் சிலர் வேண்டாமென்று சொல்வதில் தவறில்லை. அத்துடன் கூட இந்த இரண்டு நிகழ்ச்சிகளால் ஏற்படும் ஆடம்பரச் செலவுகள் கணிசமாகக் குறையும்.

மறுநாள் காலை **காசி யாத்திரை**. வேத அத்யயனம் செய்த ஒருவர் தன் படிப்பை, வித்வத்தைக் காட்ட காசி வரை போவதுண்டு. அப்படிப் போகக் கிளம்பும் பையனை பெண்ணின் தந்தை தடுத்து, "என் மகளைக் கன்னிகாதானம் செய்து தருகிறேன். தாங்கள் பாணிக்கிரகணம் செய்து கொண்டு நல்ல முறையில் வாழுங்கள்" என்று மஞ்சள் தடவிய தேங்காயைக் கையில் தந்து அழைப்பது.

சிறு குழந்தைகள் இருக்கும் வீட்டிற்கு நாம் பிஸ்கட், பழம் போன்ற தின்பண்டங்களை வாங்கிச் செல்வது வழக்கமல்லவா? அவற்றை நேரடியாகக் குழந்தைகள் கையில் கொடுப்பதைத் தவிர்த்து, வீட்டுப் பெரியவர்களிடம் கொடுத்து விடுவதே நல்லது. ஏனெனில், நாம் விருந்தினராய் போகும் சமயம், அந்த வீட்டுக் குழந்தைகள் உடல்நலமாக இருக்கிறார்களா இல்லையா என்பது நமக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. என் உறவினர் வீட்டுக் குழந்தைக்கு ஏற்பட்ட கதியை நேரில் பார்த்ததால்தான் எனக்கு இதை எழுதத் தோன்றியது.

வயிறு சரியில்லாமல் சில நாட்களாகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த நாலு வயது பையனிடம் அவர்கள் வீட்டுக்கு வந்த விருந்தாளி ஒரு பெரிய சைஸ் பிஸ்கட் பாக்கெட்டை பெருமையாகக் கொடுத்து விட்டார். பெரியவர்கள் பேச்சு சுவாரஸ்யத்தில் இருக்க, குழந்தை பூரா பிஸ்கட் பாக்கெட்டையும் தின்று காலி செய்து விட்டது. அடுத்த சில நிமிஷத்தில் 'கடகட'வென வாந்தி எடுக்க ஆரம்பித்து விட்டான். குழந்தை பிழைக்குமா என்ற அளவுக்கு நிலைமை மோசமாகியது. யார் செய்த புண்ணியமோ டாக்டர்கள் குழந்தையின் உயிரைக் காப்பாற்றினார்கள். ஆகவேதான் சொல் கிறேன் – ஆசையாக நாம் வாங்கிச் செல்வது மற்றவர்க்கு அவஸ்தையாகிவிடக் கூடாதல்லவா?

– ஜானகிதர்மராஜன்.



உருளைக் கிழங்கு காரக்கறி செய்யும் பொழுது அதில் ஒரு ஸ்பூன் கெட்டி தயிர் கலந்து வதக்கினால் மிகவும் சுவையாக இருக்கும்.

- உதயபாரதி

பெரியவர்களை, மகான்களை பூரண கும்ப மரியாதை செய்து அழைப்பது போலத்தான் இதுவும். ஜலமுள்ள குடம் போன்றது தேங்காய்.

ஒருவர் அணிந்த மாலையை மற்றொருவர் அணியக் கூடாது என்கிறது சாஸ்த்திரம். இரு உடல் ஒருயிராகப் போகும் தம்பதிகள் மாலை மாற்றிக் கொள்கின்றனர். பின் ஊஞ்சலில் அமரச் செய்து ஆரோக்கியமாக வாழ பாலும் பழமும் தந்து, பச்சைப் பிடி எனும் அன்னத்தால் செய்த கண் உருண்டைகளை திருஷ்டி கழிவதற்காக சுற்றிப் போடுகின்றனர். தீபம் ஜலம் இவற்றை வைத்துக் கொண்டு ஊஞ்சலை சுற்றுவதும் திருஷ்டி கழியத்தான்.

பின் மேடைக்கு வந்ததும் பிள்ளையார் பூஜை செய்து தன் இருபத்தியோரு தலைமுறைகள் கரையேறுவதற்காக மாப்பிள்ளையை மஹாவிஷ்ணுவாக வரித்து கன்னிகாதானம் செய்து தருகிறேன் என்கிறார் பெண்ணின் தந்தை. விஷ்ணு அவதாரமான மாப்பிள்ளைக்கு கால் அலம்பி பூஜை செய்து மூன்று தலைமுறை பெயரைச் சொல்லி அந்த கோத்திரத்துப் பெண்ணை, மூன்று தலைமுறை பெயரைச் சொல்லி பிள்ளையின் கோத்திரத்துக்கு திருமணம் எனும் **கன்னிகாதானம்** செய்து தருகின்றனர்.

பெண்கள் ருதுவான காலத்திற்கு முன்பே திருமணம் நடந்தது அப்போது. இன்று பல உபாதைகளும், வலிகளும், தோஷங்களும் பெற்று திருமணம் நடப்பதால் அவைகளுக்குப் பரிகாரமாக பிரார்த்தனைகள் செய்கின்றனர். கன்னிகாதான சமயத்தில் பெண்ணின் தலை மீது நுகத்தடியை வைத்து அதன் துவாரத்தில் தங்கத்தை (காலப்போக்கில் திருமாங்கல்யத்தை) வைத்து தண்ணீர் விடுவது, புண்ணிய நதிகளின் தீர்த்தத்தால் ஸ்னானம் செய்து வைப்பதற்கு ஒப்பாகிறது. பின் அப்பா மடி மீது உட்கார வைத்து (வைக்கோலை பரப்பி அதன் மீது அப்பா அமர) அபசப்தங்கள் காதில் விழாமல் இன்னிசை முழங்க, பெண்கள் கௌரி கல்யாணம் பாட, 'மாங்கல்யம் தந்துனாமம ஜீவன.. அதாவது' நான் சிரஞ்சீவியாக இருக்கக் காரணமான இந்தக் கயிற்றை உன் கழுத்தில் கட்டுகிறேன் நீ நூறாண்டு ஜீவித்திரு'' என்ற மந்திரத்தைச் சொல்லி மாங்கல்யதாரணம் ஆகின்றது.

பிறகு தர்ப்பையால் செய்யப்பட்ட கயிற்றை மாப்பிள்ளை, பெண் வயிற்றில் கட்ட வேண்டும். 'நல்ல மனம், நல்ல உடலுடன் கூட என்னைப் பின்பற்றி விரதம் அனுஷ்டிக்கக் கூடியவளாகவும் இருக்க இதைக் கட்டுகிறேன்' என்று கட்டுகிறான். இவையெல்லாமே ஒருமுகப்பட்ட மனதுடன் ஒரு பூஜை! ஒரு விரதம் போல மிகுந்த சிரத்தையுடன் செய்ய வேண்டிய விஷயங்கள். தாலி கட்டியபின் பாணிக்கிரகணம்தான் மிக முக்கியம். தாலி கட்டினால் சட்டப்படி திருமணமாகி விட்டது என்பதல்ல. மனு ஸ்மிருதிப்படி ஏழு அடிகள் கணவனுடன் நடந்தால்தான் அவள் தர்மபத்தினியாகிறாள். முன்காலத்தில் நட்பு ஏற்படுத்திக் கொள்ள அக்னி வளர்த்து அதன் சாட்சியாக இருவரும் அதன்முன் கைகுலுக்கிக் கொள்வார்கள். ஏழு அடி எடுத்து வைத்து முன் சென்றால் இணைபிரியாத சிநேகம் ஏற்படும் என்பதாலும், ஒருமித்த கருத்து கொண்டவர்களாக ஆக வேண்டுமென்றும், நான் வானுலகமாக இருந்தால் நீ பூமியாகவும், நான் மனம் என்றால் நீ வாக்காகவும் இருக்க சங்கல்பம் செய்து கொள்வோம்' என்று உறுதிமொழி எடுத்துக் கொள்வதே **'சப்தபதி'** ஆகும்.

அம்மி மிதித்தலுக்கும் அர்த்தமுண்டு. அக்னியை வலம் வந்து மனைவியின் வலக்கால் கட்டை விரலைப் பற்றி அக்னிக்கு வலப்பக்கமுள்ள அம்மி மீது வைக்க வேண்டும். 'கல்லைப் போல் நிலையாகவும், கலங்காமலும், உறுதியாகவும் இரு. உன்னை எதிர்ப்பவர்களை எதிர்த்து நில். எதிரிகளிடமிருந்து காத்துக் கொள்' என்பதே இதன் அர்த்தம்.

பெண்ணுக்கு ஹோமம் செய்ய உரிமையில்லை என்றாலும் திருமணத்தன்று மட்டும், தன் கணவன் வீட்டாருக்குத் தன்னைப் பிடிக்க வேண்டுமென்றும், கணவரின் தீர்காயுள், வம்சவிருத்தி, தானிய விருத்திக்காகவும், தன் சகோதரன் கையால் பொரியை வாங்கி அக்னி பகவானுக்கு அளிப்பதே பொரியிடுதல்.

அருந்ததி பார்த்தல் என்பது சப்தரிஷி

நுழைவுப் படிவம்

பெயர் ______________________________

முகவரி ______________________________

____

பின்கோடு _______________ தொலைபேசி எண் _______________

போட்டியின் விதிமுறைகள் : 1) மேலே தரப்பட்டுள்ள படிவம் மற்றும் அதன் நகல்கள் மூலம் மட்டுமே பங்கு பெறலாம். தனித் தாளில் வரைந்து அனுப்பக் கூடாது 2) ஒருவரே எத்தனை படிவங்களை வேண்டுமானாலும் அனுப்பலாம் 3) கோலங்கள் அடித்தல், திருத்தலின்றி தெளிவாக இருத்தல் அவசியம் 4) கோலங்களை பேனாவில் வரையலாம். வர்ணம் தீட்டியும் அனுப்பலாம். 5) நுழைவுக் கட்டணம் எதுவும் இல்லை. இது அதிர்ஷ்டப் போட்டி அல்ல 6) கந்தரி சில்க்ஸ் மற்றும் அவர்தம் விளம்பர நிறுவனத்தை சார்ந்தவர்களோ, உறவினர்களோ இக்கோலப் போட்டியில் பங்கு பெறவியலாது. 7) நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது. 8) பெறப்படும் அனைத்து படிவங்களும் கந்தரி சில்க்ஸின் உடைமை. 9) பரிசுப் பொருட்களை பணமாக மாற்றிக் கொள்ள இயலாது.

கோலங்கள் கந்தரி சில்க்ஸ்க்கு வந்து சேர வேண்டிய கடைசித் தேதி 10, ஏப்ரல் '99

DATTARAM

களின் பத்தினிகளுக்கு கிருத்திகா என்று பெயர். அவர்களுள் சிறந்தவள் அருந்ததி. பதி விரதை, உத்தமி என்று மற்ற அறுவரும் ஏற்றுக் கொண்டதால் அவளைப் பார்க்கும் மண மகள் கற்பினாலும், பாக்கியத்தாலும் எட்டா வது கிருத்திகையாக விளங்க வேண்டும் என்று அருந்ததியையும், அழிவில்லாத நட்சத்திர மான துருவனையும் பார்க்கச் செய்கின்றனர்.

தாத்பர்யங்களும், சுபமான காரியங்களும் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கும்தான் எனும் திருமண முறைகளைப் புரிந்து கொண்டு இப்போது செயல்பட ஆரம்பித் துள்ளனர் என்பது மகிழ்ச்சி தருகிறது. விரதம் முடிந்து காப்பு கட்டியதும் வெளியில் போகா மல் இருப்பதும், தாலி கட்டியவுடனே கைகளைக் குலுக்காமல் இருப்பதும் நல்லது. பிடித்த கைகளை விடாமல் சப்தபதி வரை மணமக்கள் இருந்தால்தான் முழு திருமணமும் ஆன ஆங்கீகாரம் கிடைக்கிறது. முதல் நாள் வரவேற்பு கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டி யது. காரணம், கணவனின் கைத்தலம் பற்றி ஏழு அடிகள் நடந்து அக்னி சாட்சியாகப் பாணிக்கிரகஹணம் ஆனதும்தான் ஒரு பெண் அவனது மனைவியாகிறாள். அப்படித் திருமணம் ஆகாத நிலையில் ஒருவருக்கொரு வர் கணவன் மனைவியாக அறிமுகப்படுத்திக் கொள்வது தவறு. தவிர்க்க வேண்டியதும் கூட.

காப்புக் கட்டியதை திருமணம் முடிந்த அன்று மத்தியானம் தண்ணீரில் போட்டு விட்டால் (காப்புடன் வெளியே போகக் கூடாது) மாலை வரவேற்புக்காக மணமகள் அலங்காரம் செய்து கொள்ள வெளியே போவதில் தவறில்லை. பள்ளிக்கு, மருத்துவ மனை பணியாளர்களுக்கு, மிலிடரி, போலீஸ் என்று அவரவர்க்கு உரிய யூனிபார்ம் உடை கள் இருப்பது போல வைதீக மந்திரங்கள் சொல்லுகையில் மடிசார், பஞ்சகச்சம், வெற்றுடம்பு என்று முறை உள்ளது. உடலின் எந்த பாகங்களை மறைக்க வேண்டுமென்று உள்ளதை உள்ளபடி செய்தால் தேவதைகளின் ஆசி பூரணமாகக் கிடைக்கும். தேவதைகள் ஆசிகளை, நன்மைகளைத் தரத் தயாராக இருந்தாலும் நாம் பெற்றுக் கொள்ளத் தவறு கிறோம். மந்திரங்களை மணமகன் சொல் லாமல் நாங்களே சொல்கிறோம். நல்ல பலன் கள் கிடைக்க அவரவர் தங்களுக்கு உண்டான மந்திரங்களை உச்சாடனம் செய்தால் நல்லது. காலணிகளோடு புனிதமான ஹோமம் உள்ள மேடைக்கு வரக் கூடாது. நாங்களே திருமணம் முடிந்ததும் மணமக்களை கிரு அனுப்பும் வரை கொஞ்சம் பொறுமையாக இருந்தால் அனைவருக்கும் நன்மை.

ஐந்து நாட்கள் கல்யாணத்தில் அடுத் தடுத்து சொல்ல வேண்டிய வேத மந்திரங் களை நாங்கள் இரண்டு நாட்கள் ஏன்? ஒரே நாள் கல்யாணமாக இருந்தும் சொல்கிறோம். நாள் குறைவு என்பதால் மந்திரங்களைக் குறைப்பதில்லை.

சாந்தி கல்யாண மந்திரம் சொல் வதைத்தான் பெற்றோர் குறைத்து அந்தச் சம யம் எங்களை அழைப்பதில்லை. பல சாந்தி கல்யாணங்கள் ஹோட்டலில் நடந்து விடு கின்றன. அதனால் ஒன்றும் செய்ய முடி வதில்லை. அறைக்குள் தம்பதியரை அனுப்பும் சமயம் மந்திரங்களைச் சொல்லி, தேவதை களிடம் நல்ல சந்ததிகளைத் தரும்படி பிரார்த் தனை செய்வதைக் குறைக்காமல் கண்டிப் பாகச் செய்ய வேண்டும் என்கிறார் இவர்.

திருமதி பேபி பட்டாபிராமன் :

''அந்தக் காலத் திருமணம் போல வரதட்சணை, சம்பந்தி சண்டைகள் எதுவுமே இப்போது இல்லை என்பதே சந்தோஷமாக இருக்கிறது. என் ஒன்பது குழந்தைகளில் மூன்று பிள்ளைகள், மூன்று பெண்களுக்குத் திருமணமாகி விட்டது. நிறைய அனுபவங்கள், பலரும் என்னிடம் யோசனை கேட்பார்கள்.

என் இரண்டு பிள்ளைகளுக்கு லௌகீகமா கவும், மூன்றாவது மகனுக்கு வைதீகம்

குழந்தைகளுக்காக...

வடாம் மாவில் கடைசியாகக் கொஞ்சம் இருக்கும் பொழுது, அதில் போர்ன்விட்டா/பூஸ்ட் மூன்று ஸ்பூன் தண்ணீரில் நன்றாகக் கரைத்து மாவில் சேர்த்து, பிறகு வடாம் பிழிந்தால் சாக்லேட் மணத்துடன் வித்தியாசமான கலரில் வடாம் தயார்!

— போரூர். ஆர். சீதா



ஹிந்தி பேசும் மாநிலத்தில் இருக்கும் போது, ஹிந்தி எழுதப் படிக்கக் கற்றுக் கொள்வது அவசியம் மட்டுமல்ல, சுலபமும் என்பதால் ஹிந்தி கிளாஸ் போக ஆரம்பித்தேன். பரீட்சை நேரத்தில், மனப்பாடப் பகுதி மற்றும் கட்டுரைகள் எழுதிப் படிக்க சிரமப்பட்டதால்,

''படிக்கும் வயது தாண்டி விட்டது. ஒன்றுமே ஏற மாட்டேன் என்கிறது. சிறிது நேரத்திலேயே கையெல்லாம் வலிக்க ஆரம்பித்து விடுகிறது. இந்தப் பரீட்சையோடு போதும்'' என்றெல்லாம் புலம்பிக் கொண்டிருந்தேன்.

பரீட்சை எழுதி முடித்து விட்டு, வெளியே வந்தபோது, கைகளை உயர்த்தியும் கீழே இறக்கியும், பத்து நிமிடத்துக்கு ஒருமுறை பயிற்சி கொடுத்துக் கொண்டே, நடுங்கும் கைகளோடு, தேர்வு எழுதிக் கொண்டிருந்த ஒரு மூதாட்டியை பார்த்து ஆச்சர்யப்பட்டேன். அங்கிருந்தவர்களை விசாரித்ததில், எழுபத்தைந்து வயதான அந்த மூதாட்டி எம்.ஏக்குச் சமமான, 'பத்ம' என்ற தேர்வை எழுதிக்கொண்டிருக்கிறார் எனத் தெரியவந்தது. பிறகு இந்த மூதாட்டியைச் சந்தித்து, பேச்சு கொடுத்த போது,

''சிறிய வயதை விட பொறுப்புக்களை முடித்தபின் வயதான காலத்தில் படிப்பில் கவனம் செலுத்துவது எளிது என்பதோடு, அவசியம்'' என்றும் கூறினார். தனிமையை தவிர்க்கவும், அனாவசிய விஷயங்களில் கவனம் செலுத்தாமல் இருக்கவும், குடும்பத்தில் அனைவரிடமும் மரியாதையைப் பெறவும் முடிகிறது என்றும், பேரன் பேத்திகள் தன்னைப் பார்த்து விட்டு படிக்க உட்காருகிறார்கள் என்றும் கூறினார்.

வயதான காலத்தில் மற்றவர்களின் ஏச்சு பேச்சுகளுக்கு ஆளாகாமல், மனநிம்மதியோடு வாழ்க்கையைக் கழிக்க, பாடப் புத்தகங்கள்தான் என்றில்லாமல், நல்ல சிறந்த புத்தகங்களைப் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வது ஒரு நல்ல யோசனை என்று தோன்றியது.

— பத்மாவதி முத்துக்குமார்.

படித்தால் வைதீக முறைப்படியும், அதாவது ஐந்து நாள் கல்யாணமாகவும் நடந்தது. என் இரண்டாவது மகன் திருமணத்தின் போது மாப்பிள்ளை சினிமா சம்பந்தப்பட்ட கம்பெனியில் வேலையாக இருந்ததால் தாலி கட்டிய மறுவிநாடியே வைதீக காரியங்களைக் கூடச் செய்ய விடாமல் கூட்டம் கூட்டமாக வந்து கைகொடுத்தபடி இருக்க என் மகள் தனியாக ஒதுங்கி நின்று கொண்டிருந்தது எங்களுக்கு வேதனை தந்தது. இப்போது மற்ற கல்யாணங்களைப் பார்த்து அந்த மாப்பிள்ளை புரிந்து கொண்டுள்ளார்.

என் இரண்டாவது மகனுக்குத் திருமணம் நடந்த போது அவனுக்கு நண்பர்கள் அதிகம். சிரிப்பும், கும்மாளமும், நண்பர்களும்தான் கல்யாணம் என்று நினைத்துக் கொண்டிருந் தான். அதிலேயே மனதை செலுத்தினான். அன்று வந்தவர்களில் பாதி பேர் கூட இப்போது இல்லை. டி.வி.யில், பத்திரிகையில் போலியோ, மற்ற ஊனமுற்ற குழந்தைகளைப் பார்த்து மனம் கலங்கி சீமந்தம் சமயத்தில் மிகவும் சிரத்தையாக (தனக்கென ஒரு குழந்தை பிறக்கப் போவதால்) மந்திரங்கள் சொன்னான்.

மூன்றாவது மகனின் வைதீக திருமணத் தில் வாத்தியார் சப்தமாக அனைவரிடமும் தாலி கட்டியதும் மேடைக்கு ஏன் வந்து கைகுலுக்கக் கூடாதென சொல்லியதும் புரிந்து கொண்டனர். அவசர உலகம் இது. இரண்டு மூன்று வேலைகளை வைத்துக் கொண்டோ, ஆபீஸ் போக வேண்டுமென்றோ அரை மணி நேரம் கல்யாணத்துக்கு வரு கின்றனர். அதில் தவறில்லை. தூர இருந்து பார்த்து கண் ஜாடையால் விடைபெற்றுக் கொள்ளலாம். தவறில்லை. புரியவைக்க ஆரம்பித்தால் புரிந்து கொள்வார்கள். உங்கள் இஷ்டப்படி செய்யுங்கள் என்று, எதையுமே சொல்லாமல் இருப்பது பெரியோர்களின் தவறு. சொல்ல வேண்டிய விஷயங்களை சொல்ல வேண்டிய சமயத்தில் சொல்லியே ஆக வேண்டும். கட்டாயம் இன்றைய குழந்தைகள் கேட்பார்கள்.''

பேட்டி : **பானுமதி இராமச்சந்திரன்**

ஆண்கள் அதிகம் பயப்படுகிறார்கள்



• முருகேசன்

திருமணம் என்பது ஒவ்வொருவர் வாழ்விலும் புது வரவுகளை, பலவித மாற்றங்களை, இனிமையான உணர்வுகளை ஏற்படுத்தும் முக்கிய நிகழ்ச்சி. ஆணுக்கும் சரி பெண்ணுக்கும் சரி அவரவர் மனதில் ஆயிரம் கனவுகள், கணக்குகள், பயங்கள், எச்சரிக்கைகள், வருத்தங்கள், குதூகலம், பெருமிதம் என்று கலவையான எண்ணங்கள் மாறிமாறி அலைபாய்ந்து கொண்டேயிருக்கும். இதில், பெண்கள் தங்கள் உணர்வுகளையும் எதிர்பார்ப்புகளையும் எளிதில் வெளிப்படுத்தும் தன்மையுடையவர்கள். ஆண்களோ அதிகம் வெளிப்படுத்தும் தன்மை இல்லாதவர்கள். அவர்கள் என்ன நினைக்கிறார்கள்? அதுவும் வருகின்ற மனைவி எப்படி இருக்க வேண்டும் என்று கனவு காண்கிறார்கள்...




• அ. முரளிதரன்

'ஆண்களின் மனநிலை குறித்து மலர் மருத்துவமனையின் உளவியல் நிபுணர் டாக்டர் என். ரங்கராஜன், அவர்களிடம் கேட்டபோது:-

"பெண்கள் அளவிற்கு ஆண்கள் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்துபவர்கள் அல்லர். அதிலும், திருமணம் என்றால் சிறிதும் வெளிவரமாட்டார்கள். இதற்கு முக்கியக் காரணம், அடிப்படைக் காரணம் நம் சமுதாயம் தான். பெண்ணை இளம் வயதிலேயே திருமணத்திற்குத் தயார்ப்படுத்துப் பெரியவர்கள் ஆண்களைக் கண்டு கொள்வதேயில்லை. இங்கே, பெண் திருமணத்திற்காகவே வளர்க்கப்படுகிறாள்; ஆண் வேலை பார்த்துச் சம்பாதிக்க வளர்க்கப்படுகிறான். அதனால்தான், திருமண வயது வரும்போது, பெண்கள் தங்கள் எதிர்பார்ப்புகளிலும் குடும்பம் பற்றிய எண்ணங்களிலும் தெளிவாக இருக்கிறார்கள். எந்தெந்த விஷயங்களுக்காகத் திருமணத்திற்குப் பயப்படுகிறார்கள் என்பதிலும் தெளிவு பெண்களிடம் உண்டு. ஆண்களுக்கு





• டாக்டர் ரங்கராஜன்

அப்படியில்லை. பெண்கள் அளவிற்கு இல்லையென்றாலும் சிறிதாவது திருமணம் பற்றிய தெளிவை அவர்களுக்கு ஏற்படுத்தும் வகையில் பெரியவர்கள் நடந்து கொள்ள வேண்டும்.

எத்தனையோ ஆண்கள், திருமணத்திற்கு மூன்று வாரங்கள் முன்பு என்னிடம் வந்து, தங்கள் பயத்தை வெளிப்படுத்துகிறார்கள். சொல்லப்போனால் பெண்களைவிட ஆண்களுக்குத்தான் திருமணம் குறித்த பயம் அதிகம். ஏனெனில், அவர்களை நாம் தயார்ப்படுத்துவதேயில்லை. தன் மென்மையான உணர்வுகளை வெளிப்படுத்தக் கூடாது என்பது சட்டம்போல் இருக்கும் நம் சமுதாயத்தில் எதையும் வெளிப்படுத்தத் தெரியாமல் நிற்கிறான் ஆண். இப்படி மூடியே வைத்த பழக்கத்தில், திருமணம் குறித்த பயம் பலவிதங்களில் அவனைக் குழப்பவாதியாக்குகிறது.

தன் தாயைப் பார்த்தே முக்கியமாக மனைவி குறித்த எதிர்பார்ப்பை உருவாக்கிக் கொள்கிறான் அவன். தந்தையைப் போல் தானும் மனைவியைக் கைக்குள் போட்டுக் கொள்ள வேண்டும் என்றோ, அல்லது அதை அடியோடு வெறுத்து சிறந்த தோழியாக அவளை நடத்தவேண்டுமென்றோ நினைக்கலாம்- அது அந்த ஆணின் இயல்பைப் பொறுத்தது. இதை மீறி, முழுமையாகத் தன் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ள வரும் மனைவியிடம், தன்னைப் புரிந்து கொள்வாளா என்ற பயம் அவனுக்கு நிறைய உண்டு. அவனுடைய எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றவாறு சிலவேளைகளில் மனைவி இல்லாமல் போனால், அவன் தடுமாறுகிறான். பெண்ணாக இருந்தால் அழுவாள், வேதனைப் படுவாள். முழுமையாக வெளிப்படுத்தி விடுவாள். ஆனால், ஆண் அழுது, வேதனைப் பட்டால் தன் 'ஆண்' நிலையிலிருந்து கீழிறங்கி விடுவதாக எண்ணி விடுவான். இங்கு அவனிடம் வெளிப்படுவது ஆத்திரம். தன் கோபத்தை, எதிர்பார்ப்புப்படி நடக்காததால் ஏற்படும் வேதனையை ஆத்திரமாகவும் சில வேளைகளில் தேவையேயில்லாத சம்பந்தமேயில்லாத நடவடிக்கைகளாலும் காட்டுவான்.

இங்கு ஒன்றைக் குறிப்பிட வேண்டும். தன்னால் உடலளவில் தன் மனைவியை திருப்திப்படுத்த முடியுமா என்ற சந்தேகம் ஆணிடம் நிறையவே உண்டு. தான் திருப்திப் படுத்தாவிட்டால் அவள் தன்னைவிட்டுப் போய்விடுவாளோ என்ற பயமும் சேர்ந்து கொள்கிறது.


மொத்தத்தில், ஆணுக்கும் பெண்ணைப் போலவே அதிகமான எதிர்பார்ப்புகள், பயங்கள் எல்லாம் உண்டு. ஆனால், சமுதாய வளர்ப்பு முறையின் காரணமாக, அவன் வெளிப்படுத்தத் தெரியாதவனாக, முடியாதவனாக இருக்கிறான். திருமணம் குறித்த கூடுதல் அக்கறை, வெளிப்பாடு, புரிந்து கொள்ளச் செய்தல், அறிவுறுத்தல் என்று இவற்றை ஆணுக்கும் பெரியவர்கள் அளித்தால், அவன் மனதால் குழம்பாமல் அவசர கோலத்தில் அடிபடாமல் இயல்பாகத் திருமணத்தைத் திறந்த மனத்துடன் எதிர்நோக்கும் நிலையில் இருப்பான்."

சமீபத்தில் திருமணமாகப் போகும் இரண்டு ஆண்களைக் கேட்டோம். அவர்கள் சொன்னது-

அ. முரளீதரன் (உதவிப் பொறியாளர், நீர்வளத்துறை, பொதுப்பணித்துறை, சென்னை)

"திருமணம் என்றதும் மூன்று விஷயங்களை வரையறுத்துக் கூறுவேன். ஒன்று, திருமணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர் என்பதை நான் முழுமையாக நம்புகிறேன். ஒவ்வொரு கணவனும் மனைவியும் தங்களோடு தங்கள் தலைமுறை முடியாமல், உலகில் என்றென்றும் நிலைத்திருக்கும் வகையில் குழந்தைகளை விட்டுச் செல்கின்றனர். சமுதாயத்தின்பால் அவரவர்க்கு இருக்கும் கடமைகளில் மிகப் பெரிய கடமை சிறந்த குழந்தைகளை உருவாக்கித் தருவதாகும். பிள்ளை வளர்ப்பு என்பது அவ்வளவு முக்கியமானது.

இரண்டாவது, திருமண வாழ்வை எப்படி எடுத்துச் செல்வது என்பது. கணவன்-மனைவி இருவருமாக இணைந்து ஒருவருக்கொருவர் அனுசரித்து, புரிந்து கொண்டு, விட்டுக் கொடுத்து வாழ்க்கையை இனிமையாக ஆக்கிக் கொள்ள முயல வேண்டும். இது மிக



முட்டைக் கோஸ் சாறு 'பெப்டிக் அல்சர்' நோய் உள்ளவர்களுக்கு, மிகச் சிறந்த மருந்தாகும். பற்கள், எலும்பு, தலைமுடி ஆகியவற்றின் வளர்ச்சிக்கும் பெரிதும் உதவுகிறது.

- ஆர். லட்சுமி

முக்கியமானது. ஏனெனில், இந்தப் புரிந்து கொள்ளல் இல்லையென்றால் வாழ்க்கை குழப்பமானதாகிவிடும். இரண்டு பேரும் ஒரே நேர்க்கோட்டில் சிந்திக்க வேண்டும் என்ற அவசியமில்லை. ஆனால், மற்றவர் சிந்தனையைப் புரிந்து கொண்டு, நல்ல, இனிமையான வாழ்விற்கு எது தேவை என்பதை உணர்ந்து நடக்க வேண்டும்.

மூன்றாவது அன்பு. ஒருவர் மேல் ஒருவர் வைத்திருக்கும் காதல். இன்றைய திரைப் படங்களில் காட்டப்படும் மேலோட்டமான காதல் அல்ல இது. இது உணர்வுபூர்வமான, ஒருவரை ஒருவர் ஆழமாக விரும்புகின்ற, எல்லா முரண்பாடுகளையும் மீறிய ஆழமான காதல். இதுதான் திருமண வாழ்வை நன்றாக எடுத்துச் செல்லவும், சிறந்த குழந்தைகளை உலகிற்குத் தரவும் ஆதாரமாக அமைவது. இதைக் கணவனும் மனைவியும் மிக அழுத்தமாகப் பிடித்துக் கொள்ள வேண்டும்.

இது என் எதிர்பார்ப்பு என்பதைவிட நான் வாழ்வைப் பார்க்கின்ற கோணம், அதைச் செலுத்த விரும்பும் முறை என்று கூற வேண்டும். இதைப் புரிந்து கொள்ளும் மனைவி அமைந்தால் மிகுந்த மகிழ்ச்சி. இல்லையென்றால் மெதுவாக இதைப் புரிந்து கொண்டு, பொறுமையாக அனுசரித்துச் செல்லலாம். மனைவியை மட்டும் அனுசரிக்கச் சொல்லி என்ன பயன்? அவரால் முழுமையாக இறங்கி வர இயலவில்லை என்றால், நான் அவர் நிலைப்படி இறங்கிப் புரியவைக்க முயற்சிப்பேன். இது ஒன்றும் பெரிய விஷயமே இல்லை."

மே. முருகந்தன்– வழக்கறிஞர்

"திருமண வாழ்க்கைக்கு மிக முக்கியம் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் புரிந்து கொள்ளும் இயல்பும்தான். கணவன், மனைவி இருவருமே அவரவர் நிலையி லேயே–விருப்பு வெறுப்புக்களைப் புரிந்து கொண்டு, அவர்கள் ஆளுமையை எந்த விதத்திலும் சிதைத்துக் கொள்ளாமல் வாழ வேண்டும்.

திருமணம் என்பது ஒரு புதிய அனுபவம். இந்தப் புதிய அனுபவம் இனிமையானதாக இருக்க, மனைவி ஒரு நல்ல தோழியாகவும் இருக்க வேண்டும். துன்பங்களைப் பகிர்ந்து கொள்ளும் நெருங்கிய ஆத்மாவாக, தவறு செய்தால் சுட்டிக்காட்டிக் குட்டுபவராக, எப்போதும் ஆறுதலாகத் துணை நிற்பவராக இருக்க வேண்டும். உரிமைக்கும் கடமைக்கும் இடையில் நடக்கும் போராட்டங்களால் பலருடைய வாழ்க்கை நரகமாவதை இன்று நாம் பார்க்கிறோம்.

தன் தனித்தன்மையை வைத்துக் கொண்டு, உரிமையை நிலைநாட்டி, கடமையைத் தவறாது செய்யும் மனைவியால் கணவனையும் குடும்பத்தையும் மகிழ்ச்சியுடன் வைத்திருக்க முடியும்.

என் மனைவி, என்னை மட்டுமே கவனித்துக் கொள்ளாமல் என் தாய்–தந்தையையும் கவனிக்க வேண்டும். அதற்காக, இதை ஒரு கட்டளையாக்க மாட்டேன். இருபத்தெட்டு வருடங்களாக தாய்–தந்தையர் வளர்ப்பிலுள்ள என்னாலேயே அவர்களை முழுமையாகப் புரிந்து கொண்டு நடக்க முடிவதில்லை எனும்போது புதிதாக வந்தவரால் அதுவும் வேறு ஒரு குடும்பச் சூழலிலிருந்து வந்தவரால் உடனடியாக எப்படி அனுசரித்துப் போக முடியும்? அதனால், மனைவியைப் பெரிதாகக் குறை கூற மாட்டேன். ஆனால், தன்னுடைய குடும்பம் என்று என் குடும்பத்தோடு மனதால் ஒன்றிப் போனால் அதைவிட மகிழ்ச்சி வேறென்ன இருக்க முடியும்!

'என் மூச்சில் நீ வாழ்ந்தால் முதுமை ஆனந்தம்' என்ற பாடல் வரி எனக்கு மிகவும் பிடிக்கும். நாம் வாழ மூச்சு எவ்வளவு அவசியம்? வாழ்க்கைத் துணை அந்த அளவிற்கு முக்கியமான உறவு என்பதை இருவரும் உணர வேண்டும்.

உண்மையைச் சொல்லப் போனால், நான் விவாகரத்து வழக்குகளைக் கையாள்பவன். என் திருமண வாழ்க்கையைத் தொடங்கும் முன்னரே, குடும்ப வாழ்வின் பிரச்சினைகள், வேதனைகள், குழப்பங்கள் என்று துன்ப நிகழ்வுகளை அதிகமாக தினம் தினம் பார்க்கிறேன். ஒருயிராக வாழ வேண்டிய கணவனும் மனைவியும் வேஷம் போட்டு போலித்தனமாக வாழும் நிலையை நேரடியாகச் சந்திக்கிறேன். திருமணம் பற்றி சாதாரணமாக எல்லோருக்கும் இருக்கும் பயம் எங்களைப் போன்றவர்களுக்குச் சற்று அதிகமாகவே இருக்கும். பேசிவிடுவது மிகச் சுலபம். எதிர்பார்ப்புகளை நல்ல வகையில் கொண்டு செல்வது நம் நடவடிக்கைகளில்தான் இருக்கிறது."

பேட்டி : **மு. சுப்புலட்சுமி**

பொன் மொழி :
"இயலாமையால் தோற்றவர்களை விட, முயலாமையால் தோற்றவர்களே அதிகம்"
தகவல் : மா. உலகநாதன்

வாழ்க்கைத் வாழ வைப்பதற்கே...

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே குழந்தை எப்படியெல்லாம் உண்டாகிறது என இன்றைய மருத்துவர்களாகிய நாங்களும் புரிந்து கொள்ள முடியாது நிற்கும் அளவிற்கு எழுதி வைத்திருக்கிறார் திருமூலர். அதைப் பற்றி இன்றைய மருத்துவக் கருத்துக்களோடு ஒப்பிட்டு எழுதி வரும் என்னை ஆசிரியர், "இந்த மாதம் திருமணம் பற்றிய பல்நோக்குச் சிறப்பிதழாச்சே. அதைப் பற்றித் திருமூலர் என்ன சொல்றார் பாருங்களேன்" என்றார். அதுவரை திருமந்திரத்தில் குழந்தை உற்பவம் என்ற பகுதிகளை மட்டுமே மருத்துவரீதியாகப் பார்த்து வந்த நான் இதற்காக மொத்த திருமந்திரத்தையும் ஆராய வேண்டியதாக ஆயிற்று. என்னால் வியந்து வியந்து முடியவில்லை போங்கள். திருமந்திரக் கடலில் யாரேனும் மூழ்கி முழுமையாக அறிந்து கொள்ள முடியுமோ? எனக்குக் கிடைத்த சில முத்துக்களை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன்...



டாக்டர். ஜெயம் கண்ணன்

திருமணம் என்பது உடல் இன்பம் கிடைக்க மட்டுமே உரியது அல்ல. உயிர், மனம் எல்லாம் இணைந்தது. அதற்காக உடல் என்பது கேவலமானது அல்ல. அதுவும் மிகவும் போற்றத்தக்கதே என்பது திருமூலரின் ஆணித்தரமான கருத்து. ஆனால் அதனை எப்படிப் போற்ற வேண்டும் என்பதுதான் இன்றைய நாகரிக மாயையில் சிக்கியிருக்கும் நாம் தெரிந்து கொள்ள வேண்டியது. உடலும் உயிரும் கூடி வாழ்வதே வாழ்வு. உடல் சிதைந்த பின் பயன் பெறாது. உடலைப் பேணுவதில் தவறேயில்லை. உடலுக்குத் தேவையானவற்றை அந்தந்த காலத்தே அமைத்துக் கொள்வதும் தவறல்ல.

குழந்தைப் பருவத்தில் தாய் தந்தையர் தன் குழந்தையின் உடலையும் உள்ளத்தையும் மிக அருமையாக போற்றி வளர்க்கின்றனர். தற்காலத்தில் பெற்றோர் 'என் குழந்தைக்கு இந்த போஷாக்கு நல்லது', 'என் குழந்தைக்கு இந்த டிரஸ் அழகாக இருக்கும்' என்று பார்த்துப் பார்த்துச் செய்கிறார்கள். சிறு பருவத்தில் பெஸ்ட் ஸ்கூல் எது என்று தேடிப் பிடித்து, நாட்கணக்கில் இரவு பகலாக கியூவில் நின்று

எல்.கே.ஜி.யில் சிறந்த பள்ளியில் சேர்த்து அறிவை வளர்க்கிறார்கள். குழந்தை விரும்பும் விளையாட்டுகளில் ஆர்வம் காட்டி ஊக்கம் கொடுத்து உடலையும் அறிவையும் சேர்த்து வளர்க்கிறார்கள்.

வாலிபப் பருவத்தில் ஆண் பெண் இருவரும் தனக்குத் தேவையானவற்றைத் தானே தேடிப் பெறத் துவங்குகின்றனர். பெற்றோரது அறிவுரைகளும் சீர்செய்யும் பணியும் தொடருகிறது. திருமணம் என்பது இந்தப் பருவத்தின் ஒரு முக்கிய நிகழ்ச்சி. முன்பின் அறிந்தோ, அறியாமலோ ஆணும் பெண்ணும் மனதாலும் உடலாலும் சேரும் இந்தச் சம்பவம் அடுத்த தலைமுறைக்கான ஆரம்ப நிகழ்ச்சி. இவர்கள் இருவருமாகக் கழிக்கும் இந்த இளமைக் காலம் எப்படி அமையும் என்பது பற்றி பல்வேறு கருத்துக்கள் உள்ளன. பிறகு வரும் அந்திம காலத்தினை அனேகமாக ஆன்மீக வழியிலோ, அமைதியாக தானுண்டு என்ற நிலையிலோ கடத்திச் செல்ல வேண்டும் என்பது ஒரு எழுதப்படாத மரபாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.

''தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகமும்
... ஊன் பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்''

வெளியே பரவியுள்ள பொருளே உடம்புக்குள்ளும் மறைந்து நிற்கிறது. இதைக் காண உரிய வழி - இந்த உடம்பின் உணர்வைக் கொண்டு உள்ளும் புறமும் இரண்டற்ற பாவனையில் தியானிப்பதே ஆகும். இதுகுறித்து உபநிஷதமும்

"தகத்ரஸ்ய ஸர்வஸ்ய
தது ஸர்வாஸ்யாஸ்ய யாஹயத''
என்கிறது.

உண்ணாது - உறங்காது - உடலுக்குத் தேவையானவற்றைப் பெறாது இருப்பின், உயிர் உடலை விட்டு நீங்குமே அன்றி வேறெந்த பயனும் கிட்டாது. சாப்பிடுவதைப் பற்றியும் தூங்குவதைப் பற்றியும் அதிகமாகப் பேசப்படுவதில்லை.

"உடலுக்குத் தேவை என்றாலே பாலியல் இன்பம் என்று மட்டுமே நினைத்து, Do's & Dont's அதிகமாக எழுப்பப்பட்டு வருகிறது. வாலிபப் பருவத்தில் எது தவறு, எது சரி என்று புரியாமல், விடை தேடி அந்தப் பருவத்தினர் எல்லாவற்றையுமே ஆவலோடு அனுபவிக்க முயலுகிறார்கள்.

உடம்பினைப் பேணுவது தவறில்லை. ஆனால் எப்படிப் பேண வேண்டும்?

"உடம்பினை முன்னம்
இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன்
கோயில்கொண்டான் என்று
உடம்பினை யானிருந்து
ஓம்புகின்றேனே"


என்று திருமூலர் கூறுகிறார்.

ஆன்மீக வாழ்வினால் ஒருவருடைய வாழ்க்கை மேம்பாடு அடைகிறது என்பது எல்லோரும் அறிந்த ஒன்று. இல்லற வாழ்வில் சரியாக இருந்தாலும் இந்த மேம்பாடு கிடைக்கும்.

"மொழிந்தது மூவர்க்கும் நால்வர்க்கும் ஈசன்
ஒழிந்த பெருமை இறப்பும் பிறப்பும்"

என்னும் பாடலில் "மூவர்க்கும்" என்பது சிவயோக மாமுனி, பதஞ்சலி, வியாக்கிர பாதர் ஆகிய மூவரைக் குறிக்கிறது. சிவபெருமான் இவர்களுக்கு உலகுடன் இருந்து உலகுக்கு அருளும் நெறியை உணர்த்தினார்.


இல்லறம் என்பதற்கு திரு.வி.க. அழகாக விளக்கம் கொடுத்துள்ளார். "இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தல், இதில் திருமணம், பிள்ளைப்பேறு, அன்பு, விருந்தோம்பல், ஒழுக்கம், ஈகை, வாய்மை ஆகியவை யாவும் சேர்த்து பயணிக்க வேண்டிய தாயகமே



**ஒருவன் தோற்றுவிடுவோமோ
என்று தயங்கிக்
கொண்டிருக்கும்போது
நிறைய தோல்விகள் கண்ட
ஒருவன் வேகமாக முன்னேறிக்
கொண்டிருக்கிறான்.
– ஹென்றி சி. லிங்க்
தகவல் : பி. காந்தி**

நீங்கள் இந்த அவலத்தை பிரசுரித்தே ஆக வேண்டும். டி.வி.யில் அடிக்கடி மிகவும் சகிக்க முடியாத, நிறைய பேர் கண்டனம் செய்து கொண்டிருக்கிற ஒரு விளம்பரத்தைப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதைச் செய்வது புகழ்பெற்ற பிரிட்டானியா மில்கா பி. சில பள்ளி மாணவ, மாணவியர் கூட்டம். ஒருவன் பிஸ்கெட் மேலுறையை 'டர்' என்று கிழிக்க சைக்கிள் ஏறும் பெண் மாணவி தன் ஸ்கர்ட்தான் கிழிந்து விட்டது என்று அஞ்சி ஸ்கர்ட்டை இழுத்து சரிசெய்ய அந்த மாணவன் இவளிடம் பிஸ்கெட் நீட்ட அவளும் நாட்டிபாய் என்ற முறையில் செல்லமாகக் கன்னத்தில் தட்டுவதும்... சிறு வயதிலேயே இப்படி ஒரு வக்கிரமான ரசனையா? நிறைய பேர் இதைப் பார்த்துக் கொதித்துப் போய் இருக்கிறார்கள். பத்திரிகையை படித்தாவது உடனே அவர்கள் இதை நிறுத்தினால் தேவலை.

— லக்ஷ்மி



இல்லறம். இந்த இல்லறத்தை அமைக்கத் தேவையான திருமணத்தை களவு மண மாகவோ (காதல் திருமணம்) கற்பு மண மாகவோ அமைக்கலாம்.

இளைஞர்கள் காதல் கொண்டாலும் அது திருமணமாகும் போது பெற்றோரும் உற்றாரும் சூழ இருந்து நடத்தும் கற்பு மண மாக மாறுகிறது. எனவே அது பற்றி மட்டுமே திருமூலரால் பேசப்படுகிறது.

"வாசந்தி பேசி மணம் புணர்ந்தப்பதி"

என்ற வரி வருகிறது. (வாசந்தி என்றால் நிச்சயதாம்பூலம்)

உடலாலும் உள்ளத்தாலும் அளவான காமத்தையே இல்லறத்தில் ஈடுபடுபவர் மேற்கொள்ள வேண்டும் என்பதனை நமது நாட்டில் மட்டுமல்ல, சுதந்திரம் அதிகமாக உள்ள மற்ற நாடுகளிலும் கூட வற்புறுத்து கிறார்கள். எல்லாவற்றையும் குழந்தைகளுக் குச் சொல்லிக் கொடுக்க வேண்டியவள் தாய்தானே. ஆனால் அவளும் கூட காத லைப் பற்றி பாலியல் உணர்வுகள் பற்றிப் பேச முடியாது என்கிறார் திருமூலர்.

"மகட்குத்தாய் தன் மணாளனோடாடிய
சுகத்தைச் சொல்லென்றாற் சொல்லுமாறெங்ஙனே"

தாய் தன் மகளுக்குத் தான் கணவனோடு கண்ட சுகத்தைச் சொல்ல முடியுமா என் கிறார்.

தாயே சொல்லித் தராத ஒன்றினை மற்றவரும் பேசக் கூடாது, பாலியல் கல்வி வேண்டாம் என்று திருமூலர் கருதுகிறார் எனத் தெரிகிறது.

'தலையணை மந்திரம்' என்ற சொல்லை வெகு சாதாரணமாக எடுத்துக் கொண்டு விடுகிறோம். தாம்பத்திய உறவினால் கிடைக்கும் இன்பத்திற்காக, மனைவி கேட்கும் எதையும் கணவர் செய்வார் என்று கூறுவதன் மூலம் இந்த இன்பம் மிகைப்படுத்தப்படுகிறது. இது தவறு என்று உணர்த்தும் வகையில் சொல்வதோடு மட்டும் நிறுத்தாது இதன் அளவு எவ்வளவு குறைவு என்றும் கணக்கிட்டு,

"காயக் குழலி கலவியொடுங் கலந்து
ஊசித் துளையுறத் தூங்காது போகமே"

என்று குறிப்பிட்டு ஊசியின் துளையில் நுழையும் அளவுக்குச் சிறியது என்று கூறியுள்ளார். இந்த இன்பம் சிறிதாயினும் இது வாழ்க்கைக்கு அவசியம் என்று உணர்த்தும் வகையில் "தூங்காது போகமே" என்கிறார்.

சமீப காலமாக சிந்திக்க தூண்டப்பட்ட இன்னொரு விஷயம் ஓரினச் சேர்க்கை. இந்த உறவை வெறுத்து ஒதுக்கப்பட வேண்டும் என்று அன்றே "பெண்ணொடு பெண்ணை புணர்ந்திடும் பேதமை" என திருமந்திரத்தில் கூறப்பட்டுள்ளது.

அடுத்து குடும்பத்திற்குச் செல்வம் சேர்த்தலைப் பற்றியும் கூறியுள்ளார். இருக்க ஒரு இடம் (மாடம்) தேவை. மகிழ்ச்சியாக இருக்க பல இடங்களைச் சுற்றிப் பார்க்கச் சென்று வர வேண்டும். இதற்கு வாகனம் (சிவிகை) தேவைதான். அதிகமாக தருமம் (முக்கோடி) செய்ய வேண்டும். இந்தக் கருத்தையெல்லாம் திரட்டி,

மன்றத்தே நம்பி மாடம் எடுத்தது
மன்றத்தே நம்பி சிவிகை பெற்று

ஏறினான்

மன்றத்தே நம்பி முக்கோடி வழங்கினான்

என்று ஒரே பாடலில் வைத்தார்.

இப்படிச் செல்வமும் செல்வாக்கும் பெற்று வாழ்பவனுக்குத்தான் மனைவி அருகில் இருக்கும் போது இறப்பு வருகிறது.

"மையிட்ட கண்ணாளும் மாடும்
இருக்கவே
மெய் விட்டுப் போக
விடைகொள்ளுமாறே"

என்று இல்லற வாழ்க்கைக்கு பெருமை சேர்த்தார். ஆகவே இளமை நிலையானது அல்ல நீர்க்குமிழிதான். இளமை கழிந்து போகுமுன் அருமையான செயல்களைச் செய்து விட வேண்டும். முதுமையில் செய்ய உடல் இடம்கொடுக்காது. செல்வம் சேர்த்தல் தவறு அல்ல. முறையே செலவிட வேண்டும்.

உண்மை பேசுதல் வாழ்க்கைக்கு எவ்வளவு முக்கியம் என்பதை "அற்றது உரைக்கில்" என்று கூறிய பின் அதிக ஆசையினை அறவே ஒழிக்க வேண்டும் என்பதை அடுக்குத் தொடர் வைத்துச் சொல்கிறார்.

"ஆசையறுமின்கள் ஆசையறுமின்கள்
ஈசனோடாயினும் ஆசை யறுமின்கள்
ஆசைப்படப்பட ஆய்வருந் துன்பங்கள்
ஆசை விட விட ஆனந்த மாகுமே"

நோய்கள் பற்றி இல்லறத்தில் உள்ளவர்கள்தான் அதிகம் கவலைப்பட வேண்டும். அதனாலேயே தீமை தரும் செயல்களான மது, சிகரெட் போன்றவைகளை விட்டு விட வேண்டும். இருமலும் சோகையும் ஈளையும் வெப்பும் தரும் இடி நாகம் உரோணி கழலை தருமங் செய்வார் பக்கம் தாழகிலாவே"

இருமல், இரத்தச்சோகை, நெஞ்சு வலி, ஜுரம், நரம்புத் தளர்ச்சி நோய்கள், பாம்புக் கடி, கட்டிகள் போன்ற பல நோய்களைப் பற்றிக் குறிப்பாக உணர்த்தியுள்ளார்.

தருமம் செய்து வாழ வேண்டும் என்ற கருத்தை ஆணியடித்தாற்போல சொல்லுவது மட்டுமல்லாமல் இல்லையென்றால் நோய் பிடித்துக் கஷ்டப்படுவாய் என்று எச்சரிக்கிறார்.

ஆண் பெண் என்ற பாகுபாடு கூடாது ஆணும் பெண்ணும் சமமே.

"காண்பது ஆண் பெண் அலியெனும் கற்பனை" கடந்த வாரம் உச்சநீதி மன்றத்தில் இருபதாம் நூற்றாண்டு முடிவில், பெற்ற குழந்தைக்கு தகப்பன் மட்டுமல்ல தாயும் "கார்டியன்"தான். "Sex Descrimination" கிடையாது என்று கூறியது ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே தெளிவுபடுத்தியுள்ளார். இப்படி இன்றைக்கும் பொருந்தும் வகையில் நிறைய வாழ்வியல் செய்திகளை திருமந்திரம் முழுவதும் மந்திரமாகத் தெரிவித்துள்ளார் திருமூலர்.

கடைசியாக பிறக்கும் குழந்தை இன்டலிஜெண்ட் ஆக இருக்க வேண்டும், அழகாக இருக்க வேண்டும், ராஜாவாக வர வேண்டும். இவை எல்லா பெற்றோர்களும் விரும்புவது. இதற்கெல்லாம் முன்னோடி தாய் தந்தையே. அவர்களது ஒற்றுமை விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, அறிவாற்றல் இவைதான் பிறக்கும் குழந்தையின் அம்சங்களை நிர்ணயிக்கும்.

"பேரொத்த மைந்தன் பேரரசாளுமே"
"கொண்ட நல்வாயு இருவருக்கும்
ஒத்தெழில்
கொண்ட குழவியும் கோமளமாயிடும்"

எனவே மணவாழ்க்கையில் அடியெடுத்து வைக்கப் போகிறவர்கள்


வாழ்க்கை வாழ்வதற்கே என்று எண்ணாது

வாழ்க்கை வாழ வைப்பதற்கே என்று

எண்ணினாலே எல்லா சுகங்களும் கிடைத்து பேரின்பம் பெற்று பெருவாழ்வு வாழலாம்.

டப்பாக்களில் மாவுகளைக் கொட்டி வைக்கும் போது ஒரு சின்ன சீட்டில் அது என்ன மாவு என்பதையும் எழுதிப் போட்டு வைத்தால் கொஞ்ச நாள் கழித்து 'இது என்ன மாவு?' என்று யோசிக்க வேண்டாம். புதியவர்கள் வந்தாலும் உதவியாக இருக்கும்.

— சரோஜா சக்ரவர்த்தி



'கோபத்தில் எதிராளியின் மூக்கை அறுத்துவிட்டு, பிறகு சிரித்துக் கொண்டே ஒட்டினால் அது சேர்ந்துவிடுமா?' என்பதுண்டு. சிலர் விஷயத்தில் விவாகரத்துகூட அப்படியாகிவிடுவதுண்டு. யாருமே திடீரென்று விவாகரத்து என்ற முடிவுக்கு வந்துவிடுவதில்லைதான். ஆனாலும் ஒரு சிறு பொறி - சில சமயம் அலட்சியப்படுத்தினாலே அணைந்துவிட்டிருக்கக் கூடிய பொறி- ஊதி ஊதிப் பெரிதாக்கப்பட்டு விவாகரத்து என்ற வேதனைக்கு வழி வகுத்து விடுவதுண்டு.

விவாகரத்து செய்த சிலரை அணுகி ''உங்களுக்கிடையே கசப்பு எதனால் ஆரம்பித்தது? அது விவாகரத்து என்ற அதீத முடிவுக்கு வர ஏன் தூண்டியது?'' என்ற கேள்விகளை முன் வைத்தோம். 'அந்தரங்கம் புனிதமானதுதான்'. ஆனால் சிலரது வாழ்க்கை மற்றவர்களுக்குப் பாடமாக அமைந்து வழிகாட்டலாமில்லையா? நோக்கத்தைப் புரிந்துகொண்டு ஃப்ளாஷ்- பாக் செய்ய முன் வந்தனர் அவர்கள். ஆனால் தங்கள் பெயர் வெளியாகக் கூடாது என்று அவர்கள் நிபந்தனை விதிக்க, அதன் காரணங்களை உணர முடிந்ததால் அதற்குச் சம்மதம் அளித்து பெயர்களில்லாமலே விஷயங்களை அச்சிலேற்ற நாம் ஒப்புக் கொண்டோம்...



விரைவில் தீராது

விவாக(ரத்து) ஜோடிகள்

"சொல்லப் போனால் தப்பு என் மேலேதான் தொடங்கிச்சன்னு சொல்வேன். நாங்கள் மூன்று சகோதரிகள். என் அக்காக்கள் இரண்டு பேருக்கும் வாய்த்த கணவர்கள் சரியில்லை. அதாவது மனைவியைக் கொடுமைப் படுத்துபவர்களாக இருந்தாங்க. என் நெருங்கிய தோழிகளில் ஒருத்தி கணவனிடமிருந்து விலகி வாழ்ந்துக்கிட்டிருந்தா. இன்னொருத்தியின் கணவர் விபத்திலே காலமாயிட்டார். இப்படிப்பட்ட பின்னணியிலே கல்யாண வாழ்க்கைங்கிறது ஒரு நரகம்தான்ற எண்ணம் என் மனசிலே இருந்துக்கிட்டே

இருந்தது. போதாக் குறைக்கு என் சிநேகிதி "கணவன் எப்படியிருந்தாலும் அவனைப் பற்றி சரியாகப் புரிஞ்சுக்க ஒரு வருடமாவது ஆகும். அதனாலே அதுக்குள்ளே எந்தக் காரணம் கொண்டும் கர்ப்பம் தரிக்க சம்மதிக்காதே. ஏனென்றால் விவாகரத்து செய்து கொள்ள வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டால் கைக்குழந்தையோடு தனி வாழ்க்கை வாழ்வது கஷ்டமானது"ன்னு பலதடவைகள் எடுத்துச் சொன்னா. இந்த நிலையிலே கணவரைப் பற்றிய ஒரு நெகடிவ் சிந்தனையிலேயே நான் கல்யாணம் செய்துக்கிட்டேன். நிச்சயதார்த்தம் முடிந்து கல்யாணம் நடப்பதற்குள் அவர் என்னைத் தனியே சந்திக்க வந்த ஒரு வாய்ப்பையும், புத்திசாலித்தனமான என் சந்தேகங்களைக் களைந்து கொள்ளக் கிடைத்த தருணமாக நினைத்துப் பயன்படுத்திக் கொள்ளாமல், தவற விட்டேன்.

கல்யாணம் நடந்தது. முதலிரவிலேயே தனக்கு உடனடியாகத் தந்தையாக நிறைய ஆசை என்றார் என் கணவர். ஏற்கெனவே என் மனதில் கலந்து விட்டிருந்த நச்சவிதைகளால் என்னை இல்லறவாழ்வில் கட்டிப் போட வைக்கும் கருவியாகத்தான் குழந்தையை அவர் கருதுவதாக எண்ணினேன். இதை வெளிப்படையாகச் சொல்லவும் தயக்கம். அதேசமயம் நானாக ஏதாவது கருத்தடுப்பு மாத்திரையை உட்கொண்டால், அதனால் பக்க விளைவுகள் ஏற்பட்டு விடுமோ என்பது பற்றி பயம்.

விரைவில் நான் கருவுற்றேன். கணவரின் மீது குறிப்பிட்ட குறை என்று எதுவுமில்லை. மிகவும் சாத்விகமாகவே நடந்து கொண்டார். என்றாலும் "ஆண்கள் தொடக்கத்திலே இப்படித்தான் இருப்பார்கள். போகப் போகத்தான் அவங்க குணம் தெரியும்" என்றெல்லாம் என் சிநேகிதி கூறியதை அப்படியே நம்பினேன். தன் அம்மாவுக்கு சாதகமாக அவர் சில விஷயங்களில் பேசியதை ஏதோ எனக்குச் செய்த மிகப் பெரிய அவமானமாகக் கருதினேன்.

பலவிதங்களில் என் கணவரைக் குற்றம் கூறினேன். அவரை மட்டுமில்லை, அவர் சகோதரிகளை, அவர் நண்பர்களை, அவரது மேலதிகாரியை இப்படிப் பலரைப் பற்றியும் கேவலமாகப் பேசி அவரை நோகடிப்பது எனக்கு வழக்கமாகிப் போனது. கருவுற்ற இரண்டாவது மாதத்தில் அதைப் பற்றி அறிந்து கொண்டதும், கருக்கலைப்பு செய்து கொண்டுவிட வேண்டும் என்று எவ்வளவோ சொல்லியும் என் கணவர் அதற்கு ஒத்துக் கொள்ளவில்லை என்பதுதான் இந்த சாடிஸத்துக்குக் காரணம்.

கர்ப்ப காலத்தில் ஏற்பட்ட சின்னச் சின்ன உடல்நலக் குறைவுக்கெல்லாம் "உங்களால்தான், உங்களால்தான்" என்று கணவரை நான் குத்திக்காட்ட, மாமியாருக்கு ஒருநாள் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. "நீ என்ன உலகத்தில் இல்லாத அதிசயமாகக் குழந்தை பெற்றுக் கொள்ளப் போகிறாயா! என் மகனின் வாழ்க்கையே உன்னாலே நாசமாகிப் போயிடும் போலிருக்கே" என்று அவர் படபடக்க, அதையே அடித்தளமாகக் கொண்டு ஒரு பெரிய ரகளை செய்தேன். அது என்ன என்பதை இங்கே சொல்ல என் நாக் கூசுகிறது.

அதைத் தொடர்ந்து என் பிறந்த வீட்டில் என் கணவரைப் பற்றி இல்லாததும் பொல்லாததும் கூறினேன். அதில் சிலவற்றையாவது அவர்களும் நம்பத் தொடங்கினார்கள். இரு தரப்பிலும் கைகலப்பு வரை சென்றது. பிறகு விவாகரத்து என்று முடிவானது. அப்போதுகூட என் வாழ்க்கையில் அது உண்டாக்கக்கூடிய வெற்றிடத்தைப் பற்றி யோசிக்காமல், விவாகரத்தால் அவருக்கு எவ்வளவு அவமானம் என்றே எண்ணி மகிழ்ச்சி பட்டேன்.

இப்போ விவாகரத்து ஆகிவிட்டது.



தென்னைக்கீற்று மற்றும் பிளாஸ்டிக் பேப்பரில் வடாம் பிழியும் முன்பு ஒரு சிறு கிண்ணத்தில் கொஞ்சம் எண்ணெய் + தண்ணீர் கலந்து சிறிய துணியால் தட்டியை பிளாஸ்டிக் பேப்பரை துடைத்து வடாம் பிழிந்தால் வெய்யிலில் காய்ந்த பின் தட்டியில் ஒட்டாமல் வடாம் தனியாக வந்து விடும்.

– என். விஜயலட்சுமி



பக்கோடா செய்யும்பொழுது மொற மொறப்பாக இருக்க வேண்டுமானால் மாவைக் கலக்கும்போது சிறிதளவு நெய்யும், உப்பு போட்ட தயிரையும் கலந்து கொள்ள வேண்டும்.

— திருமதி. பிரகாசம்

ஜீவனாம்சம் கிடைத்து விட்டது. அப்பாவைப் பற்றி என் எட்டு வயது மகள் கேட்கும்போதெல்லாம் எதையோ சொல்லி சமாளிக்கிறேன். இதே ஊரில் உள்ள தன் அப்பா யார் என்பது அவளுக்குத் தெரிந்து விட்டதால், அவர்கள் ஒட்டிக்கொண்டு விடுவார்களோ என்று பதறுகிறேன். அதேசமயம் என்னால் அவரோடு ஒட்டிக் கொள்ள முடியாது என்கிற உண்மை சுடுகிறது (கணவர் இன்னொரு திருமணம் செய்து கொண்டுவிட, அந்த மணவாழ்க்கை வெகு சிறப்பாக நடப்பதாகக் கேள்விப் பட்டேன்)

இதில் 'தங்கள் மகளின் வாழ்க்கையைக் கருதி' என் சிநேகிதியும், அவளது கணவரும் மீண்டும் ஒன்று சேர்ந்த நிகழ்ச்சியும் நடந்தது! ஊம், யாரைச் சொல்லி என்ன பயன்? யதார்த்தமாக யோசிக்கத் தெரியாதது, கோபத்தில் உண்மையைக் கண்டுகொள்ள மறையவிட்டது இப்படிப்பட்ட காரணங்களினால் என் வாழ்க்கை பாழாகி விட்டது.''

"அமெரிக்காவில் வாழும் விஞ்ஞானியான எனக்கு நெருங்கிய உறவு என்பது என் வயசான அம்மா மட்டுமே. பெண்ணுக்கு காது கேட்காது என்பதைத் தெரிவிக்காமலே (காதில் 'இன்விசிபிள் ஹியரிங் எய்ட்' வைத்திருந்தாள்) கல்யாணம் செய்து வைத்து விட்டார்கள். அவளும் கம்ப்யூட்டர் கல்வியெல்லாம் படித்தவள் என்பதால் அமெரிக்காவில் வேலை கிடைத்தது. கொஞ்சம் கொஞ்சமாகத் தன் பெற்றோரையும் அமெரிக்காவுக்கு அழைத்துக் கொண்டு வந்துவிட்டாள். எல்லாவற்றையும்விட சோகம் என்னவென்றால், ''எனக்குக் குழந்தை வேண்டாம். தவிர எனக்கு உடலுறவிலும் நாட்டமில்லை'' என்று அவள் கூறியதுதான்.

மற்றபடி அவள் எந்தவிதத்திலும் மனம் நோகும்படி நடந்து கொள்ளவில்லை. என்றாலும் ஒரு ஆடவனுக்கு இது பெரிய விஷயமில்லையா? ''சுகம் தேவையென்றால் நீங்கள் வேறு வழிகளையும் பார்த்துக் கொள்வதில் எனக்கு ஆட்சேபணை இல்லை'' என்றாள்! மனவியல் மருத்துவர்களிடம் ஆலோசனைக்கு வரவும் மறுத்தாள். அதை வலியுறுத்தியபோது ''விவாகரத்து வேணா வாங்கிக்குங்க'' என்றாள்.

மாதாமாதம் எக்கச்சக்கமாக இப்போது ஜீவனாம்சத்திலேயே கழிகிறது. அவளென்னவோ அமெரிக்காவிலேயே எந்த பாதிப்பும் இல்லாதவள் போலதான் வாழ்ந்து வருகிறாள். என் கேள்வி இதுதான். உடலுறவில் நாட்டமில்லாத ஒரு பெண் எதற்காகத் திருமணம் செய்து கொள்ள வேண்டும்? அப்படியே ஏதோ மன பயம் என்றாலும் அதற்கான சிகிச்சை எடுத்துக் கொள்ள ஏன் தயங்க வேண்டும்?

என்னைப் பொறுத்தவரை விவாகரத்து என்று முடிவுக்கு நான் வந்ததில் எந்தத் தவறுமில்லை என்றே நம்புகிறேன். மறுமணம் செய்து கொள்ளும் ஐடியாவும் இருக்கிறது.''

"தெரிந்தவர்களெல்லாம் ஆச்சரியப்படுகிறார்கள் பையனும், பெண்ணும் ப்ளஸ்-டூ படிக்கும் வயதில் நான் விவாகரத்துக்கு மனு செய்திருப்பதற்காக. நாங்கள் செய்து கொண்டது காதல் திருமணம் என்பதால் கூடுதல் ஆச்சரியம். என்ன செய்ய, காதலின் போது சில விவரங்கள் தெரிவதில்லையே.

என் கணவருக்கு வயதான பெற்றோர்கள். என்னிடம் நிறையப் பாசம் கொண்டவர்கள். திருமணமான சில வருடங்களில் என் கணவரின் குடிப்பழக்கம் அதிகமானது. அதைத் தடுத்ததால் என்னை விதவிதமாக அவமானப் படுத்தினார். ''சமையல் சரியில்லை. வீட்டை சரியாக

மேடையில் சாஸ்திரிகள் சொன்ன அட்வைஸ்

நெய்வேலியில் எனது உறவினர் ஒருவரின் திருமணத்திற்கு சென்று இருந்தேன். முகூர்த்தம் முன்பு, திருமணம் செய்து வைக்கும் சாஸ்திரிகள் மேடையிலிருந்து எழுந்து,

"இன்னும் சிறிது நேரத்தில் மணமகன் தாலி கட்டப் போகிறார். நாம் பல வேலைகளை விட்டு, பல மைல் தூரத்திலிருந்து மணமக்களை வாழ்த்த வந்திருக்கிறோம். தாலி கட்டும்போது, அனைவரும் முன்னே மேடைக்கு அருகே வந்து பூ, அட்சதையை, உங்கள் குல தெய்வங்களை வேண்டிக்கொண்டு மணமக்களின் மீது



போடுங்கள்.

உங்கள் இருக்கையிலிருந்து கொண்டே, பூக்களைப் போடுவதால், அது எங்கள் தலையில்தான் விழுகிறது. உங்கள் ஆசிர்வாதத்தால் நாங்கள் வாரத்திற்கு மூன்று, நான்கு திருமணங்கள் செய்து வைத்து மிக நன்றாக இருக்கிறோம். ஆகவே, மணமக்களை எல்லோரும் மனமார வாழ்த்துங்கள்".

என சிம்மக் குரலில் சொல்ல, திருமணத்திற்கு வந்திருந்த அனைவரும், தாங்கள் பேசிக் கொண்டிருந்த மற்ற விஷயங்களை எல்லாம் விட்டு விட்டு சாஸ்திரிகள் சொன்னபடியே, மேடைக்கு அருகே சென்று பூ போட்டு ஆசிர்வதித்தார்கள். இதுபோன்று மற்றவர்களும் சாஸ்திரிகளை வாழ்த்துவதை விட்டு விட்டு, மணமக்களை வாழ்த்தலாமே!

— போரூர் ஆர். சீதா

வைத்துக் கொள்ளத் துப்பில்லை" என்றெல்லாம் தொடங்கி, ஒரு கட்டத்தில் எனக்கும் என் அலுவலகத்தில் உள்ள சில ஆண்களுக்கும் தொடர்பு உண்டு என்றுகூட சொல்லத் தொடங்கினார்.

இதை என் குழந்தைகளே ஓரளவு நம்பத் தொடங்கியதுதான் என் பெரிய வருத்தம். என்ன செய்ய, மட்டமான கணவனானாலும் அவர் அவர்களைப் பொறுத்தவரையில் ஒரு நல்ல அப்பாவாக நடந்து கொண்டிருக்கிறாரே! முதலிலேயே பிரிந்திருக்கலாமே என்று நீங்கள் கேட்கலாம். அவரது வயதான பெற்றோர் அதைத் தாங்க மாட்டார்கள். அவர்களுக்கு நான் இது குறித்து சத்தியம் செய்து கொடுத்திருந்தேன். அவர்கள் இரண்டு பேருமே சமீபத்தில் ஒரே வருடத்தில் இறந்துபோக, அதற்குப் பிறகு விவாகரத்துக்கு விண்ணப்பித்திருக்கிறேன்.

'குழந்தைகளின் கல்யாணம் என்பது போன்ற காரணங்களுக்காகவாவது இதுவரை சகித்துக் கொண்டு போனவள் இனியும் அப்படியே இருந்துவிட்டுப் போகலாமே' என்று சிலர் கேட்கிறார்கள். வருங்காலத்தில் இது போன்ற நியாயமான காரணங்களுக்காக விவாகரத்து செய்து கொள்வதை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ள மாட்டார்கள் என்பது என் எண்ணம். அப்படியிருக்க, இந்த நரகத்தைத் தொடருவதில் எனக்குச் சம்மதமில்லை."

"ஒரு பெண் சுயமாக சிந்தித்தாலே அதைப் பல கணவர்களால் தாங்கிக் கொள்ள முடிவதில்லை என்பதுதான் உண்மை. என் புகுந்த வீட்டில் உள்ள பல குறைபாடுகளை நான் திருத்தியதில் மற்றவர்கள் எல்லாருக்கும் சந்தோஷம் - என் கணவரைத் தவிர! அவருக்கு எழுந்த தாழ்வு மனப்பான்மையை என்னால் போக்க வைக்க முடியவில்லை. "இதற்கெல்லாம் காரணம் நீ பார்த்துக் கொண்டிருக்கும் வேலைதான்" என்றார். அதனால் அதை விட வேண்டுமென்றார். அவரது சம்பளமே குடும்பம் நடத்தப் போதுமென்றாலும் சுயகாலில் நிற்பது அவசியமென்று எண்ணினேன் நான். விவாதம் தொடர்ந்தது. விவாகரத்தில் முடிந்தது. என் கருத்துகள் சரியானவைதான் என்றாலும் விவாக பந்தம் தொடர நான் இன்னமும் சில காம்பரமைஸ்களைத் தற்காலிகமாவது செய்து கொண்டிருக்கலாமோ என்ற சந்தேகமும் அவ்வப்போது வருகிறது. என்ன செய்ய, இப்போது டூ லேட்."

தொகுப்பு: ஜி.எஸ்.எஸ்

விட்டுக் கொடுத்தேன்! வாழ்கிறேன்

"விட்டுக் கொடுத்தேன் – வாழ்கிறேன்" என்ற தலைப்பில் எழுதச் சொன்னவுடன் "விட்டுக் கொடுக்கவில்லை. அதனாலேயே வாழ்ந்தேன்" என்று சொல்லத் தோன்றும் என் அனுபவங்களும் புதிதாக மணவாழ்க்கை தொடங்குபவர்களுக்கு வழிகாட்டிதான்.

என்னை பெண் பார்க்க வந்தபோது, எனது இன்றைய மாமியார் "மூக்கு குத்திக் கொள்ளவில்லையா?" என்றார். "எனக்குப் பிடிக்காது அதனால் குத்திக் கொள்ளவில்லை" என்றேன். என் பாட்டி, மற்ற உறவினர்கள், "பெண் திமிர் பிடித்தவள் போல் இருக்கிறது. அதனால் நமக்கு சரிப்பட்டு வராது" என்று சொல்லிவிடப் போகிறார்கள்" என்று பயந்தார்களாம். ஆனால் அங்கேயே பெண் பிடித்திருப்பதாகக் கூறி, நிச்சயதார்த்தத்திற்கு நாள் குறித்து சென்று விட்டனர். திருமணத்திற்குப் பிறகு, "பேச வேறு விஷயம் இல்லாததால் தான் மூக்குத்தி பற்றி கேட்டதாக மாமியார் சொன்னபோது, நல்லவேளை தேவையில்லாமல் பயந்து மூக்கு குத்திக் கொள்ளாமல் போனோமே என்று சந்தோஷம் பட்டேன்.



திருமணமான புதிதில், நான் எந்தத் தவறும் செய்யாதபோதும் சில சமயம் என் கணவர் கோபப்படுவது எனக்குப் புரியாத புதிராக இருந்தது. பிறகு விசாரித்ததில் அவருடைய அலுவலகத்திலோ, வேறு இடங்களிலோ ஏற்பட்ட ஏமாற்றம், மனவருத்தத்தின் வெளிப்பாடே அந்த கோபம் என்று தெரிய வந்தது. ஆனால் அதை அப்படியே பொறுத்துக் கொண்டு போவது என்பது சரிப்பட்டு வராது என்று தோன்றியதால், மனம் விட்டுப் பேசத் தீர்மானித்தேன்.

"இது போல் வெளி உலகத்தில் ஏற்படும் மனதிற்குப் பிடிக்காத, கசப்பான அனுபவங்களை என்னிடம் சொல்லி, பகிர்ந்து கொள்வதன் மூலம் மனதின் பாரமும் குறையும். நானும் உங்களுக்கு அனுசரணையாகவும், இதமாகவும் பேசவும், நடந்து கொள்ளவும் முடியும். அதை விட்டு கோபப்பட்டால், நானும் பதிலுக்குக் கோபமாக ஏதாவது சொல்லப் போய், அது குடும்பத்தில் சதா சண்டை சச்சரவை அதிகரிக்கத்தான் செய்யும்" என்று சொன்ன பிறகு அவரும் கொஞ்சம் கொஞ்சமாக தன் சுபாவத்தை மாற்றிக் கொண்டார்.



• இந்துமதி குடும்பத்தினருடன்.

ஒருமுறை என் மகனுக்கு ஒரு எதிர்பாராத 'சாலை விபத்து' ஏற்பட்டு மருத்துவமனை

யில் சேர்க்க வேண்டி இருந்தது. அங்கு உடனே 'எமெர்ஜென்ஸி ஆபரேஷன்' செய்ய வேண்டும் என்றதால், என் கணவர் வரும் வரை காத்திராமல், ஒப்புதல் கையெழுத்து போட்டுக் கொடுத்து விட்டேன். அவர் வந்து சேர்வதற்குள் ஆபரேஷன் முடிந்து விட்டது. மருத்துவமனை உள்ளே நுழைந்தவுடன், யார் இருக்கிறார்கள், என்ன நிலைமை என்பதெல்லாம் கூட கவனிக்காமல், மடமடவென்று பையனை சரியாக பார்த்துக் கொள்ளவில்லை என்று திட்ட ஆரம்பித்து விட்டார். அந்த நேரத்தில் நான் எதுவும் பேசவில்லை. ஆனால் மகன் பூரண குணம் அடைந்து வீடு திரும்பி, சகஜ நிலையில் இருக்கும் சமயத்தில் நான் சொல்ல நினைத்ததை சொல்லி விட்டேன்.

"குழந்தைக்கு அடிபட்டிருக்கும் சமயம், உங்களுக்கு இருப்பது போலவேதான் எனக்கும் மிகுந்த வேதனையும், மனவருத்தமும் இருந்திருக்கும். அந்த நேரத்தில் எனக்குத் தேவையாக இருந்தது ஆறுதலான, தைரிய மூட்டும் வார்த்தைகள்தானே தவிர குத்திக் கிழிக்கும் வார்த்தைகள் இல்லை. அதனால் இக்கட்டான சூழ்நிலையில் படபடத்து வார்த்தைகளைக் கொட்டாமல், அமைதியாக சூழ்நிலையை எதிர்கொண்டு, அந்த நேரத்தில் என் பங்கு என்ன என்பதைத் தெளிவுபடுத்தினால், எனக்கும் சரியாக செயல்பட அவகாசம் அளித்ததாகும்" என்று சொன்ன பிறகு, என் கணவரும் இனி அதுபோல் நடக்க முயற்சிப்பதாகக் கூறினார்.

சில வீடுகளில் நண்பர்கள்வந்திருக்கும் போது, மனைவியின் திறமையின்மையை விமர்சிப்பதை சிலர் நகைச்சுவையாகக் கருதுகின்றனர். தன் சுயகெளரவம் பாதிக்கப்படும் சமயங்களில், அதை சுட்டிக் காட்டி எதிர்காலத்தில் அது போல் நிகழாமல் தடுக்க மனைவிகள் முனைய வேண்டுமே ஒழிய, அந்த மனவருத்தத்தை மனத்திலேயே அடக்கி வைத்துக் கொண்டால் வாழ்வே நரகமாகி விடும்.

என்னைப் பொறுத்த வரையில், விட்டுக் கொடுக்கத் தேவையில்லாதவைகளை விட்டுக் கொடுக்காததினாலேயே நான் மகிழ்ச்சியாக வாழ்கிறேன் என்று பெருமிதத்துடன் சொல்லிக் கொள்கிறேன்.

— சித்ரா



எனக்கு தெரிந்த ஓர் அம்மாள் இருக்கிறார்கள். பெயர் பாக்கியத்தம்மாள். வயது 60க்கு மேல் இருக்கும். அவர்களுக்குத் திருமணமாகி 40 வருடங்கள் ஆகியிருக்கும். இவருக்கு மூன்று குழந்தைகள். இவர் குடும்பத்தைப் பிரிந்து கிட்டத்தட்ட 25 ஆண்டுகளுக்கு மேல் ஆகி விட்டது. நிரந்தரமாக பிரிவு ஏற்பட்டால்தான் மேற்கொண்டு குடும்பமாவது அழியாது இவரது பிள்ளைகளாவது நன்றாக வாழ்வார்கள் என்ற நம்பிக்கையில் குடும்பத்தைப் பிரிந்து வாழ்கிறார்.

இவர் தியாகத் தாய். மேலோட்டமாக பார்த்தால் புருஷன், பிள்ளைகளை பிரிந்து வந்து உயிரோடு 25 வருடமாக வாழ்கிறாளே எப்படித்தான் முடிகிறதோ? இவள் மனத்தில் அன்பே இருக்காதா? என்று என்னிடமே கேட்டவர் பலர். என் காதுபட திட்டியவர் பலர். இன்று அவர் மங்கையர் திலகம் என்றே தூற்றியவர்கள் வாயினால் போற்றப்படுகிறார்.

குழந்தைகளுக்காக இளம் வயதிலேயே குடும்பத்தைப் பிரிந்து வந்தாலும் ஒழுக்கம் கெடாது நெறி பிறழாது கடவுள் பக்தியுடன் வாழ்ந்ததால் குழந்தை வைத்தியம், பச்சிலை மருந்து கொடுத்தல், எளியவர்க்கு உதவுதல் குடலேற்றம் தட்டுதல், சுளுக்கு வலித்தல் இப்படி பல வகைகளிலும் எல்லோர்க்கும் உதவி வாழ்கிறார். ஒருநாள் இவர் எங்காவது போயிருந்தாலும் தேடி வருபவர் எத்தனையோ பேர்.

தாய் தந்தையில்லாத பாக்கியத்தம்மாளை அவரது பெரியப்பா (அப்பாவின் அண்ணா) (பிள்ளைகள் இல்லாதவர்) பராமரித்து வந்தார். காலம் மாற வளர்ந்து பெரியவளானார். (கறுப்பு நிறம், அழகில்லை, நாகரீகம் என்றாலே என்னவென்று தெரியாது எழுதப் படிக்கத் தெரியாது. தாய் தந்தையற்ற அநாதை, ஏழை, பொன், பொருள் கிடையாது. இதற்கு யார் காரணம்? அவரா? இல்லையே.



இவருக்குத் திருமணமும் நடந்தது. மாப்பிள்ளை அரசாங்க வேலை பார்ப்பவர். அழகு, சிவந்த நிறம், படிப்பு, நாகரீகம் எல்லாம் உண்டு.

ஏனென்று கேட்பாரில்லாமையால் அவர் அநுபவித்த கொடுமைகள் இன்னும் எத்தனை பக்கங்களில் எழுதினாலும் எழுத முடியாது. (அடி

உதை உட்பட) அவர் பெண்ணாக பிறந்ததைத் தவிர அவரின் தவறென்ன? (அவரது எல்லா குறைகளுக்கும் அவர் காரணமேயில்லை) பெண்ணாக பிறந்ததும் கூட அவர் தவறில்லையே. ஆனால் பிள்ளைகளை தகப்பனாரிடம் பாசம் காட்டி வளர்த்து விட்டார். இறுதியில் சேர்ந்து வாழ முடியாதென்ற நிலையில் கடைசி குழந்தைக்கு நாலு வயது இருக்கும் போதே நிரந்தரமாக (எதுவும் காசு, பவுன் பெறாமல்) தான் பிறந்த கிராமத்திற்கே வந்து இருந்து விட்டார். காலம் ஓடி விட்டது. பிள்ளைகள் தகப்பனார் இடமே வளர்ந்து திருமணம் செய்து கொண்டு நன்றாக இருக்கின்றனர்.



எந்த குழந்தையிடமும் இந்த அம்மாள் போகவில்லை. இவரது அண்ணன் பின்னாளில் தன்னாலான உதவிகளை செய்தார். இன்றும் செய்து வருகிறார். நான் இந்தம்மாவிடம் எப்படியம்மா பிள்ளைகளை உங்கள் கணவரிடம் விட்டுவிட்டு குழந்தைகளுக்காக உயிர் வாழ்கிறேன் என்கிறீர்கள்? என்றேன்.

"நான் இறந்து இருந்தால் என் கணவர் இரண்டாம் திருமணம் செய்து கொண்டிருப்பார். என் குழந்தைகள் எப்படி உயிர் வாழ முடியும்? இப்பொழுது நான் மட்டும்தான் கஷ்டப்படுகிறேன். நான் பெற்ற பிள்ளைகள் என் கண்பார்க்க சுகமாக உள்ளது" என்கிறார். (மனைவி உயிரோடு இருக்கிறார், மூன்று குழந்தைகள் யார் இரண்டாம் தாரம் தருவார்கள்?) அரசாங்க வேலை தவிரவும் முதல் மனைவி சட்டப்படி இருந்தால் மறுமணம் செய்ய முடியாது. இது சட்டம்.

இவர் வாழ்வு செத்தது போன்றதுதான். "நிரந்தரமாக பிரிந்தாலும் உயிரோடு வாழ்ந்தால் தான் தன் குழந்தைகள் நலம் பெறும் என்று வாழ்கிறார். குழந்தைகளை பிரிந்து வாழ்ந்தாலும் குழந்தைகளுக்காக வாழ்கிறார். 2) என்ன கொடுமை செய்தாலும் பிள்ளைகளுக்காக கணவருடன் சகித்து போயிருக்கலாமே என்று கேட்டேன். அவர் சொன்ன பதிலில் என் உயிரும் கூட உருகி கண்களில் நீராக பெருகிவிட்டது.

"கொடுமை செய்தால் அடித்தால் பொறுத்து வாழலாம். உன் முகத்தைப் பார்க்கக் கூட சகிக்கவில்லை. என் மனைவி என்று சொல்லவே வெட்கமாக இருக்கிறது. நீ தற்கொலை செய்து கொள், செத்துப் போ, எங்காவது ஓடிப்போ. இல்லையெனில் நான் உன்னையும் உன் பிள்ளைகளையும் சீரழிய விட்டு தற்கொலை செய்து கொள்வேன். உன்னைப் போல் கஷ்டப்படாமல் நீ பெத்த பிள்ளைகள் மேல் நலவாழ்வில் அன்பிருந்தால் செத்து விடு" என்று தினமும் தொல்லை. இந்த நிலையில்தான் இறந்து போனால் எல்லாம் போச்சு என்று ஜீவனாம்சம் வாங்காமல் யாரிடமும் உண்மையைக் கூற முடியாமல் நிரந்தரமாய் பிரிந்து விட்டார்.

அவர் தன் வாழ்வை இழந்து பிள்ளைகளை வாழவைத்து விட்டார். இந்த உண்மை கேட்கவே பயங்கரமாக உள்ளது. இதில் பொய்யில்லை. அவர் பட்ட கொடுமைகளை எழுத ஆரம்பித்தால் இந்த பேப்பரை என் கண்ணீர் நனைத்து விடும். நான் இப்பொழுது கூட தேம்பி தேம்பி அழுகிறேன். நான்தான் அவர் பெற்ற முதல் பெண்.

– வாசகி

வண்ண வண்ண கனவுகளுடனும், மனசு நிறைய பூரிப்பான கற்பனைகளுடனும், பதினெட்டு வயதில் இல்லற வாழ்க்கையில் அடியெடுத்து வைத்தேன். வீட்டில் செல்லப் பெண்ணாக, ராணி மாதிரி வளர்க்கப்பட்டாலும், புகுந்த வீட்டில் எல்லோரிடமும் மரியாதையாகவும், மனசு விட்டு கலகலப்பாக பழகி அவர்கள் பெண் மாதிரி நடந்து கொள்ள வேண்டுமென்று நினைத்த எனக்குக் கிடைத்த முதல் அடி; கர்வம் பிடித்தவள், படித்த திமிர், வாயாடி என்ற பட்டப் பெயர்கள்தான். தொட்டால் குற்றம், நின்றால் குற்றம், என் கணவருடன் பேசினால், சிரித்தால் குற்றம் என்று என் மாமியார் என்னை மனதால் நிறைய நோகடித்தார்கள்.



"கண்ணில் மை போட்டு மயக்குகிறாள் என் பிள்ளையை" என்று குற்றம் சாட்டியதால் மை போடுவதையே விட்டு விட்டேன்

என் கண்கள் மை மறந்து இருபத்து ஐந்து வருடங்களாகிறது.

இதற்கிடையில் குழந்தை உண்டானேன். வீட்டிலோ கடினமான வேலை. கர்ப்பப்பை வேறு 'வீக்'காக இருந்ததால், இருமுறை 'அபார்ஷன்' ஆகி விட்டது. அதோடு எப்போதும் விருந்தினர் வந்த வண்ணம் இருப்பார்; வேலையும் அதிகம். உடல் வலியோடு, "இவள் குணத்திற்கு இவளுக்கு எங்கே குழந்தை பிறக்கப் போகிறது. இப்படி கலைந்துதான் போகப் போகிறது" என்று என் மாமியாரின் சாபம் வேறு மனதை நோகடிக்கும்.

திருமணமான ஒரு வருடத்தில் என்



சாதாரண தோசைக் கல்லில், தோசை வார்க்கும் போது, ஒட்டிக் கொண்டு சட்டுவத்துக்கு வராமல் சண்டித்தனம் பண்ணினால், தடுமாற வேண்டாம். மாவை வார்த்ததும், ஒரு அகலமான தட்டை வைத்து மூடி விடுங்கள். ஒரு நிமிஷம் கழித்து, தட்டை நீக்கிவிட்டு, எடுங்கள். ஒழுங்காக எழும்பி விடும். இம்மாதிரி சுடப்படும் தோசை, மிருதுவாகவும் இருக்கும்.

- டி.ஏ. ஆதிலட்சுமி

கணவர் எனக்கு ஒரு புடைவை வாங்கிக் கொடுத்து விட்டார். அதற்கு என் மாமியார் ஆடின ஆட்டம் இன்றும் நினைவை விட்டு அகலவில்லை. அவர், என் நாத்தனாருக்குப் புடைவை வாங்காமல் எனக்கு மட்டும் வாங்கியதே காரணம். அன்றிலிருந்து இன்று வரை என் நாத்தனாருக்கு வாங்கும் புடைவையின் விலையை விட கொஞ்சம் குறைத்துதான் எனக்கு வாங்குவார்.

என் பிறந்த வீட்டினர் என்னைப் பார்க்க வந்தால் அவர்கள் ஏன் வந்தோம் என்று நினைக்குமளவுக்கு அவர்களை வார்த்தையால் வதைப்பார் என் மாமியார். அம்மா மீது உள்ள அன்பு, பயம் காரணமாக என் கணவர், என் மீது எவ்வளவு அன்பிருந்தாலும், அம்மாவை எதிர்த்து ஒரு வார்த்தை கூட பேசமாட்டார். நிறைய சமயங்களில், 'நமக்கு ஏன் இந்த நரக வாழ்க்கை, நல்லவளாக நடந்து கொண்டாலும், என்னை கெட்டவளாகவே பாவித்து கொடுமை புரியும் என் மாமியாரிடமிருந்து பிரிந்து அம்மா வீட்டுக்கே சென்று விடலாமா' என்று தோன்றும்.

எல்லாவற்றையும் சமாளித்து எதிர் நீச்சல் போட்டு தன் ஸ்தானத்தை நிலை நிறுத்திக் குடும்பத்தை வழி நடத்திச் செல்பவள்தான் சிறந்த பெண்மணி என்று என் பாட்டி கூறுவார். "உன்னுடைய துன்பங்கள் சீக்கிரம் மறைந்து விடும்; உன்னுடைய பொறுமை, நல்ல குணங்கள் அவர்கள் புரிந்து கொள்வார்கள்; மனதைத் தளர விடாதே!" என்று எனக்கு இதோபதேசம் செய்வார்கள்.

நாளடைவில் கொஞ்சங் கொஞ்சமாக மாமியார் மாறினார். இன்று நான், ஒரு டாக்டர், இரு என்ஜினியர்களுக்குத் தாய். கல்வியிலும், நல்ல பண்பிலும் எல்லோராலும் போற்றிப் புகழும் வண்ணம் சிறந்த குழந்தைகளைப் பெற்றதற்கு நான் கடவுளுக்கு நன்றி செலுத்துகிறேன்.


இன்று நான், ஒரு அன்பான மனைவியாக, பாசமுள்ள தாயாக, சிறந்த மருமகளாக, நல்ல அண்ணியாக, ஓர்ப்படியாக துவேஷமில்லாத நாத்தனாராக, எல்லோரிடமும் நல்ல பெயர் எடுக்க நான் விட்டுக் கொடுத்தது என் இளமைக்கால எதிர்பார்ப்புகளை; மகிழ்ச்சியை, சராசரி பெண்ணின் ஆசைகளை என்றாலும் இன்று என் பேத்தி 'பாட்டி' என்று மழலையில் கூப்பிடும் பொழுது ஏற்படும் மகிழ்ச்சிக்கு முன்னே நான் விட்டுக் கொடுத்தது ஒன்றுமேயில்லை!

- சுசிலா பாரதி

மலரினும் மெல்லியது காமம்....

எனக்கு மணமாகி ஒரு வருடத்தில் ஒரு பெண் குழந்தை. அன்பான கணவன், அழகான குழந்தை என்று வாழ்க்கை இனித்தது. கணவருக்கு தனியார் நிறுவனத்தில் வேலை. வருமானம் கணிசமானது. மாலை 5 மணிக்கெல்லாம் வீடு திரும்புவார்; கருவுற்ற போதும் சரி, மற்ற நாட்களிலும் சரி 'ஈவினிங் வாக்', கோயில் என்று மிக மகிழ்ச்சியான நாட்கள்.

இச் சமயத்தில் அவருடைய மாமாவுக்கு முதல் குழந்தை பிறப்பிற்குப் பின் ஏழெட்டு வருடங்கள் ஆகியும் அடுத்து குழந்தை இல்லை என்பதைப் பற்றி ஒருமுறை பேச்சு வந்தது. தேவையில்லாமல் நான் என்னைக் குழப்பிக் கொண்டேன். 'நமக்கும் இப்படி ஆனால்?"



இப்ப தயங்கினா பின்னால தவிக்க வேண்டி வரும்.

வக்கீலிடமும், மருத்துவரிடமும் எதையும் மறைக்கக் கூடாது என்பது பழமொழி. உண்மையைச் சொல்லா விட்டால் நம் வழக்கை வக்கீல் சரியாக வாதிட முடியாது. அதுபோல் மருத்துவரிடம் உங்களுக்கு இருக்கும் பிரச்சனைகளை சொல்லத் தயங்காதீர்கள்.

குறிப்பாக பிறப்புறுப்புகளில் சீழ் வடிந்தாலோ, வீக்கம் இருந்தாலோ அல்லது புண், படை இருந்தாலோ, உடனே மருத்துவரை அணுகுங்கள். அது பால்வினை நோயின் அறிகுறியாக இருக்கக்கூடும். ஆனால் அதை எளிதில் குணப்படுத்தலாம்.

தயக்கம் காட்டினால், பால்வினை நோய் மூலம் எய்ட்ஸ் நோய் வரும் ஆபத்து அதிகரிக்கும். எனவே ஆரம்ப நிலையிலேயே சிகிச்சை பெற்று பால்வினை நோயை குணப்படுத்திக் கொள்ளுங்கள்.

இதற்காக சிறப்பு முகாம் நடைபெற உள்ளது. ஆகவே தயக்கத்தை விட்டு உங்கள் பகுதியிலுள்ள துணை சுகாதார நிலையத்திற்கு சென்று . சிகிச்சை பெற்றுக் கொள்ளுங்கள்.

பால்வினை நோயை எளிதில் குணப்படுத்த முடியும்.

தயக்கத்தை விடுவீர்! சிகிச்சை பெறுவீர்!

TNSACS

சுவாமி விளக்கின் திரியை, தூண்டி விடுவதற்கு, தீக்குச்சி, அல்லது வேறு குச்சியை உபயோகப் படுத்தும் போது, குச்சியின் சிலும்பலில் திரியின் பஞ்சு சிக்கிக் கொள்ளக் கூடும். இதனால், விளக்கு 'குளிர்ந்து' விடவோ, திரி கீழே விழுந்து விடவோ நேரிடலாம். இதைத் தவிர்க்க, 'பால்பாயிண்ட்' பேனாவின் மை தீர்ந்துபோன ரீபில் ஒன்றை உப யோகிக்கலாம். இதன் வழுவழுப்பான 'மெட்டல்' முனை திரியை லகுவாக தூண்டி விட உதவும்.

– டி.ஏ. ஆதிலட்சுமி





இப்படி பயம் துளைத்தெடுக்க இடைவெளி பற்றிக் கவலைப்படாமல் என் கணவரிடம் பேசி கருத்தொற்றுமை ஏற்படுத்தினேன். அவர் தயங்கினார். கடைசியில் என் பிடிவாதம் வெல்ல, நான் மீண்டும் கருவுற்றேன்!

இரண்டாவது குழந்தை பெண். சிசேரியன் செய்து பிறந்தது. அதன் பின் இருவருடங்கள் நவீன கருத்தடை சாதனங்களைப் பின் பற்றினோம். இரண்டு குழந்தைகளும் 4, 2 வயது என்று ஆன சமயத்தில், திடீரென்று ஒரு நாள் கடும் வயிற்று வலி கண்டு மருத்துவரிடம் சென்றோம். அவர் இது அப்பண்டிசைஸ், உடனே ஆபரேஷன் செய்ய வேண்டும் என்று கூறிவிட்டார். அப்போது நான் உறவினர் மூலம் கேள்விப்பட்ட விஷயத்தை என் கணவரிடம் நினைவுபடுத்தினேன். அப்பன்டிசைடிஸ் ஆபரேஷனோடு, குடும்பக் கட்டுப்பாடு ஆபரேஷனையும் செய்து விடுவது என்பதுதான் அது.

யோசித்துப் பார்த்து, 'இரண்டு குழந்தைகள் போதும்' என்ற முடிவை ஏற்று என் கணவரும் சம்மதித்தார். அந்த டூ இன் ஒன் ஆபரேஷனும் நடந்து நானும் குணமானேன்.

குடும்பம் திட்டமிடப்பட்டு விட்டது. குழந்தைகள் ஆரோக்கியம், படிப்பு வீட்டு நிர்வாகம் என்று என் மனது இதைச் சுற்றியே வட்டமிட்டு செயலாற்றியது.

காலை 5 மணிக்குத் துவங்கும் வேலைகள் இரவு 9 மணி வரைக்கும் இருந்து கொண்டேயிருக்கும். அவருக்கு உடல் உழைப்பு தொந்தரவு செய்யாமல் நானே எல்லாவற்றையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்து விடுவேன். வழக்கமாக இரவு ஒன்பது மணியானால் போதும் அசதியில் தூக்கம் இமைகளை அழுத்தும். அடித்துப் போட்டது போல் அப்படியொரு நித்திரை!

அவரோ தினமும் இரவில் ஏதாவது புத்தகம், வார இதழ் படித்து விட்டுத் தூங்க மணி பதினொன்று ஆகிவிடும். எல்லோர்க்கும் பிரச்னைகளை மறக்க தூக்கம் பயன்படும். ஆனால் எங்களுக்கு நடுவில் என் தூக்கம் பிரச்னையையும், பிரிவையும் ஏற்படுத்த ஆரம்பித்தது. அவருக்கு ஒரு காம்ப்ளக்ஸ். எனக்கு தாம்பத்திய வாழ்க்கையில் ஈடுபாடு குறைந்து விட்டது என்று அவராகவே எண்ணிக் கொண்டார். இதன் விளைவாக என்னை அர்த்தமில்லாமல் எடுத்ததற்கெல்லாம் கோபிக்க ஆரம்பித்து விட்டார்.

ஆனால் என் மனதில் அவருடைய அன்பும் காதலும் என்றும் இளமையாக நெருக்கமாகவேயுள்ளது. மலரினும் மெல்லியதல்லவா காமம். நான்பட்ட மன உளைச்சல் சொல்லி மாளாதது. பிறரிடம் சொல்லவும் முடியாதது.

ஒரு சில நாட்கள் அவருடன் நான் அன்னியோன்யமாகப் பழகியதைக் கூட அவர் பார்த்த கோணம் வேறு. "உன் இரக்கம் எனக்குத் தேவையில்லை. ஐயோ, பாவம் நீ ஏனம்மா உன் தூக்கத்தை கெடுத்துக் கொள்கிறாய்?' இப்படி சச்சரவு நீளும். ஒரு கட்டத்தில் அவர் எதிரில் நான் குழந்தைகளைக் கொஞ்சுவதற்குக் கூட அஞ்சினேன். தன்னை ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொண்டதாக ஒரு எண்ணம் அவரிடம் வேரூன்றியிருந்தது.

அவரை இம் மன இசிவிலிருந்து மீட்டெடுக்க வேண்டிய பொறுப்பு எனக்கு இருப்பதை உணர்ந்தேன். இந்நிலை மாற நீண்ட யோசனைக்குப் பிறகு மனத்தில் தோன்றியவைகளை கோர்வையாக்கி மெதுவாகச் செயல்படுத்தினேன். குழந்தைகளின் பாசத்தை அவர் மேல் திருப்பினேன். இந்த பிரச்னையில் நான் தலையிடுவதை விட என் பங்களிப்பு என்னவென அறிந்து கொண்டேன். குழந்தைப் பெற்றுக் கொண்டதோடு தாம்பத்தியத்திற்கான நோக்கம் முற்றுப் பெற்றுவிட்டது என்பதான அவரிடமிருந்த என்னைப் பற்றிய 'இமேஜை' மாற்றினேன். எறும்பு ஊரக் கல்லும் தேய்ந்தது. பிரஷ்ஷில் பேஸ்ட் வைத்துத் தருவதில் ஆரம்பித்து வெந்நீர் விளாவி வைப்பது, டிபன் தருவது என்று ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்துச் செய்தேன். "நான் உங்களவள்' என்ற எண்ணம் என் செயல்களில் மேலோங்கியதை



கோஸுடன் 2 கப் கடலைமாவு, ஒரு கப் அரிசி மாவு, கறிவேப்பிலை, இஞ்சி, பச்சை மிளகாய் நறுக்கிப் போட்டு சிறிது அளவே உப்பு சேர்த்து கெட்டியாக பிசைந்து தூள் பக்கோடா போட்டேன். ''மொறு மொறு''வென்று அருமையான ருசியுடன் கூடிய தூள் பக்கோடா ரெடி. வெங்காயம் சேர்க்காதவர்கள், இதனை விரும்பி உண்பர்.

– சீதா நரசிம்மன்

அவர் உணரத் துவங்கினார். அவர் என் 'அன் பான கணவர்' என்பது மட்டுமல்லாது இரு குழந்தைகளுக்குப் 'பொறுப்பான அப்பா' என் பதைப் போதிக்காமல் எளிய நடைமுறை களைக் கொண்டு புரிய வைத்தேன். மனம் விட்டுப் பேசினார். முள்ளிலிருந்து சேலை மெதுமெதுவாக விடுபட்டது. கூடமாட எனக்கு வீட்டு வேலைகளில் உதவி செய்வதும், புது மணப் பெண் போல நான் நாண, அவர் என்னை வளைய வருவதும் எங்களை ஆரம்ப கால ஆனந்த் வாழ்விற்குக் கொண்டு சென்றது. கோப, தாபங்களுக்கு இடமளிக்காமல் என்னை நான் கட்டுப்படுத்திக் கொள்ள அரவிந்த அன்னையை வணங்கினேன்.

அவர் அனுமதியோடு அவரது மனக் கதவை திறந்தபோது புழுக்கம் வெளியேறியது. புதிய சுகங்கள் குடியேறியது. இல்லறம் இன் றென்றும் இனிக்கிறது.

புது மணத் தம்பதிகளுக்கு நான் ஒன்று சொல்வேன். கணவனை மனைவியும் மனைவி யைக் கணவனும் வாழ்வின் ஒவ்வொரு கட்டத் திலும் நெருங்கி நின்று உன்னிப்பாகக் கவனிப்பர். அதிருப்தி தரும் எந்த ஒரு விஷயத் தையும் உடனுக்குடன் தெரிவித்து தெளிவு படுத்த உங்கள் லைப் பார்ட்னருக்கு வாய்ப் பளியுங்கள். நீங்களாகவே ஏதாவது அர்த்தம் கற்பித்துக் கொள்வது அபாயகரமானது.

– ஊர், பெயர் வெளியிட விரும்பாத வாசகி.

வாழ்க்கையில் பிரச்னைகள் ஏற்பட்டு பிரியும் நிலைக்குப் போனதில் என் கதை வித்தி யாசமானது. எனக்கு 19 வயதில் திருமணம் நடந்தது. சர்க்கார் உத்தியோகத்தில் இருந்த பூர்வீக சொத்துடைய ஒரு நல்ல பையனுக்குத் தான் என் பெற்றோர் திருமணம் செய்து கொடுத்தனர். என் கணவர் ஒரே பிள்ளை. பொறுப்புணர்ச்சியும் நல்ல பழக்க வழக்கங் களும் கொண்டவர். நிறைய எதிர்பார்ப்பு களுடன் இல்லறத்தில் நுழைந்த எனக்கு ஏமாற்றமே காத்திருந்தது.

என் கணவருடன் அவருடைய தாயாரும் அத்தையும் இருந்தனர். இருவருமே பால்ய விதவைகள். பழமையில் ஊறியவர்கள் எனக்கு எவ்வித சுதந்திரமும் கொடுக்காமலும் அவர் களுக்கு எல்லா விதத்திலும் கீழ்ப் படிந்து நடக்க வேண்டும் எனவும் எதிர்பார்த்து அதை அன்றாட நடவடிக்கையிலும் காண்பித்தனர்.

பசி நேரத்திற்கு இஷ்டப்படி சாப்பிட முடி யாது. விரும்பியதை வாங்கிக் கொள்ள முடி யாது. அவ்வப்போது ஏச்சுப் பேச்சுகளுக்கும் குறை விருக்காது. காலப் போக்கில் சரியாகி விடுமென்று நம்பிக்கையுடன் வாழ்ந்து வந்தேன். ஆனால் எந்த மாறுதலும் தெரிய வில்லை. என் கணவர் என்னிடம் மிக்க பாசத் தோடு இருந்தாலும் தன்னை வளர்த்தவர்களை விட்டு விடமுடியாது தத்தளித்தனர். என்னால் குடும்பம் பிரிந்து விடுவதை நான் விரும்ப வில்லை.

பொறுமை எல்லை மீறிய நிலையில் ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டு வீட்டை விட்டுப் போய் ஏதாவது ஆசிரமத்தில் சேர்ந்து விட முடிவு செய்தேன். என் நிலையை விளக்கி என் கணவருக்கு ஒரு கடிதம் எழுதி வைத்தேன். ஆனால் நான் சொல்லாமல் வீட்டை விட்டுக் கிளம்பு முன் என் கணவர் கையில் கடிதம் கிடைத்து விட்டது. மிகவும் வருத்தமடைந்த அவர் நான் எடுத்த முடிவு நியாயமற்றது விட்டுக் கொடுத்து வாழ்ந்தால்தான் குடும்பத் திற்கும் குழந்தைகளுக்கும் நல்லது என்பதை எனக்கு விளக்கி என் முடிவைக் கைவிடும்படி வேண்டினார்.

ஒரு நல்ல கணவரை என் முடிவால் இழந்து விட இருந்தேன் என்பதை உணர்ந்து நான் என் முடிவை மாற்றிக் கொண்டதல்லாமல் சகிப்புத் தன்மையை மேலும் வளர்த்துக் கொண்டு என் வாழ்வைச் சீரமைத்துக் கொண்டேன். எனக்குத் தற்சமயம் வயது 69. அன்பு கொண்ட கணவருடனும் பாசமுள்ள பிள்ளை பெண்கள் மற்றும் பேரன் பேத்திகளுடனும் சந்தோஷமாக இருக்கிறேன். நீண்ட கால நல்லதை நினைவில் கொண்டு சில இழப்புகளைத் தாங்கி கொண்டால் வாழ்க்கையை அர்த்தமுள்ள

தாக்கிக் கொள்ள முடியுமென்று நான் நம்புகிறேன்.

– தங்கள் அன்புத் தோழி

ஒவ்வொரு பெண்ணின் வாழ்விலும் திருமணம் என்பது ஆயிரம் கற்பனைகள் வட்டமடித்து வலம் வருகின்றன. எண்ணங்களின் கோர்வைகள் செயலாக உருவெடுக்கும் இன்பமான பொன் நாள். எத்தனை கற்பனை, எண்ணங்களையும் மனதில் சுமந்தேனோ அத்தனையும் என் வாழ்வில் நிறைவேறியது. கணவர் அன்பானவராகவும், மாமனார், மாமியார் தன் பெண்ணைப் போல் என்னை பார்த்துக் கொள்ள வேண்டும் என்பவைகள் எல்லாம் என் வாழ்வில் நிஜமாகியது.

எங்கள் இருவர் குடும்பங்களும் நல்ல கௌரவமான குடும்பங்கள். என் வீட்டில் மிகுந்த கட்டுப்பாடுகள் உண்டு. பெண்களை வெளியில் தனியாக அனுப்ப மாட்டார்கள். என் கணவர் வழக்கறிஞர் தொழிலில் ஜூனியராகவும் பிஸினஸும் செய்து கொண்டு இருந்தார். ஜூனியராக இருந்ததால் வருமானமும் கிடையாது. நாளடைவில் பிஸினஸ் வருமானம் குறைந்து கொண்டே வந்து, நாங்கள் கடனாளியாகி விட்டோம். இந்த மன உளைச்சலில் கர்ப்பமாக இருந்த எனக்குக் குழந்தை இறந்து விட்டது.


மருத்துவமனையில் இருந்து விடு வந்தால் பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. வீடு இருடு போயிருந்தது. எந்தப் பக்கம் திரும்பினாலும் பிரச்னைகள். எதையும் தாய் வீட்டில் கூற வில்லை. என் கணவரின் அன்பை டானிக்காக எடுத்துக் கொண்டு செயல்பட ஆரம்பித்தேன். அவர் நலனை மட்டும் மனதில் கருதி பிறந்த வீட்டில் இருந்த தேவையில்லாத கட்டுப்பாடுகளை விட்டு, வெளி உலகத்திற்கு வந்தேன். பசி, தூக்கம், பலவீனமென்று பாராமல் கஷ்டப்பட்டு உழைத்து ஒரு வருடத்தில் என் கணவரின் கடன்களை முழுவதும் சரி செய்து விட்டேன். இதனால் கணவரிடமிருந்து எனக்கு நம்பிக்கையும், மதிப்பும் கிடைத்தது. வேலையில் அமர்ந்ததிலிருந்து இன்று வரை சம்பளம் முழுவதையும் என்னிடம் கொடுத்து வருகிறார். முதலில் மறுப்பு தெரிவித்தேன். இருப்பினும் அன்புக் கட்டளையாக ஏற்று கொள்ளும்படி செய்து விட்டார்.

என் கணவர் அவருடைய பெற்றோருக்கு ஒரே மகன் என்பதால், அநேக எதிர்பார்ப்புகள் உண்டு என்பதை உணர்ந்து அவர்கள் தேவைகள் சந்திக்கப்படவும், அவர்கள் சந்தோஷத்திற்காகவும் இவர் அதிக நாட்கள் அங்கு போய் வருவார். தனியாக இருந்தால் பயப்படும் எனக்கு அவர்கள் நலனுக்காக என் பயத்தை விட்டுக் கொடுத்தேன். இதனால் புகுந்த வீட்டில் எனக்கு நல்ல மதிப்பு கிடைத்தது.

பல தம்பதிகள் தன்னுடைய விருப்பு, வெறுப்புகளை ஒருவர் மீது ஒருவர் திணிக்க முற்படும் பொழுதுதான் பல பிரச்னைகளில் சிக்கிக் கொள்கின்றனர். என் கணவருக்குப் பல திறமைகள் உண்டு. பல நிகழ்ச்சிகளை தயாரித்து நடத்துவார். இதனால் வீட்டிற்கு வர தாமதமாகும். பல இக்கட்டான சூழ்நிலைகளை தனியாக சமாளிக்க வேண்டியது வரும். இன்றும் அவர் திறமைகளை வெளிப்படுத்தும் காரியங்களுக்காகவும், அவர் விருப்பத்திற்காகவும் விட்டுக் கொடுத்து வருகிறேன். விட்டுக் கொடுத்தல் என்பது தன்னை தாழ்த்தி விடும் செயலென்று நினைக்க வேண்டாம். ஒருவர் மீது ஒருவருக்குள்ள நம்பிக்கையையும், பாசத்தையும் வளர்க்கும் கருவி என்பதை இன்று கண்டு வருகிறேன்.

– இந்துமதி

(அடுத்த இதழிலும் சில வாசகியரின் அனுபவங்கள் தொடருகிறது.)



சமையலறையின் ஸிங்கையும் அதன் குழாயிலுள்ள அடைப்பையும் சரி செய்வதற்குச் சாதாரண பிளீச்சிங் பவுடரே போதும். இதனை ஸிங்கில் நன்றாகத் தேய்த்து விட்டு தண்ணீர் இறங்கும் இடத்தில் கொஞ்சம் நிறைய பவுடரைக் கொட்டி ஏதாவது ஒரு மூடியினால் மூடி இரவு முழுவதும் வைத்து விடுங்கள். (காலையில் எழுந்து பார்த்தால் ஸிங்கில் சின்னச் சின்ன புழுக்கள் இறந்து கிடப்பதையும் காணலாம்.) பின்பு அதை நன்றாகத் தேய்த்துக் கழுவினால் அடைப்பே ஏற்படாது. இதை 15 நாட்களுக்கு ஒருமுறை செய்தால் போதும், ஸிங்கில் அடைப்பு என்ற பேச்சுக்கே இடமிராது. பிளீச்சிங் பவுடரில் உள்ள குளோரின் வாயு அடைப்பு முழுவதையும் அகற்றிவிடும் தன்மையுடையது. மேலும் ஸிங்கில் எப்பொழுதும் கொதித்த வெந்நீரை ஊற்றாதீர்கள். இது ஸிங்க் குழாயில் நீர் கசிவை ஏற்படுத்தும். ஏனென்றால் பெரும்பாலான ஸிங்க் குழாய்கள் பிளாஸ்டிக்கினால் செய்தவையே.

– லதா குமார்.

அறிந்து இருந்தட்டுமே என்றுதான் எழுதுகிறேன்.

- ச. சங்கரன், சென்னை - 39.

கட்டிய மனைவிக்கு துரோகம் இழைக்காமல் 'மனம் திறந்து' எதையும் வெளிப்படையாக பேசி நடந்தால் ஏதுங்க இன்னல். நான் பாருங்க, மனைவியிடத்தில் அலுவலகத்தில் நடக்கும் அன்றாட சின்னச் சின்ன விஷயத்தைக்கூட கூறி கருத்துப் பரிமாற்றம் கொள்வேன்.

அது பிறரிடம் ஏமாந்ததிலிருந்து மேலதிகாரியின் ஏச்சுக்கள் பேச்சுக்கள் உட்பட ஆபீஸ் விட்டு வரும் வழியில் ஸ்டாலில் கீரை வடை சாப்பிட்டு வந்ததுவரை கூறிவிடுவேன். இவளுடைய சமயோசித யோசனைகள் பலமுறை மதிப்பையும் மரியாதையையும் பெற்றுத் தந்திருக்கிறது. அன்று 'ராஜ சபையில்' மதி(யூகி) மந்திரி இருப்பதை கேள்விப்பட்டதுண்டு. அவள் நேரில் என்னுடனே இருப்பதுபோல் எனக்கு என்னவள். இவ்வளவுக்கும் அவள் பள்ளியிறுதி படிப்பு, நான் பட்டம் பெற்றவன்.

அவளிடம் பெரிய்ய குறை என்னவென்றால் திறை...ய்...ய ஓய் வெடுப்பாள். (தூக்கம்தான்). உடல் பெருகியது இதனால்தான் என்னவோ? சாப்பாட்டில் அளவு கூடும், குறையும் (பிரஷர் போல). அலுவலக அவசரத்தில் அள்ளிப் போட்டுக் கொண்டு பறந்து விடுவேன் (வம்பு ஏன்?) அப்படியும் பொறுக்காமல் விடுமுறையில் ஈ நிவிழுவதாக நினைத்துக் கொண்டு கேட்டால், ''வயதான காலத்தில்



ஆண்களுக்கு என்று ஒரு பகுதி பெண்கள் பத்திரிகையில் அதுவும் என் மனைவி மாதக் கடைசியில் பதுக்கி வைக்கும் 12ரூபாய்க்கு சொந்தமான மங்கையர் மலரில் (ஆம்! நான் ஒரு தொழிலாளி 7-ந் தேதி தானே சம்பளம்).

என் மனைவி திறமைசாலி. கதை எழுதுவதில், வகுப்பு நடத்துவதில், குழந்தைகளை திறமையாக வளர்ப்பதில், மாமியார் மெச்சும் மருமகளாக வாழ்வதில் என்று எதிலுமேதான். ஆனால் தங்கத்திற்கு மாற்றுக்குறை ஏற்படுவது உண்டல்லவா!

எல்லாருக்கும் உதவி செய்யப் போய் மாட்டிக் கொள்வதிலும்தான். பிரசவத்திற்கு உதவ பிளாஸ்க் கொடுப்பாள். உடைந்து பீஸாகத் திரும்பி வரும். கஷ்டத்திற்கு உதவ கட்டாய பண உதவி செய்வாள். சில்லரையாய் திரும்பி வரும். எல்லாவற்றுக்கும் முத்தாய்ப்பு வைத்தாற்போல இவளுடைய (தெரிந்த வீட்டுப் பெண்) சீட்டுப் பிடிக்க தெரிந்தவர்களை எல்லாம் சேர்த்து விட்டாள். (உதவிதானே!) அவளும் திறமையாக 5, 6 வருடம் நடத்தி விட்டு பல இலட்சங்களுடன் ஓட்டம் பிடிக்க என்ன செய்வது என்று தெரியாமல் இவளும் விழிக்க, இவளால்தானே என்று மற்றவர்கள் இவளை கோபமாய் விழிக்க. இப்படி செய்வது எல்லாம் விட்டு விடவும் முடியாமல் தவிக்கும் குணம் ஒரு மிகப் பெரிய குறை!

ஆனால் எதையும் என்னிடம் மறைத்தது கிடையாது. செலவழிக்கும் ஒவ்வொரு நயா பைசாவுக்கும் கணக்கு உண்டு. இவளைப் போல எத்தனை பெண்களோ! அவர்களும்

எழுதுகிறோம்

மனம் திறந்து..



உப்பு சேர்க்கக் கூடாது, இனிப்பு கூடாதுன்னு டாக்டர் சொல்றப்ப, அவஸ்தைப் படாம இருக்கத்தாங்க இந்தப் பயிற்சி''யின்னு பக்காவாக (தவறை) திரை யிட்டு மறைப்பான் புன்னகைக் கீற்றுடன் (இதில் தானே ஆம்பளைங்க அம்பேலாவது).

குழந்தைகளை கண்டிக்கும் விஷயத்தில் கொஞ்சம் 'ஓவர்'. மிரண்டு அழும் (எனக்கு பழகிப் போச்சு) தஞ்சமடையும் பிள்ளைகளை ''அம்மா கூறினால் அர்த்தமிருக்கும், உனக்கு என்ன 'ஸ்வீட்' வேணும்''னு கேட்டு மனதை திசை திருப்பி அமைதி காண்பேன்.

சுவரை மனைவியிடம் கொடுப்பதால், குளத்தில் விழும் கல்லினால் எழும் அலைகளாட்டம், என்னெய் தீர்ந்து போச்சு. கடுகு காலி என்ற பேச்சே என் இல்லத்தில் எழாது. எட்டிப் பார்க்கும் எப்போதெனில் திடீர் விருந்தினர் போல் (குடும்ப சகிதம்) வரும் சொந்தக்காரங்க வரவில்தான்.

நோய் நொடியிலிருந்து தாய் போல் குழந்தைகளையும் நம்மையும் பாதுகாத்து வரும் மனைவியிடம் 'அட்ஜஸ்ட்' செய்து போனால் தவறில்லை என்பேன். இதை எழுதி முடிச்சுட்டு அவளிடம் காண்பித்த பிறகே தபாலில் சேர்த்தேன். பயமில்லைங்க. (பின்னால் எழும் பிளவுகளையும் பிரச்னைகளையும் சமாளிக்க கையாண்ட யுக்தி) திறனில்லை என்பதே நிஜம்.

– எஸ். சுந்தர், திருநெல்வேலி – 7

''என் மனைவியைப் பற்றியா? அவளா! ராட்சஸி வாயாடி! என்று இப்படியெல்லாம் சொல்ல மாட்டேன். நல்லவள்தான்! ஆனால்... கொஞ்சம் சொல்லலாம் அல்லவா? போட்டுக் கொடுத்து விட மாட்டீர்களே! அப்புறம் நரகம்தான். எனக்கும் அவளுக்கும் பத்து வயது வித்தியாசம்! மூத்தவன் நான்தான். ஆனாலும் முப்பது வருடம் முன்... 48 கிலோ எடையில்... அந்தக் கால சரோஜாதேவி போன்றிருந்த, அந்த என் இளம் மனைவி சத்யா ஒரு ஊமை! ஆமாங்க. ஊமை போல என்ன கேட்டாலும்... 'ஊம்! ஊம்!'' என்று... இந்த 'ஊம்' இருக்கு பாருங்க. அதனுடைய இனிமை என்னாட்டம் கணவனுக்குத்தானுங்க புரியும். ஆணின் கம்பீரமே மனைவியின் இந்த 'ஊம்' தானுங்க.

ஆனால் இப்போது! வேண்டாங்க.. சோக கதைங்க. இப்ப நான்தான் அந்த 'ஊம்' ஆகி விட்டேன். ஆனாலும் நல்லவள்! பக்தி ரொம்ப உள்ளவள். சண்டை போட்டுக் காரியத்தைச் சாதித்துக்கொள்வாள். புடவைக்கோ, நகைக்கோ சண்டைப் போட மாட்டாள். பையன்களை நல்ல இங்கிலீஷ் மீடியம் ஸ்கூலில் சேர்ப்பதற்கோ, வீடு கட்டும்போது... சிக்கனத்திலோ சண்டை போடுவாள். துலா ராசிகாரியாச்சே! சமநீதி பார்ப்பாள். பொய்! என்றால் அனல்பட்ட புழுவாகி விடுவாள். (அதான் வீட்டில் வேலைக்காரி இல்லாமல் இந்த ஐம்பது வயதிலும் ஒண்டியாய் சமாளிக்கிறாள்.)

நான் கொஞ்சம் தாராள செலவாளி! அதான் நேர்மார்... பையன்கள் இருவரையும்



அமெரிக்கா அனுப்பியது. வீடு கட்டினது. பெரிய பையனுக்குக் கல்யாணம் செய்தது எல்லா சுமையும் அவளாகத்தான் சுமந்தாள். நான் பார்வையாளன்தான்.

ஆனாலும் அவளுக்கு என்னிடத்தில் பெரிய குறை. அவள் புது புடவை கட்டினாளோ, புது நகை போட்டாளோ நன்றாக இருக்குன்னு சொல்ல மாட்டேன். அவ்வளவு ஏன் ஒருநாள் புடவை கிழிந்தது தெரியாமல் என்னோடு காரில் ஏறிக்கொண்டு கடைத் தெருவுக்கு வந்தாயிற்று. விட்டாள் பாருங்க டோஸ்.

''நல்லதைதான் சொல்ல மாட்டீங்க. புடவை வேறு மாற்று என்றுகூடவா சொல்லக் கூடாது''

என்றாள். நியாயம்தான். எனக்கு டிரஸ் எடுப்பது, கண்ணாடி பிரேம் செலக்ட்

செய்வது எல்லாம் மேட்சாகச் செய்வாள். ஏனோ எனக்கு அப்படி அவளுக்கு சொல்ல தோணாதது என்னிடம் உள்ள குறை! "என் மேல் உண்மை அன்பே இல்லை" என்று அடிக்கடி சொல்வாள். ஏங்க... இதனால் அன்பு இல்லாமல் போகுமா? சொன்னாலும் நம்ப மாட்டேங்கறா!

அவள் நிறம் சுமார்தான். அது எனக்கு சற்று ஏமாற்றம்தான். ஆனா இப்ப அதெல்லாம் நினைப்பதில்லை. அதற்காக வெளியில் வேடிக்கை பார்க்கும் பழக்கம் நிச்சயம் எனக்கில்லைங்க. இது அவளுக்கும் தெரியும். அதற்கும் ஒரு டோஸ்! "கொஞ்சமாவது ரஸனை இருந்தாத்தானே?" என்பாள் என்னைப் பார்த்து யப்பா! எந்தப் பக்கம் போனாலும், இந்த பெண்களை நம்பக் கூடாது எந்த சமயத்தில் எதை நினைப்பார்கள் என்ன நினைப்பார்கள் என்று அவர்களோடு பத்து ஜன்மா ஒண்ணா இருந்தாலும் புரிந்து கொள்ள முடியாது.

'என்னங்க மனுஷனுக்கு சுதந்திரமே போனது கல்யாணத்தில்தாங்க. சாப்பாடுகூட கன்ட்ரோல். இரவு நேரத்தில் எண்ணெய் தொறுக்குத் தீனி தின்னாதீங்க. அளவாய் சாப்பிடணும். வயதாகி விட்டால், என்பாள். ஆனாலும் நிறைய ஸ்வீட் செய்து தருவாள். அதை அளவு பார்த்து சாப்பிட சொல்வாள். என் வயிற்றுக்கு சாப்பிட எனக்குத் தெரியாது? இது எனக்குப் பிடிக்கலை. மூச்! வெளியில சொல்லவா முடியும்.


என்னமோ போங்க வாழ்க்கையில். ஒரே கொள்கை உள்ளவர்களை கடவுள் ஒண்ணா சேர்க்கறது இல்லே. நேர்மாறாதான் எல்லாமே!

நான் மட்டும் லேசு இல்லீங்க. அவளை சீண்டிக் கொண்டு வம்பிழுப்பது எனக்குப் பிடித்த பொழுதுபோக்கு.

ஆனால்... பாவம் ... காஸ்ட்ரைடிஸ் உள்ளவள். ஜெலூசில் அவள் ஹேண்ட்பேக்கில் இல்லாத நாளே இல்லை. அமெரிக்காவில் இருந்து பையன்கள் போனில் பேசினால் கூட முதலில் அம்மாதான். எப்பவாவது தான் என்னிடம் பேசுவார்கள். இது எனக்குக் கோபமா வரும். கோபத்தை எங்கே வெளியில் காட்டுவது? அஜீர்ணம்தான்.

அவளுக்கு டென்ஷன் வந்தால் தலையில் அடித்துக் கொள்வாள். போனாற் போகட்டும். அவள் தலை. அவள் கை! அடித்துக் கொள்ளட்டும் என்றிருப்பேன்.

– கிருஷ்ணா, சென்னை.




குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும் ஐஸ்க்ரீம் சாப்பிடுவதினால் ஏற்படும் பின்விளைவை ஐஸ்க்ரீம் சாப்பிட்டு முடிந்ததும் உடனே ஒரு டம்ளர் வெந்நீர் குடிப்பதன் மூலம் தவிர்க்கலாம்.

— டி. விஜயலட்சுமி

ஒரு ஆண் வாழ்வின் முதல் 25 வருடங்களை தாய், தமக்கை, தங்கை என்ற பெண்களுடன்தான் கடத்துகிறான். நாட்கள் ஆக ஆக அந்தப் பெண்கள் சிறிது சிறிதாக அவன் வாழ்விலிருந்து ஒதுங்கிப் போகும் நேரம். அவன் மனம் தனக்காகவே வாழ்ந்து, தன்னை மட்டுமே காதலித்து, தனக்காகவே வாழ்வின் ஒவ்வொரு நாளையும் வாழப் போகும் மனைவியைப் பற்றி அநேக கற்பனைகளை வளர்த்துக் கொள்கிறது.

அந்த மனைவி அவனது எண்ணங்களைப் புரிந்துகொண்டு, எதிலும் விட்டுக் கொடுத்து, அழகான வாரிசுகளைப் பெற்றுக் கொடுத்து, அன்பு, பாசம், காதல், தாய்மை நிறைந்தவளாக இருந்து விட்டால் அந்த மனைவி இறைவன் கொடுத்த வரம் மட்டுமா! அவன் வாழ்வே சொர்க்கம் தானே? நானும் அப்படி புண்ணியம் செய்ததன் பலன் தானோ, அப்படி ஒரு மனைவியைப் பெற்றிருக்கிறேன் என்று பல முறை இறைவனுக்கு நன்றி சொன்னதுண்டு.

கணவன், மனைவி என்றால் சண்டையும் பிணக்கும் வராதா என்ன? ஊடல் இல்லாத வாழ்வில் உவகை ஏது? எங்களுக்குள்ளும் சண்டை வந்ததுண்டு. ஆனால் என் மனைவியோ என்ன சண்டையானாலும் பேசாமல் இருந்தோ, சமைக்காமல் இருந்தோ... ஊஹூம். என் 25 வருட மணவாழ்வில் அப்படி ஒரு சந்தர்ப்பம் நேர்ந்ததேயில்லை. இதற்கு முக்கிய



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



16,காமராஜ் சாலை,பழையபெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம்,சென்னை-600063.
Tel&FAX : 2376129,Cell Ph : 9841050464
E-mail: sspeetam@md3.vsnl.net.in
& sspeetam@hotmail.com

ஏழைமாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர்! வணக்கம்

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த ஒன்பது ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய், தந்தையற்ற, வசதியற்ற, திக்கற்ற 50 மாணவர்களும் 20 மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன், நல்ல கல்வி, காலை, மாலை உடற்பயிற்சி ஆகியன்வகள் அளிப்பதுடன் உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு நல்ல முறையில் வளர்த்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே, தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியை செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

காலை சிற்றுண்டி (70 பேருக்கு)	ரூ.	500/-
மதிய உணவு (இனிப்புடன்)	ரூ.	1,000/-
இரவு சிற்றுண்டி	ரூ.	750/-
இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ.	300/-
ஒரு மாணவனுக்கு ஓரண்டிற்கு கல்வி உதவித் தொகை	ரூ.	1,000/-
ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ.	6,000/-
குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ.	60,000/-

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம்.

உங்கள் நன்கொடைகளை "ஸ்ரீ சாரதா சக்தி பீடம்" என்ற பெயருக்கு Cheque/DD/ MO மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்கொடைகளுக்கு 80 G பிரிவின்படி
வருமானவரி விலக்கு உண்டு

இறைவன் தொண்டில்
சுவாமி சர்வாத்மானந்தர்.

காரணம் அவளது விட்டுக் கொடுத்தல் என்பது எனக்கு நன்கு தெரியும். என்னுடன் மிகச் சில மணி நேரம்கூட சண்டையினாலோ வேறு காரணங்களாலோ என் மனைவி பேசாமல் இருந்ததில்லை. எனக்கு என்ன மனக்கவலை ஏற்பட்டாலும் அவளின் புன்சிரிப்பும், ஆறுதல் தரும் வார்த்தைகளும் அவற்றை நொடியில் நீக்கிவிடும் டானிக்!

எத்தனையோ வருடமாக என்னிடமிருந்த வெற்றிலை, சீவல் பழக்கத்தை மிகப் பொறுமையாக எடுத்துச் சொல்லி என்னை விட வைத்த பெருமை என் மனைவியையே சாரும். எங்களுக்குள் ஈகோ இல்லை; இரண்டு எண்ணங்கள் இருந்ததில்லை. இருவரும் எல்லா விஷயங்களையும் இணைந்து பேசியே முடிவெடுப்போம். இத்தனை வருடங்களுக்குப் பின்னும் என் மனைவியைப் பார்க்கும்போது எனக்கு ஏற்படும் சந்தோஷம் புதிதாகவே இருப்பது எனக்கு வியப்பளிக்கும் விஷயம்! என்னுடைய இந்த அன்பு, உறவினர்களால் 'பெண்டாட்டிதாசன்' என்று சொல்லப்பட்டாலும் நான் கவலைப்படுவதில்லை! அன்பிற்கு அரவம்கூட கட்டுப்படும்போது என் மனைவியின் தன்னலமற்ற அன்பில் நான் கட்டிப் போடப்படுவதில் என்ன தவறு?

பெண்களுக்கு சந்தேகம் உடன் பிறந்த ஒன்று. தாங்கள் பாராட்டப்பட வேண்டும். மற்றவர்கள் புகழ வேண்டும் என்ற எண்ணமும் ஆண்களைவிட பெண்களிடம் அதிகம். ஆண்களுக்கு வீடு, மனைவி, குழந்தைகள் மட்டுமே முக்கியமல்ல. அவர்களின் பணி, அதில் ஆற்ற வேண்டிய கடமைகள் குடும்பத்தைவிட முக்கியம் என்பதை பெண்கள், அது தாயோ, தாரமோ, மகளோ யாரும் புரிந்து கொள்வதில்லை என்பது என் வருத்தம்.

வெளியில் ஒரு ஆண் பலருடன் பழக வேண்டியிருக்கிறது. இன்றைய வேகமான உலகில் பல பேருடன் தொடர்பு கொண்டு, பல விஷயங்களை ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டிய நிலையில் அவன் குடும்பத்தின் சில கடமைகளை மறந்துவிடுவது சாத்தியமே. மேலும் மனைவி என்ற ஒருத்தி தன்னையும் குடும்பத்தையும் மிகச் சரியாக நிர்வகிப்பாள் என்ற நம்பிக்கைதான் அந்த ஆணை வெளி உலகில் பல விஷயங்களை சாதிக்க வைக்கிறது. ஆனால் மனைவியின் ஆசைகளும், ஏக்கங்களும் உதாசீனப்படுத்தப்படும்போது அந்த ஆணுக்கு, வெளியில் பலராலும் பலவிதமாக புகழ்ந்து பாராட்டுப் பெறும்



ஈஸி சேர் துணி தலை வைக்கும் இடத்தில் கிழிந்து விட்டது. அதைத் தூக்கி எறிய மனமில்லை. அப்படியே மளிகை சாமான் வாங்கி வர பெரிய பையாக தைத்து விட்டேன். உள்ளே உரச் சாக்கு பை (பாலிதீன்) வைத்தும் தைத்து விட்டேன். சமயங்களில் மாவுகூட அவற்றில் அரைத்து வரலாம். ஒட்டவே ஒட்டாது. அலசிப் போடவும் ஏதுவாக இருக்கும்.

— என். கல்பனா

மனிதனுக்கு, பூஞ்சோலையாகவும், சொர்க்கமாயும் இருக்க வேண்டிய வீடு சண்டைக்களமாகிறது. இது அவனது உடல், மனம், இரண்டையும் பாதிக்க, வாழ்க்கை திசை மாறி, வழித்துணையுடன் ஏற்படும் சண்டையால் வாரிசுகளும் பாதிக்கப்பட்டு, அழகாக வாழ வேண்டிய வாழ்க்கை அவலமாகிறது.

வாழ்க்கை இறுதிவரை இனிக்க வேண்டுமானால் தன் கடமை, வேலை என்று வாழும் கணவர்கள் மனைவி பக்கமும் கொஞ்சம் கண்ணையும், மனதையும் திருப்ப வேண்டியது அவசியம். ஒரு சின்ன பாராட்டு, பிறந்த நாள், மணநாளிற்குப் பரிசு, அவ்வப்பொழுது தனிமையில் தம்பதியராகச் செல்லும் ஒரு சிறிய பயணம். இவை போதுமே அந்தப் பெண்களை மகிழ்ச்சிப் படுத்த. கணவன், குழந்தைகள் என்று 'அவர்களையே உலகமாக எண்ணி, தன் சுக துக்கங்களை மறந்து வாழும்' மனைவிக்குக் கணவன் செய்யும் மிகச் சிறிய கடமைதானே இது?

பொதுவாகப் பெண்களிடம் இருக்கும் மிகப் பெரிய குறை, தங்கள் உடல் நிலையில் ஏற்படும் குறைகளை, சுகவீனங்களை பெரும்பாலும் வெளியில் சொல்வதில்லை. உடல் நிலை மோசமாகும்வரை விட்டு விட்டு கடைசியில் தானும் கஷ்டப்பட்டு,



பூரண போளி செய்யும் பொழுது கடலை பருப்பை நன்கு சிவக்க வறுத்து ஊற வைத்து, மிக்ஸியில் அரைத்து, அதன் பிறகு அரைத்த தேங்காயுடன் சேர்த்து வெல்லப்பாகு வைத்துக் கிளறினால் பூரணம் தயார். இந்த வகை போளி சீக்கிரம் கெட்டுப் போகாது.

— ரேவதி வாசுதேவன்

அடுத்தவர்களையும் துன்பப்பட வைப்பதில் அவர்களுக்கு என்ன ஒரு சந்தோஷமோ? பல பிரச்னைகளோடு போராடும் ஒரு கணவன், மனைவியின் குறையை சொன்னால்தானே தீர்த்து வைக்க முடியும்? கணவனாகவே அறிந்து தன்னைப் பற்றிக் கவலைப்பட வேண்டும், சரி செய்ய வேண்டும் என்று பெண்கள் நினைப்பதை எப்பொழுதுதான் மாற்றிக் கொள்வார்களோ?

ஆண்களுக்கும் மனம் உண்டு; ஆசைகள் உண்டு. ஆயிரம் ஊர்கள் சுற்றி வந்தாலும், மனதில் ஆயிரத்தெட்டு கவலைகள் இருந்தாலும், 'அப்பாடா' என்று ஆசுவாசப் படுத்திக் கொள்ள அவன் தேடுவது அன்பு நிறைந்த மனைவியின் ஆதரவான வார்த்தைகளைத்தான். அதைப் புரிந்து கொண்டு அரவணைக்க வேண்டியது ஒரு நல்ல மனைவியின் கடமை. அந்த அன்பில் கட்டுப்பட்ட எந்த ஆணும் மகுடிக்கு ஆடும் நாகம்தான்.

– பாசு, மகாராஷ்டிரா.

'வெளி வேலைக்கெல்லாம் என் கணவர் என்னை அனுப்புவதேயில்லை' என்று பெருமைப்பட்டுக் கொள்ளும் பெண்கள் சிலர் இருக்கின்றனர். தன்னைத் தானே முடக்கிக் கொள்ளும் இம்மாதிரிப் பெண்கள் பின்னால் படுகிற இன்னல்கள் பல. இதை நான் பார்த்தும், கேட்டுமிருக்கிறேன். என் மனைவி அப்படி அல்ல. மின் கட்டணம் செலுத்துவது, வங்கிக் கணக்கு பராமரிப்பது, ஸ்கூலில் குழந்தைகளுக்கு தேவையானவற்றை வாங்கிக் கொடுத்து பீஸ் கட்டி வருதல், ரேஷன் கடை இத்யாதி சமாச்சாரங்கள் எனத் தொடரும் எல்லா விஷயங்களையும் கேட்டுக் கேட்டுத் தெரிந்து கொள்வாள்.

எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டுக் கொண்டு தானே செய்வாள். துளி சலிப்பு முகத்தில் காண முடியாது.

நன்கு உடுத்திக் கொள்வாள்; எப்போதும் பிரஷ்ஷாய் இருப்பாள். அழுது வடியும் முகத்தோடு அவளை நான் பார்த்தில்லை. நான் அலுவலக வேலை போன்றவற்றால் மன உளைச்சல் அடைந்து வீடு திரும்பினால்கூட தாங்கிப் பிடிப்பாள்; தூக்கி நிமிர்த்துவாள். கவலைகள் எனக்கு பஞ்சாய் பறக்கும்.

கூட்டு முடிவுகள் அவளுக்குப் பிடிக்கும். எல்லோரும் ஒத்துணர்ந்து எடுக்கும் முடிவுக்கு நல்ல உறுதியிருக்கும் என்று நம்புபவள். வீட்டுக் கணக்கு எழுதிவிட்டுத் தான் தூங்குவாள். இல்லாவிட்டால் அவளுக்குத் தூக்கம் வராது! மளிகை சாமான்களுக்கான செலவுகளை எழுதும் போது அடைப்புக் குறிக்குள் வாங்கிய கடையின் பெயர் எழுதிக் கொண்டு விடுவாள்; எந்தக் கடையில் எந்த அயிட்டம் நயம், விலை மலிவு போன்ற விபரங்களையும் ஒப்பிட்டுப்பார்ப்பாள். ஏறி வரும் விலைவாசி நிலவரத்தையும் குடும்பத்திற்கு சராசரி தேவைப்படும் அரிசி, பருப்பு, எண்ணெய் போன்றவைகளின் உபயோக அளவும் தெரிந்து கொள்ள முடிகிறது என்பாள்.

எல்லாவற்றிற்கும் என் கையை எதிர் பார்க்கும் நிலையை அவள் தவிர்ப்பாள். அவளே டியூஷன் டீச்சராக மாறி பிள்ளைகளை சிறந்த முறையில் படிக்க வைக்கிறாள். கிராஸ்கட், க்னோஸ் நெக் என்று தையல் வகுப்புகளுக்கு போய் கற்றுக் கொண்டாள். மிஷின் வாங்கிப் போட்டு தைத்ததில் அக்கம் பக்கத்து வீடு எனத் தொடங்கி தெரு முழுவதும் பிரபலமாகி விட்டது. நியாயமான கூலி அவளுக்கு நிறைய பெண் வாடிக்கையாளர்களைத் தேடித் தந்தது.

எனக்கும் சரி, பிள்ளைகளுக்கும் சரி உறுத்தாமல் அவசியமான ஆலோசனைகளை சொல்வது, அவளது குணங்களிலேயே ஹைலைட்.

ருசிக்கத் தெரிந்தவனுக்கு வாழ்க்கை ரசிக்கத்தான் செய்கிறது.

– பழ. சீனிவாசன்,
அய்யம்பாளையம்.



கோடையிலும்

கொண்டாட்டமே!

ஆனந்தாவின் காட்டன்

ஆடைகளினால்

குதூகலமே!!

*சம்மர் கூல் காட்டன்
*காஞ்சி காட்டன்
*பெங்கால் காட்டன்
*வெங்கட கிரி
*பாலி காட்டன்
*பேன்ஸி பிரிண்ட்
வித் பிளவுஸ்

முகூர்த்த பட்டு

முன்னனி மில் ஜவுளிகள்

முழுமையான ரெடிமேட் ஆடைகள்.

மக்கள் போற்றும் மகத்தான ஜவுளி நிறுவனம்!

ஆனந்தா

சில்க்ஸ் பாரடைஸ்

N.S.B.ரோடு. திருச்சி-2

இந்த மாதம் எப்படி?

ஏப்ரல் '99




மேஷ ராசி :

அசுவினி, பரணி, கிருத்திகை 1–ஆம் பாதம்.

இராசிநாதன் செவ்வாயும் சுக்கிர பகவானும் பரிவர்த்தனம் அடைந்து இருப்பதும், சனி ஜன்ம ராசியில் நிற்பதும் உழைப்பை அதிகப்படுத்தும். உங்கள் சுறுசுறுப்புக்கு சவாலாக சூழ்நிலைகள் அமையும். செவ்வாய் சுக்கிர பரிவர்த்தனை காவல் துறை, மற்றும் நெருப்பு சம்பந்தத் தொழில் செய்வோருக்கு ஏற்றம் தரும். பெட்ரோல் மற்றும் இரசாயன பொருள் விற்பவர்கள் எதிர்பார்த்த இடத்தில் இருந்து பணம் வரப் பெறுவார்கள். சிலர் ஆன்மீக சுற்றுலாவும் மலைப்பிரதேசங்களுக்கு செல்லும் வாய்ப்பையும் பெறுவார்கள்.

மாத நடுவில் எதிர்பாராத செலவு ஏற்படும். பணத்தை சேமித்து வைப்பது நலம் தரும். கணவன் மனைவி தம்பதிகளுக்கு இடையில் சிறு பூசல்கள் தோன்றி மறையும். எதிர்பாராத விருந்தினர் வருகை மகிழ்ச்சி அளித்தாலும் அவர்களது எதிர்பார்ப்பால் செலவுகள் தோன்றும். சூரியன் உச்சம் நோக்கி நகர்வது நன்மை உண்டுசெய்யும். ராகுவின் வேகத்தை குரு பார்வை குறைக்கின்றது என்றாலும் இடமாற்றம் உண்டாகி உங்களைப் பயமுறுத்த செய்யும்.

கம்ப்யூட்டர் தொழில் மற்றும் கல்வியில் நாட்டம் உள்ளவர்கள் மேன்மை பெறுவார்கள். நீண்ட காலமாக பிரிந்த நண்பர்கள் ஒன்று சேருவார்கள். குழந்தைகளின் படிப்பில் இருந்த தடைகள் விலகி மகிழ்ச்சி உண்டு செய்யும். கடந்த மாதம் போல் இம்மாதமும் ஆஞ்சநேய ஸ்வாமியை பூஜித்து வாருங்கள். சுந்தர காண்டம் பாராயணம் செய்வதும் நன்மை தரும்.



ரிஷப ராசி:

கிருத்திகை 2, 3, 4–ஆம் பாதங்கள், ரோகிணி, மிருக சீரிஷம் 1, 2–ஆம் பாதங்கள்.



இம்மாதம் விரையாதிபதி சுக்கிர பகவானுடன் சனி சேர்ந்து இருப்பதும் அங்காரக பகவான் பார்வையிடுவதும் செலவுகளை அதிகப்படுத்தும். நினைத்த காரியங்கள் தாமதமாக முடியும். பூமி மனை விவகாரங்களில் சற்று கூடுதல் கவனம் செலுத்தவும். பழைய கடன்கள் மீண்டும் தொல்லைபடுத்தக்கூடும். வழிப் பயணங்களில் பொருட்கள் களவு போக நேரிடும். சற்று விழிப்புடன் இருக்கவும். நிதி சம்பந்தமுடைய தொழில் செய்பவர்கள் அதிக எச்சரிக்கையுடன் செயல்படுங்கள்.

தேவையற்ற பிரச்னைகள் வரக்கூடும். ஆனால் இறுக்கமான சூழ்நிலை மாறத்தான் செய்யும். எதையும் சுலபமாகச் செய்யும் நீங்கள் சற்று தடுமாறத்தான் செய்வீர்கள். குரு சுகஸ்தானத்தை பார்வையிடுவது நல்லதுதான். ஆனாலும் வெளி வட்டார விஷயங்கள் முழுவதும் சாதகமாக மாற சற்று நாள் ஆகும். பெண்களுக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு வரக்கூடும். சொத்து நகை வாங்குவதில் நல்ல முன்னேற்றம் உண்டு. எனினும் நிதானித்து செயல்பட்டால் சனி பகவான் தொல்லை இராது. அவசரமான முடிவுகள் சிக்கலை ஏற்படுத்தலாம். ஒன்பதாம் இடத்தில் உள்ள கேது பகவான் ஆன்மீக லாபத்தை உண்டு செய்வார். குழந்தைகளின் கல்வி சற்று கவலை தரும். எனினும் மாத பிற்பகுதி சாதகமான சூழ்நிலையாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

எல்லா தொல்லை தீரவும் மன அமைதிக்கும் துர்கா சஹஸ்ரநாமம் சொல்லி வரவும். செவ்வாய்க் கிழமை ராகு காலத்தில் துர்க்கையின் மங்களமான ஸ்துதிகளை சொல்லி வரவும். மன அமைதியுடன் உடல் ஆரோக்கியமும் திரும்பப் பெறலாம்.




மிதுன ராசி:

மிருகசீரிஷம் 3, 4,–ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர் பூசம் 1,2,3–ஆம் பாதங்கள்.

உங்கள் இராசிநாதன் புத பகவான் ஜீவனஸ்தானமாகிய பத்தாம் இல்லத்திற்கு செல்வதும் அங்கு குரு பகவானுடன் கூடி யிருப்பதும் உத்தியோகத்தில் பல மாற்றங்கள் உண்டுசெய்யும். எதிர்பாராத இடமாற்றமும், கடந்த கால கசப்பு உணர்வுகளும் மாற வழி வகுக்கும். மேலதிகாரிகளினால் பாராட்டப் படுவீர்கள். ஆனால் உடன் ஊழியம் செய் பவரின் தொல்லைக்கு ஆளாவீர்கள். 10-ம் இடத்து குருபகவான் தொழிலில் தொல்லை தந்தாலும் புத பகவான் சேர்க்கை அதைக் குறைக்கும். சொந்தத் தொழில் புரிவோர்கள் சற்று நிதானிக்க வேண்டும். உங்கள் இராசி நாதன் 10-ல் நீசம் அடைந்து குருவால் நீச பங்கம் ஆவதால் பிரச்னையை கொடுத்து பின் சௌகரியத்தை உண்டுசெய்வார். பூமி வீடு கட்டுவதில் நாட்டம் கொடுப்பார்.

நான்கு இடத்துக்கு உரிய கிரக தசை நடப்பவர்கள் தற்சமயம் எளிதில் நன்மை அடைய முடியும். வழக்கமான உங்கள் மலர்ச்சியை விடாதீர்கள். சுபகாரியங்கள் அம்மான் வழி உறவுகளால் தடைநீங்கி நன்மையாக முடியும். பத்திரிகை தொழில் புரிவோர் சிலரது எதிர்ப்புக்கு ஆளாக நேரலாம். மாணவ மாணவியர் கல்வியில் அதிக கவனத்தைச் செலுத்தவும் மாத பிற்பகுதி நல்ல சாதகமான சூழ்நிலைகள் உண்டு. கடின உழைப்பாளிகள் பலனை உடனே அடைவார்கள். துணி மற்றும் பெண்கள் சம்பந்த பொருட்கள் விற்பவர் கடந்த மாதம் போல் முன்னேற்றம் சீராகக் காண்பார்கள்.

நாராயணீயம் பாராயணம் செய்யவும், முடியாதவர்கள் பகவான் நாமத்தை ஸ்துதியா கவோ, ஜபமாகவோ, சொல்லி வரவும். சிலருக்குக் கருடதரிசனம் ஏற்படுவதுடன் பெரியோர்களிடம் இருந்து நல்ல காரியம் செய்யச் சொல்லி உத்தரவும் வரும்.



கடக ராசி:

புனர்பூசம் 4–ஆம் பாதம், பூசம், ஆயில்யம்.

தனகாரகன் குருபகவான்



உளுந்து ½ கப், அரிசி ¼ கப் சிறிது வெந்தயம் இவைகளை ஊறவைத்து நைசாக அரைத்து 4கப் கேழ்வரகு மாவுடன் கலந்து மறுநாள் காலை தோசை வார்க்கவும். சத்தான சுவையான தோசை தயார். வெங்காய சட்னிக்கு அருமையாக இருக்கும்.

– கு. உதயபாரதி


9-ஆம் இல்லத்தில் இருந்து தனஸ்தானாதிபதி சூரிய பகவானுடன் சேர்ந்து சஞ்சாரம் செய்வது பணப்புழக்கத்தை சரளமாக ஏற்படுத்தும். உத்தியோகஸ்தர்களுக்கு சில நாட்கள் லீவு போட நேரலாம். சிலருக்குப் பணப் புழக்கம் உள்ளவர்களின் ஆசை வார்த்தையால் புதிய தொழில் ஆரம்பிக்க எண்ணம் உண்டாகலாம். ஆனால் உத்தியோகத்தை விடுவதும், புதிய தொழில் ஆரம்பிப்பதும் தற்போது வேண்டாம்.

இளைய சகோதரிகள் திருமண விஷயம் கைகூடி வரும். சிலரது இளைய சகோதரிகள் புதிய வீடு கட்டி கிரகபிரவேசம் செய்வார்கள். உடன் பிறந்தோருக்கு இவ்வித சுப விஷயத்தில் கைகொடுக்க வேண்டி வரும். செய்தி தொடர்பாளராக உத்தியோகம் பார்ப்போருக்கும் பத்திரிகை தொழில்புரிவோருக்கும் இம்மாதம் பல சவால்களைச் சந்திக்க நேரிடும். வழக்கம் போல் வெற்றி உங்களுக்குத்தான்.

சிலருக்கு அரசாங்க சம்பந்தமான வழக்குகள் தேடி வரும். பண விஷயத்தில் செக் கொடுப்பதையும், அடுத்தவருக்கு ஜாமீன் போடுவதையும் தவிர்க்கவும். படிப்பு விஷயத்தில் சிலருக்கு ஆர்வம் உண்டாகி பதவி உயர்வுக்காக தேர்வு எழுத ஆரம்பிப்பார்கள். வடதிசையில் இருந்து நல்ல சேதி வரும்.

காமதேனுவை பூஜிப்பது நல்லது. அல்லது பௌர்ணமி அன்று காலை பசுவை பூஜை செய்யவும். பசுவிற்கு அகத்திக்கீரை கொடுப்பதும் நல்லது.

ஓம் நமசிவாய




நாடி ஜோதிடர் R. ராமலிங்கம் B.A.


ஸ்ரீ அகத்தியர்

நாடி ஜோதிட நிலையம்

எதிர்கால பலன்கள்







பழங்காலத்தில் வாழ்ந்த சப்தரிஷிகள், பதினெட்டு சித்தர்கள் வான் இயல், மருத்துவம், ஜோதிடம் ஆகியவற்றில் உள்ள இரகசியங்களை வாழையடி வாழையாக வரும் மனித சமூகம் தெரிந்து கொள்வதற்காக வேண்டி ஓலைச் சுவடிகளில் எழுதி வைத்துள்ளனர். அவ்வாறு எழுதப்பெற்ற ஓலை சுவடிகள் மூலம் கை பெருவிரல் ரேகையைக் கொண்டும், ஜாதகத்தைக் கொண்டும், பிறப்பு முதல் ஆயுள் வரையிலான கல்வி, தொழில் வியாபாரம், உத்யோகம், கலைப்பணி, பொதுப்பணி, திருமணம், திருமணத்தைப் பற்றிய விவரங்கள், குழந்தைகள், சொத்துக்கள் அடையும் காலங்களையும் அவற்றின் நிவர்த்திகளையும் சுகர் அகத்தியர் சிவவாக்கியர் வசிஷ்ட்டர் போன்ற மகரிஷிகளால் எழுதப்பெற்ற ஓலைச் சுவடிகள் மூலம் படித்து எழுதியும் தருகிறோம்.

எண் 6, லேக் ஏரியா, 2வது குறுக்குத் தெரு,
(பத்ம சேஷாத்திரி (ஸ்கூல்) அருகில்,
வள்ளுவர் கோட்டம், நுங்கம்பாக்கம், சென்னை – 600 034. **Ph. 8264665**

மண்ணில் நல்லவண்ணம் வாழ எங்களை நாடி வாருங்கள் நன்மைகள் பெறுவீர்

ஸ்ரீரஸ்து சுபமஸ்து – ஸ்ரீ வெங்கடேச ப்ரசன்ன

ஜெகத்குரு ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் ஆசியுடன்

27.5.99 முதல் 30.6.99 வரை ஆக்ரா, மதுரா, பிருந்தாவனம், டில்லி, ஹரிதுவாரம் ரிஷிகேசம், பத்ரிநாத், கேதார்நாத், காசி, கயா, பிரயாகை, அயோத்யா, சித்ரகூடம், நைமிசாரன்யம், நேபாளம், காட்மண்டு, முக்திநாத் உள்ளிட்ட யாத்திரை – 2 x 2 சூப்பர் டிலக்ஸ் பத்ரி, கேதார், நேபாளம் சென்று வரும் பஸ் சார்ஜ் உள்பட ரூ. 10,000/-

27.5.99 முதல் 15 நாட்கள் பத்திநாத், கேதார்நாத் யாத்திரை

7.6.99 முதல் 15 நாட்கள் காசி, கயா, பிரயாகை யாத்திரை

17.6.99 முதல் 12 நாட்கள் நேபாளம், முக்திநாத் யாத்திரை

19.7.99 முதல் 22 நாட்கள் அமர்நாத் மஹாதேவர் தரிசனம், ஸ்ரீ வைஷ்ணோ தேவி அமிர்தசரஸ் உள்ளிட்ட யாத்திரை 1st come 1st 40 நபர்கள் மட்டும்.

எங்கள் சார்ஜுகளில் ரயில் மற்றும் Super Deluxe பஸ் சார்ஜுகள், தங்கும் ரூம் வாடகை, ஆகாரம் ஆகிய அனைத்து சார்ஜுகளும் அடக்கம்.
எங்களுக்கு கிளை அலுவலகங்கள் ஏஜெண்ட்கள் கிடையாது.


மேலும் விபரங்களுக்கு:

ஸ்ரீ மஹாலக்ஷ்மி யாத்ரா சர்வீஸ்

1. யூசுப் லேன், அருணாசல ஆச்சாரி தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005.
டெலிபோன் : 8571957 - STD Code - 044

தண்ணீர் தொட்டியில் (போர்வெல் டேங்க்) வெட்டிவேர் கட்டிப் போட்டதாக சென்ற இதழில் ஒரு சகோதரி எழுதியிருந்தார். அதோடு, தமிழ் மருந்துக் கடைகளில் கிடைக்கும் விளாம்பிச்சை வேர் 2 ரூபாய்க்கு என வாங்கி வந்து மெல்லிய துணியில் சுற்றி ரப்பர் பேண்டு போட்டுக் கட்டி தண்ணீர் தொட்டியில் போட்டு விடுங்கள். குளிக்கும் நீர் முதல் கை கழுவும் நீர் வரை கமகம மணம் வீசும். வெயிலுக்கு நாள் முழுவதும் இந்நீரில் குளித்தால் உடம்பில் மணம் வீசும். பல் வலி வராது. அதோடு சமையல் ரூம் முதல் வாஷ்பேசின் வரை, பாத்ரூம், டாய்லெட் என எந்தக் குழாய் திறந்தாலும் கமகமவென மணமுடன் நீர் வீடே மணக்கும். (விளாம்பிச்சை வேர் தமிழ் மருந்துக் கடையில் கிடைக்கும்.)

– பாலா இராஜேந்திரன்.





சிம்ம ராசி:

மகம், பூரம், உத்திரம் 1–ஆம் பாதம்.

இராசிக்கு எட்டாம் இடத்தில் குருபகவானுடன் இராசி நாதன் சூரியன் சேர்ந்து சஞ்சாரம் செய்வது உடம்பில் உஷ்ண ரோகத்தை உண்டு செய்யும். சனியுடன் பாக்கியஸ்தானத்தில் சுக்கிரன் இருப்பது பெண்களுக்குள் கலகத்தையும் சச்சரவையும் உண்டுசெய்யும்.

இம்மாதம் வீண் அலைச்சலும் எண்ணிய செயல்கள் தடைபடுவதும் நிகழும். கடின முயற்சிக்குப் பின் மாத நடுப்பகுதியில் சற்று லாபம் எதிர்பார்க்கலாம். தகப்பனாருடன் மனக்கசப்பு உண்டாகும். எதிர்கால தொழில் பற்றி சஞ்சலமும் உண்டாகும். அமைதியான உங்கள் குணத்திற்கு நேர்மாறான செயல்கள் நடக்கும். ஆயினும் வழக்கம் போல் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். அரசாங்க வழக்குகளை சந்திப்பவர்கள் மாத பிற்பகுதியில் அதை நிறுத்தி வைக்க முடியும்.

அரசியல் சூழ்நிலை சாதகமாக இருக்கும். சொந்தத் தொழில் செய்பவர்கள் புதிய முயற்சியில் ஈடுபடுவதையோ, கடன் வாங்குவதையோ தவிர்க்கவும். தற்போது பூமி, வீடுகளை அடமானம் வைக்க வேண்டாம். சந்திர தசை நடப்பவர்கள் மற்றும் சனி உச்சம் பெற்று திகழப் பிறந்தவர்களும் சற்று சிரமத்தில் இருந்து தப்பிக்க முடியும். நல்ல தசாபுத்தி நடைபெற்று தசாநாதனும் பலமாக அமையப் பட்டவர்களுக்கு இந்தத் தொல்லைகள் குறையத்தான் செய்யும்.

இம்மாதம் சிவபெருமானை, நித்திய பிரதோஷம் எனப்படும் தினமும் மாலை வேளையில் சூரியன் மறையும் போது தரிசனம் செய்து வரவும்.




கன்னி ராசி:

உத்திரம் 2,3,4–ஆம் பாதங்கள், ஹஸ்தம், சித்திரை 1,2,–ஆம் பாதங்கள்.

விரையாதிபதி சூர்ய பகவான் ஸப்தம ஸ்தானத்தில் குருவுடன் கூடுவது உங்கள் மனைவியின் உடல்நிலையில் சங்கடம் தோற்றுவிக்கும். பொருளாதார வளர்ச்சி சீராக இருந்தாலும் எதிர்பாராத இம்மாதிரி செலவுகளைச் சமாளிக்க வேண்டி வரும். டி.வி. அல்லது கம்ப்யூட்டர் போன்றவை பழுதுபடக்கூடும். திருமணங்கள் நிச்சயம் ஆகும். ஆனாலும் எதிர்பார்த்த பணம் வருவதில் தாமதம் ஏற்படும். புதிய கூட்டு முயற்சியில் இறங்க வேண்டாம். மனைவி வழி உறவினர்களால் சிலருக்கு மனக்கசப்பு உண்டாகும்.


சர்க்கரை வியாதி உள்ளவர்கள் கண்களை அதிகம் கவனத்துடன் பார்த்துக் கொள்ளவும். இந்த மாத கிரக சேர்க்கை முரண்பாடான நிலைமையை உண்டாக்கலாம். தலைமை தாங்கி வழிநடத்தக்கூடிய நிலையில் உள்ளவர்கள் அதிக பொறுமை கடைப்பிடிக்க வேண்டும். ஜோதிட திறமை உள்ளவர்களுக்கு ஓரளவு அனுபவபூர்வமாக தங்கள் சூழ்நிலையைப் புரிந்து கொண்டு நடக்க இயலும். பெண்கள் உத்தியோகத்தில் மாற்றம் சாதகமாக இருக்காது. பெரும் முயற்சியால்தான் சிறு காரியங்களையும் சாதிக்க நேரிடும்.

குலதெய்வப் பூஜை செய்யாதவர்கள் கூடுமானவரை அதைச் செய்வது நலம் பயக்கும். ராகவேந்திர மகானை வியாழக் கிழமைதோறும் பூஜை செய்து வரவும். அல்லது வியாழக் கிழமைதோறும் ராகவேந்திர ஸ்வாமி மடத்திற்குச் சென்று வரவும்.



நமுத்துப் போன பிஸ்கட்டுகளை தோசைக் கல்லில் போட்டு சூடுபடுத்திக் கொள்ளவும். பின்பு சர்க்கரை, முந்திரி, ஏலக்காய் இவற்றுடன் பிஸ்கட்டையும் சேர்த்து மிக்சியில் பவுடராகப் பண்ணிக் கொள்ளவும். நெய் சேர்த்து உருண்டையாய்ப் பிடித்தால் ருசி அடடா.

— வசந்தி



துலா ராசி:

சித்திரை 3,4,-ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் - 1, 2, 3,-ஆம் பாதங்கள்.

இம்மாதம் உங்கள் ராசிக்கு பதினோராம் வீட்டுக்குரிய சூரிய பகவான் குருவுடன் கூடி ஆறாம் வீட்டில் குருவுடன் கூடி சஞ்சாரம் செய்கின்றார். உடல்நிலையில் அதிக தொல்லை கொடுக்கும் சிலருக்கு வயிறு அறுவை சிகிச்சை செய்ய வேண்டி வரலாம். மேலும் பித்த சம்பந்தமான தொல்லைகள் தோன்றக்கூடும். இருந்தாலும் குருதசை நடப்பவர்களுக்கு தொல்லை குறையக்கூடும். பணம் அதிக அளவு கையாளும் போது மிகுந்த கவனம் தேவை. கோர்ட் சம்பந்த வழக்குகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு சற்று தொல்லை கூடுதலாக இருக்கும்.

கம்ப்யூட்டர் தொழில் புரிபவர்கள் சற்று வியாபார லாபம் காண முடியும். பூமி மற்றும் வீடு சம்பந்தமான விஷயங்களில் சற்று நன்மை தரும் அம்சம் உண்டு. கடினமான சூழ்நிலை தோன்றினாலும் நண்பர்களால் ஆதரவு உண்டு. பெண்களுக்கு இம்மாதம் சற்று சாதகமான சூழ்நிலைகள் தோன்றும். அரசியல் வட்டாரங்களில் இருந்து அழைப்பு வரலாம். பேச்சால் புகழ் தேடி வரும். ஆனாலும் புதிய விரோதங்கள் தோன்றுவதை தவிர்க்க திட்டமிட்டு பேசுவது நல்லது.

குழந்தைகள் படிப்பு கவலை தந்தாலும் முடிவுகள் மகிழ்ச்சிகரமாக இருக்கும். சில பெண்களுக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு அழைப்பு வரக்கூடும். கல்வி பயிலும் பெண்களுக்கு முடிவுகள் வெற்றியாகும். உயர் கல்விக்கான முயற்சிகள் வெற்றியாகும்.

வெள்ளிக் கிழமைகளில் விரதம் இருந்து லலிதா சஹஸ்ரநாமம் பாராயணம் செய்வதும், பால் பாயசம் நைவேத்தியம் செய்வதும் தொல்லைகள் விலக வழிவகுக்கும். பாராயணம் செய்ய முடியாதவர்கள் வெள்ளிக் கிழமை தோறும் தங்கள் இல்லத்திற்கு அருகில் உள்ள ஆலயத்திற்குச் சென்று துர்கா பரமேஸ்வரியை வழிபட்டு வரவும்.

விருச்சிக ராசி:




விசாகம் 4-ஆம் பாதம், அனுஷம், கேட்டை.

ஜீவனாதிபதி சூரிய பகவான் இராசிக்கு ஐந்தாம் வீட்டில் குரு பகவானுடன் கூடி நிற்பது சாதகமான அம்சமாகும். புத்திரர்களால் மகிழ்ச்சி உண்டாகும். சுக்கிர தசை நடப்பவர்களுக்குப் பெண்களால் கலக்கமும், கணவன் மனைவி உறவுகளில் சங்கடங்களும் தோன்றும். சிலர் வேலை நிமித்தமாக தற்காலிகமாக பிரிந்து இருக்க நேரலாம். ஆனால் கடன் பாக்கி சிறிது வசூலாகும்.

மாணவ, மாணவிகள் படிப்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அரசியலில் தீவிரமாக உள்ளவர்கள் கடுமையான போட்டிகளை சமாளிக்க வேண்டி வரும். எதிரிகளைக் குறைத்து மதிப்பிட வேண்டாம். வாகனங்களில் செல்லும் போது நிதானமாக செல்வது நல்லது. பிரயாணங்கள் செல்லும் போது இடையூறுகள் நேரிடும். எனவே வினாயகப் பெருமானுக்கு அருகம்புல் மாலை போட்டு விட்டு பிரயாணம் தொடங்கவும்.

உடன் பிறந்தவர்களிடம் மற்றும் உறவினர்களிடம் கடும் சொற்கள் பேசுவதைத் தவிர்க்கவும். வேலை பளு சற்று கூடுதலாக இருக்கத்தான் செய்யும். எனினும் குழந்தைகளிடம் இதமாகப் பேசுங்கள். உயர் அதிகாரிகள் சாதகமாக இருப்பார்கள். எனவே தொழிலில் வரும் பிரச்னைகள் எளிதாகத் தீரும்.

இம்மாதம் முழுவதும் அரச மரத்தடி வினாயகரை பூஜித்து வருவது எல்லா தடைகளையும் விலக்கும். அல்லது வினாயகப் பெருமானை செவ்வாய் மாலையில் தரிசித்து வரவும்.



தனுசு ராசி:


மூலம், பூராடம், உத்திராடம் 1-ஆம் பாதம்.

பாக்யாதிபதி சூரிய பகவானும்

இராசியாதிபதி குரு பகவானும் கூடி நான்காம் இல்லத்தில் இருப்பது கடந்த கால கடன் உபாதைகளை குறைக்கும். சிலருக்கு அசையா சொத்துக்கள் வாங்கக் கூடிய நிலை ஏற்படும். பழைய வீட்டை இடித்து கட்டக் கூடிய வாய்ப்பு உண்டாகும். விரோதிகள் தற்போது இறங்கி வந்து நட்பு பாராட்டு வார்கள். தாயார் வழி உறவினர்களால் நன்மை உண்டு. பூமி வாங்கவும் விற்கவும் இது சாதகமான நேரம். கலைஞர்கள் வெளி நாடு செல்லக்கூடிய வாய்ப்பைப் பெறுவார்கள். தடைபட்டு வந்த திருமணம் கைகூடி வரும். அன்னிய தேசத்திற்கு முயற்சி செய்து வந்தவர்களுக்கு நேரம் கைகூடி வருகின்றது.

புதிய வாகனம் வாங்கும் வாய்ப்பு தேடி வரும். சந்திர தசை நடப்பவர்கள், சந்திரன் பலமாக இருப்பவர்கள் குளிர்தேச பிரயாண லாபம் கட்டாயம் அடைய முடியும். தர்ம ஸ்தாபனம் நடத்துபவர்களுக்கு தெய்வீக விஷயத்தில் ஈடுபாடு உள்ளவர்களுக்கு இதுவரை தடைபட்ட காரியங்கள் லாபமாக முடியும். சிலர் வீடு மாற வேண்டி வரலாம். உறவினர்களிடம் கடந்த கால கசப்பு உணர்வை கண்டவர்கள் கூட தற்போது சச்சரவு நீங்கி சுகம் காண்பார்கள். தெய்வீக சுற்றுலா செல்ல வாய்ப்பு தேடி வரும்.

கடந்த மாதம் போல் இம்மாதமும் தொடர்ந்து துர்கையை பூஜித்து வரவும். துர்கையை இல்லத்திலேயே பூஜித்தால், தேன், வாழைப்பழம் கலந்து நைவேத்தியம் செய்யவும். சங்கடங்கள் உங்களை அணுகாது.



மகர ராசி:

உத்திராடம் 2,3,4-ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2-ஆம் பாதங்கள்.

ராசிநாதன் சனி பகவானும் யோககாரகன் சுக்கிரனும் சேர்ந்து சுகஸ்தானத்தில் இருப்பது கடந்த காலத்தில் கார் மற்றும் ஸ்கூட்டர் போன்றவற்றை மாற்ற எண்ணியவர்களுக்கு சாதகமாக அமையும். பழைய வாகனங்களை விற்று புதிய வண்டி வாங்கலாம். கல்லூரி செல்லும் மாணவ/மாணவிகள் வாகனங்களில் செல்ல வாய்ப்பு உண்டாகும். குறிப்பாக கணிப்பொறி பயலும் மாணவிகள் மேன்மை அடைவர்.

குடும்பத்தில் தம்பதிகளுக்கு இடையில் இருந்து வந்த மனக்கசப்பு அகலும். வயோதிகர்களுக்கு உடல்நிலை அசௌகர்யம் தோன்றலாம். கவலைப்பட அவசியமில்லை. எளிதில் மருத்துவத்தால் குணமடையும். அரசுப் பணியில் உள்ளவர்கள் வேலையில் அதிக கவனம் செலுத்த வேண்டும். சிலருக்கு அடுத்தவர் செய்யும் தவறுகளால் பாதிப்பும், அதன் பழியும் ஏற்க நேரலாம். அடிக்கடி பிரயாணம் செய்யும் தொழில் செய்வோர் தற்சமயம் உஷ்ணத் தொல்லை தோன்றி அதனால் சிரமம் அடையலாம்.

வேலைக்குச் செல்லும் பெண்களுக்குப் பதவி உயர்வு உண்டாகும். சிலருக்கு அன்னிய மத ஆராய்ச்சியும் நாட்டமும் தோன்றும். ஆயினும் உங்கள் குலதெய்வத்தைப் பூஜை செய்வதை நிறுத்தக் கூடாது. வாரத்தில் ஒரு நாள் குறிப்பாக சனிக்கிழமை மௌன விரதம் இருப்பது நல்லது. ஆஞ்சநேய ஸ்வாமிக்கு துளசி மாலை சாற்றி இராமநாமம் சொல்லி வழிபடவும். தடைகள் விலகி நன்மை பெருகும்.

கும்ப ராசி:



அவிட்டம் 3,4-ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி முதல் மூன்று பாதங்கள்.

இராசிநாதன் சனீஸ்வர பகவான் நீச்சம் பெற்று 3-ஆம் இடத்தில் பலஹீனமாக இருந்தாலும் தனஸ்தானத்தில் குரு, சூரிய சேர்க்கை மனைவி வழி உறவால் நன்மை செய்யும். எதிர்பாராத செலவினங்களைச் சமாளிக்க

வடாம் பிழியும் போது குழலின் அடியில் தங்கும் மாவை தனியாக சேர்த்து வைத்து, பின் மாவு ஊறிய பாத்திரத்தின் அடியில் உள்ள கட்டி தட்டின மாவையும் சேர்த்துப் பிசைந்து பொடியாக நறுக்கிய வெங்காயத்தைச் சேர்த்து சிறிது, சிறிதாகக் கிள்ளி வைக்கலாம். இந்த வெங்காய வடாம் காய்ந்து பின் பொரித்தால் வெங்காய பக்கோடா போல் இருக்கும். வெங்காயம் பிடிக்காதவர்களுக்கு 2 ஸ்பூன் சிரகத்தை மாவுடன் சேர்த்து கிள்ளி வைக்கலாம்.

– என். விஜயலட்சுமி



எங்கள் வீட்டில் மொத்தம் எட்டு பேர் உள்ளோம். என் அம்மா இட்லி, தோசை செய்யும் போது ஒரு டபராவில் பத்து ஸ்பூன் மிளகாய்த் தூள் போட்டு அத்துடன் அதற்குத் தேவையான எண்ணெய் ஊற்றி ஒரு ஸ்பூன் போட்டு வைத்து விடுவார்கள். தேவையானவர்கள் கொஞ்சமாக மிளகாய்த் தூளைப் போட்டுக் கொள்ள வசதியாக இருக்கும். இதனால் இலையில் போட்டு வேஸ்ட் ஆவதைத் தவிர்க்கலாம்.


- என். விஜயலட்சுமி



உதவும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் சற்று நிதான போக்கை கடைப்பிடிக்கவும். மேலதிகாரிகளுடன் தேவையற்ற பேச்சால் விரோதம் உண்டுபண்ணிக் கொள்ள வேண்டாம்.

பஞ்சமாதிபதி புதன் நீசம் பெறுவது நண்பர்களால் தொல்லை உண்டுசெய்யும். வாகனங்கள் பழுதுபடுவதுடன் குடும்பத்தில் செலவுகளும் அதிகரிக்கும். ஆறாம் இடத்திலுள்ள இராகு நன்மைகள் புரிந்தாலும் சில விரோதிகளால் மறைமுக தொல்லை பயமுறுத்தத்தான் செய்யும். தேவையற்ற வார்த்தைகளைக் குறையுங்கள். ஏனென்றால் வார்த்தை வம்பு அல்லது கொடுக்கல் வாங்கல் பிரச்னைகளால் சிலர் காவல் துறை தொல்லைகளைச் சந்திக்க நேரிடும். தற்சமயம் ஆன்மீக சொற்பொழிவுகளை கேளுங்கள். மனதுக்கு அமைதி கிடைக்கும்.

ஸ்ரீராமஜெயம் தினமும் எழுதி வருவது மேன்மை தரும். காலை வேளையில் கோயிலுக்குச் சென்று வாருங்கள். பிரச்னைகளுக்கு எளிய முறையில் வழி கிடைக்கும். ஆன்மீக பெரியோரின் ஆலோசனைகளை தட்ட வேண்டாம். பெண்கள் எதிலும் தற்சமயம் நிதானப் போக்கை கடைபிடிப்பது மிக அவசியம். பொறுமையால் எதையும் ஜெயிக்க முடியும். அரச மர பிரதக்ஷணம் செய்வது நன்மை தரும். அல்லது தட்சிணாமூர்த்தி ஸ்வாமியை தினமும் தரிசனம் செய்வது எல்லா தொல்லைகளையும் குறைக்கும்.



மீன ராசி:

பூரட்டாதி 4-ம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி.

உங்கள் இராசிக்கு இரண்டாம் இடத்தில் லாபாதிபதியும் விரையாதிபதியுமான சனிஸ்வர பகவான் நீச்சம் பெற்று சஞ்சாரம் செய்கின்றார். இந்நிலையில் நீங்கள் எடுக்கும் முடிவுகள் மிக முக்கியமானவை. உங்கள் முடிவுகள் தற்போது சாதகமாக தெரிந்தாலும் பின்விளைவுகளை நன்கு யோசியுங்கள். குறிப்பாக சனி திசை நடைபெறுபவர்கள் அல்லது சனிபுத்தி நடைபெறுபவர்கள் எதையும் திட்டமிட்டு நிதானமாகச் சிந்தித்து செயல்படுங்கள். குறிப்பாக இரும்பு சம்பந்த தொழில்புரிவோர் அதிக அளவு செயல்திறனை கூட்டுதல் அவசியம். தொழிலில் போட்டிகள் கூடுவதுடன், வியாபார மும் மந்தப்படும்.

பணம் வரும் என்று நம்பும் வார்த்தைகளை விட வேண்டாம். முதுகு வலி, மற்றும் ஒருபக்க தலைவலி உண்டாகலாம். மருத்துவர் ஆலோசனைகளை அலட்சியம் செய்ய வேண்டாம். அரசாங்க விஷயங்களில் எதையும் அலட்சியம் காட்ட வேண்டாம். ஆன்மீக பற்றுள்ளவர்களுக்கும், ஆன்மீக பெரியோர்களாக திகழ்பவர்களுக்கும் சோதனைகள் வந்து விலகும். தர்மஸ்தாபனம் நடத்துபவர்கள் கணக்கு வழக்குகளை சரிபார்த்துக் கொள்ளவும்.

கலைத்துறையில் உள்ளவர்கள் மற்றவர்களின் விரோதத்தை சம்பாதிக்க நேரலாம். வார்த்தைகளை யோசனை செய்து பேசுவது நல்லது. அரசியலில் உள்ளவர்கள் திறமையாக நடந்து எதிரியை ஜெயிப்பார்கள். குறிப்பாக ரேவதி நட்சத்திரக்காரர்கள் எதிரியை வீழ்த்தி விடுவார். மருத்துவத்துறை பணியாளர்கள் இரவு பகல் வேலை பளு காரணமாக உழைக்க நேரலாம். குழந்தைகள் உடல்நலனில் அதிகக் கவனம் செலுத்தவும். சனிக்கிழமைகளில் நீண்ட பிரயாணத்தைத் தவிர்க்கவும்.

ஏகாதசி அன்று விஷ்ணுவை பூஜை செய்யுங்கள். கிருஷ்ண பகவானுக்கு வெண்ணெய் நைவேத்தியம் செய்யுங்கள். இல்லத்திலேயே பூஜை செய்பவர்கள் புதன்கிழமை தோறும் கிருஷ்ண பகவானுக்கு அவல் படைத்து ஸ்துதி செய்து வர தீமைகள் விலகி நன்மைகள் பெருகும்.

— என். கண்ணன் பட்டாச்சார்யா

"போன்சாய்" கட்டுரை மனதை ரொம்ப உறுத்தியது. நெடிது வளர்ந்து கம்பீரமாக நின்று பல ஆண்டுகள் பழங்களையும், காய்களையும், நிழலையும் தரக்கூடிய மரங்களை கலை என்ற பெயரில் கொலை செய்கிறார்களே? இயற்கையாக தேவைப்படும் மண், எரு, தண்ணீர், சூரிய வெளிச்சம் எதுவும் போதுமான அளவு கிடைக்காமல் சாகவும் விடாமல் வளரவும் விடாமல் அவ்வப்போது 'கட்' பண்ணி இதுவா ஒரு கலை?

சிறந்த குழந்தை அழகாக சிறியதாக இருக்கிறது என்பதற்காக அதை வளர விடாமல் சரியானபடி பாலூட்டாமல் ஒன்றரை அடி உயரத்திலேயே தொட்டிலுக்குள்ளேயே காலம் முழுவதும் வைத்துச் சீராட்ட எந்தத் தாயாவது விரும்புவாளா? வீட்டிற்குள் வளர்க்கவும், தொட்டிகளில் வளர்க்கவும் எத்தனையோ

'இதுவா கலை? கலையில்லை கொலை!'

வகை பூச் செடிகளும்; குரோட்டன்ஸ்களும் இருக்க கம்பீரமாக வளர்ந்து பலன் தரும் மரங்களை இவ்வாறு கலை என்ற பெயரில் வளர்ப்பது ''சித்திரவதைக் கலை'' என்றுதான் சொல்ல வேண்டும்.

சகுந்தலா, திருச்சி.

லதா முகுந்தனின் "யார் அது?" சிறுகதை சிந்தனைக்குரியது. பணத்தைத் துரத்திக் கொண்டே ஓடும் இயந்திர உலகத்தில் நாம் "உறவுகள்" என்ற உள்ளதத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக அறுத்துக் கொண்டு வருகிறோம். நாளடைவில் இது மனிதநேயத்தையே மாய்த்துவிடும் வாய்ப்புள்ளது. இது நம் பாரத தேசத்திற்கு நல்லதல்ல. ஒரு சின்னஞ்சிறு விஷயத்தை எடுத்துக் கொண்டு நம்மிடையே வளர்ந்து வரும் இந்தக் குறைபாட்டை அழகுறச் சுட்டிக்காட்டிய லதா முகுந்தன் பாராட்டுக்குரியவர்.

திருவண்ணாதபுரம்,
தி.சு. பாலசுப்பிரமணியன்.

மலரில் இடம்பெற்று வரும் பிரபலமான இடம்; பக்கத்தில் இருக்கும் பிரமாதமான இடம்' கட்டுரைகள் மிக அருமை. வெளி மாநில வாசகியான எனக்கு இது போன்ற வாசகர்களின் அரிய தகவல்கள் அரிய பொக்கிஷம்! நன்றி!

கேரளா, என். பத்மாவதி.

வீட்டில் பிள்ளைகள் மண்ணில் இறங்கினால் நாலு தட்டு தட்டி உள்ளே இழுத்துச் செல்லும் இந்தக் காலத்தில், பிள்ளைகளை மண்ணில் விளையாட அனுமதிக்கணும் என்ற செய்தி ஏற்றுக் கொள்ள முடியாதது. ஆனாலும், அதில் மறைந்திருக்கும் விஞ்ஞானப் பூர்வமான உண்மைகள் வியக்க வைத்தது.

மேலப்பாதி, என். ராஜி.

'கொஞ்ச நாள் யாருமே இல்லாது தனிமையிலே வாழ வேண்டிய சூழ்நிலை ஏற்படுமானால், அப்போது தெரியும் மனிதர்களில் அன்பின் மகிமையும் உறவினர்களின் பாசமும்' - மஞ்சுளா ரமேஷின் சில வார்த்தைகள் கட்டுரைத் தொடரில் மேற்கண்ட வார்த்தைகள் மனதில் பதிந்தது.

வயலூர், மு. இராமசாமி.

'ஒரே கல்லில் மூன்று மாங்காய்' கதை மிகவும் சுவாரஸ்யமாய் இருந்தது. ஆசிரியர் மிகவும் அனுபவித்து எழுதியிருக்கிறார். சொந்த அனுபவமோ என்று தோன்றுகிறது. இந்தக் கதையின் வரும் பெண்ணின் அப்பாவைப் போன்ற ஏமாளிகளும் 'நாராயண மூர்த்தி' குடும்பத்தினர் போன்ற கில்லாடிகளும் நம் சமூகத்தில் நிறையவே இருக்கிறார்கள்.

திருநெல்வேலி, வி. திலகம்.

மங்கையர் மலரில் 'கருத்து அரங்கம்' ஆரம்பிக்கப்பட்டது பாராட்டுக்குரியது. அதிலும் பிரசுரமான ஒரு கற்பனைக் கதையை வைத்து ஒரு மாமியார் - மருமகள் பிரச்னையை அலசி கேள்வியெழுப்பிய டாக்டர் கிருஷ்ணா அவர்களுக்கு ஆசிரியர் அளித்த பதிலும் அருமை. கூடவே கதாசிரியரின் கருத்தையும் கேட்டுப் பிரசுரித்திருக்கலாமே!

சென்னை - 14,
கவிஞர் அய்யாறு வாசுதேவன்.

கொல்லிப்பாவை என்ற தலைப்பில் சகோதரி ருக்மணி சிதம்பரம் அவர்கள் அறப்பளீஸ்வரர் கோயிலில் இருந்து 750 படிகள் ஏறிச் சென்றால் ஆகாய கங்கை என்றும் மிகப் பெரிய 130 அடி நீர்வீழ்ச்சியை கண்டு மகிழலாம் என்றும் எழுதியிருப்பது தவறு. மலை முகடு அதாவது உச்சியில் தான் அறப்பளீஸ்வரர் திருக்கோயில் உள்ளது. அதற்கு மேல் 750 படி ஏற முடியாது. 750 படிகள் இறங்கிச் சென்றுதான் அந்த நீர்வீழ்ச்சியைக் கண்டு மகிழ முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



திட்டக்குடி, வி. எழில்ராணி.

புதுமணத் தம்பதியினருக்கு

'பல்' சுவைச் செய்திகள்





எண்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம். அதில் சீரான பற்களும் அதைத் தாங்கி நிற்கும் தாடையும் மனிதனுக்கு அழகைத் தருவதுடன் வாழ்வில் தன்னம்பிக்கையும் தருகின்றன. நாம் எந்த அளவிற்கு நமது அழகிலும் ஆரோக்கியத்திலும் கவனம் செலுத்துகிறோம் என்பதனை தெளிவாக எடுத்துக்காட்டுவது நமது பற்களாகும். பேசும் போதும், சிரிக்கும்போதும் வரிசைக்கிரமமாக இருக்கும் பற்கள் ஒரு தனிக்கவர்ச்சியை பெண்களுக்கும், ஆண்களுக்கும் தருகிறது.

திருமணம் என்பது ஒவ்வொரு ஆணுக்கும், பெண்ணுக்கும் ஆண்டவன் தரும் வர பிரசாதமாகும். மனமும், உடலும் ஒன்று சேரும் திருமண வாழ்வில்! மனத்தையும் உடலையும் தூய்மையாக வைக்க வேண்டியது நமது கடமை. நமது உடல் அமைப்பில் பற்களுக்கு மிக முக்கியத்துவம் உண்டு. ஆரோக்கியமான, அழகான பல்வரிசை தான் ஒருவரின் வசீகர தோற்றத்திற்கு உதவுகிறது. பற்கள் கோணலாகவும், நீளமாகவும் அமைந்து விட்டால் முக வசீகரமே கெட்டு விடும். அதுவும் பிரச்னைக்கு உரியவருக்குத் திருமணம் நடைபெறுவதுகூட பெரும் சோதனைதான். திருமணம் தான் முடிந்து விட்டதே என்று அலட்சியமாக இல்லாமல் அதன் பிறகு கூட கணவன் மனைவியின் சந்தோஷமான வாழ்க்கைக்கு ஆரோக்கியம் அவசியமாகிறது.

பற்களை பேணி காப்பது அவசியம். பற்களை பேணி காப்பது எப்படி? பற்களினால் ஏற்படும் பிரச்னைகளைப் பற்றி இங்கு விளக்கம் கூற வருகிறார் புகழ் பெற்ற பல், முகச் சீரமைப்பு நிபுணர் டாக்டர் எஸ்.எம். பாலாஜி அவர்கள். முகச் சீரமைப்பு 'பல்' என்று சொன்னாலே 'டாக்டர் பாலாஜி'தான் என்று கூறும் அளவிற்கு தமிழகத்திலும் உலக அரங்கங்களிலும் புகழ் பெற்றிருக்கும் டாக்டர் பாலாஜி வெளிநாட்டில் கற்றுத் தேர்ந்த பல்வேறு புதிய அறுவை சிகிச்சை முறைகளை உடனுக்குடன் தன் நாட்டு மக்களுக்கு பயன்படுத்தி அவர்களின் வாழ்வு மலர்களை மலரச் செய்கிறவர். டாக்டர் பாலாஜியின் 'பல்', முகச் சீரமைப்பு மையம், சென்னை தேனாம்பேட்டை எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரி எதிரில் அமைந்துள்ளது. அவரின் சொந்தமான இக்கூடத்தில் அவரை நேரில் சென்று பார்த்து அவரின் கருத்துக்களை 'புதுமணத் தம்பதிகளுக்கு' போனசாக வழங்குகிறோம்...

''உடல் நல பராமரிப்பில் பல் மருத்துவமும் ஒன்றாகும். பற்கள் மிகவும் பேணப்பட வேண்டிய ஒரு நல்ல உறுப்பாகும். உலகின் பல்வேறு



பெரிய அல்லது நிதான அளவில் உள்ள அப்பளத்தின் ஒரு பகுதியில் கொஞ்சம் நெய்யைத் தடவி விட்டு, மறுபக்கம் சுடவும். இது பொரித்த அப்பளம் மாதிரி இருக்கும். நெய் தடவிய பக்கம் கொஞ்சம் தக்காளி சாஸ் தடவவும். பொதினா, கொத்தமல்லி தழையை பொடிப்பொடியாக நறுக்கி தூவவும். தேவையானால் இதற்கு மேல் லேசாக சர்க்கரைப் பொடி செய்ததை தூவவும். கொஞ்சம் அரிசிப் பொரியையும் பரப்பி, ஒரு தட்டிலே வைத்துக் கொடுத்தால் குழந்தைகள் விரும்பி உண்பார்கள். புது மாதிரியாகவுமிருக்கும்.

— பி. விஜயலட்சுமி

பாகங்களின் பலப்பல பெயர்களால் அழைக்கப்படும் வாய் துர்நாற்றம் ஒரு சமூகப் பிரச்சனையாகவே கருதப்படுகிறது. திரைப் படங்களில் பற்பசை பற்றி வரும் விளம்பரப் படங்களில் கணவனை விட்டு மனைவி பிரிவதற்கும், நேர்முகத் தேர்வில் தோல்வியடைந்து வேலை கிடைக்காமல் போனதற்கும் காரணம் வாய் துர்நாற்றமே என்று காட்டப்படுகிறது. அவைகள் அளவுக்கு அதிகமாக சித்தரிக்கப்படுகிறதோ என்று நினைக்கத் தோன்றும்! ஆனால் அது நூற்றுக்கு நூறு உண்மை.

கணவன் மனைவி உறவில், ஏன், காதலர்களுக்கு இடையே கூட 'முத்தம்' கொடுப்பது என்பது தங்களின் அன்பை வெளிக்காட்டுவது. உணர்ச்சிகளின் சங்கமத்தில் 'முத்தம்' முக்கிய பங்கு வகிக்கிறது. ஒருவருக்கு ஒருவர் பரிமாறி கொள்ளும் நிலையில் வாய் துர்நாற்றம் வீசக் கூடியதாக இருந்தால் அளவுக்கு அதிகமான அன்புகூட வெறுப்பாக மாறி இருவருக்குமிடையில் விரிசலை ஏற்படுத்தக்கூடும். அருவருப்பு ஏற்படும் வாய் துர்நாற்றத்திற்கு பல காரணங்கள் உண்டு. அவை வாய் மற்றும் வாய் சார்ந்த பகுதிகளில் நோய்களின் காரணத்தால் ஏற்படும்.

காலையில் எழுந்தவுடன் வாயிலிருந்து ஒரு வித துர்நாற்றம் வீசுவதைக் காணலாம். இதற்குக் காரணம் இரவில் வாயில் உமிழ்நீர் குறைவதும் உரிந்துவிட்ட படர் திசு (Desquamated Epithelium) வாயில் இருந்து அகற்றப்படாததுமேயாகும். மற்றும் பற்சொத்தை, பற்களில் சீழ் கட்டுவது, ஈறு நோய்கள், பற்களுக்கிடையே உணவுப் பொருட்கள் தங்கி அழுகுவது, பற்கள் சரிவர சுத்தம் செய்யாமல் வாய் கொப்பளியாமல் இருப்பதே வாய் துர்நாற்றத்திற்கான பொதுவான காரணங்கள். உடலின் மற்ற பகுதிகளில் ஏற்படும் வியாதியின் காரணங்களாலும் வாய் துர்நாற்றம் ஏற்படும். என்ன காரணம் என்று கண்டறிந்து சிகிச்சை செய்தால்தான் வாய் நாற்றம் ஒழியும்.

பெண் என்பவள் கணவரது அன்புக்கும் பரிவுக்கும், பாராட்டுதலுக்கும் ஏங்கும் போது தொடர்ந்து சிகரெட், பீடி, சுருட்டு பிடிப்பதால் ஏற்படும் துர்நாற்றமுடன் கணவன் அவளை நெருங்கினால் எப்படி இருக்கும்? ஆகவே கணவர்களே! இந்த கெட்ட பழக்கத்தை விட்டு விடுங்கள். பற்பசை கொண்டு ஒரு நாளைக்குக் குறைந்தது இரண்டு தடவையாவது பல் துலக்குவதுதான் நவீன வாழ்க்கையில் எளிதாக பல்லைச் சுத்தப்படுத்தும் வழி.

பல பெண்கள் நகம் கடிப்பதை ஒரு ஃபாஷனாகவும் விட முடியாத பழக்கமாகவும் கொண்டுள்ளனர். நகத்தினிடையில் சேரும் அழுக்குகள் வயிற்றில் சேரும் என்பது தெரிந்த விசயம். பல்லின் முற்பகுதியும் தேயும் என்பதையும் தெரிந்து கொள்ளுங்கள்.

பலருக்கு பற்களில் மஞ்சள் நிறத்தில் பற்கறை படிந்துள்ளதை காணலாம். அவற்றை நீக்கினால் பல் ஆட்டம் கொடுத்து விடும், கூச்சமாக இருக்கும், பல் ஆடாமல் இருப்பதற்குக் கறை உதவியாக இருக்கிறது என்ற தவறான எண்ணத்தில் பல தம்பதியர் வாழ்கிறார்கள். பற்கறைகள், பாதுகாப்பு என்பது தவறான நம்பிக்கையே, உடனடியாகப் பல் மருத்துவரைப் பார்த்துக் கறையை நீக்குவது நல்லது. பற்களின் கழுத்துப் பாகத்தில் கறை படிகிறது. உமிழ் நீரில் உள்ள கால்சியம் உப்புகள் இந்தப் பற்களோடு சேருவதால் இந்தப் பற்களையும் சேர்த்து பல்லைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு இருக்கிறது. நாளடைவில் இது ஈறுகளை உறுத்திப் பல்லிலிருந்து இரத்தம் கசியச் செய்து விடும். பின் எலும்புகளையும் அழித்துப் பல் அசைவு ஏற்படும். பல் விழத் தொடங்கும். மேலும் ஈறுகுழியில் பாக்டீரியாக்கள் தங்கிச் சீழ் உண்டாகி வாய் நாற்றமும் ஏற்படும். உடனடியாக பல் சுத்தம் செய்வது பாதுகாப்பானது.

பல்லுக்குச் சுவர் ஈறுகள். சுவர் இல்லையேல் சித்திரம் இல்லை. ஈறுகளில் இரத்தம் வடிதலும் பலருக்கு உள்ள பிரச்சனைகளில் ஒன்றாகும். பற்படலம், பற்காரை, தொத்து நோய்கள், உணவில் வைட்டமின் 'சி'

குறைவு, சிறுமிகளுக்குப் பூப்பெய்தும் பருவம், இரத்த நோய்கள், இரத்த குழல் நோய்கள், இரத்த உறைவுக் கோளாறு எனப் பலவகையாகும். இக்குறை உள்ளவர்கள் உடனடியாக பல் மருத்துவரிடம் காட்டி சிகிச்சை பெறுவது நல்லது.

ஞானப்பல் என்று சொல்லப்படும் கடைவாயின் கடைசிப்பல் முளைக்கும்போது தாடையிலே திருகுவலி ஏற்பட்டு கன்னத்தில் வீக்கம் ஏற்படும். இதை சிலர் 'பொன்னுக்கு வீங்கி' என தவறாக நினைத்து பச்சிலை அரைத்து மஞ்சளுடன் பூசுவார்கள். வீக்கம் கண்டவுடன் அது 'பொன்னுக்கு வீங்கி' என முடிவு செய்யும்முன் அது 'பல்லுக்கு வீங்கி' அதுவும் ஞானப்பல்லுக்கு வீங்கி எனக் கண்டறிந்து பல் மருத்துவ சிகிச்சை பெறுவது உத்தமம்.

பெண்களில் சிலருக்கு பூப்பெய்தும்போதும், கர்ப்பமடைந்திருக்கும்போதும், மாதவிலக்கு நிற்கும்போதும் ஈறுகள் தடித்து, இடைவிடாது இரத்தம் கசியலாம். உடலில் உள்ள நாளமில்லா சுரப்பிகள் மாறுபட்டு வேலை செய்வதால் இந்நிலை ஏற்படும். இது இயற்கையாக நிகழ்வது. அந்தந்த பருவங்கள் முடிந்ததும், சுரப்பிகள் சீரானதும் இரத்தம் கசிவது நின்றுவிடும். ஆகவே இந்நிலைகளில் அச்சப்படத் தேவையில்லை.

வளரும் குழந்தைகளும் சரி, வளர்ந்துவிட்ட நாமும் சரி, சாக்லேட்களின் மீதுள்ள மோகத்தைத் தவிர்ப்பது நல்லது. பற்சொத்தை ஏற்பட காரணம், பற்களை சரிவர துலக்காத போது உண்ணும் உணவில் உள்ள சர்க்கரைப் பொருட்களும், சாக்லேட், ஐஸ்கிரீம், பிஸ்கட் போன்ற பொருட்களும் பற்களின் இடைவெளியிலும், பற்களின் குழிகளிலும் தங்கும்போது அவற்றை உமிழ்நீரில் உள்ள அமில அணுக்கள் தாக்குகின்றன. அதனால் அங்கு தங்கிய பொருட்களில் அமிலத் தன்மை ஏற்பட்டு அந்த அமிலம் பற்களில் தங்கி பற்சிப்பியை சிறுக, சிறுக சிதைக்கிறது. இந்த சிதைவையே பற்சொத்தை என்று சொல்கிறோம். பற்சொத்தை ஒரு கரும்புள்ளியாகவோ அல்லது பட்டையாகவோ இருக்கும். பற்சொத்தை பற்சிப்பியில் இருக்கும்போது வலி இருக்காது. ஏனென்றால் பற்சிப்பியில் நரம்புகள் கிடையாது. நரம்புகளில் பற்சொத்தை வேகமாக பரவி குழியை உண்டாக்கும்போது கூச்சமும், பற்கூழை தாக்கும்போது தாங்க முடியாத வலியும் ஏற்படும். பிறகு பற்கூழலில் இருந்து நச்சுப்பொருட்கள் வேர் முனைக்குச் சென்று எலும்பில் சீழை உண்டாக்கும். இந்த சீழ் எலும்பை பொத்துக்கொண்டு கன்னத்தின் பகுதியிலும், முகத்திலும் சீழ் கட்டியாக உருவாகி வலியை கொடுக்கும்.

ஒரு பெண் கருவுறும்போது, மூன்றாம் மாதத்தில் கருவிலுள்ள குழந்தையின் பற்களின் அஸ்திவாரம் தோன்ற ஆரம்பிக்கின்றது. பற்களின் பாதுகாப்பு அப்பொழுது முதலே ஆரம்பமாகிறது. அந்நேரத்தில் கர்ப்பிணி பெண்கள் கால்சியம், புரதச்சத்து நிறைந்த உணவு வகைகளையும், இச்சத்து நிறைந்த பாலையும் பருகுவது அவசியம். கால்சியம், வைட்டமின் 'ஏ'யும் 'சி'யும் குறைவதினால் பற்களில் பெரும்பாலான குறைபாடுகள் தோன்றுகின்றன.

குழந்தைகள் கைச்சூப்பும் பழக்கம் உடையவர்களாய் இருந்தால் அதை உடனே நிறுத்த முயற்சியுங்கள். தொடர்ந்து இப்பழக்கம் இருக்குமானால் பற்கள் முன்பக்கம் தள்ளியபடி வளர்ந்து அழகையே கெடுக்கும். அப்படியும் எடுப்பாக வந்து அழகையே பாழாக்கும் நிலை வந்துவிட்டால் கவலைப்படாதீர்கள். 'ஒரே நாளில் அறுவை சிகிச்சை மூலம் சரி செய்து விடுகிறேன்' என்கிறார் டாக்டர் பாலாஜி.

அன்றாட வாழ்க்கையில் 'தலைவலி'யும் நம்மில் பல பேருக்கு 99% சதவீதம் பெரும் பிரச்சனையாக உள்ளது. தலைவலிக்கு பல் மருத்துவமும் முக்கிய பங்கு வகிக்கிறது. பொதுவாக பற்களில் சொத்தை இருந்து பல்வலி வந்தால் அந்த வலி தலைவலியாகவோ, காது வலியாகவோ மாற வாய்ப்புண்டு. இதற்கு ஆங்கிலத்தில் Referred Pain என்று பெயர்.

மேலும் கீழும் உள்ள பற்களை இயங்கச் செய்யும் தாடை மூட்டு (Jaw Joint) வினோதமானது - வித்தியாசமானது.

சாதம் பண்ணுவதற்கு முன்பு அரிசியை அலம்புகிறோம் அல்லவா. அரிசி அலம்பும் நீரின் நிறம் கொண்டே அரிசி பழையதா, புதிதா எனத் தெரிந்து விடும். பழைய அரிசி ஆனால் நீர் சாதாரணமாய் இருக்கும். புதிய அரிசி ஆனால் அரிசி அலம்பிய நீர் வெள்ளையாக இருக்கும். இதற்கு தகுந்தாற்போல் கூடவோ, குறையவோ நீர் வைக்கவும்.

இன்னொரு முறை: அரிசி வாங்கும்போதே அரிசி முனை வெள்ளையாக இருந்தால் புது அரிசி. சாதாரணமாய் ஒரே மாதிரி இருந்தால் பழைய அரிசி. — பி. விஜயலட்சுமி





செம்பருத்திப் பூவின் இதழ்கள், மற்றும் கொஞ்சம் தண்ணீர் சேர்த்து கொதிக்க வைத்து அந்த நீரை ஒரு நாளைக்கு மூன்றுமுறை பருகினால், இரத்த அழுத்தம் தானாகக் குறைந்து விடும்!

– போரூர் ஆர். சீதா

மூட்டுக்கள் இரண்டு அறைகள் உண்டு. ஒரு தட்டு (DISC) அதைப் பிரிக்கிறது. கீழ்த் தாடையில், மேல் தாடையில், பற்களில் சொத்தை இருந்து அதை பிடுங்கி விட்டால் உணவு உண்ணும்போது கடித்து சாப்பிடு வதில் வித்தியாசப்படும். தாடையின் ஒரு பக்கத்திலுள்ள ஒரு பல்லை மட்டும் பிடுங்கினால் பிரச்சனையில்லை. ஒன்றுக்கு மேற்பட்ட பற்களை பிடுங்கினால்தான் பிரச்சனை. அதனால் சாப்பிடும்போது தாடைகளின் அசைவில் பாலன்ஸ் இழந்து வலி எடுக்கும். தாடை மூட்டிலிருந்து தலையிலுள்ள சதைக்குள் செல்லும் நரம்பிற்கு (Auriculo Temporal Nerve) என்று பெயர். நரம்பிற்குக் கிளை நரம்புகளும் உண்டு. தாடை மூட்டில் வலி இருந்தால் கிளை நரம்பிலும் வலி ஏற்பட்டு தலைவலி வரும்.

சைனஸ் (காற்றறைகள்) என்பது நாம் சுவாசிக்கும் காற்றை சுத்திகரித்து இதயத்திற்கு அனுப்புவதாகும். சைனஸ் பிரச்சனையாலும் தலைவலி வரும். மேல் தாடையிலுள்ள கடை வாய்ப்பல்லின் வேர்களுக்கும் காற்றறைகளிலுள்ள (சைனஸ்) எலும்புகளுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. மேல் தாடையில் சொத்தை ஏற்பட்டு அதனால் உண்டாகும் கிருமிகள் காற்றறைகளை தாக்கி சீழ் பிடித்தால் – அதன் மூலம் தலைவலி வரும்.

நமக்கு 18 வயதில் ஞானப்பல் முளைக்கும். அப்போது அது முளைக்கும் இடத்தைச் சுற்றியுள்ள சதை பகுதியெல்லாம் வலி ஏற்படலாம். ஞானப்பல் முளைக்க இடம் இல்லையென்றால் தாறுமாறாக முளைக்கும். அப்போது அது அருகிலுள்ள பல், நரம்பை அழுத்தும். அதனால் தலைவலி வரும். ஞானப்பல் முளைக்கும் இடத்திலுள்ள சதையில் சீழ் பிடித்தால் (Infection) அதனாலும் தலைவலி வரும். பல்செட் பொருத்தும்போது அது சரியாகப் பொருத்தாவிட்டால் தாடை மூட்டு பாதிக்கப்பட்டு பாலன்ஸ் இழந்து அதனாலும் நரம்பு வலி, தலைவலி வரும். இப்படி ஒவ்வொன்றினாலும் வலி ஏற்படுவது எதனால் என்பதன் காரணம் அறிந்து அதற்கு ஏற்றவாறு தனித்தனி சிகிச்சை முறைகளை மேற்கொள்ள வேண்டும். அதற்கு பல் மருத்துவரை அணுகுவதுதான் சரியானது என்று கூறும் டாக்டர் பாலாஜி அவர்கள், பலரின் புன்னகைகளை அர்த்தமாக்கிக் கொண்டிருக்கிறார்.

டாக்டர் பாலாஜி முக சீரமைப்பு அறுவை சிகிச்சைக்காக அடிக்கடி வெளிநாடுகள் சென்று வருபவர். மிக நவீனமாக வந்திருக்கும் ஒரு முறையைப் பற்றிக் குறிப்பிட்டார். இளம் தம்பதிகள் தங்களிடம் உள்ள குறைபாடுகளை இந்த சிகிச்சைகளின் மூலம் அகற்றி மேலும் பொலிவு பெறலாம் என்கிறார் இவர்...

முக வளர்ச்சி குறைபாடுகளில் பெரும்பாலும் காண்பது அதிகமாக வளர்ந்த மேல்தாடைதான். இதைத் தவிர முன்னே நீண்டு இருக்கும் கீழ்தாடை. குன்றிய மேல் அல்லது கீழ்தாடை. உதடு மற்றும் அண்ணப் பிளவு, தாடை மூட்டு நோயினால் குன்றிய கீழ்தாடை, புற்று நோயினால் இழந்த தாடை எலும்பு என்று பல காரணங்களினால் முகத்தில் உள்ள எலும்புகளின் வளர்ச்சி மற்றும் அமைப்பு பாதிக்கப்பட்டிருக்கும். மேல்கண்ட நிலைகளில் ஏதேனும் ஒரு உறுப்பு மட்டும் குறைபாடுடன் இருக்கும். ஆனால் ட்ரேச்சர் – காலின் (Treacher - Collin Syndrome) என்ற குறைபாட்டில் முகத்தில் உள்ள நெற்றி எலும்பு, கன்ன எலும்பு, மூக்கு மற்றும்

நீங்களும் கோடீஸ்வரர் ஆகலாம்

வசந்தம் வாசல் கதவை தட்டுவதை வேண்டாமென்று சொல்பவர் உண்டோ? ஆனால் எல்லோருக்கும் அந்த பாக்யம் கிடைக்குமா? அதற்கென்று அதிர்ஷ்டம் உள்ளவர்களை மட்டுமே செல்வம் நாடிவரும். கோடி கோடியாக தேடி வரும். நமக்கும் இந்த அரிய வாய்ப்பு கிடைக்குமா?



கண்டிப்பாக கிடைக்கும். பெயரில் வசிகரமும் கையெழுத்தில் அனைவரையும் கவரும் தன்மையும் சரியாக அமைந்தால் நினைத்தது நடக்கும். கேட்டது கிடைக்கும். நாமும் கோடீஸ்வரர் வரிசையில் இடம்பெறலாம். இப்படி சொல்பவர் கோவை மாவட்டம் அன்னூர் அருகே உள்ள கணுவக்கரை நல்லாந் தோட்டத்தைச் சேர்ந்த அதிர்ஷ்ட விஞ்ஞான ஜோதிடரும் நியூமராலஜி நிபுணரான கே.ஆர். பிரபாகர்ராஜ் ஆவார். அவர் கூறுகிறார்:-

ஒரு மனிதனின் வெற்றி தோல்விக்கு முக்கிய காரணம் பெயரும் கையெழுத்தும்தான். நியூமராலஜி தொழில் வசியம், நேமாலஜி, சிக்னேசலாஜி- இவை நான்கும் பொருந்தும்படி அதிர்ஷ்டப் பெயர் அமைந்தால் அனைத்து சுகங்களும் கிடைக்கும். பணம், பதவி, புகழ் மென்மேலும் பெருகும்.

பெயர் மாற்றத்தால் ஒருவர் பெரும் செல்வந்தர் ஆகலாம். அதற்காக பெயரை முழுவதுமாக மாற்ற வேண்டிய அவசியம் இல்லை.

அப்படி மாற்றும்போது என் சாஸ்திரப்படி பெயர் வசியம், தொழில் வசியம், கையெழுத்து வசியம் அமைய வேண்டும் அப்போதுதான் அதிர்ஷ்டம் கிட்டும். இதில் ஒன்பது வகை அதிர்ஷ்டவகை வசிய குறிப்புகள் உள்ளன. இதை நன்கு ஆராய்ந்து பெயர் வைத்தால் நீங்களும் வி.ஐ.பி. ஆகலாம்.

அதிர்ஷ்ட பெயரால் அன்பான அழகான மனைவி (நல்ல கணவன்) இனிய குழந்தைகள், வசதி நிறைந்த வீடுகள், வளம்தரும் தொழில் வெளிநாட்டுப் பயணம் ஆரோக்கிய உடல், அதிர்ஷ்டம் அனைத்தும் உண்டாகும். எந்த வயதைச் சார்ந்தவராக இருந்தாலும் அதிர்ஷ்ட பெயரை மாற்றி வாழ்வின் முழுப் பயனைப் பெறலாம். ரஜினிகாந்த், ரம்பா, விஜய், சிம்ரன் என்ற பெயர்களை ஆராய்ந்தால்



அதில் வசியம் இருப்பது தெரியும். இப்பெயர்கள் யாருக்கு பொருந்தி வருகிறதோ அவர்களுக்குத்தான் அதிர்ஷ்டம் உண்டாகும்.

நியூமராலஜி என்பது விஞ்ஞான சாஸ்திரம் தெய்வீகக் கலை இதன்படி உலக அளவில் ஆயிரக்கணக்கானவர்களுக்கு நாம் அதிர்ஷ்டப் பெயர்களை மாற்றி அவர்களை புகழ்மிக்கவர்களாக உருவாக்கி நிரூபித்துக் காட்டியுள்ளேன்.

நான் இதுவரை உலக நாடுகளில் உள்ள அனைத்து அன்பர்களுக்கும் அதிர்ஷ்ட பெயர், கையெழுத்து மாற்றம், திருமணத் தேதி. பிரசவத்தை முன்கூட்டியே அதிர்ஷ்ட நாள் அறிந்து செயற்கை முறையில் பிரசவித்தல் (சிசேரியன்) தொழில்களுக்கு அதிர்ஷ்டப் பெயர் வைத்து உள்ளேன். அவர்கள் எல்லோரும் இன்று வளமுடன் செல்வச் செழிப்புடன் திகழ்கிறார்கள். என்னால் சவால் விட்டு நிரூபிக்க முடியும். இக்கலையின் மூலம் ஒருவரின் வெற்றியாளராக மாற்ற பல வருட அனுபவ ஆராய்ச்சி வாய்ந்த ஒரு நிபுணரால் மட்டுமே அதிர்ஷ்ட குறிப்பை அளித்தர முடியும்.

உங்கள் வெற்றிக்கு வழிகாட்டும்
ஜோதிட மாமேதை கே.ஆர். பிரபாகர்ராஜ்
நியூமராலஜி-நேமாலஜி-சைன்-தொழில் வசியம்



ஜாதக கிரக பாதிப்பு கைரேகையில் கிரக மேடு பாதிப்பு ஜோதிடத்தில் முன் ஜென்ம வினை பாதிப்பு வாஸ்துவில் வீடு குற்ற பாதிப்பு போன்ற அனைத்து பாதிப்புகளையும் நியூமராலஜி- நேமாலஜி சைன் சாஸ்திரத்தின் மூலம் நீக்கி பரிபூரண வெற்றியை- செல்வத்தை-அதிர்ஷ்டத்தை அளித்தர முடியும். வெற்றி என்பது எட்டாக்கனி அல்ல. கிட்டும் தூரத்தில்தான் உள்ளது. வெற்றி நிச்சயம் கிடைக்க தினமும் அதிர்ஷ்ட கையெழுத்தைப் போடுங்கள்.

அதிர்ஷ்டப் பெயர், அதிர்ஷ்ட கையெழுத்தால் நல்ல தேக ஆரோக்கியம், நல்ல கணவன், மனைவி, குழந்தைகள் வளமான தொழில் ஆகிய அனைத்தும் கிடைக்கும்.

நமது பதினெட்டு சித்தர்களின் மவுன சித்தி, மந்திர காந்த சக்தி அதிர்ஷ்ட விஞ்ஞானத்தில் அடங்கியுள்ளது. தலையெழுத்தை கையெழுத்தால் மாற்றலாம். விதியை விஞ்ஞான கணிதத்தால வெல்லலாம்.

எம்.ஜி.ஆர்., சிவாஜி கணேசன், ரஜினிகாந்த், பாக்யராஜ், பாரதிராஜா, விஜய், குஷ்பு, ரம்பா, நக்மா, சிம்ரன் போன்ற சினிமா கலைஞர்களும் பெயர் மாற்றத்திற்குப் பிறகுதான் பிரபலமானார்கள். பெயரில் வசியம், கோபுரம் சம உயிர்ப்புச் சக்தி, காந்த ஆற்றல் இருந்தால் எல்லாத் துறையிலும் சிறந்து விளங்குவது உறுதி.

என் சாஸ்திரப்படி பெயர் மாற்றி அதிர்ஷ்ட குறிப்பை கையாண்டு வந்தால் பணம்-பதவி-புகழ்-உண்டாகும். நீங்கள் அதிர்ஷ்டசாலிகளாகவும், பெரிய கோடீஸ்வரராகவும் ஆகலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

கே.ஆர். பிரபாகர் ராஜ் பிரபல அரசியல் தலைவர்கள், சினிமா நடிகர்கள், இயக்குனர்கள், தொழிலதிபர்கள் அறிஞர்கள் வெளிநாட்டினர் போன்றவர்களுக்கு ஆலோசனை கூறி உலகப் புகழ் பெற்றவர்.

அதிர்ஷ்ட விஞ்ஞான ஜோதிடர்
கே.ஆர். பிரபாகர்ராஜ் எம்.ஏ.,
நல்லாந்தோட்டம், கணுவக்கரை அஞ்சல்,
புஞ்சைபுளியம்பட்டி (வழி) - 638 459.
கோவை மாவட்டம். போன்: 87258 (04254)
விடுமுறை: செவ்வாய், வியாழன்

பிரதி மாதம் 2, 3-ம் தேதிகளில் மட்டும்
குருபிரகாஷ் ஹோட்டல்
71 ஏ, உஸ்மான் ரோடு, தி. நகர்,
சென்னை - 17. போன்: 4321414

நியூமராலஜி - நேமாலஜி - சைன் தொழில் வசியம்.

Advt.

கண்களைச் சுற்றியுள்ள எலும்பு பாகங்களும் வளர்ச்சியின்றி காணப்படும்.

இதுபோன்ற குறைபாடுகளை அகற்ற எலும்பு டிஸ்ட்ராக்ட்டர்ஸ் (Bone Distractors) வந்துள்ளது. இவைகளை பெரும்பாலும் வளரும் பருவத்தில் உபயோகிப்பார்கள். சில பெரியவர்களுக்கும் வளர்ச்சி இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. வளர்ச்சி குன்றிய எலும்பு பாகங்களின் மேல் இந்த கருவியை வைத்து திருகு ஆணிகளால் நிறுத்திய பிறகு, அக்கருவியின் கையைப் போல் நீண்டு இருக்கும் கம்பியை திருகிவிட்டால், அழுத்தத்திற்கு ஏற்றவாறு எலும்பின் வளர்ச்சியை தூண்டி விடும். இம்முறையை முதலில் கண்டுபிடித்தவர் சைபீரியாவைச் சேர்ந்த டாக்டர் இல்லிசராவ் என்பவர். இவருக்கு முன்பு 1905ஆம் ஆண்டில் காடிவில்லா என்பவர் கால் எலும்பை இம்முறையினால் நீட்டினவர். இந்த டிஸ்ட்ராக்டர்ஸை உடம்பில் எந்த எலும்பிலும் உபயோகிக்கலாம். ஆனால் முகத்தில் மட்டும் பெரும்பாலும் கீழ்தாடையில் உபயோகிக்கப்படுகின்றன.





தாடை வளர்ச்சி மாறுபாடுகள் இருக்கும்பொழுது, அதனை வளரும் பருவத்திலேயே கட்டுப்படுத்தி குழந்தை வளர்ந்த பின்பு அக்குறை இல்லாமல் செய்யலாம். டிஸ்ட்ராக்டர்ஸ் வளர்ச்சிப் பருவத்தின் முழு பலனை உபயோகித்து குறைகளை நீக்கும். அது மட்டுமின்றி பெரியவர்களில் ஓரளவு வளர்ச்சி தூண்டியதாகக் கூறப்படுகிறது. பொதுவாக டிஸ்ட்ராக்டர்ஸ் 2 வகைப்படும். ஒன்று வாயினுள் பொருத்தப்படுபவை மற்றொன்று வாயின் வெளியே பொருத்தப் படுவது. இதைத் தவிர டிஸ்ட்ராக்ட்டர்ஸ் தாங்கள் வளர்ச்சியைத் தூண்டும் திசைக்கு ஏற்றவாறு - ஒரு திசை இருதிசை மற்றும் பல திசை கருவிகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

பெரிதாக ஊடுருவாமல், எளிதில் அறுவை சிகிச்சைகள் வெற்றிகரமாக நடக்கும் இக்காலத்தில் டிஸ்ட்ராக்டர்களுக்கு நல்ல வரவேற்பு உலகெங்கும் உள்ளது. இம்முறையினால் அறுவை சிகிச்சை செய்யும்நேரம் மற்றும் மருத்துவமனையில் இருக்க வேண்டிய நாட்களும் வெகுவாகக் குறைந்து உள்ளது. உடம்பில் பிற உறுப்பிலிருந்து எலும்பு எடுப்பதால் ஏற்படும் பின்விளைவுகளும் இதில் அறவே நீக்கப்படுகிறது.

பொதுவாக வயதானவர்களுக்கு பற்களை எல்லாம் பிடுங்கிவிட்ட பிறகு மிஞ்சி உள்ள எலும்பின் உயரம் பல்செட்டு செய்வதற்கு பற்றாமல் போய்விடும். இவ்வாறான வயதானவர்களுக்கு உயர அளவைக் கூட்ட உடம்பிலிருந்து எலும்பை எடுத்து பொருத்துவது நல்லதாக இருக்காது. எனவே எலும்பின் உயரத்தை கூட்டவும் சிறு டிஸ்ட்ராக்டர்கள் வெற்றிகரமாக உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

இவை எல்லாவற்றையும்விட குறிப்பிடத்தக்கது, பியரி - ராபின் என்ற வளர்ச்சி குறைபாடு. இதில் பிறக்கும் குழந்தையின் கீழ்தாடை சிறிதளவும் இருக்காது. இதனால் குழந்தையின் நாக்கு தொண்டையில் மடங்குவதால், மூச்சுத் திணறல் ஏற்படும். இம்மாதிரியான அபாய நிலையில் குழந்தையின் கழுத்தில் கீறவிட்டு மூச்சுவிட எளிதாக்குவார்கள். இப்படிச் செய்வதால், குழந்தைக்கு மிகவும் கடினமாகும். அது மட்டுமின்றி வளர்ந்த பின்னும் கழுத்தில் அந்தத் தழும்பு இருக்கும். இக்குறைகளை தடுக்க பிறந்த குழந்தைகளுக்கு மிகவும் சிறிய டிஸ்ட்ராக்டர் பொருத்துவதால், விரைவில் பிறரைப் போல மூச்சுவிட முடியும் மற்றும் தாடையின் தோற்றமும் நன்றாக இருக்கும்.

இவ்வாறான புதிய அணுகுமுறைகளை வெளிநாட்டில் நடக்கும் கருத்தரங்கில் கலந்து கொண்டும், அந்நாட்டில் நடக்கும் மாநாடுகளில் பிற வெளிநாட்டு நிபுணர்களின் அறுவை சிகிச்சை முறைகளை நேரில் பார்த்தும், பயிற்சி பெற்று நம் நாட்டிற்குத் தருகிறார் டாக்டர் பாலாஜி.

பேட்டி : **சுந்தரவதனா**

மகளிர் மட்டும் மகளிர் மட்டும் மகளிர் மட்டும் மகளிர் மட்டும் மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

காதலிக்கும் இளைஞர்களே ஒரு நிமிடம்!





* நாராயணன் - கல்யாணி

உலகில் எந்த ஒரு செயலையும் இருவர் மனமொப்பி ஒன்றுகூடி வாழும் வாழ்வில் உண்டாகும் சந்தோஷத்துடன் ஒப்பிட முடியாது. மனிதனின் எல்லாவிதமான உறவுகளையும் எடுத்துக் கொண்டால் திருமணம் என்ற உறவுதான் மிகவும் சிக்கலானது. திருமண பந்தத்தில் உண்டாகும் அதீதமான உணர்ச்சிகள் வேறு எந்த உறவிலும் உண்டாகாது. ஒருபுறம் சந்தோஷத்தின் உச்சிக்கு அழைத்துச் செல்லும் உறவு மற்றொரு புறம் துன்பத்தின் எல்லைக்கே எடுத்துச் செல்லக்கூடிய வலிமை பெற்றது.

இன்பம் கடல்மற்றுக் காமம் அஃதடுங்கால்
துன்பம் அதனிற் பெரிது.

- திருக்குறள்

காதலால் வரும் இன்பம் கடல் போன்ற பெரியது;

அது வருத்தம் செய்யும்போது அத்துன்பம் கடலைவிடப் பெரியது.

என்று அற்புதமாக இதைத் தான் சொல்லியிருக்கிறார் வள்ளுவர்.



* 'மெட்ரோ' ப்ரியா

உலகத்தில் எவருமே மற்றவரைப் போல இருப்பதில்லை. இதுதான் நிதரிசனமான உண்மை. இதனால் இரண்டு பேர் காதலிக்கும்போது பரிபூரணமாக ஒற்றுமை உண்டாகும் என்று சொல்ல முடியாது. இதை காதலிப்பவர்களும் திருமணமானவர்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆக்கப்பூர்வமாகச் சிந்தித்துப் பார்த்தால் காதல் என்பது ஒரு உன்னதமான, மேன்மையான விஷயம். காதல் என்பது சமுதாயத்தில் எத்தனையோ சலனங்களை ஏற்படுத்தியிருக்கிறது. வரலாற்றில் பார்த்தால் காதலுக்காக எத்தனையோ போர்கள் நடந்திருக்கின்றன. எத்தனையோ தியாகங்கள் நடந்திருக்கின்றன. காதல், பல கவிஞர்களை உருவாக்கியிருக்கிறது. பல ஓவியர்கள் காதல்வயப்பட்டு அருமையான படைப்புகள் படைத்திருக்கிறார்கள்.

காதல் சக்தி வாய்ந்தது. சமுதாயத்தில் நிலவும் வரதட்சணை, ஜாதி, இன, மத பேதம் போன்ற பல பிரச்னைகளுக்குக் காதலின் மூலம் முடிவு கட்டலாம். விதவைகள் மற்றும் விவாகரத்து ஆனவர்களின் திருமணம் நடக்கலாம். இன்னும் சொல்லப் போனால் கணவனால் எயிட்ஸ் நோய் வந்து சமூகமே தூற்றிய இளம்பெண் சித்ராவையும் அவளது குழந்தையையும் (அதற்கும் எய்ட்ஸ் நோய்) ஒரு தாராள மனமுடையவர் காதல் கொண்டதனால் மறுவாழ்வு கொடுத்தது எல்லோருக்கும் தெரிந்திருக்கும்.

ஒரு விதத்தில் பொருளாதார அந்தஸ்தையும் காதலிப்பவர்கள் ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்வதில்லை. வாழ் கையில் வெற்றி பாதையில் நடை போடும் பலரது வெ றிக்குப் பின் அவ களிடம் அதீதமா காதல் கொண்ட ...

கணவனோ மனைவியோ நிச்சயம் இருப்பார்கள்.

ஆனால் சில சமயங்களில் காதல் திருமணங்கள் திக்குத் தெரியாத ஒரு கப்பலைப் போன்ற நிலைமையில் இருக்கின்றன. கப்பல் மூழ்குவதில்லை. ஆனால் கப்பல் ஒரு சரியான திசையை நோக்கிச் செல்வதும் இல்லை.

இதற்கு முக்கிய காரணம் காதல் தோன்றும்போது இளைஞர்கள் சினிமா, டிவி போன்ற மீடியா மூலமாக காதல் என்பது ஏதோ ஒரு மாயாஜால உலகிற்குச் செல்லும் வழி, அங்கு எப்போதுமே சந்தோஷம்தான் நிலவும் என்று நம்புவதனால்தான். யதார்த்தமான வாழ்க்கை மிகவும் மாறுபட்டிருக்கும்போது அதிர்ச்சிக்கு உள்ளாகிறார்கள்.

பதின்மூன்று ஆண்டுகளாக அமெரிக்காவில் வாழ்ந்து விட்டு இன்று சென்னையில் ஐ.சி.எம். கம்ப்யூட்டர் கன்ஸல்டண்ட்டின் தலைவராகவும் தமிழ் மாநில காங்கிரஸில் பதவி வகிப்பவராகவும் இருக்கும் திரு நாராயணன் கூறுகிறார், "வெளி நாடுகளில் பார்த்தால் தங்களுடைய வாழ்க்கைத் துணையை


ரஜினி - ராஜேஷ்

தாங்களே தேடிக் கொள்ளும் பொறுப்பை ஏற்ற இளைஞர்களின் காதல் திருமணங்கள் தோல்வியே அடைகின்றன.

பெற்றோர் பார்த்து செய்து வைக்கும் திருமணங்களில் ஒரு சரியான துணையைத் தேர்ந்தெடுக்க வேண்டுமே என்ற பாரம் இளைஞர்களுக்கு இல்லை. திருமணம் முடிந்த பிறகு காதல் திருமணமோ, பெற்றோர் பார்த்து செய்து வைத்த திருமணமோ இரண்டுமே ஒன்றுதான். ஒருவரை மற்றவர் புரிந்துகொண்டு அனுசரித்து நடந்துகொண்டால் எந்த பிரச்னைக்கும் இடமில்லை."

திரு. நாராயணனின் மனைவி திருமதி. கல்யாணியும் ஒரு கம்ப்யூட்டர் நிறுவனத்தில் பணி புரிகிறார்.


ஹரிப்ரியா - பிரசாத்

அவரும் பெற்றோர் பார்த்து செய்து வைக்கும் திருமணத்தையே ஆதரிக்கிறார். "பெற்றோர்களுக்கு நம்மைவிட அனுபவம் ஜாஸ்தி. ஒரு விஷயத்தைப் பலவாறாக அலசி முடிவெடுக்கும் திறமையுள்ளவர்கள். தங்களுடைய குழந்தைகளின் விருப்பு வெறுப்புகளை நன்கு புரிந்துகொண்டு அவர்களுடன் கலந்து பேசி முடிவெடுப்பார்களேயானால் அப்படி செய்யப்படும் திருமணம்தான் சிறந்தது" என்கிறார்.

காதல் வயப்பட்டவர்கள் எப்போதும் காதலிப்பவர்களிடம் நல்ல குணங்களையே வெளிப்படுத்துவார்கள். இதை நடிப்பு என்று கூற முடியாது. நாம் எல்லோருமே நண்பர்களிடமும் வெளியாட்களிடமும் நல்லவர்களாகத் தானே நடந்து கொள்கிறோம்? வீட்டில்தான் கோபம், கத்தல், அழுகை எல்லாம்? அப்படித் தான் காதல் விஷயத்திலும் நடக்கிறது.

திருமணம் முடிந்து மோகம் கலைந்து யதார்த்த நிலைக்கு வரும்போது திருமணம் செய்து கொண்டவர்களுக்கு அதிர்ச்சியாக இருக்கிறது. 'நாம் இவரையா காதலித்தோம்?' என்ற கேள்வி எழுகிறது. மேலும் இதுநாள் வரையில் காதலர்களாக இருந்தவர்களின் பாத்திரம் 'கணவன் மனைவி' என்று மாறும் போது எதிர்பார்ப்புகளும் மாறி விடுகின்றன. 'கணவன் என்பவன் இப்படிதான் இருக்க வேண்டும்' என்றும் 'மனைவி என்பவள் இப்படி பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்' என்றும் எதிர்பார்ப்புகள் தோன்றும்போது மனக்கிலேசம் ஏற்படுகிறது.

இதைப் புரிந்து கொண்டு அனுசரித்து நடந்து கொண்டால் பிரச்னைகள் வருவதில்லை.

'மெட்ரோ ப்ரியா' சித்தார்த் ஜெய ராஜை விரும்பி திருமணம் செய்து கொண் டவர். திருமணத்திற்குப் பிறகு கண வருடைய குடும்பத்துடன் சந்தோஷமாக நண்பர்களைப் போல் வாழுகிறார். "என் தாய் வீட்டில் இருப்பதைப் போலவே இங்கேயும் சுதந்திரமாக இருக்க முடிகிறது. என் மாமியாரும் மாமனாரும் எங்கள் 'பர்சனல்' விஷயத்தில் தலையிடுவதே இல்லை. மாறாக எங்களுக்குள் ஏதாவது பிரச்னை வந்தால் சமாதானம் செய்ய முன் வருகிறார்கள்" என்கிறார் ப்ரியா.

"காதல் திருமணங்களில் நமக்கு முன்பே கணவரையும் அவரது குடும்பத்தினரைப் பற்றியும் பல விஷயங்கள் தெரிந்து விடு கிறது. நாம் காதலிக்கும்பொழுது எல்லாமே இன்பமயமாக இருக்கிறது. திருமணத்திற்குப் பிறகு இருவரின் பாத்திரங்கள் மாறும் பொழுது தான் குழப்பமே உண்டாகுகிறது.

"திருமணமான பிறகு ஆண்கள் மனைவி யிடம் பல பொறுப்புகளை எதிர்பார்க் கிறார்கள். இதுநாள் வரை ஒரு காதலி யாகவும் தோழியாகவும் இருந்த பெண்கள் திருமணத்திற்குப் பிறகு ஒரு தாயாகவும், ஒரு மனைவியாகவும், ஒரு தோழியாகவும், ஒரு காதலியாகவும் நடந்து கொள்ள வேண்டி யிருக்கிறது. திருமணத்திற்குப் பிறகு ஆண் களின் கை தான் ஓங்கியிருக்கிறது. இதை நாம் புரிந்து கொண்டால் பிரச்னைகள் வருவதில்லை. திருமணமான முதல் சில ஆண்டுகள் கஷ்டமானவை. இருவரும் ஒன்று சேர்ந்து வளர்ச்சி பெற்றால் பிறகு வாழ்க்கை நன்றாக இருக்கும்" என்கிறார் ப்ரியா.

காதல் திருமணங்களை பல சமயங்களில் பெற்றோர்கள் ஆதரிப்பதில்லை. புதிதாகத் திருமணமானவர்களுக்கு பெற்றோர்களின் உபதேசங்களும் உதவியும் பல சமயங்களில் தேவைப்படுகிறது. அதுவும் குழந்தை பிறந்து விட்டால் நிச்சயம் பலரின் உதவி அவசிய மாகிறது. திருமணத்திற்குப் பிறகு உண் டாகும் பல வாழ்க்கைப் பிரச்னைகள் பெற்றோர்களின் ஆதரவு இல்லாததனால் தம்பதிகளை மேலும் நெருக்கமாக பழகு வதற்கு சந்தர்ப்பம் அளிக்கின்றன. எவரும் உதவிக்கு வராததால் இளம் மனைவியும் கணவனும் ஒன்று சேர்ந்து போராடும்போது அந்த பந்தத்தில் ஆழ்ந்த பாசம் உருவாகுகிறது.

சில சமயங்களில் பிரச்னைகளே காதல் திருமணம் புரிந்த கணவன் மனைவிக்குள் பேதம் உண்டாக்கி அவர்களுக்குள் மனஸ்தாபம் உண்டாக்கி விடுகிறது.


திருமதி கே. சுமதி பிரபல குற்றவியல் வழக்கறிஞர். விவாகரத்து வழக்குகளை தினமும் கையாளுபவர். இவரும் மற்றொரு வக்கீலை காதலித்துத் திருமணம் புரிந்து கொண்டிருப்பவர். காதல் திருமணங்களில் உறவினர்களின் பங்கை பற்றிக் கூறுகிறார்–

"காதல் திருமணங்களை பெரும்பாலும் பெற்றோர்கள் ஆதரிப்பதில்லை. இதுவே சில காலம் கழித்து கணவன் மனைவிக் குள்ளே மனஸ்தாபம் வர காரணமாகிறது. வாழ்நாள் பூராவும் நாம் பெற்றோரை ஒதுக்கி விட முடியாது இல்லையா?

முதலில் பெற்றோர்களுடன் ஏற்படும் பிளவு பிறகு அவர்கள் ஒன்றுசேரும்போது கூட முழுவதுமாக சரியாவதில்லை. உற வுகள் முன்பு போல் சுமுகமாக இருப்ப தில்லை. இது பல சமயங்களில் கணவன் மனைவி இடையே கசப்பான உணர்ச்சிகள் உண்டாக ஏதுவாகிறது. பல சமயங்களில் பொருளாதார பிரச்னை பெரும் பிரச்னையாகி விடுகிறது. பெற்றோர்கள் பார்த்து செய்யும் திருமணங்களில் அவர்கள் உதவி செய்ய முன் வருவார்கள். காதல் திருமணங்களில் அப்படியில்லையே?

மேலும் திருமணத்திற்கு முன்பு இருவரும் செய்து கொள்ளும் வாக்களிப்பு திருமணத் திற்குப் பிறகு மறக்கப்படுவதாலும் காதல் திருமணங்களில் பிரச்னைகள் ஏற்படு வதுண்டு.

காதல் திருமணங்களில் எத்தனை தான்



தற்போது கணவன் வெளிநாட்டில் (வேலை நிமித்தம்) இருப்பதும் மனைவி இந் தியாவில் இருப்பதும் சகஜமாக இருக்கிறது. எத்தனைதான் எழுதினாலும் (கடிதம்தான்) மன நிறைவு இல்லை. எனக்குத் தெரிந்த ஒரு பெண் தான் கேட்பவைகளை/ சொல்ல நினைப்பதை/ குழந்தைகள்,பெரியோர்/வீட்டு விஷயம் இவற்றை கேசட்டில் அனுப்ப அவள் கணவரும் கேட்டவற்றிற்கு பதில் கேசட் மூலம் அளிக் கிறார். இந்த முறையில் இருவருக்கும் மிகுந்த நிறைவு ஏற்படுகிறது.

— லஷ்மி ஸ்ரீனிவாசன்

பிரச்னைகள் வந்தாலும் காதலித்த நாட்களின் இன்பமான நினைவுகள் இருவரையும் ஒன்று சேர்த்து வைக்க உதவுகின்றன'' என்கிறார் சுமதி.

திரு. ரமேஷ் சினிமா மற்றும் டி.வி தொடர்களின் டைரக்டர். இவர் மைலாப்பூரில் ஜிம் நடத்தும் திருமதி மீனாட்சியின் மகளான சுமதியைக் காதலித்து கைப்பிடித்தவர்.

''எங்களுடைய காதல் மனமுதிர்ச்சி அடைந்த பிறகு உண்டானது. அதனால் திருமணத்திற்குப் பிறகு சந்தோஷமாக இருக்கிறோம். முன்கூட்டியே ஒருவரை மற்றவர் புரிந்து கொண்டதால் எங்களுக்குள் பிரச்னைகள் தோன்றும்போது எளிதாக தீர்வு காண முடிகிறது.

பெற்றோர் பார்த்து வைத்த திருமணம் என்றால் ஒரு சிறு பிரச்னை தோன்றினாலும் மனைவி கோபித்துக் கொணடு பெற்றோர் வீட்டிற்குச் செல்லும் வாய்ப்பு இருக்கிறது. காதல் திருமணத்தில் அப்படியில்லை. "நீங்கள்தானே விரும்பி திருமணம் செய்து கொண்டீர்கள்?'' என்று பெற்றோர் நம்மைக் கேட்பார்கள். மனைவி கோபித்துக் கொண்டு போக முடியாது. ''அடுத்த நாளும் இதே மூஞ்சியைத் தானே பார்த்தாக வேண்டும்'' என்ற நினைப்பு வருவதால் வேறு வழியில்லாமல் கணவனும் மனைவியும் அனுசரித்துக் கொண்டு போய் விடுவார்கள்.

சினிமா துறையில் இருப்பதால் நேரம் காலம் இல்லாமல் வேலையிருக்கும். என் மனைவி என்னை நன்கு புரிந்து கொண்டிருக்கிறாள்'' என்கிறார் ரமேஷ். இவருடைய பெற்றோர் இறந்து விட்டதால் இவர் மாமியாருடன் தான் தங்கியிருக்கிறார்.


ரமேஷின் மனைவி சுமதி கூறுவது, "காதல் திருமணமாக இருப்பதால் ஒளிவு மறைவு இல்லாமல் வெளிப்படையாக எங்களால் பழக முடிகிறது. உரிமையுடன் சண்டை போட முடிகிறது. காதலித்த நாட்களில் இவருடன் வெளியே செல்ல முடியவில்லை. திருமணத்திற்குப் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று இருந்துவிட்டேன். இப்போது இவர் வீட்டிலேயே இருப்பதில்லை. எனக்கு ஹவுஸ் அரெஸ்ட்தான்'' என்று குறைபட்டுக் கொள்கிறார். ஆனால் அவர் செல்லமாக கோபித்துக் கொள்வதிலும் காதல்தான் வெளிப்படுகிறது.

''காதல் திருமணத்தில் ஒருத்தரை ஒருத்தர் புரிந்துக் கொள்ளுவது ரொம்ப முக்கியம்'' என்கிறார் காதல் மணம் புரிந்து கொண்ட பிரசாத். "நமக்காக பாவம் வீடு, வாசலை விட்டு விட்டு வந்திருக்கிறாளே என்று நினைக்கும்போது நமக்கே மனைவியுடன் அனுசரித்துப் போகத் தோன்றும். திருமணத்திற்கு முன்பு ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதால் தாம்பத்திய வாழ்க்கையில் திருப்தி ஏற்படுகிறது. இதை மருத்துவத் துறையில் இருப்பதால் என்னால் கூற முடிகிறது.

இதே இரண்டு அறிமுகமில்லாதவர்களிடையே ஒரு தயக்கமாகத் தொடங்கி பிரச்னையாகவும் மாறக் கூடும்'' என்கிறார் பிரசாத். வேலைக்காரி வராமல் இருந்தால் சமையலில் மனைவிக்கு உதவுகிறார் பிரசாத். மகனைக் குளிப்பாட்டி அவனைப் பார்த்துக் கொள்கிறார். ''மனம் விட்டுப் பேசும் பழக்கம் முதலிலிருந்தே இருப்பதால் காதல் திருமணங்களில் கலந்து பேசி பல பிரச்னைகளுக்குத் தீர்வு காண முடிகிறது'' என்கிறார் இவர்.

ரஜினி ராஜேஷ் பெண்கள் பத்திரிகைகளில் நிருபராகவும், தூர்தர்ஷனில் காம்பியராகவும் இருக்கிறார். ''நம் நாட்டில் திருமணம் என்பது இரண்டு குடும்பங்களுக்கும் நடக்கும் விஷயம். பெற்றோர்கள் பார்த்து நிச்சயிக்கும் திருமணங்களில் குடும்பப் பின்னணி வெகுவாக அலசப்படுகிறது. இதையெல்லாம் பார்த்து திருமணம் செய்வதால் திருமணத்திற்குப் பிறகு இரண்டு குடும்பங்களுக்குள்ளும் சுமுகமான உறவு நீடிக்கிறது.

ஆனால் காதல் பெரும்பாலும் சினிமா மற்றும் சின்னத் திரையின் பாதிப்பினால்



தர்பூசணியை சிறு துண்டுகளாக்கி, சர்க்கரை அல்லது சர்பத் சேர்த்து மிக்ஸியில் சிறிது நேரம் ஓட விடுங்கள். வித்தியாசமான கலரில் தர்பூசணி ஜூஸ் ரெடி! எலுமிச்ச பழச் சாறு பிழிந்தால் சுவையும் கூடும். உடம்பிற்கும் நல்லது. தேன், சேர்க்க சுவைக்குக் கேட்க வேண்டுமோ?

— போரூர் ஆர். சீதா

தோன்றுவதால் திருமணத்திற்குப் பிறகு ஏமாற்றங்கள் உண்டாகி விடுகின்றன. எனக்குத் தெரிந்த ஒரு பெண் இன்ஜினியரிங் படித்துக் கொண்டிருந்தபோது காதல் தோன்றி திருமணத்தில் முடிந்தது. மிகவும் புத்திசாலியான பெண் படிப்பை பாதியிலேயே விட்டு விட்டாள். அவள் மட்டும் படிப்பை முடித்து விட்டிருந்தால் இன்றைக்கு ஒரு நல்ல பதவியில் இருந்திருப்பாள்.

காதல் திருமணங்கள் பெரும்பாலும் கல்லூரியில் தொடங்குவதனால் சீக்கிரமே திருமணத்தில் முடிந்து விடுகின்றன. இதனால் காதலிப்பவர்கள் ஒரு ஸ்திரமான வேலையில் இல்லாதபோதே குடும்பப் பொறுப்புகள் வந்துவிடுகின்றன. இது ஏமாற்றத்தில் கொண்டு போய் விடுகிறது. பெற்றோர்கள் பார்த்து செய்து வைக்கும் திருமணங்களில் பொருளாதார சுதந்திரம் இருந்தால்தான் திருமணமே நடக்கும்.

அதேபோல் ஜாதி, மதம் பார்க்காமல் நடக்கும் காதல் திருமணங்களிலும் பல வருடங்களாகத் தொடர்ந்து வந்த பழக்க வழக்கங்கள் மாறும்போது மெதுவாக இருவருக்குள் மன பேதம் வர வாய்ப்பிருக்கிறது.

ஆனால் காதல் திருமணங்களில் வரதட்சணை பிரச்னை இல்லாதது வரவேற்கத் தக்கது. வாழ்நாள் முழுவதும் உழைத்து சம்பாதிக்கும் பணம் ஒரே ஒரு திருமணத்தில் கரைந்து விடுவது என்னால் ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு விஷயம்" என்கிறார் ரஜினி.

இவருடைய கணவர் ராஜேஷ் ஒரு தொழிற்சாலையை நடத்துபவர். "என்னைப் பொறுத்தவரையில் இரண்டிற்கும் வித்தியாசம் ஏதும் இல்லை என்பேன். நாம் சாப்பிடும் இட்லி குண்டா உருண்டையா இருந்தால் என்ன அல்லது மெல்லிசா இருந்தால் என்ன? அது ஜீரணமாவது அதனுடைய 'சைஸை' பொறுத்து இல்லை'' என்று வேடிக்கையாக ஆரம்பித்தவர் பிறகு வேதாந்தமாகப் பேசுகிறார்.

''மனிதனுக்கு உடல், மனம், அறிவு என்று மூன்று முக்கியமான அம்சங்கள் உள்ளன. காலப்போக்கில் இவை மூன்றிலுமே மாற்றம் ஏற்பட்டு விடுகிறது. அதனால் எந்த மாதிரியான திருமணமாக இருந்தாலும் இந்த மாற்றங்களைப் புரிந்து கொண்டு வாழ்வதே நல்லது.

ஒரு திருமணத்தின் வெற்றியோ தோல்வியோ நம் கையில்தான் இருக்கிறது. என்னைக் கேட்டால் காதல் திருமணத்தைவிட பெற்றோர்கள் பார்த்து நடத்தும் திருமணமே மேல் என்பேன். நமக்குக் கிடைத்திருக்கும் மனைவியைப் புரிந்து அவளை அனுசரித்துக் கொண்டு போவதே மேல்.

பீச்சில் மணிக்கணக்காக நேரம் வீணாக்கும் இளைஞர்களிடம் ஒன்று சொல்ல விரும்புகிறேன். இவர்கள் வீணாக்கும் நேரத்தில் ஒரு தாஜ்மஹாலையே கட்டி விடலாம்.''

ஏழை குடும்பங்களில் பெண்கள் எளிதாகக் காதல் வலையில் விழுந்து விடுகிறார்கள். படிப்பறிவில்லாமல் வீட்டு வேலைகள் செய்யும் சிறு பெண்கள் வேலையின் பளு தாங்காமல் தத்தளித்துக் கொண்டிருக்கும்போது சினிமா அவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக இருக்கிறது. சினிமாவைப் பார்த்து திருமணம் நடந்தால் தங்களுக்கு ஏதோ விடிவு காலம் பிறந்து விடும் என்று தப்பபிப்பிராயம் கொள்கிறார்கள்.

ஒரு முழம் பூவிற்கும் ஒரு துண்டு அல்வாவிற்கும் மயங்கி விடுகிறார்கள். பல இளம் ஏழைப் பெண்கள் பதினாறு வயது முடிவதற்குள்ளேயே வீட்டை விட்டு ஓடிப் போய் காதல் திருமணம் செய்து கொள்கிறார்கள். இவர்களின் பலவீனத்தைத் தங்களுக்குச் சாதகமாக உபயோகிக்கும் சில ஆண்கள் இரண்டு, மூன்று நான்கு என்று திருமணங்கள் செய்து கொள்ளுகிறார்கள்.

காதலை நம்பி தங்கள் வாழ்க்கையில் ஒரு நல்ல திருப்புமுனை வரும் என்று



தக்காளி காய்களை நறுக்கி
பஜ்ஜி மாவில் தோய்த்து
பஜ்ஜி போட்டால்
மிகவும்
சுவையாக இருக்கும்.
- வசந்தி



பயணத்தின்போது நைலான் கயிறு எடுத்துச் செல்லவும். ஈரத் துணிகளை காய வைக்க எல்லா ஹோட்டல்களிலும் வசதி இருக்காது. அரைகுறை ஈரத்துடன் மடித்து வர வேண்டிய கஷ்டமும் இல்லை.

- வசந்தி

ஏமாந்த பேதை பெண்கள் தினமும் குடித்து விட்டு வரும் கணவனிடம் அடியும் உதையும் வாங்கிக் கொண்டு இனி இந்த நரகத்திலிருந்து நமக்கு என்று விடிவு வரும் என்று ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. முரளி எம்.எஸ். ஸ்வாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தில் தகவல் தொடர்பு திட்ட அலுவலர். இவர் ஒரு படித்த கண்ணியமான பெண்ணை காதலிப்பவர். காதலுக்கு ஒரு புதிய விளக்கம் கொடுக்கிறார் இவர். "மரபு ரீதியான காதல் குறுகிய கண்ணோட்டத்துடன்தான் இருக்கிறது. பாலியல் தொடர்பான கண்ணோட்டம் தான் அதில் அடங்கியிருப்பது. என்னைப் பொறுத்தவரையில் காதல் என்பது ஒரு மிகவும் மகத்தான விஷயம். மிகவும் பரந்த, விசாலமான அர்த்தமுடையது. நாம் எல்லோரையும், எல்லா விஷயத்தையும் காதலிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

காதல் என்பது கல்யாணத்தைச் சுற்றி தான் நினைக்கப்பட்டு வருகிறது. ஆனால் காதல் ஒரு மிகப் பெரிய விஷயம். முதலில் நாம் பூமியைக் காதலிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். அடுத்த தலைமுறைக்கு இது ஒரு பெரிய சவால். பூமியின் மீது அன்பு செலுத்தினால் நமது சுற்றுப்புறத்தின் சுகாதாரக் கேடு குறையும்'' என்றவரை கஷ்டப்பட்டு மரபு ரீதியான காதலுக்கு அழைத்து வந்தோம். இந்த விஷயத்திலும் அவரது கண்ணோட்டம் மாறுபட்டிருந்தது.

''இன்றைக்கு எங்கள் தலைமுறையினரைப் பொறுத்தவரைக்கும் ஆண் சார்ந்த காதல்தான் இருக்கிறது. இந்த மாதிரி ஆணுக்கு முக்கியத்துவம் கொடுக்கிற காதலை பிரபுத்துவ முறையுடன் ஒப்பிடலாம். எல்லாமே ஆணின் கண்ணோட்டத்தில் தான் எதிர்பார்க்கப் படுகிறது. இந்த மாதிரி காதல் போரடிக்கும்!

நாங்கள் இருவரும் மெழுகுவர்த்தி வேதாந்தம் என்று தியாகத்தைப் பற்றி பேசிக் கொள்வோம். வாஸ்தவத்தில் தியாகம் என்பது ஒரு பெண் சம்பந்தப்பட்ட விஷயமாகக் கருதப்படுகிறது. அவள் எப்போதும் விட்டுக் கொடுத்துக் கொண்டு கீழ்ப்படிந்து போவதை தான் 'தியாகம்' என்று பெயரிட்டிருக்கிறார்கள். எங்களுடைய பந்தத்தில் இந்த வார்த்தையை நாங்கள் உபயோகப்படுத்துவதில்லை.

காதல் திருமணங்களில் காதலிக்கும் வரை சம உரிமை கொடுத்துவிட்டு திருமணத்திற்கு அப்புறம் பெண்களுக்கு இது மறுக்கப்படுகிறது. இந்த மாதிரியான அரைகுறையான அண்டர்ஸ்டாண்டிங் வருந்தத்தக்க விஷயம். நாம் காதலிக்கும் பெண் நாம் எதற்காக அவளைக் காதலித்தோமோ அந்த விஷயங்களை மாற்றிக் கொண்டால் அந்த உறவில் இருக்கிற லயிப்பே போயிடும். அப்புறம் என்ன திரில் இருக்கிறது? இந்த பழமைவாத அமைப்பு மாற வேண்டும்.

மேலும் தகவல் தொடர்பு சாதனங்கள் மூலம் ஊக்குவிக்கப்படும் பாலியல் ரீதியான காதலைவிட்டு விட்டு நாம் வெளியே வர வேண்டும்'' என்று ஒரு புதிய ரீதியில் காதலைப் பற்றி பேசி நம் சிந்தனையைத் தாண்டி விட்டார் முரளி.

எது எப்படியோ தற்காலத்தில் சமுதாயத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் அடிக்கடி சந்திக்கும் பழகும் வாய்ப்புகள் அதிகம். காதல் திருமணங்கள் அதிகரிக்குமே ஒழிய குறைவதற்கு வாய்ப்பில்லை.

அப்படியிருக்கும்போது காதலை ஒரு விசாலமான கண்ணோட்டத்துடன் காதலர்கள் பார்த்தால் காதலினால் ஏற்பட்ட உறவுகள் அர்த்தமுள்ளதாகவும் திருப்திகரமானதாகவும் இருக்கும். குடும்பத்தினர்களும் காதலிப்பவர்களை ஏற்றுக் கொண்டு அவர்களை அரவணைத்தால் உறவுகள் பலமடைந்து வாழ்க்கைப் பயணம் இன்னல்கள் இல்லாமல் அமைதியாக தொடரும்.

— ஸ்வாதி

படிப்பை இடையே நிறுத்திய பெண்கள்



கர்மயோகி

200 ஆண்டுகட்கு முன் அமெரிக்காவில் நீக்ரோக்களுக்கு சட்டத்தில் சம உரிமை கொடுத்தார்கள். இன்றும் அவர்கள் நிலை, சிலரைத் தவிர, பரிதாபத்திற்குரியது. ஜனநாயகம் அனைவருக்கும் சம உரிமை கொடுத்து 50 ஆண்டுகளாகிறது நம் நாட்டில். வறுமையில் இன்னும் பல கோடி பேர் உள்ளனர். பெண்களுக்கு படிப்புரிமை வந்து 100 ஆண்டுகட்கு மேலாகிறது. பெரும் முன்னேற்றமளித்தாலும், முழு முன்னேற்றமில்லை. எஸ்.எஸ்.எல்.ஸியோடு அன்று படிப்பை முடித்த பெண்களில் பலருக்கு இன்று மகன் பட்டம் பெற்றும், மருமகள்கள் பெரிய பட்டங்களைப் பெற்றும் வந்த பொழுது, பட்டத்தின் மதிப்பு குடும்ப சந்தர்ப்பத்தில் தெளிவாகத் தெரிகிறது. 1950, 1960ல் எஸ்.எஸ்.எல்.ஸியுடன் விட்டுவிட்ட ஏராளமான பெண்களுக்கு நாட்டில் படிப்பைத் தொடர எல்லா வாய்ப்புகளும் வந்துள்ளன. சிலருக்கு குடும்பமும் உதவியாக இருந்தது. அதில் எத்தனை பேர் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பட்டம் பெற்று முன்னுக்கு வந்துள்ளனர்? 10% கூட இல்லை எனலாம்.

1970ல் 8ம் வகுப்பு படித்த கிராமத்துப் பெண்ணை இன்ஜினீயர் மணந்தான். நான் அவன் மனைவியை தொடர்ந்து படிக்கச் சொன்னேன். அவர்கள் கிராமத்து வீடு போர்க்களமாயிற்று. என் பேச்சைக் கேட்டு அவள் படித்தாள். இன்று அப்பெண் எம்.ஏ. வேலைக்குப் போகிறாள். 1956ல் சென்னை பல்கலைக் கழகம் நூற்றாண்டு கொண்டாடியது. அன்று தனியாகப் படிக்க ஆசிரியர்கள் தவிர வேறு யாருக்கும் உரிமையில்லை. என் மனைவி இந்து பத்திரிகையில் "இந்த நூற்றாண்டு விழாவில் பல்கலைக் கழகம் பெண்கள் தனியாகப் படிக்கும் உரிமையை அளிக்க வேண்டும்'' என எழுதினாள்.

உரிமை தானே பலன் தராது உரிமையை முயன்று பயன்படுத்துதல் அவசியம்

இல்லாத பல சுதந்திரங்களைக் கேட்கிறோம். அது சரி. இருக்கும் சுதந்திரங்களை முழுமையாகப் பயன்படுத்துகிறோமா? அதைச் செய்வது பலன்தரும். 10 பேர் ஆபீசில் பேசும்பொழுது ஒருவர் ஆபீசர் சொன்ன புது வார்த்தையை சொன்னால் அவரை புத்திசாலி எனக் கூறுகிறோம். உடனே அவருக்கு மரியாதை வருகிறது. ஒரு வார்த்தைக்கும் மரியாதை உண்டு. ஒவ்வொரு புதிய விஷயத்திற்கும் மரியாதை உண்டு. நாம் பல விசேஷங்களில் கலந்து கொள்கிறோம். நாமுள்ள neighbourhoodல் கூடிப் பேசுகிறோம். அப்படிக் கூடும்போது நட்பு, உறவு என்பது பணத்தையும், அந்தஸ்தையும் பொருத்தது. மேலும் படிப்பையும் பொருத்தது.

8ம் வகுப்புடன் படிப்பை நிறுத்தியவர் எம்.ஏ. படித்து விட்டால், அதற்குரிய மரியாதை வரும் என்று சொல்ல வேண்டியதில்லை.

- நம்முடன் பழகுபவர்கள் நம்மிடம் அதிக நெருக்கமாவார்கள்.
- புதிய உயர்ந்த உறவு ஏற்படும்.
- நம் மனம் புதிய தெம்பைப் பெறும்.
- வீட்டிலும் 10 வருஷத்திற்கு முன்னிருந்ததைவிட

அனைவராலும் அதிகமாக விரும்பப்படு வோம்.

● நம் போல் 8ம் வகுப்போடு முடித்து மேலும் படிக்காதவரை இன்று நாம் எம்.ஏ. எடுத்த பிறகு நினைத்துப் பார்த்தால் இடை வெளி நன்கு புரியும். விளக்கம் தேவை யில்லை.

எஸ்.எஸ்.எல்.சி படித்த பெண், வேலைக் குப் போனாள். பட்டம் பெற முயன்று படித்தாள். குடும்பம் தடை செய்தது. ஆனால் பட்டத்தை எடுக்கவில்லையே தவிர, பட்டம் பெற்றால் பெறக்கூடிய அறிவை மனம் நாடி அதைத் தரும் புத்தகங்களை ஆர்வமாகப் படித்து, அறிவு பெற்றாள். அன்னைக்குச் சேவை செய்ய சந்தர்ப்பம் வந்தது. அன்னை எழுதியவற்றை எல்லாம் படித்தாள். அறிவு அளவு கடந்து உயர்ந்தது. அன்னையின் கருத்தை பலருக்கும் எடுத்துச் சொல்லும் சந்தர்ப்பம் அறிவை முழுமையாக்கியது.

குடும்பம் பி.காம் பட்டம் எடுப்பதைத் தடுத்தது

அன்னை எம்.ஏ பட்டத்தைத் தந்தார்

மேலும் எம்.பில் படிக்க ஆசை. பிஎச்.டியில் சேரும் தகுதியுள்ளது. இது முன்னேற்றம். இப் பெண் தன்னுடன் எஸ்.எஸ்.எல்.சியுடன் படிப்பை முடித்து ஆபீஸிலோ, வீட்டுடேனோ இருக்கும் நண்பர் களை இப்பொழுது சந்தித்தால் அவள் அவர் களிடையே உயர்ந்து நிற்பாள்.

முயற்சி செய்பவர் அனைவரும் உயர்வு பெறும் வாய்ப்பை சமூகம் இன்று பெண் களுக்கு அளித்துள்ளது.

5ம் வகுப்பு, 8ம் வகுப்பு, எஸ்.எஸ்.எல்.சி, பியூசி., பி.ஏ, எம்.ஏ, பிஎச்.டி ஆக எந்தப் படிப் புடன் நிறுத்தியிருந்தாலும், பெண்கள் மேலும் படிக்க விரும்புவது பெண் முன்னேற்றமாகும். படிப்புக்கு முடிவில்லை. முடிவில்லாத முன்னேற்றத்தை மனம் ஈடுபட்டு விரும்பி னால் அவர்கள் செய்யக் கூடியது என்ன?

'நேரமில்லை.'

'இதனால் எல்லாம் என்ன உபயோகம்?'

'வீட்டு வேலை அதிகமாக இருக்கிறது.'

'எனக்கு உடம்பு முடியவில்லை,'

'என் கணவனுக்கு நான் படிப்பது பிடிக் காது.'

'மாமியார் கோபித்துக் கொள்வார்.'

என்றெல்லாம் கூறுபவர்களுக்கு **படிக்கப் பிரியமில்லை** எனப் பொருள். அவர்கள் கூறுவது உண்மை. அதைவிடப் பெரிய உண்மை, இது முடியும், முயன்றால் முடியும் என்பதாகும். 50 ஆண்டுகட்கு முன் ஆனந்த விகடனில் 'மாலி' கார்ட்டூன் பிரபலம். அது சமயம் வந்த கார்ட்டூனில் அடுத்த வீட்டுப் பெண்ணுடன் 'சித்தே' பேசி விட்டு வருகிறேன் என்று போனவர் 3 மணி கழித்து வந்ததாகப் போட்டிருந்தது. நேரமில்லை என்பது நாம் நமக்கே சொல்லும் சாக்கு.

● மனம் தெளிவாக முடிவை எடுப்பது முதற் காரியம்.

● எடுத்த பின் எந்த நிலையில் படிப்பை நிறுத்தி விட்டோமோ, அதே நிலையிலிருந்து ஆரம்பிக்க வேண்டும்.

● ஒரு ஆபீசில் வேலை செய்பவராக இருந் தால் 10 வருஷ சர்விசில் 3, 4 வகுப்பு மேற் படிப்பு படித்த அனுபவமிருக்கும். எஸ்எஸ் எல்சி யை முடித்தவர் இன்று 10 வருஷ சர்வீசுக்குப் பின் பி.ஏ அறிவுள்ளவராக இருப் பார். அப் படிப்பில் சேர வேண்டும்.

● Course, coaching, teaching, reading, preparation எல்லா விஷயத்திலும் உயர்ந்த நல்ல முறை களை மட்டும் பின்பற்றி, குறுக்குவழி, மட்ட மான முறைகளைத் தவிர்க்க வேண்டும்.

● படிக்க ஆரம்பித்த பின், வீட்டிலும், ஆபீசிலும், வெளியிலும் படிப்புக்கு உதவி யான எது காதில், கண்ணில் பட்டாலும்


சுவாமி படத்திற்கு மஞ்சள், குங்குமம் (அ) சந்தனம், குங்குமம் வைக்கிறோம். கைகளால் வைத்தால் ஒழுகிவிடும். இதை தவிர்க்க Buds–ஆல் (ஜான்சன் போன்றவை) சந்தனத்தைக் குழைத்து வைத்தோ மென்றால் வட்ட வட்டமாக அழகாக இருக்கும். கையைத் துடைக்க கந்தல் துணியைத் தேட வேண்டிய அவசியமில்லை. குங்குமம் பார்ப்பதற்கு வட்டமாக அழகாக இருக்கும்.

– எஸ். விஜயலட்சுமி



உருளைக் கிழங்கு பொரிக் கும் முன்பு சிறிது பயத்த மாவை உருளைக் கிழங்கு மீது தெளி யுங்கள். பொரியல் மொர மொரப்பாய் சாப்பிட நன்றாய் இருக்கும்.

ஆர். அஜிதா



அதை முழுவதுமாக கிரகித்துக் கொள்ள வேண்டும்.

- ஆங்கிலம் பேச வராதவர்கள் பேச முயன்று பேச வேண்டும்.
- முழு முயற்சி, முழுப் பலன் தரும்.

அன்னையை பெற்றுக்கொண்டு படிப்பை சமர்ப்பணம் செய்தால் முழு முயற்சிக்கு அடுத்த உயர்ந்த பலன் வரும்.

மனிதர்கள் சூட்சுமமாகவுமிருப்பார்கள். மண்ணுங்கட்டி போலவுமிருப்பார்கள். மண்ணுங்கட்டியாக இருந்தாலும் உஷாராக, சூட்சுமமாக மாற முயல்பவர் பலன் பெறு வார்கள். எஸ்.எஸ்.எல்.சி பெயிலாகி அட் டண்டர் வேலைக்குப் போய் குமாஸ்தா வானவர் ஒருவரி ஆங்கிலம் எழுதியதில்லை. ஒரே ஒரு வார்த்தையையும் ஆங்கிலம் பேசிய தில்லை. ஆனால் ஆங்கிலம் பேச முழு ஆர்வமுடையவர். அவர் ஆர்வத்தைக் கண்ட நான் "மனதில் எழும் எல்லா எண்ணங்களை யும் கொஞ்சம் கொஞ்சமாக ஆங்கிலத்தில் சிந்திக்கப் பழகினால், ஆங்கிலம் பேசுவது சுலபம்" என்றேன். 30ம் நாள் அவர் சரளமாக ஆங்கிலம் பேசினார்.

இன்டர்மீடியட் படித்து A.G.S. ஆபிசில் 28 வருஷம் ஆங்கிலத்தில் மட்டும் எழுதியவர் ஆபீசரானார். ஆங்கிலம் தவறின்றி பக்கம் பக்கமாக எழுதுவார். பேச வாராது. இதே முறையை அவருக்கு 2 ஆண்டுகட்கு முன் கூறி னேன். பலன் சூன்யம். ஆர்வமில்லை.

ஆர்வமுள்ளவர்க்கு அனைத்தும் உண்டு என்பது அன்னையின் சட்டம்.

இதை மேலும் சிறப்பாகப் பூர்த்தி செய்யும் முறையுண்டு. உங்களைவிட குறைந்த படிப் புள்ளவர்களுக்கு தொடர்ந்து படிக்க உதவி செய்ய முன்வந்தால், நீங்கள் படிக்கும் விஷ யத்திலுள்ள குற்றம் குறை தெளிவாக விளங் கும்.

கல்விக்கு முடிவில்லை. அன்னை அதையே கூறுகிறார், வற்புறுத்துகிறார். நான் கூறுவது பட்டப் படிப்பு. அன்னை கூறுவது வாழ்வுக்குரிய கல்வி. பிஎச்.டி படித்த பிறகும் என்ன படிப்பு என்று கேட்காமல், அதிகம் படித்தவர்க்கு மேலும் படிக்கும் வாய்ப்பு அதி கம் என்று தெரிந்து படிப்பை நிறுத்தாமல் தொடர முன் வர வேண்டும்.

- புதியதாகப் பயில்வது ஆனந்தமான அனுபவம். Learning is an experience of joy.
- பணம், அந்தஸ்து, பரம்பரை, படிப்பு, அழகு, கலை ஆகியவை நம் நிலையை உயர்த்தும். அதனால் அடுத்த அடுத்த படிப்பைப் பெறுதல் நல்லது.
- அன்னையின் கருத்துக்களை அறிவது முடிவான படிப்பு. அதைப் பெற்றால் நாம் பெற முயலும் பட்டப் படிப்பு எளிதாகும்.
- அன்னையின் கருத்துக்களை அறிய நாம் சிந்திக்க வேண்டும். சிந்தனை அறிவை உயர்த் தும். அறிவு படிப்பை இனிமையாக்கும்.
- படிப்பு உயர்ந்தால், பெண்களுக்கேயுள்ள பயம் குறையும். சில சமயம் முழுவதும் போகும்.
- படிக்காத மனம் மூட நம்பிக்கைகளைப் போற்றும். படிப்பு அவற்றை அகற்றும்.
- படிப்பு நிலை உயர்ந்தால், அறிவு நிலை உயர்வதுடன் மனநிலையும் உயரும். அது ஆன்ம விழிப்புக்கு உதவும். அது பணியை சிறப்பிக்கும்.

அன்னையை மேலும் அறிவது படிப்புக்கு உதவி செய்யும். மேற்படிப்பு, அன்னையை மேலும் அறிய உதவும்.

- எந்த முயற்சிக்கும் அதிகப் பலன் தரும் அன்னை, படிக்க முயற்சி எடுத்தால் பூரணப் பலன் தருவார். நாம் பி.ஏ எடுக்க முயன்றால் எம்.ஏ தருவார்.


வெண்மையின் புதிய நிறம்
உஜாலா
UJALA
உஜாலா
உஜாலாவின் துரித செயல்திறன் தண்ணீரில் உடனடியாக கரைகிறது மற்றும் துணிகளின் மீது ஆழமாக செயல்பட்டு பளபளக்கும் வெண்மையை சீராக தருகிறது. துணிகளை மீண்டும் துவைக்கும் போது உடனடியாக அழுக்குடன் வெளியே தள்ளப்பட்டு விடப்படுகிறது. உஜாலாவை திரும்ப உபயோகிக்கும் போது புதுப்பித்த வெளிச்சம் பரவுகிறது.
ஓரல்-டாக்ஸிஸிடி, சரும அரிப்பு ஆகிய டெஸ்டுகளில் தீங்கற்றது மற்றும் சருமத்திற்கு ஹானியற்றது என சர்ட்டிபிகேட் பெற்ற விஞ்ஞான ரீதியான தயாரிப்பு ஆகும் உஜாலா.
எல்லாவற்றிற்கும் மேல், ஜோதி லேபாரட்டரீஸின் தயாரிப்பு அல்லவா உஜாலா!
உஜாலா
A Product of JYOTHY LABORATORIES, Mumbai.



முன்னொரு நாள்
இரவைப் பிளந்து
தொலைவை விழுங்கும்
வள்ளுவப் பேருந்து

நீல விளக்கின் மங்கிய
வெளிச்சம்

மல்லிகை மணத்தில்
மனக்குரங்கு விழிக்க

காலை நீட்டி
விரலால் வருட
முன்னிருக்கைப்
பெண்மயில்
விருட்டெனத் திரும்பி
ஒருகணம் மருட்டி
மறுகணம் கவிழ்ந்து
ஓரக் கண்ணால்
ஒப்புதல் வழங்க
அச்சம் தெளிந்து
கால் மகிழ்வு நிகழ்த்த
பயணம் முழுதும்
பழமாய் இனித்தது.

இன்று–

இருட்டைக் கிழித்து
விருட்டெனப் பாயும்
விரைவுப் பேருந்து

அருகில் மகளுடன்
அண்டையூர்ப் பயணம்

மங்கிய நீல
விளக்கொளி மட்டும்

மகளுக்குப் பின்னால்
இளைஞன் ஒருவன்
இருந்தே தொலைத்தான்

பாழும் மனமோ
'பக்பக்'கென்ன
அடிக்கடித் திரும்பி
அவ்விளைஞனை முறைக்க

அவனுள் ஒருகுரல்
மெல்லச் சிரித்தது

'அன்று நீ செய்ததை
இன்றிவன் செய்வான்
என்றே நீயும்
கலங்கு கின்றாயா?'

ஏளனத் தொனியுடன்
எழுந்தஇக் குரலை
இன்னொரு குரலும்
செருப்பால் அடித்தது
இன்மொழி உரைத்தது.

''யாரோ பெற்ற
பெண்ணடா அவளும்!''

— ஆறு. இராமநாதன்



பெண்களின் உரிமைக் குரல்

"ஒரு ஜன நாயகத்தில் சமுதாயத்தின் எல்லாவித பிரிவினர்களின் பிரதிநிதித்துவம் இருந்தாலே ஒழிய அது முழுமையாகச் செயல்பட முடியாது."

இந்தப் பொன்னான வார்த்தைகளை உதிர்த்தவர் இருபது ஆண்டுகளாக நாடாளுமன்றத்தில் உறுப்பினராக இருக்கும் ராஜ்யசபா துணைத் தலைவர் டாக்டர் நஜ்மா ஹெப்துல்லா.

முதல்முறை ராஜ்யசபாவில் துணைத் தலைவராக இருந்த காலவரை முடிந்த பின்பு மறுமுறை ஜூலை 1998-ல் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். நாடாளுமன்றத்தில் தொடர்ந்து நான்கு தடவைகளாக உறுப்பினராக இருந்து வரும் டாக்டர் நஜ்மா பாராளுமன்றத்தில் பல செயற்குழு மற்றும் நிர்வாக சபைகளில் தலைவராக இருக்கிறார். பல பன்னாட்டு கமிட்டிகளிலும் ஸ்தாபனங்களிலும் உறுப்பினராகவோ தலைவராகவோ இருந்து வருகிறார் இவர்.

பெண்களின் விஷயங்களில் டாக்டர் நஜ்மாவுக்கு பரந்த அனுபவம். 1997-ல் பெண்களின் ஐக்கிய நாட்டு செயற்குழுவின் தலைமை தாங்கினார் இவர். அதே ஆண்டு ஹாவர்ட் பல்கலைக் கழகத்திற்கு பெண்களுக்கான உலகப் பொதுமன்றத்தின் விசேஷ அழைப்பினராகச் சென்று வந்தார். பெண்களின் பிரதிநிதியாக உலகெங்கிலும் பல்வேறு கூட்டங்களில் கலந்து கொண்டிருப்பவர் டாக்டர் நஜ்மா.



இவரைப் பார்த்தால் ஒரே நாளிற்கு நாற்பத்தி எட்டு மணி நேரங்கள் உண்டோ என்று சந்தேகப்பட வைக்கும் அளவிற்கு சுறுசுறுப்பும் துடிப்பும்! அநேக கலாச்சார சமுதாய, ஆராய்ச்சி நிறுவனங்களில் தலைவராகவும் இருக்கிறார் இவர்!

டாக்டர் நஜ்மா 1962ல் மௌலானா ஆசாத் மல்டி பர்பஸ் உயர்நிலை பள்ளியை நிறுவியிருக்கிறார். உலகெங்கிலும் பல்வேறு பல்கலை கழகங்களிலும் பள்ளிகள் மற்றும் ஸ்தாபனங்களிலும் பல்வேறு பதவிகள் வகித்து வரும் அதிசயப் பெண்மணி இவர். உலகம் முழுவதும் பயணம் செய்த அனுபவம் இவருக்கு உண்டு.

இதையெல்லாம் தவிர நிறைய புத்தகங்களை எழுதியும் சில பிரசுரங்களுக்கு ஆசிரியராகவும் இருந்திருக்கிறார் இவர். புத்தகங்

களில் முக்கியமான விஷயங்கள் விஞ்ஞானத்தில் முன்னேற்றம், பெண்களின் வளர்ச்சி, சுற்றுப்புறச் சூழலின் பாதுகாப்பு, சமுதாயத்தின் நலன் போன்றவையாகும். இந்திய, வெளிநாட்டு வர்த்தகப் பத்திரிகைகளில் ஆராய்ச்சி கட்டுரைகளும் எழுதியிருக்கிறார் இவர்.

ஒரு பெண்ணால் இத்தனை பொறுப்புகளையும் திறம்பட நிர்வகிக்க முடியும் என்று நிரூபித்து இந்திய நாட்டுப் பெண்களுக்குப் பெருமை தேடித் தந்திருப்பவர் டாக்டர் நஜ்மா ஹெப்துல்லா.

இவர் அறிவாற்றல் நிறைந்த முற்போக்கான குடும்பத்தில் பிறந்தவர். சுதந்தரப் போராட்டத் தலைவரான மௌலானா அப்துல் கலாம் ஆசாத் இவருக்கு மாமா தாத்தா உறவு முறை. அதாவது இவரது பாட்டியின் சகோதரர். அரை நூற்றாண்டிற்கு முன்பு இஸ்லாமியப் பெண்கள் பள்ளிக்குச் செல்லாத காலமாக இருந்தும் இவரது குடும்பத்தில் பெண்களுக்குக் கல்வியறிவு வளர்க்கப்பட்டது. இவரது பாட்டியும் பிறகு தாயும் பள்ளிக்கும் கல்லூரிக்கும் சென்று வந்த பரந்த மனப் பான்மை உடைய குடும்பம் இவருடையது.

சிறிய வயது முதல் கல்வியின் முக்கியத்துவமும் தேசத்தைப் பற்றிய சிந்தனையும் பொறுப்பும் இவரது மனதில் ஆழ்ந்து பதித்ததில் ஆச்சரியம் ஏதுமில்லை.

விலங்கியல் பட்டப்படிப்பு பல்கலைக் கழகத்திலேயே முதலாவதாகத் தேறினார். பிறகு இருபத்திஇரண்டு வயதிலேயே 'கார்டியாக் அனாடமி' என்னும் இதயம் சம்பந்தப்பட்ட உடற்கூறு சாஸ்திரத்தில் ஆராய்ச்சி செய்து டாக்டரேட் பட்டம் பெற்றார். சிறிது காலம் விலங்கியல் பேராசிரியராகவும் பணியாற்றினார் டாக்டர் நஜ்மா.

1966-ம் ஆண்டு அக்பரலி ஏ. ஹெப்துல்லாவைக் கைப்பிடித்தார் டாக்டர் நஜ்மா. மும்பாயில் திருமண வாழ்க்கை தொடங்கியது. மூன்று பெண்களுக்குத் தாயானார் இவர். ஆனால் அரசியலில் அவருக்கிருந்த ஈடுபாடு அவரை டில்லிக்கு அழைத்துச் சென்றது.

இன்றைக்கு அரசியலில் இவ்வளவு உயர்ந்திருக்கிறார் என்றால் இவரது குடும்பம் இவருக்கு பக்கபலமாய் தோள் கொடுத்தது என்பதால்தான். கணவரும் குழந்தைகளும் அவருக்கு முழு மனதுடன் ஆதரவளிக்க அவரது வாழ்க்கை முன்னேறியது. இன்றைக்கும் இவரது நிரந்தர முகவரி 'சாண்டா க்ரூஸ் மும்பாய்' என்றுதான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்குதான் அவரது கணவரும் குழந்தைகளும் இருக்கிறார்கள்.



"நம் நாட்டு கலாசாரத்தில் பெண்களுக்கு எப்போதுமே தனி மதிப்பும் மரியாதையும் இருந்திருக்கு. நம் நாட்டு கலாச்சாரத்தின் சிறப்பியல்பே பெண்களுக்குக் கௌரவமளிப்பதுதான். இல்லாவிட்டால் 'மனித குலத்திற்கு முக்கியமான அம்சங்களான சக்தி, அறிவு, செல்வம் எல்லாவற்றிற்குமே பெண் வடிவம் கொடுக்கப்பட்டிருக்குமா? நம் நாட்டுப் பெண்கள் விழிப்புணர்வும் தன்னம்பிக்கையும் நிறைந்தவர்களாகத்தான் இருந்திருக்கிறார்கள்" என்று நம் பண்பாட்டில் அவருக்கிருக்கும் புலமையின் ஆதாரத்தில் எடுத்துரைத்தார் டாக்டர் நஜ்மா.

"இடையில்தான் எங்கோ சில தவறுதலான மாற்றங்கள் நடந்திருக்க வேண்டும். 'சதி' போன்ற பெண்களை கொடுமைப்படுத்திய பழக்கங்கள் பேராசையின் காரணமாக நுழைந்திருக்க வேண்டும். பணத்தையும் பதவியையும் பங்கு போட்டுக் கொள்ள பெண்கள் வராமல் இருப்பதற்காக ஆணாதிக்கம் தலை தூக்கி இருக்க வேண்டும்.

'சதி' பழக்கத்தில் மனைவியும் கணவருடன் உடன்கட்டை ஏறிவிட்டால் கணவனின் குடும்பச் சொத்தில் பங்கு கேட்க முடியாதே? வரதட்சணை பழக்கத்தினால் ஒன்றுமே செய்யாமலே

ஆண்களால் சம்பாதிக்க முடிகிறதே? அதனால் பேராசைதான் பெண்களுக்கு எதிரான சமுதாயம் அமைவதற்கு முக்கிய காரணம். இதெல்லாம இடையில் வந்த தவறான பழக்க வழக்கங்கள்தான்" என்று கூறுகிறார் டாக்டர் நஜ்மா.

"நமது வரலாற்றைப் படித்தால் எத்தனை வீராங்கனைகள் இருந்திருக்கிறார்கள்? எத்தனை பெண்கள் சுதந்தரப் போராட்டத்தில் கலந்து கொண்டிருக்கிறார்கள்? ஆண்களுக்குச் சரியாக ஆங்கிலேயர்களை வெளியேற்றுவதில் தோள் கொடுத்திருக்கிறார்கள்? சரோஜினிநாயுடு, இந்திராகாந்தி போன்றவர்கள் தங்கள் சொந்தத் திறமையில் வந்தவர்கள். நம் நாட்டில் பெண்கள் நிச்சயமாக முன்னுக்கு வரலாம். நம் நாட்டு சட்டத் திட்டத்தில் பெண்களுக்கு வோட்டுப் போடும் உரிமை தானாகவே கிடைத்திருக்கிறது. அதற்காக அந்நிய நாட்டுப் பெண்களைப் போல நமக்குப் போராட வேண்டிய அவசியம் ஏற் படவில்லை" என்று பெண்களை ஊக்குவிக்கும் விதமாக பேசும் டாக்டர் நஜ்மா பெண்களுக்கு அதிகாரமளிக்கப்பட வேண்டும், அவர்களுக்கு நாடாளுமன்றத்தில் 33 சதவிகிதம் ஒதுக்கீடு வேண்டும் என்று உரிமைக்குரல் எழுப்பி வருபவர்.



அதற்கு அவர் விளக்கம் கொடுக்கும் விதமாகக் கூறுகிறார், "சமீபத்தில், இந்தியப் பெண்களுக்கு ஒரு நல்ல விழிப்புணர்வு ஏற்பட்டிருக்கிறது. தங்களுக்கு உரிமையும் பொறுப்பும் வேண்டும் என்று கேட்கத் தொடங்கிவிட்டார்கள்.

இந்திராகாந்தியை எடுத்துக் கொள்ளுங்கள். நம் நாட்டிலேயே மிகவும் பெரிய கட்சியான காங்கிரஸ் கட்சியின் தலைமையைத் தாங்கினார். அதுவும் எத்தனை திறமையுடன்?

இப்போதும் எங்கள் கட்சியை ஒரு பெண்தான் தலைமை தாங்குகிறார். எங்கள் பார்ட்டி ஒரு மிகவும் முக்கியமான பார்ட்டி. ஒரு பெண்தான் மற்றொரு பெண்ணின் நிலைமையை நன்கு புரிந்து கொள்ளுவாள். சோனியா காந்தி பெண்கள் உரிமைக்கான மசோதாவை ஆதரிப்பவர்'' என்று பெருமையுடன் கூறும் டாக்டர் நஜ்மா தங்களது கட்சி பெண்களின் முன்னேற்றத்திற்காக எத்தனை முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறது என்று விளக்குகிறார்.

டாக்டர் நஜ்மாவின் கணிப்புப்படி நம் நாட்டில் கிராமப்புற பெண்கள்தான் எப்போதுமே ஓரளவிற்கு சுதந்தரமாக இருந்திருக்கிறார்கள். வயல்வெளிகளில் வேலை செய்கிறார்கள். வீட்டிலும் வெளியிலும் திறம் பட பல பணிகளை நிர்வகிக்கிறார்கள். நகரத்துப் பெண்களுக்கு மன அழுத்தம் அதிகம் என்கிறார் இவர்.

"கிராமத்துப் பெண்களுக்குக் கல்வியறிவு மாத்திரம் கிடைக்கவில்லை. அதனால்தான் பின் தங்கிவிட்டார்கள் கல்வியறிவு கிடைத்தால் நிச்சயமாக தங்கள் உரிமைக்காக போராடுவார்கள். அரசாங்கம் அவர்களது முன்னேற்றத்திற்காக தீட்டிய பல திட்டங்களைப் பற்றி கல்வியறிவு இல்லாததால் அவர்களுக்குத் தெரிய வருவதில்லை.

நம் நாட்டில் பொருளாதார முன்னேற்றத்திற்கான எத்தனையோ திட்டங்கள் உள்ளன. பெண்கள் இத்திட்டங்களை பற்றி அறிந்து கொண்டு சலுகைகளை முழுமையாக உபயோகித்துக் கொள்ள வேண்டும்'' என்று ஆதங்கத்துடன் கூறுகிறார் டாக்டர் நஜ்மா.

பாராளுமன்றத்தில் பெண்கள் அதிகாரத்திற்காக ஏற்படுத்தப்பட்ட செயற்குழுவின் தலைவராக இருக்கிறார் இவர். பெண்களின் முன்னேற்றத்திற்காக மற்ற பெண் உறுப்பினர்களுடன் சேர்ந்து இவரும் தொடர்ந்து குரல் எழுப்பிக் கொண்டே இருக்கிறார். முழுமை பெறாத பெண்களுக்கான பிரத்தியேகமான திட்டங்களைப் பற்றி கண்டறிந்து அவைகள் துரிதமாக செயல்படுத்தப்பட வேண்டும் என்று தொடர்ந்து முயற்சி செய்து வருகிறார் டாக்டர் நஜ்மா ஹெப்துல்லா.

"பெண்களுக்குக் கல்வியறிவைத் தவிர பொருளாதார சுதந்தரம் மிகவும் அவசியம். படிப்பும் பொருளாதார சுதந்தரமும்தான் பெண்களுக்கு தன்னம்பிக்கையையும் தைரியத்தையும் கொடுக்கின்றன'' என்கிறார் இவர்.

"பெண்களுக்கான இட ஒதுக்கீடு மசோதா பாராளுமன்றத்தின் முன் வைக்கப்பட்டிருக்கிறது. இனி பாராளுமன்றம்தான் அதை பாஸ் செய்து ராஜ்ய சபாவுக்கு அனுப்ப வேண்டும்'' என்று தற்சமயம் மசோதாவின் நிலையைப் பற்றி விளக்குகிறார் டாக்டர் நஜ்மா.

"பெண்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டால் எல்லா பிரச்னைகளும் சீக்கிரம் தீர்ந்து விடுமென்று தீர்மானமாகக் கூற முடியாது. ஆனால் பெண் களின் பிரச்னைகளுக்கு ஒரு தீர்வு காண வேண்டும் என் றால் அதற்கு முதல் வழி இது தான். அவர்களுக்கு அதிகாரம் கிடைத்தால் அரசாங்கத்தின் முன் பெண்களின் பிரச்னை களை வைக்கலாம்.



மேலும் பெண்களுக்கு அதிகாரம் கிடைத்தால் பெண்களின் பிரச்னைகளைத் தவிர அந்நிய பிரச்னை களான விலைவாசி உயர்வு, கல்வி, உடல்நலன் போன்ற விஷயங்களையும் திறம்படக் கவனிப்பார்கள்.

நம் நாட்டின் சில ஆயிரம் பெண்கள் ஒன்று கூடி கையெழுத்து போட்டு அரசிடம் கொடுத் தால் உடனே இட ஒதுக்கீடு கிடைத்து விடும் என்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால் நம் நாட்டில் பெண்களின் ஜனத்தொகை கிட் டத்தட்ட ஐந்நூறு கோடிவரை இருக்கிறது. ஒவ் வொருத்தருடைய கையெழுத்தும் கிடைப்பது சாத்தியமா என்ன? அதைவிட பெண் கட்சித் தலைவர்கள் பெண்களுக்கு அதிகாரம் கிடைப் பதற்கு அயராது உழைத்தால் நிச்சயம் வழி பிறக்கும்" என்று கூறுகிறார் டாக்டர் நஜ்மா.

பெண்களுக்கான இட ஒதுக்கீடு மசோதா ஏன் அனுமதிக்கப்படவில்லை என்பதை விளக்குகிறார் இவர். "There is no will to pass the bill" என்று வேடிக்கையாகக் கூறிய இவர் பிறகு ஆழ்ந்த யோசனையுடன் காரணத்தை சொன் னார். "இந்த மசோதாவை அனுமதிக்க ஆண் களுக்கு விருப்பம் இல்லை. பாராளுமன்றத்தில் உறுப்பினராக இருக்கும் ஆண்களுக்கு பயம் - எங்கே தங்களுடைய தொகுதிகள் தங்களை விட்டுப் போய் விடுமோ என்ற பயம். அதனால் தான் இந்த மசோதவை தீவிரமாக எதிர்க் கிறார்கள்."

நாடாளுமன்றத்தில் பல ஆண்டுகளாக பெண்களின் பிரதிநிதியாக இருக்கும் இவர் கூறுவது, "இத்தனை ஆண்டுகளாக பாராளுமன் றத்தில் ஒரு அங்கமாக இருந்த அனுபவத்தில் கூறுகிறேன். நாம் திறமைசாலிகளாக இருந் தால் - ஆணோ, பெண்ணோ எவராக இருந் தாலும் - எல்லோருமே நம்மை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்வார்கள்.

பெண்கள் எப்போதுமே முயற்சி செய்ய வேண்டும் - செய்து கொண்டுதான் இருக்கிறார் கள். ஆண்கள் அவர்களை 'திறமைசாலிகளாக இல்லை' 'போதிய அறிவு இல்லை' என்று மட்டம் தட்டிக் கொண்டே இருக்கிறார்கள். ஆனால் நம் தொழிலில் நாம் சாமர்த் தியம் உள்ளவராக இருந் தால் நாம் நிச்சயம் திறமை சாலிகள் என்பதை நிரு பிக்கலாம்.

நம் நாடு ஒரு மிகப் பெரிய குடியரசு. அதன் வளர்ச்சியில் பெண்களும் சம பங்கு உள்ளவர்கள். அத னால் பாராளுமன்றத்தில் அவர்களுக்கு சம உரிமை கிட்ட வேண்டும். அதற்காக அவர்கள் தங்களை உறுதிப் படுத்திக் கொண்டு போராட வேண்டும்."

பெண் உரிமைகளை விட்டு விலகி நம் நாட் டில் பெண்களுக்கு முன்னேற்றமடையும் வழி யைப் பற்றிக் கூறுகிறார் இந்தத் தலைவி: "கல்வி என்பது ஒரு அற்புதமான, விசாலமான உலகிற்கு சாவி. கல்வி எனக்கு நிறைய தன்னம்பிக் கையைக் கொடுத்திருக்கிறது. நான் என்னுடைய உரிமைகளைப் பற்றியும் பொறுப்புகளைப் பற்றியும் விழிப்புணர்வு உள்ளவள். கல்வி இல் லாமல் நாம் வாழ்க்கையில் எதையுமே சாதிக்க முடியாது.

நமக்கு வாழ்க்கையில் இரண்டு முக்கிய மான விஷயங்களில்தான் அதிகம் "ஃபோக் கஸ்" - அதாவது கவனம் இருக்க வேண் டும்.

ஒன்று கல்வி. மற்றொன்று குடும்பக் கட்டுப் பாடு. நாம் ஜனத்தொகையைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்காவிட்டால் ஒன்றுமே நடக்காது. நிறைய மக்கள் பங்கு போட்டுக்கொள்ள இருந் தால் நமது பொறுப்புகளும் உரிமைகளும் பாதிக் கப்படும்."

இவருடைய எதிர்கால இலட்சியத்தைப் பற்றி நம்மிடம் கூறுகிறார். "தேசத்தின் நலனிற் காக உழைத்துக்கொண்டே இருக்க வேண்டும். ஒற்றுமை ஒருமைப்பாடு மற்றும் எல்லா மதத் தினரும் அமைதியுடனும் நேசத்துடனும் ஒன்று கூடி வாழ வழி வகுக்கும் விதத்தில் என்னுடைய முயற்சிகள் இருக்கும்."

அமைதியாகப் புன்னகையுடன் ஆணித்தர மாகவும் உறுதியாகவும் பேசிய ராஜ்யசபா துணைத் தலைவர் டாக்டர் நஜ்மா ஹெப் துல்லா நாம் கிளம்புகையில் விடைக் கொடுக் கும் விதமாகக் கூறுகிறார். "பெண்களே உங் களுடைய நியாயமான கோரிக்கைகளுக்காகவும் உரிமைகளுக்காகவும் ஒன்றாகச் சேர்ந்து மனம் தளராமல் போராடுங்கள். அப்புறம் பாருங்கள் எதிர்காலம் உங்கள் கையில்."

பேட்டி: **ஸ்வாதி**

படங்கள் : ஜி. சுரேஷ்

முகங்கள்

"அப்பா இறந்துவிட்டார்!"

என் நெஞ்சில் ஏதோ சுழன்று விழுந்து விட்டது போல் குலுங்கியது.

"லலிதா மேடம்!" என்றழைத்தபடியே வந்த புவனா. "நீங்க சொன்னமாதிரியே எல்லா அரென்ஞ்மென்ட்ஸும் பண்ணியாச்சு மேடம். சேர்ஸ், டியூப்லைட், மைக்செட் எல்லாமே வந்தாச்சு. ஜெனரேட்டர்தான் இன்னும் வரவில்லை. எலக்டிரீஷியனை சத்தம் போட்டு உடனே கொண்டு வரச் சொல்லி அனுப்பியிருக்கோம். திடீர்னு கரண்ட் 'கட்'டாகி இருட்டாயிடுச்சுன்னா ப்ராப்ளமாயிடுமே அதான்" என்றாள்.

'என் மனசும் இப்போ இருட்டாயிருக்கே. இதுக்கு எந்த ஜெனரேட்டர் கொண்டு வந்து வெளிச்சப் படுத்த முடியும்' மனதுக்குள் விம்மினேன்.

"என்ன மேடம்! ஒண்ணுமே பேச மாட்டேங்கறீங்க ஏதாவது பிரச்சனையா?"


சட்டென்று என்னை சுதாரித்துக்கொண்டே புவனாவிடம், "அதெல்லாம் ஒண்ணுமில்லேம்மா. நான் வந்திட்டே இருக்கேன். நீ போம்மா" என்று அவளை அனுப்பிவிட்டு எழுதி வைத்திருந்து மனுக்களை அடுக்கி, மேசை மேல் வைத்து விட்டு எழுந்து பாத்ரூமிற்கு சென்றேன்.

வாஷ்பேசினை திறந்துவிட்டு நெஞ்சு குலுங்க நிறைய அழுதேன். நீரை பலம் கொண்ட மட்டும் என் முகத்தில் வாரி இறைத்துவிட்டு, டவலால் அழுந்தத் துடைத்து என் துக்கத்தைக் குறைக்க முயற்சித்தேன்.

'என் அப்பா இறந்துவிட்டாரா?' மீண்டும் மீண்டும் தோன்றிய அப்பாவின் நினைவுகளை சிசாவிற்குள் அடைப்பதுபோல் என் கனத்த நெஞ்சிலிருந்து தற்காலிகமாக பிரித்து வைத்தேன்.

அந்த நகரின் குடியிருப்புகள் மொத்தமும் பரந்த மணல்வெளியில் குழுமியிருந்தனர். நெடுகிலும் ட்யூப்லைட் விளக்குகள், மேடை அலங்காரங்கள் என்று அழகாகக் காட்சியளித்துக் கொண்டிருந்தது.

அந்த நகருக்கு வருகை தரவிருக்கும் மந்திரியை நகர மக்கள் வரவேற்று அந்த நகர நலவாழ்வுச் சங்கத்தின் சார்பில் மக்களின்



கோரிக்கைகளை முன் வைக்க செய்யப்பட்டிருந்த ஏற்பாடுதான் இது!

உமா நாராயணசுவாமி

லலிதாதேவி!

ஆயிரம் குடியிருப்புகள் கொண்ட அந்த நகரின் நல வாழ்வுச் சங்கத்தின் தலைவியாக இருபது வருடங்கள் பொறுப்பேற்று, இருளடைந்தும், குண்டும் குழியுமாய், பாம்பும் புதருமாய் இருந்த அந்த நகருக்கு, விளக்கு வசதி, சாலை வசதி, குடிநீர் வசதி, பஸ் வசதி என்று கொஞ்சம் கொஞ்சமாய் முன்னேற்றமடையச் செய்ய அரும்பாடு பட்டவள்!

அங்குள்ள அத்தனை மக்களின் அன்பிற்கும், மரியாதைக்கும் பாத்திரமான லலிதாதேவிக்கு வயது ஐம்பதை எட்டியிருந்தது. ஆனாலும் எறும்பைப்போல் சுறுசுறுப்பு. செய்யும் வேலையில் அக்கறை. இருபது வயதுப் பெண்ணின் உற்சாகம். எதையும் முடித்து விடலாம் என்ற மனோதைரியம். இப்படி சொல்லிக்கொண்டே போகலாம்.



''மேடம்! இப்பத்தான் ஃபோன் வந்தது. மந்திரி கிளம்பிட்டாராம். அனேகமா இன்னும் கொஞ்ச நேரத்தில் அவர்களை எதிர்பார்க்கலாம். எதுக்கும் நீங்க அங்கே வந்து எல்லா ஏற்பாடுகளும் சரியாக இருக்கான்னு

பார்த்து சொல்லிட்டீங்கன்னா திருப்தியாயிடும்". சங்க அங்கத்தினர்கள் கூட்டமாக வந்ததும், "இதோ! கிளம்பிட்டேன். நீங்க எல்லோரும் அங்கே போய் இருங்க" என்று அவர்களை அனுப்பி விட்டு, வேகமாக எழுந்து தேவையான பேப்பர்களை எடுத்துக்கொண்டு அலுவலக அறையைப் பூட்டினேன்.

"என்னம்மா இது! இந்த வயசிலே உனக்கு இதெல்லாம் தேவைதானா? சங்கம், மீட்டிங், எம்.எல்.ஏவைப் பார்க்கப் போறது, கலெக்டருக்கு மனு குடுக்கறதுன்னு இந்த ஊரைக் கட்டிண்டு இன்னும் எத்தனை நாளைக்கு அழப் போறியோ? பேசாம ரெஸ்ட் எடுத்துண்டு, உன் உடம்பைப் பார்த்துக்கோ. எனக்கும் டிரான்ஸ்ஃபர் ஆயிடுத்து. நாம எல்லோரும் இந்த ஊரை விட்டே, இல்லே, இந்த ஸ்டேட்டை விட்டே போயிடப் போறோம். யார் எக்கேடு கெட்டுப் போனா நமக்கென்ன? நீ படுத்துண்டா யார் வந்து பார்ப்பா?" கோபமாகப் பேசினான் என் மகன் வாசு.

மகனை ஏறிட்டு நோக்கினேன். "உனக்கு தெரியாதுடா வாசு. நான் இந்த ஊருக்குள்ளே காலடி எடுத்து வைச்சப்போ, நீ என் வயத்திலே ஐந்து மாசக் கரு. மருந்துக்குக்கூட இந்த ஊரில் ஒரு தெருவிளக்கு கிடையாது. அவசரத்துக்கு பஸ் வசதியோ மருத்துவ வசதியோ எதுவுமே இல்லை. பாம்பும், தேளும் கடிச்சு எத்தனையோ பேர் செத்து மடிஞ்சதைப் பார்த்தேன்.

நாம ஏதாவது செய்யணும்னு தோணித்து இந்த ஊரைப்பத்தி, இங்குள்ள வசதியின்மை பத்தி பத்திரிகைகளுக்கு எழுதி அனுப்பினேன். பஞ்சாயத்துக்கும், கலெக்டருக்கும் மனு எழுதிப் போட்டேன். நடையா நடந்து சம்பந்தப்பட்டவங்களையும் அதிகாரிகளையும் பார்த்து நிலைமையை எடுத்துச் சொன்னேன். நீ கருவிலேயிருந்து எப்படி கொஞ்சம் கொஞ்சமாய் வளர்ந்தியோ அப்படித்தான்டா இந்த ஊரும் கொஞ்சம் கொஞ்சமா முன்னேறித்து.


அப்போ என்னோட ஒவ்வொரு செயலையும் பெருமையா நினைச்சு, "பொது நலம்கற உணர்வு எல்லோருக்கும் வராதும்மா. அது சொந்த பந்தங்களுக்கு அப்பாற்பட்டது. நீ இன்னும் நிறைய செய்யணும்ன்னு" என்னை உற்சாகப்படுத்தியது என் அப்பா! அதோ! அந்த மூலையிலே கருண்டு படுத்திருக்காரே உன் தாத்தா! அவர்தான்" என்றேன்.

"சரிம்மா. அவர் சொன்னதுக்காக நீங்க ஏன் டென்ஷனாறீங்க? அவர் எதுவும் தப்பா பேசிடலையே, இதெல்லாம் நீங்க மட்டுமேதான் செய்யணுமா? வேற யாராவது அக்கறை எடுத்து செஞ்சிட்டு போகட்டுமே. அநாவசியமா உங்க உடம்பையும் மனசையும் போட்டு ஏன் அலட்டிக்கிறீங்க?" என்று கணவனுக்கு சப்போர்ட்டாக என்னிடம் வாதாடினாள் மருமகள் திவ்யா.

"சரி! நீங்க எல்லோரும் இப்போ என்னதான் சொல்றீங்க. இதுவரைக்கும் இருந்து சாதிச்சது போதும். நாமோ இங்கே இருக்கப் போறதில்லே. இந்த ஊர் எப்படிப் போனா நமக்கென்னன்னு ஒதுங்கிடச் சொல்றீங்க. அப்படித்தானே? ஒதுங்கிடறேன்.

ஆனால், நாளைக்கே வீட்டு வேலை செய்யற பொன்னம்மா நம்மகிட்டே வந்து, "ஏம்மா! புருஷனும் கைவிட்டு ரெண்டு பொட்டப்புள்ளய வைச்சிட்டு கஷ்டப்படறேன், மந்திரி ஐயாகிட்டே எடுத்துச் சொல்லி ஒரு தையல்மிஷினோ, பெட்டிக்கடையோ வைக்கத் தர ஏற்பாடு செய்யக் கூடாதா? ஊரை விட்டு போறோம்ன்னதும் ஊர் ஜனங்களையும் மறந்துட்டீங்களேம்மா"ன்னு கண்ணீர் வடிப்பா!"

"ஆக்ஸிடென்டிலே காலை பறிகொடுத்துட்டு நிக்கற காளி, வீட்டு முன்னாலே வந்து. 'அம்மா! சங்கத்திலே தலைவியா இருக்கிற நீங்க மனசு வைச்சா மந்திரிகிட்டே இந்த ஏழையைப் பத்தி எடுத்துச் சொல்லி, ஒரு சக்கரவண்டி வாங்கித்தர ஏற்பாடு பண்ணி என்னையும்



வீட்டில் நாள் கிழமையானால் சில சமயம் கொஞ்சம் கொஞ்சம் மிகுந்து விடும். அப்போது ஒரு கட்டு கீரையை நறுக்கி அலம்பிப் போட்டு நன்கு வெந்ததும் மிகுதியான எல்லாவற்றையும் போட்டு கொதிக்கவிட்டு, எருச்ச குழம்பு ஆக பண்ணவும். இதை சாப்பாத்தி, தோசை, இட்லி சாதத்துடன் சாப்பிட ருசியாக இருக்கும்.

– விஜயலட்சுமி

நடமாட வைப்பீங்கன்னு நம்பிட்டிருந்தேனேம்மா'' என்று அழுது புலம்புவாள். என் மனசு கேட்காது. சந்தர்ப்பம் இருந்தும் அதைப் பயன்படுத்தி மத்தவங்களுக்கு உதவி செய்ய முடியலையேன்னு வேதனை நெஞ்சை அழுத்தும். இந்த பொறுப்பு இருக்கற வரைக்கும் நல்லதையே செஞ்சிட்டு போகணும்ம்னு நினைக்கறது தப்பாடா வாசு?'' மகனிடம் கெஞ்சினேன்.

எங்களது பேச்சையெல்லாம் அப்பா கேட்டிருக்க வேண்டும்.

மெதுவாக கம்பளியை விலக்கி, தலையை வெளியே எடுத்து, கண்ணால் வாசுவை அழைத்தார். அவன் கையைப் பிடித்து, ''அவள் போகட்டும்டா. தன்னைச் சுத்தியிருக்கிற எல்லாத்திலும் அக்கறை எடுத்துக்கணும்னு நினைக்கிறாளே. அதான்டா உங்கம்மாவோட உயர்ந்த குணமே! அவளைத் தடுக்காதே''

என்னை நன்கு புரிந்து கொண்ட அந்த ஜீவனின் வாயிலிருந்து வந்த அந்த வார்த்தைகள்தான் கடைசியாக இருக்குமென்று நினைத்துக்கூட பார்க்கவில்லை.

கடைசியாக அவர் சொன்ன வார்த்தைகள் மீண்டும் மீண்டும் மனசிலே ரீங்கரித்து ஓய்ந்தபோது என் கண்கள் பனித்திருந்தது.

கண்களைத் துடைத்துக்கொண்டு, விழா மேடைக்கு முன் வந்தவர்களை வரவேற்று இருக்கையில் அமரச் செய்து கொண்டிருந்தேன்.

திடீரென்று ஏற்பட்ட சலசலப்பு மந்திரியின் வருகையை பறை சாற்றியது.

விழாவில் நிறைய பேர்கள் பேசினார்கள். சங்கத்தின் முக்கிய உறுப்பினர்கள் பேசும்போது, ''எங்கள் நலச் சங்கத்தின் தலைவி. லலிதாதேவி அவர்களின் சுயநலமில்லாத சேவை, உழைப்பு, பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் எடுத்துக் கொள்ளும் அக்கறை... '' என்று, போதும் போதும் என்று திகட்டும் அளவிற்குப் பேச, கைதட்டல் ஒலி காதைப் பிளந்தது.

மந்திரியும் தன் வழக்கமான பாணியில் பேசி அமர்ந்தபின், நான் எழுந்து சென்று அந்தப் பகுதி ஏழைகள் பலரின் நல்வாழ்வு கருதி, எழுதி வைத்திருந்த கோரிக்கை மனுக்களை மந்திரியிடம் தந்து, படிக்கச் செய்து, மன்றாடி, கெஞ்சியும் கேட்டுக் கொண்டபின் மந்திரி எழுந்து வந்தார்.

''என்ன சொல்லப் போகிறாரோ?'' என்று நான் உள்பட பலரும் எதிர்பார்த்திருக்க, மந்திரி அந்த கோரிக்கைகளை ஏற்றுக் கொள்வதுடன் அதனைச் செயலாற்றும் உத்தரவையும் பிறப்பித்த போது எழுந்த கரகோஷம் வெகுநேரத்திற்கு அடங்கவேயில்லை.

என் கண்களில் வழிந்த நீரை துடைத்துக் கொண்டு, நான் அவசரமாக கிளம்பத் தயாரானேன்.

நிறைய பேர்கள் கூட்டமாக என்னைச் சூழ்ந்து கொண்டு என்னைக் கைகுலுக்கியும், கட்டிப் பிடித்தும், மாலைகளை அணிவிப்பதுமாய் அவரவர் மகிழ்ச்சியைத் தெரிவிக்க என் மனநிலை அதையெல்லாம் ஏற்றுக் கொள்ளும் நிலையிலில்லை.

என் தவிப்பையும், வேதனையையும், வெளியே காட்டிக் கொள்ளாமல் எப்படியோ அவர்களிடமிருந்து விடுபட்டு, தந்தையின் நினைவாய் வீட்டை நோக்கி வேகமாக வந்து கொண்டிருந்தபோது, அந்தக் குரல்கள் அலைகளாக வந்து, என் செவிப்பறையைத் தாக்கியது.

''என்ன பொம்பளைடா இவங்க! பெத்த அப்பன் வீட்டிலே பொணமா கிடக்கறான், கொஞ்சமாவது மனசாட்சி வேண்டாம்? இந்த புகழ்ச்சிக்கும், பாராட்டுக்கும், அற்ப மாலைக்குமா ஒருத்தி அலைவா? தூ!''

ஏதோ சில 'முகங்கள்' என்னைக் கடந்து 'தள்ளாடியபடி' சென்று கொண்டிருந்தன.

''அப்பா! அப்பா!'' என்று என் மனம் அரற்றியது. அவருக்குத் தெரியும். இந்த மகளைப் பற்றி. இறக்கும்போது நிம்மதியாகத்தான் கண் மூடியிருப்பார்.

கன்னங்களில் வழிந்த நீரை சுண்டி உதறிவிட்டு நடந்தேன்.



கலந்த சாதம் கலப்பதற்கு முன்னால் சாதத்தின் மேல் சிறிது எண்ணெயை விட்டு விட்டு பிறகு எந்த சாதம் பண்ணணுமோ பண்ணவும். ஒட்டாமல் கலக்கலாம்.

— பா. விஜயலட்சுமி

"ஞாயிற்றுக் கிழமை அபிஷேகம் செய்து ருத்ரம் ஜபிக்கிறதுன்னு நிச்சயம் ஆயிடுச்சில்லியா, அப்பப் போய் உங்கம்மாவைக் கூட்டிண்டு வாங்க."

"எதற்கு?"

"அது சரி. காலமெல்லாம் நம்மளோடு இருந்துண்டிருக்காங்க. பத்து நாள் பெண் வீட்டுக்குப் போயிட்டு வர்றதுக்குள்ளே 'நான் இல்லாத போது இங்க ருத்ரம் ஜபிக்க ஏற்பாடு செய்திங்களாக்கும்னு' உங்க அம்மா கேப்பாங்க."

" 'திடும்' என்றுதானே நிச்சயம் செய்தோம். நாம என்ன வேணுமின்னு அம்மா இல்லாத போது ஏற்பாடு செய்தோம்?"

"இந்த ஆர்க்யுமெண்டெல்லாம் உங்க அம்மாவிடம் நடக்காது. போய் அழைச்சிட்டு வாங்க. காசியா, கல்கத்தாவா! இங்க இருக்கிற திருவண்ணாமலைக்குப் போயிருக்காங்க. ஐந்து மணி நேரப் பிரயாணம்."

"நீ பேசாம இரு. திடுமென்று ஏற்பாடு செய்தோம்னா அம்மா ஒண்ணும் சொல்ல மாட்டா. எனக்கு ஆபீஸ்ல லீவு எடுக்க முடியாது."

"இதுக்கு மேலே எனக்குத் தெரியாது. மகனே சமர்த்து. உங்க அம்மாகிட்ட நான் சமாதானம் பேச மாட்டேன்."

அம்மா ஒதுங்கிக் கொண்டு விட்டாள். அப்பாவும் ஆபீஸிற்கு கிளம்பிப் போய் விட்டார்.



கேட்காமல் கேட்கணும்



குந்தளா

சாயந்திரம் ஆபீஸிலிருந்து திரும்பியதும் அம்மா கேட்டாள். "லீவு கிடைச்சுதா?"

"நான் லீவைப் பற்றிப் பேசவே இல்லை."

"அப்ப திருவண்ணாமலை போறதில்லைன்னு தீர்மானம் பண்ணிட்டீங்களா?"

"ஆமாம். நான் போய் வாத்தியாரைப் பார்த்து அபிஷேகத்திற்கு வேணுங்கிற சாமான் லிஸ்ட் வாங்கிட்டு வரேன். அப்படியே உங்க அண்ணா வீட்டிலேயும் கூப்பிட்டுட்டு வந்துடறேன்."

அப்பா வீடு திரும்பும் போது மணி ஒன்பதரை.

மறுநாள் காலை ஆபீஸ் கிளம்பு முன் அப்பாவிற்கு திடீர் ஞானோதயம் ஆச்சு.

"நான் போய் அம்மாவை கூப்பிட்டு வந்துடறேன். ஏழரை மணியாகிறது. இப்பக் கிளம்பினால் ஒரு மணிக்குப் போய்ச் சேர்ந்துடுவேன். நாளைக்குக் காலையில அருணாசலேஸ்வரர் தரிசனம் செய்துட்டு இரண்டு மணி பஸ்ல கிளம்பி அம்மாவுடன் வந்துடறேன்."

"அப்ப இன்னைக்கு, நாளைக்கு இரண்டு நாட்கள் ஆபீஸ் லீவா?"

"ஆமாம். அங்க போயிட்டு அத்திம்பேரை பார்க்காம, பேசாம வர முடியுமா? அருணாசலேஸ்வரர் தரிசனம் செய்ய வேண்டாமா!"

"அத்திம்பேர் ஆபீஸிலிருந்து வர சாயந்திரமாகும். மதியம் இரண்டு மணி பஸ்ஸை பிடியுங்க. ராத்திரி ஏழு மணிக்கெல்லாம் போயிடலாம். ஆபீஸ்லேயும் லீவு எடுத்துக்காம ரெண்டு மணி நேரம் பர்மிஷன் போட்டுக்கலாம். ஒருநாள் லீவு மிச்சமாகும்."

"நீ பேசாம இரு. ஒன்றுமே யோசிக்க மாட்டாய். நான் மத்தியானம் போனால் அத்திம்பேர் ஆபீஸிற்கு போன் செய்வேன். அவர் ஜீப் ஏற்பாடு செய்வார். சாயந்திரம் ஊரைச் சுத்தி பார்க்கலாம் இல்லையா?"

"அங்க பார்க்க என்ன இருக்கு'

கோவிலும், சேஷாத்திரி ஸ்வாமிகள் ஆசிரமும் தான் இருக்கு. நீங்க என்ன தபோவனம் போகப் போறீங்களா? சாத்தனூர் டேம் பார்க்கப் போறீங்களா? அதெல்லாம் குழந்தைகளைக் கூட்டிட்டு போகும் போது பார்த்துக்கலாம்."

"கோவிலுக்குப் போக வேண்டாமா?"

"கோவிலுக்குப் போக வேண்டாம்னு சொல்லலையே. நாளைக் காலையில போய்ப் பார்த்துட்டு வாங்க. மத்தியான பஸ்ஸில் தானே வரப் போறீங்க!"

"நீ பேசாம இரு. அம்மாவை அழைச்சுட்டு இருட்டிலேயும் ஏமத்திலேயும் வர முடியாது. பதினோரு மணி பஸ்ஸில கூட கிளம்பி வருவேன்."

"ஆகா மூணு மணிக்கெல்லாம் வீட்டிற்கு வந்து ரெஸ்ட் எடுத்துக்குங்க. எனக்கென்ன வந்தது. உங்க லீவுதான் போகுது."

அப்பா ப்ரீஃப்கேஸில் ஒருநாளைக்கு வேண்டிய துணிகளை அடுக்கிக் கொண்டார்.

"காரியர் ரெடியா?"

"காரியர் எதுக்கு? நீங்க இப்பவே கிளம்பறதாகச் சொன்னதாலே டிபன்தான் செய்தேன். சாப்பாடு தயார் செய்யலை."

"நான் ஆபீஸ் போயிட்டு அங்கேயிருந்து அப்படியே பஸ் ஏறிடலாம்னு இருந்தேன்."

"நான் சொன்னபோது முடியாதுன்னீங்க."

"அத்திம்பேரோட பேசத்தான் ராப்பொழுது இருக்கே. முடிஞ்சா கார்த்தால கோவிலுக்கு போய் வரதுக்கு ஜீப் ஏற்பாடு பண்ணிக்கலாம்னு தோணித்து. அதான் புரோகிராமை மாத்திட்டேன். ஒருநாள் லீவும் மிச்சமாகும்."

"டிபனை சாப்பிட்டுட்டு ஆபீஸிற்கு கிளம்புங்க. மத்தியானம் கான்டீன்ல ஏதாவது சாப்பிட்டு பஸ் ஏறுங்க. காரியரை ஆபீஸ்ல விடறதா? ஊருக்கு எடுத்துட்டு போறதான்னு பிரச்னை இல்லாம இருக்கும்."

அப்பா ப்ரீப்கேஸ் சகிதம் ஆபீஸ் கிளம்பியாச்சு.

கண்ணாடி முன் நின்று தலைவாரினார்.

"இந்த பாண்ட்டிற்கு இந்த ஷர்ட் சரியா இருக்கா?"

"ப்ரௌன் பாண்ட்டிற்கு கிரே ஷர்ட் போட்டுண்டு சரியா இருக்கான்னு கேட்டா எப்படி? கிரீம் கலர் ஷர்ட்டோ இல்லை வெள்ளைல ப்ரௌன் செக் போட்ட ஷர்ட் இருக்கே, அதையோ போட்டுக்கோங்க."

"உன்னை யார் கேட்டா? நீ பேசாம இரு. உனக்கு டிரெஸ் பற்றிய ரசனையே கிடையாது. இப்படி கான்ட்ராஸ்டா போட்டுக்கிறதுதான் இப்ப எல்லாம் பேஷன். ஏய் பாரு குட்டி. இந்த டிரஸ் சரியா இருக்கா?" அப்பா என்னைக் கேட்டார். எனக்கென்னமோ டிரஸ் மாட்சாக இருப்பதாகத்தான் தோன்றியது.

"சரியாத்தான்பா இருக்கு."

"அவ சொல்றா பார். குருவையும் கேக்கறேன் பார்."

"டேய் ஒரு நிமிஷம் இங்க வா."

"என்னப்பா?"

"இந்த பாண்ட்டிற்கு இந்த ஷர்ட் சரியா இருக்கா?"

அவன் சற்று தள்ளி நின்று கொண்டு தலையைச் சாய்த்து கன்னத்தில் ஒரு விரலை வைத்தபடி அப்பாவை ஒரு நிமிடம் பார்த்தான்.

"டிரஸ் சரியாத்தான் இருக்கு. இன் பண்ணிண்டு இருக்கிறதுதான் சரியா இல்லை."

கிட்ட வந்து இன் பண்ணிண்டு இருக்கிறதை சரிசெய்தான்.

"ஒரு நிமிடம் இருங்க" பீரோவிலிருந்து சென்ட்டை கொண்டு வந்து இரு கைகளையும் தூக்கச் சொல்லி சென்ட் அடித்தான்.

"இப்ப சரியா இருக்கு."

"பாண்ட்டை விட ஷர்ட் கொஞ்சம் பழசாகத் தெரியலை?"

"இல்லையே. இரண்டுமே ஒண்ணாத்தான் இருக்கு."


"பாருக்குட்டி அந்த அயர்ன் பாக்ஸை ஆன் பண்ணும்மா."

அப்பா வெள்ளையில் ப்ரௌன் செக் போட்ட ஷர்ட்டை அயர்ன் செய்து மாட்டிக் கொண்டார்.

"இப்பத்தான் பர்பெக்ட் மாட்ச். நான் சொன்னா உடனே கேக்க மாட்டீங்களே."

"நீ பேசாம இரு. ஷர்ட் பழசா இருந்ததால மாத்திண்டேன்."

அப்பா கிளம்பிச் சென்றார். இந்த அப்பா எப்பவுமே இப்படித்தான். அம்மா சொன்னா உடனே கேட்க மாட்டார். ஆனா கடைசியா அம்மா சொன்னதைத்தான் செய்வார். கேட்காமல் கேட்கணும். அம்மா நமட்டுச் சிரிப்போடு உள்ளே போனாள். ❑



முந்திரி பருப்பை வறுக்கும் பொழுது நெய் சுட ஆரம்பித்தவுடன் மு. பருப்பைப் போட்டு வறுக்க வேண்டும். நெய் நன்கு காய விட்டு போட்டால் மேல் புறம் சிவந்து உள்புறம் வறுபடாமல் இருக்கும்.

– ஆர். திரிபுரசுந்தரி

பகல் தூக்கம் வேண்டாம்!

அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது, அதனினும் அரிது கூன், குருடு, செவிடு நீங்கிப் பிறத்தல் அரிது' என்று கூறினார் ஔவையார். இந்தக் குறைகள் எல்லாம் இல்லாமல் பிறந்தாலும் அழகானவராகப் பிறத்தல் அதை விட அரிது என்பதை எவராலும் மறுக்க முடியாது.

பெண்களுக்கு இன்றைக்கு இருக்கிற முக்கியமான பிரச்சனைகளில் ஒன்று உடல் பருமன். இது பரம்பரையாகவும் வரலாம். ஹார்மோன் இம்பேலன்ஸ் காரணமாகவும் வரலாம்.



சிலருக்குக் கல்யாணத்திற்குப் பிறகும் ஏற்படலாம். அந்தக் காலத்தில் பெண்கள் நன்றாகத் துணி துவைத்து, மாவரைத்து, குனிந்து பெருக்கி, துடைத்து நிறைய உடற்பயிற்சிகளை அவர்கள் அறியாமல் செய்தார்கள். இப்போது இந்த காலத்துல பெண்கள் வேலைக்குப் போவதனாலும் நேரம் பற்றாக்குறையினாலும் வீட்டு வேலைகளை பெரும்பாலும் நின்றுகொண்டே இயந்திரங்களின் உதவி கொண்டு செய்து முடிப்பதாலும் உடலுக்குத் தேவையான பயிற்சி கிடைப்பதில்லை. இதனால் உடல் பருமனாகி விடுகிறார்கள். இதனால் தினமும் ஒரு நாளைக்கு அரை மணி நேரமாவது உடற்பயிற்சி கண்டிப்பாக செய்ய வேண்டும். நாங்க எங்களைப் போன்ற அழகுக்கலை நிலையங்களிலே இதற்கான சிறப்புப் பயிற்சி அளிக்கிறோம்" என்கிறார் மகா அழகுப் பயிற்சி நிலைய உரிமையாளர் மஹாலக்ஷ்மி. அவர் மேலும் கூறுவது –

1. உடல் இளைக்கும் மிஷினை உபயோகப்படுத்தி உடம்பில் உள்ள அதிகப் படியான கொழுப்பை நீக்கி விடுகிறோம்.

2. மூலிகைகளால் செய்யப்பட்ட எண்ணெயை சூடுபடுத்தி அதை உடம்புல தடவி தலையிலிருந்து கால் வரைக்கும் மசாஜ் பண்ணி விடுகிறோம். இதனால் உடம்பு வலி நீங்கி நல்ல ரிலீஃப் கிடைக்கும். உடம்பில இருக்கிற கோடுகள் மறைந்து தேவையில்லாத கொழுப்பை கரைச்சிடும்.

3. தொங்கும் சதை எல்லாம் இறுகும். வளையங்கள் எல்லாம் மறைந்து உடல் நல்ல பளபளப்புடன் தோற்ற மளிக்கும்.

4. வைப்ரேட்டர் மசாஜர் கருவியைப் பயன்படுத்துவதினால் ரத்த ஓட்டம் சீராக அமையும்.

5. உடம்பில் மசாஜ்



செய்த பிறகு ஸ்டீமிங் செய்வதனால் உடம்பில் இருக்கிற கெட்ட நீர் எல்லாம் வெளியே வந்துவிடும். நிறைய பேருக்குக் குண்டாக இருக்கின்றோம் என்ற தாழ்வு மனப்பான்மை இருக்கும். அவை யெல்லாம் நீங்கி புத்துணர்வுடன் திகழ்வார்கள். இவற்றையெல்லாம் செய்து முடித்த பிறகு நாங்கள் அவர்களுக்கு உணவு கட்டுப்பாட்டை சொல்லித் தருகிறோம். தங்களோட உணவுல காரம், புளி, இறைச்சி, கொழுப்புச் சத்துள்ள உணவு ஆகியவற்றை நீக்கி விட்டு காய்கறி பழம் கீரை இவற்றை யெல்லாம் சேர்த்துக்க சொல்கிறோம்.

காலையில் எழுந்த உடனே வெறும் வயிற்றில் நிறைய தண்ணீர் குடிக்கலாம். அதுக்கப்புறம் அவங்க தினமும் செய்ய வேண்டிய உடற்பயிற்சி களையும் சொல்லித் தருகிறோம். அதாவது Hip walking, Toe touchig, cycling, situp, pendulum போன்ற பல விதமான பயிற்சிகளை கற்றுக் கொடுக் கிறோம்.

புஜங்காசனம், சூரிய நமஸ்காரம், கபால பாத்தி, ப்ராணாயமம், பச்சி மத்தாசனா போன்ற யோகா பயிற்சிகளையும் செய்வதனால் இவை மனதை ஒரு நிலைப்படுத்தும். இவைகளையெல்லாம் முறையாகக் கற்றுக் கொள்வதே நல்லது.

இந்தப் பயிற்சி எல்லாம் செய்வதனால், சோம்பல் நீங்கி சுறுசுறுப்பு ஏற்படும். உடலுக்குப் புத் துணர்ச்சியும், ஆரோக்கியமும் கிடைக்கும். உடம்பு இளைக்க விரதம் இருந்தால் உடலுக்கு ரொம்ப நல்லது. விரதம் இருக்கிறப்போ நம்ப உடம்புல ஆசிடிடி ஏற்படும். இதை சரி செய்ய நல்ல பழரசம், நறுக்கிய காய்கறி, சூப் வகைகள் பழம் பால் ஆகியவற்றைச் சாப்பிடலாம்.

உடம்பிலுள்ள நோயைக் குணப்படுத்த டாக்டர் எவ்வளவு முக்கியமோ, அதே மாதிரி உடல் வெளியே செய்யப்படும் அழகை பராமரிக்க நல்ல அனுபவம் மிக்க அழகுக் கலை நிபுணர் தேவை.

இதுபோல் ஒழுங்கான முறையில் உடற்பயிற்சி உணவுக்கட்டுப்பாடு இவற்றை மேற்கொண்டால் உடல் பருமன் என்ற பேச்சுக்கே இடமின்றி உடலை நல்ல முறையில் பராமரிக்கலாம்.

'அழகு நிலையத்திற்கு வருவது என்பது அழகுக்காக மட்டுமின்றி நல்ல ஆரோக்கியத்திற்காகவும்தான்.'

உடல் இளைக்க

எண்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம் என்பது போல், ஆரோக்கியமான வாழ்வுக்கு முக்கியமானது நமது உடலில் உள்ள அனைத்து உறுப்புக்களுமே. அந்த உறுப்புக்கள் அனைத்தும் ஒன்றோடொன்று இணைந்து செயல்பட வேண்டும். அவ்வாறு இணைந்து செயல்படும்போது நமது உடல் உறுப்புக்கள் ஒருங்கிணைந்து காணப்படு கிறது. அவ்வாறு ஒருங்கிணைந்து காணப் படும்போது நமது உடல் அழகாகவும், வேண்டாத இடத்தில் தசைகள் போடா மலும், இடுப்பு தசைகள் மடிந்தும் இளைத்தும் அழகாக காணப்படும். அழகான உடலுக்கு மிக முக்கியமானது அதிக தசைகள் இல்லாத இடுப்புப் பகுதி கை கால்கள், மார்புப் பகுதி ஆகியவை.

முடிந்தவரைக்கும் கைகளுக்கு நல்ல வேலை கொடுக்க வேண்டும்.

இவ்வாறு செய்யும்போது தசைகளில் உள்ள வேண்டாத கொழுப்புப் பொருட்கள் நீங்குவது மட்டும் இல்லாமல், தசைகளுக்கு நல்ல சக்தியும், வலுவும் கிடைக்கிறது. இதனால் கைகளில் தசை அதிகம் போடுதல் தவிர்க்கப்படுகிறது. கால்களில் சிலருக்குத் தொடையிலும், இடையில் அதிக தசை தங்கி, நடக்க முடியாமல் அவதிப்படு வார்கள். இதை தடுப்பதற்கு, அவர்கள் ஒரு கிலோ மீட்டரிலிருந்து மூன்று கிலோமீட்டர் வரை தினமும் நடக்க வேண்டும். முதலில் நடக்க ஆரம்பிக்கும்போது ஒரு கிலோ மீட்டர் என்று தொடங்கி படிப்படியாக முன்னேறி மூன்று கிலோ மீட்டர் ஒரு நாளைக்கு என்ற அடிப்படையில் முன்னேற வேண்டும். சாதாரணமாக நடப்பதற்கு ஹீல்ஸ் இல்லாத செருப்பு பயன்படுத்துவது நல்லது. அடிக்கடி படிக்கட்டில் ஏறுவதும், இறங்குவதும் இவர்களுக்கு முக்கியமான வேலையாக இருந்தால் கால்கள் கட்டாயம் மெலிந்தும் அழகாகவும் காணப்படும். ஜாக்கிங், ஸ்லோ ரன்னிங் செய்வதாலும் இவர்களது கால்கள் அதிக வலு பெற்று அழகாக காணப்படும்.



உங்கள் புது காலனியில் உள்ளவர்கள் மின்சார கட்டணம் போன்றவற்றைச் செலுத்த எல்லோருமே போக வேண்டிய அவசியமில்லை. ஒவ்வொரு தடவையும் ஒவ்வொருவர் என முறை வைத்துக் கட்டுவது பலருடைய பொன்னான நேரத்தை மிச்சப்படுத்தும்.

— சித்ரா— சூர்யா

கல்யாணம் பண்ணிப் பார்; வீட்டைக் கட்டிப் பார்!

E. R. Subramanian, B.Sc., M.A., M.Ed.,
1 B Rohini Apts., 180, RH Road, Chennai - 4. Ph : 4994084


எங்கள் திருமகள் திருநிறைச் செல்வி S. சுஜாதா M.B.A. (Lecturer SathyaBama Engineering College Chennai) விற்கும், திருநிறைச்செல்வன் S. ரெங்கநாதன் ACA (Financial Executive Dodsal & Co., Muscut, OMAN) அவர்களுக்கும் திருமணம் 10.2.99 அன்று சென்னை அண்ணா நகர் கைலாஷ் ஸ்ரீமஹாலில் மிகவும் சீரும் சிறப்பாக இனிதே நடைபெற்றது. அறுசுவை உணவிற்கு 'J.D. Catering Service' ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மாப்பிள்ளை அழைப்பு காலை முதல், திருமணம் முடிந்து மறுநாள் கட்டுச்சாதம் வரை, எல்லா வேளைகளிலும், சரியாக, ருசியாக, காப்பி, டிபன், சாப்பாடு எல்லாம் நல்ல முறையில் தயாரித்து, அனைவரையும் திருப்தியாக உபசரித்து அனுப்பினார். குறிப்பாக, திருமண வரவேற்பு நிகழ்ச்சி (Reception) யின் போது 'இரவு டின்னர்' வருகை புரிந்த அனைவராலும் கவரப்பட்டது. எல்லோரும் J.D. யைப் பாராட்டி நன்கு உணவருந்திச் சென்றனர். ஒவ்வொருவரும் திரும்பிச் செல்லும் போது திருமணத்திற்கு 'Catering Service' செய்தது யார்? என்று கேட்டுத் தெரிந்து கொண்டு மகிழ்ச்சியுடன் பாராட்டிச் சென்றது, எங்கள் கண்முன் நிலைத்து நிற்கிறது. அனைவரின் சார்பிலும், எங்கள் சார்பிலும் திருமணத் தம்பதிகள் சார்பிலும், இரு வீட்டார் சார்பிலும், இக் கடிதம் மூலம் J.D. அவர்களுக்கு எங்கள் அன்பான உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வுலகில் மனிதனை திருப்திப்படுத்தும் துறையினைத் தேர்ந்து எடுத்து "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்ற சொல்லிற்கு ஏற்ப Catering Service-ல் கொடிகட்டிப் பறக்கும் J.D. அவர்கள் மேலும் மேலும் உயர்ந்து இந்தியா முழுவதும் அவர் புகழ் மணக்க, பல்லாண்டு வாழ்ந்து இந்தத் துறையில் இந்த J. துரை இன்னும் "சாதனை படைக்க வேண்டும்" என்று வேண்டி இறைவனை வணங்குகிறேன்.

நன்றி வணக்கம்.

இவண்,
(E.R. சுப்பிரமணியன்)

J.D. மேரேஜ் கேட்ரிங் சர்வீஸஸ்	**J.D. கேட்ரிங் ஸ்ரீ சாய்கிருஷ்ணா ஸ்வீட்ஸ்**
☎ 2450164, 2456035	☎ 4996807



ஸ்ரீ குருராகவேந்திரா கல்யாண மண்டபம்
சுவாமி நகர், உள்ளகரம், (மடிப்பாக்கம், சென்னை – 91).
☎ 2345232 Pager : 9632711273

April 22, 29, May 3, 7, 10, 12, 13, 17, 19, 20, June 3, 6, 10, 16 ஆகிய தேதிகளில் திருமண மண்டபத்தை பதிவுசெய்து கொள்ளலாம்.

மேலும் எங்களது கல்யாண மண்டபத்தில் கல்யாணம் மற்றும் எல்லா பொறுப்புகளையும் எங்களிடம் நீங்கள் ஏற்பாடு செய்வதால் கல்யாண தினத்தன்று அரை பவுன் தங்க காசுகளை தங்களுக்கு முதல் பரிசாக அளிக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

Prop. J. DURAI

இளம் கணவன்மார்களுக்கு...

கணவன், மனைவி இருவரும் வேலைக்குப் போவது இந்தக் காலத்தில் சகஜமாக இருக்கிறது. விஷம் போல் ஏறி வரும் விலைவாசிகள், பெருகி வரும் தேவைகள் இவை காரணமாக மனைவியும் வேலைக்குப் போக வேண்டியிருக்கிறது.



காலையில் எழுந்ததும் சமையல், மற்ற வேலைகள், பின்பு ஆபீஸ், அங்கு மேலதிகாரியின் கண்டிப்பு, சக ஊழியர்களின் சீண்டல் பேச்சுகள், மாலையில் விடு வந்து சேர பஸ் என்ற அவஸ்தை, பிறகு திரும்ப சமையல், வேலைகள் என்று ஒரு மனைவிக்கு அன்றாட வாழ்வில் டென்ஷன்கள்!

கணவன்மார்கள் சமையலிலும் மற்ற வேலைகளிலும் மனைவிக்கு முடிந்த உதவிகள் செய்தால் அவளுக்கு டென்ஷன்கள் குறையும். காலையில் எழுந்தவுடன் நியூஸ் பேப்பரை வைத்துக்கொண்டு உட்காராமல் பத்து நிமிஷங்களில் தலைப்புச் செய்திகளை

இடுப்புப் பகுதி அழகாக இருக்க

தினமும் குனிந்தும், உடம்பை வளைத் தும் அதிக வேலை செய்வதால் வேண்டாத தசைகள் இடுப்பில் சேர்வதைத் தடுக்க முடியும். மேலும் தசைகள் ஒன்றுடன் ஒன்று இணைந்து செயல்படுவதால் இடுப்பு எலும்பும் தசைகளும் வளைந்து கொடுக்கும் தன்மையை பெறுகின்றன.

உடல் இளைத்து அழகாக காணப்படுவதற்கு கீழே சில டிப்ஸ்.

மதியம் தூங்கும் பழக்கம் உடல் நலத்திற்குக் கெடுதல்

நொறுக்குத் தீனியை தவிர்ப்பது நல்லது.

அதிக கொழுப்பு, மாவு சத்து கொடுக் கும் உணவுப் பொருட்களை அதிகமாக சேர்க்கக் கூடாது. குறிப்பாக மாமிசம், ஐஸ்கிரீம், பால்,

பார்த்துவிட்டு பேப்பரை வைத்து விடலாம்.

முதல் நாளே மறுநாள் பண்ண வேண்டிய சமையல், டிபன் இவைகளை திட்டமிட்டு அதற்கேற்றபடி காய்கறிகளை நறுக்கி வைக்கலாம். வெங்காயம் அரிந்து வைக்கலாம். பூண்டு உரித்துத் தரலாம். குழந்தைகள் இருப்பவர்கள் அவர்களை எழுப்பி, காலைக் கடன்களை கழிக்க அவர்களுக்கு உதவி செய்யலாம். பிறகு அவர்களை குளிப்பாட்டி, யூனிபார்ஃம், சாக்ஸ், ஷூ போட்டு, அவர்களை பள்ளிக்குப் போக தயார் பண்ணலாம்.

தனக்கும் மனைவிக்கும் வேண்டிய மதிய உணவை தானே 'பாக்' பண்ணி வைத்து விடலாம். தனக்கும் மனைவிக்குமான உடைகளை 'அயர்ன்' பண்ணி வைக்கலாம்.

மாலையில் ஆபீசிலி ருந்து வந்ததும் கணவன் ஒரு மணி நேரம் பேப்பர் படித்து விட்டு பிறகு மறு நாள் செய்ய வேண்டிய சமையல், டிபன் பற்றி மனைவியிடம் பேசி அதற்கு வேண்டிய மளிகை சாமான்கள், காய்கறிகள் இவற்றை வாங்கிக் கொண்டு வர வேண்டும். குழந்தைகளுக்கு வீட்டுப் பாடங்கள் சொல்லித் தர வேண்டும். வேலைக்காரி வரா விட்டால் பாத்திரங்கள் தேய்ப்பதற்கும் அவர் உதவ வேண்டும்.

நம் வீட்டு வேலைகளை நாம் செய்வது கௌரவக் குறைச்சல் இல்லை.

– அனிதா ராமச்சந்திரன்

சீஸ், வெண்ணை, நெய், சாக்லேட் இவற்றை அதிகம் சேர்க்காமல், என்றாவது ஒருநாள் மட்டும் சேர்த்துக் கொள்ளலாம். மேலும் தவிர்க்க முடியாத சமயங்களில் இந்த உணவுப் பொருட்களுடன் வெங்காயம், பூண்டு இவைகளை சேர்ப்பதினால் அதிலுள்ள கொழுப்புப் பொருட்களை ஓரளவு நீக்க முடியும். நார்ச்சத்து அதிகம் உள்ள உணவுப் பொருட்களை சாப்பிடுவதால், நமக்கு மலச்சிக்கல் வராமல் தடுக்க முடியும். உதாரணமாக பீர்க்கங்காய், வாழைத்தண்டு, வாழைப்பூ, வாழைக்காய், முள்ளங்கி எல்லாவித கீரைகளையும் சேர்ப்பது மூலம் நமது உடல் வேலை செய்வதற்குத் தேவையான சக்தி கிடைப்பதுடன் உடலில் கொழுப்புப் பொருட்கள் அதிகம் சேர்வதை தடுக்க முடிகிறது. பொதுவாக நாம் குறைந்த பட்சம் எட்டு டம்ளர் தண்ணீர் குடிப்பது சாலச் சிறந்தது.

10:03:99 14:28

எங்களிடம் ராசிக்கல் மோதிரம் வாங்கி பயன்பெறும்
அனைவருக்கும் எங்களது வாழ்த்துக்கள்


ராசிக்கல் மோதிரம் வாங்க ராசியான கடை P.R. ஜுவல்லரி

P.R. JEWELLERY

GOLD, SILVER, DIAMOND & BIRTH STONES
102, USMAN ROAD, T. NAGAR, CHENNAI - 17.
PH: 4344442. TUESDAY HOLIDAY

P.R. ஜுவல்லரியில் ராசிக்கல் மோதிரம் வாங்கி அணிந்துபயன்பெறுங்கள். ஒவ்வொரு ராசிக்கும் மோதிரம் ரூ. 400/-

***குறிப்பு:** எங்கு ஜோதிடம் பார்த்தாலும் எங்களிடம் வந்து ரூ. 400/-க்கு ராசிக்கல் மோதிரம் வாங்கி பயன்பெறுங்கள். ஒரிஜினல் கல் என முழு உத்திரவாதம் தருகிறோம்.*



வைரம்

நகைக் கடைக்கு நிறைய அனுபவம் தேவை. எனக்கு 20 வருட அனுபவம் உள்ளது. P.R. ஜுவல்லரி நிறுவனம் தொடங்கி 13 ஆண்டுகள் ஆகிறது. எங்கள் கடைக்கு நிறைய வாடிக்கையாளர்கள் உள்ளனர். ஆர்டரின் பேரில் வைர நகைகள், தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் சிறந்த முறையில் செய்து தருகிறோம். பரிசுப் பொருட்கள் ரூ. 50 முதல் ரூ. 10,000 வரை கிடைக்கும். அனைத்து ராசிக் கற்களும், ஸ்படிக மாலைகள், ஸ்படிக விநாயகர், ஸ்படிக லிங்கம், பவழ விநாயகர், பவழ மாலைகள், முத்து மாலைகள் அனைத்தும் கிடைக்கும்.

ராஜாக்கள் காலத்தில் இருந்தே வைரங்கள், வைடூரியங்கள், இரத்தினங்கள், நவரத்தினங்கள் உபயோகத்தில் உள்ளன. தற்போது 3 வருடமாக அனைவரும் ராசிக்கற்களை விரும்பி வாங்குகிறார்கள். எந்த ஜோதிடராக இருந்தாலும் ஒருவருக்கு இராசிக்கல் தேர்ந்தெடுக்க அவரது ராசிப்படியும், நடப்பு திசைப்படியும், என் படியும்தான் எழுதித் தருகிறார்கள். இதில் ராசிப்படி அணிவதுதான் மிகச் சிறந்தது. உதாரணமாக, நாம் கோவிலுக்குச் சென்று அர்ச்சனை செய்யும் பொழுது ஜென்ம நட்சத்திரம், இராசி சொல்லித்தான் அர்ச்சனை செய்கிறோம். அதனால், அதன்படி அணிவதுதான் மிகச் சிறந்தது. அனைவரும் நவரத்தின மோதிரம் அணியலாம். மிகவும் நல்லது. இது 9 கிரகங்களின் பலனைத் தரும். 6 கிராம் தங்கத்தில் நவரத்தின மோதிரம் ரூ. 6,250/-

<u>நவரத்தினங்களின் பயன்கள், விலை விபரங்கள், அணிபவர்கள் வழிபட வேண்டிய ஸ்தலங்களின் விபரங்கள் :</u>


1. சூரியன் – மாணிக்கம் (RUBY) அறிவு விருத்தியாகும். நல்ல உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்லும். தைரியத்தையும் துணிச்சலையும் தரும். செல்வம் தரும். சிம்மராசிக்காரர்களும், சூரிய தசை நடப்பவர்களும் அணியலாம். 1 CARAT விலை ரூ. 1500/- ஆகிறது. வெள்ளியில் அணிவது சிறந்தது. 20 Centகல் வைத்து மோதிரம் ரூ. 400/- வழிபட வேண்டிய ஸ்தலம் சூரியனார் கோவில். தஞ்சை மாவட்டம். கும்பகோணத்திலிருந்து 12 கி.மீ. தொலைவில் உள்ளது.

2. சந்திரன் – முத்து (PEARL) ஞாபக சக்தி, செல்வம், வாக்கில் வலிமை, பலவித வசதிகள் ஏற்படும். கடக ராசிக்காரர்களும், சந்திரன் தசை நடப்பவர்களும் அணியலாம். 1 CARAT விலை ரூ. 100/-. வெள்ளியில் அணிவது சிறந்தது. 2 காரட் முத்து வைத்து மோதிரம். ரூ. 400/- வழிபட வேண்டிய ஸ்தலம் திங்களூர். தஞ்சை அருகில் உள்ளது.

3. குரு – புஷ்பராகம் (PUSPARAGAM) வசதி, சவுகரியங்கள், நன்மதிப்பு, செல்வம் ஆகியவை பெருகும். தனுசு ராசி, மீன ராசிக்காரர்கள் மற்றும் குருதசை நடப்பவர்கள் அணியலாம். வெள்ளை, மஞ்சள் ஆகிய வண்ணங்களில் கிடைக்கும். தங்கத்திலும், வெள்ளியிலும் அணியலாம். 4 கிராம் தங்கத்தில் ரூ. 2300/- ஆகும். வெள்ளியில் ரூ. 400/- ஆகும். வழிபட வேண்டிய ஸ்தலம் ஆலங்குடி, கும்பகோணத்தில் இருந்து 15 கி.மீ. தொலைவில் உள்ளது.

4. ராகு – கோமேதகம் (GOMEDAGAM) தடைபடும் காரியங்கள் நிறைவேறும். ராகு தசை நடப்பவர்கள் அணியலாம். வெள்ளியில் அணிவது சிறந்தது. 1 CARAT விலை ரூ. 250/- மோதிரம் விலை ரூ. 400/- வழிபட வேண்டிய ஸ்தலம் திருநாகேஸ்வரம் கும்பகோணத்தில் இருந்து 5 கி.மீ. தொலைவில் உள்ளது.

5. புதன் – மரகதப் பச்சை (EMERALD) கல்வி, செல்வம், ஞானம், ஆரோக்கியம், அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். மிதுன ராசி, கன்னிராசிக்காரர்கள் மற்றும் புதன் தசை நடப்பவர்கள் அணியலாம். 1 CARAT விலை ரூ. 1500/- வெள்ளியில் அணிவது சிறந்தது. 20 Cent கல் வைத்து வெள்ளி மோதிரம் ரூ. 400/- வழிபட வேண்டிய ஸ்தலம் திருவெண்காடு, மயிலாடுதுறை அருகில் உள்ளது.



• நவரத்தினம்

6. சுக்கிரன் – வைரம் (DIAMOND) புகழ், செல்வம், அனைத்துக் காரியங்களிலும் வெற்றி கிடைக்கும். துலா ராசி, ரிஷப ராசிக்காரர்கள் மற்றும் சுக்ர தசை நடப்பவர்கள் அணியலாம். தங்கத்தில் அணிவது சிறந்தது. 1 CARAT விலை ரூ. 35,000/- 5 Cent வைரம் வைத்து 4 கிராம் தங்கத்தில் மோதிரம் ரூ. 4,250/- வழிபட வேண்டிய ஸ்தலம் கஞ்சனூர், கும்பகோணத்தில் இருந்து சூரியனார் கோவில் வழியில் 20 கி.மீ. தொலைவில் உள்ளது.

7. கேது – வைடூரியம் (CATSEYE) வியாபாரம் பெருகும். நிறைய வருமானங்களைக் கொடுக்கும். கேது தசை நடப்பவர்கள் அணியலாம். வெள்ளியில் அணிவது சிறந்தது. 1 CARAT விலை ரூ. 1000/- 20 Cent கல் வைத்து மோதிரம் விலை ரூ. 400/- வழிபட வேண்டிய ஸ்தலம் பெரும்பள்ளம் (வானகிரி) மயிலாடுதுறை – பூம்புகார் வழியில் தர்மகுளம் அருகில் உள்ள நாகநாதசுவாமி கோவிலில் உள்ளது.

8. சனி – நீலம் (SAPPHIRE) அறிவு, மன அமைதி, பெயர், புகழ், செல்வம் ஆகியவை தரும். மகர ராசி, கும்பராசிக்காரர்கள் மற்றும் சனி தசை நடப்பவர்கள் அணியலாம். 1 CARAT விலை ரூ. 1500/- வெள்ளியில் அணிவது சிறந்தது. 20 Cent கல் வைத்து மோதிரம் ரூ. 400/- வழிபட வேண்டிய ஸ்தலம் திருநள்ளாறு. காரைக்காலுக்கு அருகில் உள்ளது.

9. செவ்வாய் – பவழம் (CORAL) மனதில் துணிவு, திருஷ்டியைப் போக்கும். செல்வம் மேலும் பல நன்மைகள் கூடும். மேஷ ராசி, விருச்சிகராசிக்காரர்கள், செவ்வாய் தசை நடப்பவர்கள் அணியலாம். 1 CARAT விலை ரூ. 100/- வெள்ளியில் அணிவது சிறந்தது. 2 CARAT பவழம் வைத்து மோதிரம் ரூ. 400/- வழிபட வேண்டிய ஸ்தலம் வைத்தீஸ்வரன் கோவில். மயிலாடுதுறையில் இருந்து 14 கி.மீ. தொலைவில் வடக்கில் உள்ளது.

அனைவரும் அணியக்கூடியது கார்னெட் வெள்ளி மோதிரம். விலை ரூ. 400/- இதை அணிவதால் படிப்பு, ஞாபகசக்தி, வேலை வாய்ப்பு, வியாபாரம், செல்வ வளம் பெருகும். நம்பிக்கை, உழைப்பு, முயற்சி செய்தால் ராசிக்கல் மோதிரம் அணிந்து 100 சதவீத வெற்றி பெறலாம். எங்களிடம் ஜாதகம் கொண்டு வந்தால் என்ன கல் போட வேண்டும் எனச் சொல்கிறோம். கட்டணம் கிடையாது. ஜாதகம் இல்லாதவர்கள் பிறந்த தேதி, நேரம் ஆகியவற்றைக் கொண்டு வந்தால் கம்ப்யூட்டர் மூலம் ஜாதகம் கணித்து தருகிறோம். கட்டணம் ரூ. 50/- எங்கு ஜாதகம் பார்த்தாலும் எங்களிடம் வந்து ராசிக்கல் மோதிரம் வாங்கிப் பயன்பெறுங்கள். நாங்கள் தரும் கல் ஒரிஜினல் என முழு உத்தரவாதம் தருகிறோம். தபால் எழுதினால் முழு விவர பாம்லெட் இலவசமாக அனுப்புகிறோம்.

ADVT.

திருமண மலர்

மணமகள் தேவை

■ Tamil Iyer, Vadama, Uthiradam, Bharadwaja Gothram, 34/164, Ph.D., Asst. Professor in prestigiousAmerican University on H-1 visa, seeks educated good looking bride between 28/32 years. Willing to settle down USA. Boy visiting India May '99 on 4 weeks vacation. Immediate marriage if horoscopes match. Boy and girl consent for matrimonial alliance. Respond with family details and horoscopes to Box No. 15540

■ ஐயர், வடமாள், பாரத்வாஜம், ரேவதி, 26/5.10"/ACA பிரபல தனியார் கம்பெனியில் ஆடிட்டராக பணிபுரியும் பையனுக்கு முதுநிலை பட்டதாரி Professional qualification உள்ள, நல்ல, குடும்பத்திலிருந்து பெண் தேவை. பெட்டி எண் : 15541

■ Well educated (Accountancy/computer knowledge preferred) girl with decent family background for Bharadwajam, Brahacharanam, Revathi, ACA/29/5.7"/18000/-. Subsect acceptable. Horoscope with time/place of birth, family details to Box No. 15542

■ Tamil Iyer, Brahacharanam, Haritha, Thiruvonam, 34/180 cms, slim, fair, 7000/- M.Com., limited company, Chennai seeks employed/unemployed graduate girl below age 29. Subsect no bar. Reply with horoscope. Box No. 15543

■ வடமாள், பாரத்வாஜ கோத்திரம், கேட்டை, 33, பி.காம், 3500/- தனியார் கம்பெனியில் பெங்களூரில் பணிபுரியும் மணமகனுக்கு தனியார்/அரசு வேலையிலுள்ள வேலைக்கு செல்ல தகுதியுள்ள, படித்த மணமகள் தேவை. சென்னையில் சொந்த வீடு உள்ளது. அணுகவும். பெட்டி எண் : 15544

■ Vadama, Bharadwajam, Bharani, B.Com, 33/167/5000/- private employment, own house, seeks employed, graduate girls. Box No. 15545

■ Vadamal, Bharadwajam, Maham, South Arcot, 27/169, D.C.Tech, Process Engineer, MNC, Chennai, 13,200/- living with parents in own house. Two younger sisters, married. Suitable alliance sought for. Ph : 6266657 Contact Box No. 15546

■ Iyer, Brahacharanam, Sankrithi, Thiruvathirai, 36/165/7500/- Central Govt., Raghu, chevvai 7th house, invites Govt/LIC/IOC/Bank/School teacher/employed girl. Reply with horoscope. Box No. 15547

■ Iyer, Brahacharanam, Uthiradam 2nd, Kousikam, 32 yrs, 167 cms, M.Sc. (Agr.) presently working in E. Africa. Planning to settle in India, seeks smart, accomplished, suitable bride. Request details. Box No. 15548

■ கள்ளர், 30, மார்க்கெட்டிங் மேனேஜர், பன்னாட்டு நிறுவனம் (MNC) பெங்களூரில் பணிபுரியும் வரனுக்கு அதே இனத்தைச் சார்ந்த BE, MCA, M.Sc, கம்ப்யூட்டர் சயின்ஸ் படித்த மணமகள் தேவை. பெட்டி எண் : 15549

■ NellaiTamilVanniya Chettiar, Thiruvadirai, 38 PUC, PGDCA employed in Bombay based Ltd. Co., P.A. 36,000/- seeks suitable fair looking employed girl same caste. Apply with horoscope. Box No. 15550

■ வயதான, ஆரோக்கியமுள்ள, சந்ததி இல்லாத, யாருமற்ற சொந்த வீடு, சொத்து உள்ள தனியாக வாழும் பிராமணருக்கு ஆதரவற்ற 45 வயதுக்கு மேற்பட்ட ஏழை பிராமண குடும்ப பெண் வாழ்க்கை துணைவி தேவை. (விதவை விவாகரத்தானவர் உட்பட). பெட்டி எண் : 15551

■ Sozhiya Vellala Pillai, propertied, teatotaller, 30/164/BE, Non-veg, Punarpoosam, owner Airconditioning company, turn over 30 lakhs, seeks same caste affluent family bride only. Immediate marriage. Contact 0422/399471. Box No. 15552

■ Alliance invited for boy of inter-caste parentage (mother Brahmin, father Tamil Pillai) Kettai, 29/5.7"/M.A. Dip. Material Management, working in well reputed concern. From domestically trained graduate girl of decent family. Phone : 4890521. Box No. 15553

■ Iyer, Vadamal, Bharadwajam, Kettai, 30/5.10"/B.E. (Prod.) software engineer H1 visa boy, seeks software professionals India/abroad. Box No. 15554

■ Thenkalai, Srivatsa, Ashwini, chevvai dosham, fair, handsome, hearing impaired boy, B.Com, ICWA, 28/179/9000/- MNC, clean habits, seeks graduate, English speaking smart, good looking bride. No monetary considerations. Send horoscope. Box No. 15555

■ தென்கலை அய்யங்கார், கௌண்டின்யம், 36/5.6" சதயம், ரூ. 2000 + 4000/- மாத வருமானம். எம்.ஏ., எம்.எட்., தனியார் பள்ளியில் பகுதி நேர ஆசிரியர் மற்றும் விவசாயம். குடும்பப்பாங்கான பெண் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண் : 15556

■ Suitable match for Iyer Brahacharanam, Sankriti, Revathi, 30/167, B.Sc., MMS Bajaj PGDIP, NIIT, established business software development and marketing owns flat Bombay annual income five lakhs plus. Tel : 022 - 4023926. Send horoscope, bio-data family details. Box No. 15557

■ Iyer, Vadama, Bharadwajam, Swathi, 37/167 cms, B.Com, AICWA, ACS, Senior Manager in a public sector, Chennai, seeks graduate employed/unemployed girl. Apply with horoscope. Box No. 15558

■ Iyer, Brahacharanam, Sankrithi, 29/155/5,500/- Rohini, M.Sc., LIC/Trichy, seeks graduate girl, employed/unemployed. Subsects no bar. Send horoscope details to Box No. 15559

அறிவிப்பு

திருமணமலர் பகுதிக்கு வருகின்ற விளம்பரங்களில் மங்கையர் மலரின் கோட்பாடுகளுக்கு இசைவில்லாத வார்த்தைகள் இடம் பெறுமானால் அதனை மாற்றவோ நீக்கவோ, ஆசிரியருக்கு உரிமையுண்டு.

■ இந்து வன்னியர், 32/175, பூசம், டிப்ளமோ கம்ப்யூட்டர் ஹார்டுவேர், சாப்ட்வேர் (எம்.ஏ.) தனியார், உதவி மானேஜர், நிரந்தர பணி, 3000 + perks சென்னையிலேயே தனியாக வீட்டு மனை உள்ள மண மகனுக்கு இதே இன பட்டதாரி வேலையில் உள்ள/இல்லாத மணமகள் ஜாதகத்துடன் தேவை. பெட்டி எண் : 15560

■ வடமாள், கௌசிக கோத்திரம், கிருத்திகை, ரிஷப ராசி, apprentice முடித்து சென்னையில் 10 வருடமாய் கம்பெனியில் machinist வேலையில் மாதம் ரூ. 2500/- சம்பளம் வாங்கும் (பதவி உயர்வு பெற வாய்ப்பு உண்டு) 29 வயது உள்ள பையனுக்கு தகுந்த குறைந்தது 10 +2 படித்த வேலைக்கு செல்ல தகுதி உள்ள பொறுப்புள்ள பெண் தேவை. வேலையில் இருந்தால் (சென்னையில்) நலம். உட்பிரிவுகள் சம்மதம். உடனே தொடர்பு கொள்க. பெட்டி எண் : 15561

■ Alliance invited for Sathayam, Kumbham, 31 yrs., 172 cms, fair, smart looking, well settled doctor (Pediatrician) Chennai based, fatherVanniyar, mother Nair, from fair, good looking girl below 26 yrs. Preferably doctors. Contact Ph : 044 - 4937792. Box No. 15562

■ Very fair, beautiful, unmarried girls/unencumbered divorcees, widows upto 35 from, Tamil/Palghat poor Brahmin families for well settled, Iyer, widower 44 with very fair cute 4 years female child. Box No. 15563

■ Vadamal, Vathoolam, 45 years Senior Engineer, Chemplast, Mettur, 5½ feet, young look, poorattathi star, required bride, graduate (Bharatham & musically talented) employed/unemployed preferable. Contact personally Phone : 04298 - 22267. Box No. 15564

■ செட்டியார், தமிழ், அசைவம், 29/169 செ.பி. எம்.ஏ., இந்து பாங்க் ஹவுஸிங்கில் நிரந்தர பணி. ரூ. 4000/- க்கு மேல் மாத வருமானம். நடுத்தரக் குடும்பம். படிப்பு, குடும்பப்பாங்கான பெண் தேவை. செட்டியார் வகுப்பினர், ஒத்த பிற வகுப்பினர் தொடர்பு கொள்ளலாம். பெட்டி எண் : 15565

■ Tamil Iyer, Brahacharanam, Athreya, Aswini, fair, 30/159, 5.3", B.Sc., B.Tech, Senior Engineer, reputed firm in Chennai. Rs. 1.3 lac p.a., invites professionally qualified, employed bride. Subsects acceptable. Box No. 15566

■ Vadamal, Kousika, 29/170 fair, Punarpoosam B.E., Chennai TVS employed seeks graduate bride. Phone : 4844456. Box No. 15567

■ ஐயர், வடமாள், நைத்ருப காஸ்யப, பூரட்டாதி, 42 வயது, மாதம் 2500/- வருமானம் உள்ள மனைவி இழந்த, குழந்தை இல்லாத பையனுக்கு, படித்த, வேலைக்கு போகும் குடும்பப்பாங்கான பெண் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 15568

■ தஞ்சாவூர் சைவப் பிள்ளை, 28/165/எம்.சி.ஏ, பூரம் சென்னையில் சொந்த வீடு, கார், பன்னாட்டு நிறுவனத்தில் மாதம் ரூ. 35,000/- சாப்ட்வேர் இஞ்சினியர்க்கு எம்.சி.ஏ./பி.ஈ./எம்.பி.ஏ. படித்த நல்ல வசதியான குடும்பத்தைச் சேர்ந்த மணமகள் தேவை. தொலைபேசி : 2380107. பெட்டி எண் : 15569

■ Palghat Iyer, Vadama boy Kousika, Punarpoosam, 32 CA., ICWA Finance Manager Muscat, seeks good looking Keralite Iyer girl. Keralite Iyer qualified below 27. Box No. 15570

■ சீர்கருணீகர் பிள்ளை, 38/155, Marketing Executive ஆக பணிபுரியும் சட்டப்படி divorceed Secunderabad ல் சொந்த வீடு உள்ள வரனுக்கு படித்த குணமுள்ள Broad minded பெண் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண் : 15571

■ ஐயர், பாரத்வாஜம், சித்திரை, 36/3500/- பிரபல தமிழ்ப் பத்திரிகையில் பணிபுரியும் வரனுக்கு அரசு/தனியார் துறையில் பணிபுரியும் பெண் தேவை. சாதி தடையில்லை. விதவைகள்/விவாகரத்தானவர்களும் விண்ணப்பிக்கலாம். பெட்டி எண் : 15572

■ Ayyangar, Vadagalai, preferable non-Srivatsa graduate unemployed, fair, age 28 to 30 for boy 35, B.Com Computer Diploma Officer in reputed private bank Bombay, star Poorattathi, Kumba rasi, suddha jadagam. Star agreement essential. Reply Box No. 15573

■ கோயமுத்தூர் ஆதிதிராவிடர், வயது 45, மாநில அரசுப் பணி, ரூ. 6200/- குடும்ப சூழ்நிலை காரணமாக கலியாண தாமதமானது. படித்த வேலையில் உள்ள/இல்லாத படித்த, அழகுள்ள பெண் தேவை. ஜாதி, வரதட்சணை தடையில்லை. பெட்டி எண் : 15574

■ Non Sandilya, Tamil Smartha graduate preferably Tanjorean, Vadama girl with non materialistic god fearing gentle, simple, homely nature musical/other talents welcome for Bank Officer, 38 chevvai dosham. No dowry. Simple marriage. Box No. 15575

■ Match for Ayyangar, 49, 3000/- looking very young, from any Iyer/Ayyangar/widow/divorcee. Reply to Box No. 15576

■ Vanniya Kulla Kshatriya, 31/170 Chennai based post graduate wealthy industrialist, unencumbered legal divorcee, clean habits, seeks alliance from educated good looking, homely girls. Send horoscope, bio-data, family details. Caste no bar. Box No. 15577

■ Tamil Iyer, Brahacharanam, Gouthama Gothram, Hastham, 30/170, B.Tech., MBA, Asst. Manager Bank Chennai, fair, well settled family, seeks alliance from professional post graduate, good looking employed girls. Send horoscope, bio-data, family details. Box No. 15578

■ தமிழ் அய்யர், வடமாள், ஸ்ரீவத்ஸம், பூராடம், 34, 5.8"/5000/- பி.காம், தாய் தந்தையற்ற, சொத்து

திருமணமலர் - விளம்பரக் கட்டணம் முதல் 30 வார்த்தைகளுக்கு ரூ. 250/- அதிகப்படியான ஒவ்வொரு வார்த்தைக்கும் ரூ. 10/-

இந்த இதழில் பிரசுரமாகும் பெட்டி எண் விளம்பரதாரருக்கு பதில்கள் அனுப்ப கடைசி தேதி 10/05/1999. பதில்கள் அனுப்ப வேண்டிய முகவரி: பெட்டி எண்: .... C/o. மங்கையர் மலர், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

நிலபுலம் உள்ள, சுய தொழில் செய்யும், நல்ல பழக்க வழக்கங்கள் உள்ள வரனுக்கு, எஸ்.எஸ்.எல்.சி./+2 வரை மட்டுமே படித்த குடும்பப்பாங்கான வேலைக்கு செல்லாத பெண் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண் : 15579

■ Iyer, Vadamal, Srivatsam, Aswini, 30/167/6300/- M.Com., DTE fair, Govt. Secondary grade teacher, seeks alliance from fair, employed/unemployed brides. Subsects acceptable. Send horoscope with bio-data. Box No. 15581

■ Vadama, Koundinya, Sadhayam, 32/160, M.Sc (Agr.) Ph.D., Assistant Professor, seeks suitable bride. Subsect no bar. Contact Box No. 15582

■ வடமாள், பாரத்வாஜம், புஷ்யம், 38/180 செ.மீ. (எம்.எஸ்ஸி.) Scientist/SD ISRO, Bangalore, Rs. 15,000/- p.m. with quarters, 10 வருடங்களுக்கு முன் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை நடந்து பூரண குணம். ஜாதகத்துடன் தொடர்பு கொள்க. பெட்டி எண் : 15583

■ Koundinya, 33, Maham, Iyer, Vadamal, working in USA as computer consultant, divorcee, unconsummated marriage, seeks suitable bride. Subsect no bar. Iyengar welcome. Boy coming to India in June '99. Reply with horoscope. Box No. 15584

■ Brahacharanam, Tamil Iyer, Koundinyam, Mirhasirsham 4th padam, 6/4/57 SSLC, 5.4" 4500/- working in private company, having own accommodation in Mumbai, seeks girls from respectable family. Preferably employed in Mumbai. Brahmin subsect no bar. Send horoscope with family details. Box No. 15585

■ Palakkad Vadama boy, Srivatsa Gothram, 36 years own business in Delhi. Well settled. Alliance from employed educated girls invited. Box No. 15586

■ Wanted Pillai/Mudaliar girl above 5.4" fair for BE (USA) Swathi, 1971/5.11" groom. Address V. Govindaraj, 1008/B, 17th D Cross, Indiranagar II Stage, Bangalore - 560 038. Phone : 080 - 5253610

■ வடமாள், ஸ்ரீவத்ஸம், அவிட்டம், 37/165 செ.மீ. பி.எஸ்ஸி, சுய தொழில் ரூ. 3000/- நல்ல சிகப்பு நிறம் மணமகளுக்கு எஸ்.எஸ்.எல்.சி., +2 படித்த குடும்பப் பாங்கான பெண் தேவை. ஜாதகத்துடன் எழுதவும். டி.வி. லக்ஷ்மிநாராயணன், 34, அக்ரஹாரம் தெரு, திருமாநிலையூர், கரூர் - 639 003.

■ Iyer, Ashtasahasram, Koundinya, Hastham, B.E (Electronics) 165 cms, 30 yrs. fair, teetotaller employed USA, seeks B.E/MCA software qualified, home loving girl from decent family. Subsect no bar. Phone : 044 - 4416670. Rajam, L356, 14th Cross Street, Thiruvalluvar Nagar, Chennai - 600 041.

■ Tamil Iyer, Brahacharanam, Bharadwajam, Poorattathi 4th padam, 31/175/B.Sc./7000/- working Ltd. Company, Calcutta wanted working girl/transferable/willing to work, below 28 years. V. Sundaram, LIG B-12, Niva Park, Phase I, Brahmapur, Calcutta - 700 096.

■ Vathimal, Koundinya, Chitrai, 37/170, 25,000/- employed in Dubai, seeks good looking girl for decent family. Reply with horoscope to Jayalakshmi, 3, Melandai Street, Old Tambaram, Chennai - 600 045. Ph : 2387224.

■ மதுரை செங்குந்த முதலியார், அஸ்வினி, 30/5.5" பட்டதாரி, 14,000/- இந்தூரில் ஆப்பிள் பைனான்ஸ் கம்பெனியில் ஆபிஸருக்கு, பட்டதாரி மணமகள் தேவை. தகுதியான வேறு ஜாதியும் வரவேற்கப்படும். A.V. Samy, M/11/3B, Sakat Nagar, BHEL, Bhopal - 462 024. Ph : 0755 - 588425, 510948.

■ Iyer, Brahacharanam, Bharadwajam, Rohini, 34/163 cms, B.Sc., PGDCA 7000/- executive, export company, seeks alliance from suitable graduate employed girls. Subsect no bar. Ph : 4900215. D. Ramakrishnan, 19, Sundarathammal Colony, Purushothama Nagar, Chrompet, Chennai - 600 044.

■ Iyer, Bharadwajam, Punarpoosam, SSLC/39/168 cms, 8000/- employed limited company, seeks employed girl. Subsect no bar. Reply with horoscope, bio-data. T.R. Narayanan, Flat No. B6, Sakthi BhuvaneswariApartments, No.5, South Mada Street, Thiruvanmiyur, Chennai - 600 041. Phone : 4420152.

■ Vadamal, Kousikam, Avittam, 28/5.5"/B.Com/ PGDBA (M.Com) 4000/- American based company (MNC), Pondicherry, seeks alliance from suitable girl. Contact with horoscope. Y. Ananathakrishnan, 3/111, Agraharam, Vallampadugai (via), Ammapet (B.o) Chidambaram.

■ Alliance invited for Mumbai based Kannada speaking Madhwa Brahmin only son, Viswamitra, Ashwini, 28/5.7"/9000/- B.Com., DSM executive in leading NBFC seeks good looking, graduate employed girl reply with horoscope, photo details to Gururaj, 4, Ganesh Kripa, J.P. Nagar Road - 5, Goregaon (E), Mumbai - 400 063. Phone : 8747607.

■ Iyer, Vadamal, Koundinya, 28/186/BE/Army officer, seeks beautiful graduate girl. Contact with photo, horoscope. Sesha Iyer, 101, B.K. Apartment, Temple Road 8th Cross, Malleswaram, Bangalore - 560 003. Phone (080) 3348326.

■ Tamil Iyer boy, Ashtasahasram, Athreya, Magam, 30/5.9"/B.Sc./3000/- Chemist, reputed Dyes & Chemicals Manufacturing Unit, Bangalore requires girl below 25 years. K. Suryanarayan, Meenakshi Nilayam, Ramamurthy Nagar, Bangalore - 560 016. Tel : 080 - 8513254.

■ Iyer, Brahacharanam, Nithunthi Gothram, Avittam, fair boy, 30/5.5"/B.A., 6500/- + perks in reputed company at Mumbai. Only son, clean habits, seeks employed girl. Subsect acceptable. Apply with horoscope, family details to V. Subramaniam, C-111, Kamanwala Kunj Soc., Agashi Road, Virar (West), Pin - 401 303 (Mumbai). Dist. Thane. (Maharashtra).

■ Wanted graduate bride for Brahacharanam, Koundinya, March 1961, Makam, Nationalised Bank, Hyderabad. Healthy, clean habits. Contact T.K. Seshanandam, 8/148, Ranganayakulapet, Nellore - 524 001. Phone : 324290.

■ ஐயர், பிரஹசரணம், வயது 38, உயரம் 165, எஸ்.எஸ்.எல்.சி, type both higher, Electrical work & Agriculture, (தனியார் பணி) 5000/- பூசம், காசியபம், தகுந்த மணமகள் தேவை. எஸ். ராமசாமி அய்யர், 4/99, குமரன் கோவில் தெரு, தேவதானம் - 626 145. ராசபாளையம்.

■ ஐயர், வடமாள், கௌசிகம், மிருகசீர்ஷம், 33/ எஸ்.எஸ்.எல்.சி, சுய தொழில் ரூ. 2000/- பையனுக்கு எஸ்.எஸ்.எல்.சி./பி.யு.சி. படித்த பெண் தேவை. வரதட்சணை எதிர்பார்ப்புகள் இல்லை. ஜாதகத்துடன் நேரில் வரவும். கே.வி. ஐயர், 271, பட்டேல் தெரு, ராமகிருஷ்ணா நகர், சென்னை - 600 087.

■ Vadakalai, Bharadwajam, Rohini, B.Com., 29/173 Bank 6000/- mother from Aiyer sect. Seeks graduate, employed girl. A.D.V. Ramanujam, Block No. 1, Flat 115, J.D. Towers, Vijayawada - 520 010. Phone : 552172.

■ வடமாள், ஹரித கோத்திரம், மூலம் 4ம் பாதம், வயது 31, மஸ்கட்டில் வேலை பார்க்கும் பட்டதாரியல்லாத பையனுக்கு தகுந்த பெண் தேவை. உட்பிரிவு சம்மதம். என்.பி. கிருஷ்ணகாந்த், 26, சாரதா நகர், விருகம்பாக்கம், சென்னை - 92. போன் : (044) 4804391.

■ Iyer, Vadamal, Athreya, 29/5.8" 3500/- graduate, public ltd. co., seeks alliance of employed, good looking girl below 25 years from pious family. Apply P. Chandraseakaran, No. 12, Ramalinga Adigalar 2nd Cross St., Chitlapakkam, Chennai - 64.

■ வடகலை ஐயங்கார், வாதூலம், மகம், 28/5.4" பி.எ, ரூ. 4000/- சென்னை தனியார் கம்பெனியில் பணி புரியும் பையனுக்கு, சென்னையில் பணிபுரியும் பெண் தேவை. வி. ஸ்ரீனிவாசன், நெ. 7, 32வது தெரு, நங்கநல்லூர், சென்னை - 600 061.

■ Sourashtra Japali, 26/177 M.Tech., C.P.I.M., decent business family, parents seek bride professional, MBA, CA etc. Contact with horoscope. K.E. Mohan, 101, Baskar Colony, Chennai - 600 092.

■ Alliance for boy 27, 6.1" Brahacharanam, Kousika, Punarpoosam, employed in a foreign bank, Chennai, Rs. 9000/- p.m. Girl must be employed. Subsect acceptable. Contact A. Sankaran, 7/3, Kandasami Street, Chennai - 600 028. Phone : 4956154.

■ Vadamal, Koundinya, Thiruvona, 31/180 cms, Rs. 6000/- B.E. (Electronics), private service, seeks bride, fair, graduate, Bangalore based, employed/unemployed. Subsect no bar. Contact K. Krishnamurthy, 331, 3rd Cross, 17th Main, Muneshwara Block, Bangalore - 560 026. PP : 080 - 6624528.

■ ஐயர், வாத்திமாள், ஆயில்யம், 28/163, பி.எஸ்ஸி, மத்திய அரசு அலுவலகம், சென்னை, 5000/- தகுந்த இதே இன பட்டதாரி மணமகள் தேவை. ஆர். வேம்பு, 25, 23வது தெரு, தில்லைகங்கா நகர், சென்னை - 61.

■ Koundinyam, Brahacharanam, Uthirattathi, 32/5.8" SSC, self employed boy having own accomodation. Contact with horoscope, family details. Mrs. Mangalam Rajaraman, 7/54, Saumya, Peston Sagar, Road No. 2, Chembur, Mumbai - 89. Ph. 5227312.

■ கௌண்டின்யம், பிரஹசரணம், புனர்வசு, 39, பி.யு.சி. 4000/- டிரைவர், உட்பிரிவு சம்மதம். வேலையில் உள்ள பெண் தேவை. வி. ராஜலக்ஷ்மி, 645A, 9th Sector, 47th Street, K.K. Nagar, Chennai - 600 078. Phone : 4814840.

■ 28 வயது, தனியார் நிறுவனத்தில் வேலை பார்க்கும் பண்புள்ள, வசதியுள்ள இலங்கை வேளாள பிள்ளை. மணமகனுக்கு நல்ல பண்புள்ள இந்திய/இலங்கை/ இந்திய இலங்கை கலப்பு மணமகள் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். Mr. M. Sivaharen, S/o. J. Mahendran, E-11, Reddamma Apt., 44, Arcot Road, Virugambakkam, Chennai - 92.

■ Iyer, Koundinya, Brahacharanam, 33/163 cms, MD (General Medicine) 10,000/- seeks alliance from Bank/ Insurance/Govt. employed girl. Contact K. Subramaniam, F1/H73, Mullai Apartments, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041. Ph : 4413155.

■ Looking for bride from decent Brahmin family, for Tamil Iyer, Brahacharanam, Bharadwajam, age 38, star Anusham, self employed, B.Com. Contact with horoscope. E.V. Srinivasan, Jhankar Apartments, 32/ 7/1A, Buroshibtala Main Road, Flat No. 3A, Calcutta - 700 038.

■ Madhwa, Marathi, Srivatsa, Pooram, 32/153 cms, B.Sc., private company at Coimbatore, salary 3500/- only son, seeks suitable bride, same sect. Contact R. Ramachandran, 142, Srinivasa Ragavan Street, R.S. Puram, Coimbatore - 641 002.

■ த. வடமாள், கௌசிகம், ரேவதி, 30/5.4"/4000/- 10 வது படித்த மோட்டார் மெக்கானிக்காக இருக்கும் பையனுக்கு வேலையில் உள்ள/இல்லாத பெண் தேவை. உட்பிரிவு சம்மதம். எஸ். சீனுவாசன், 28, மூன்றாவது தெரு, டி.என்.ஜி.ஓ. காலனி, நங்கநல்லூர், சென்னை - 61. போன் : 2324563.

■ Any Brahmin spinsters for Iyer bachelor, Athreyam, Aslesham, 40/165 disabled left leg, independent, propertied, no dowry. Santha Krishnan, Plot I-B, 4, Venkateswara Nagar, Valasarawalkam, Chennai - 87. Phone : 4869465.

■ வடமாள், பாரத்வாஜம், 29/5.3"/5000/- வேலை பார்ப்பவருக்கு, குடும்பப்பாங்கான வேலையிலுள்ள மணமகள்

திருமண மலர் விளம்பர கட்டணத்தை "மங்கையர் மலர்" என்ற பெயரில் டிமாண்ட் டிராஃப்டாகவோ, உள்ளூர் செக்காகவோ அல்லது நேரில் வந்து பணமாகவோ செலுத்தலாம். போஸ்டல் ஆர்டர், மணி ஆர்டர், வெளியூர் செக் முதலியவை ஏற்றுக் கொள்ள இயலாமைக்கு வருந்துகிறோம்.

தேவை. எளிய திருமணம். தொடர்பு கொள்க. முரளி மனோகர், 199, வெள்ளாளத் தெரு, புரசைவாக்கம், சென்னை - 84. போன் : 5325412.

■ வடமாள், பாரத்வாஜம், 34/5.9"/7000/- சுய தொழில் செய்யும் விவாகரத்தானவருக்கு குடும்பப்பாங்கான வேலையிலுள்ள மணமகள் தேவை. எளிய திருமணம். தொடர்பு கொள்க. முரளி மனோகர், 199, வெள்ளாளத் தெரு, புரசைவாக்கம், சென்னை - 84. போன் : 5325412.

■ Iyer boy, Kousikam, Thiruvonam, B.Com, working in a Ltd. Co., at Bangalore, salary Rs. 8,500/- per month. Age 33 years, Ht. 5.11". Send horoscope to R. Ravichandran, 19/13, III Floor, Krishna Nivas Flat, Corporation Colony Main Road, Rangarajapuram, Chennai - 600 024.

■ முதலியார் 35, +2, 5.8" அரசு பணி ரூ. 5000/- விவாகரத்தான முற்போக்கு எண்ணங்களுள்ள வரனுக்கு அரசு, தனியார் பணி பெண் தேவை. விதவை, விவாகரத்து. வயது, ஜாதி தடையில்லை. ஆர். வேலு, 248, அழகரசன் நகர், ஈரோடு - 638 003.

■ Iyer, Vadamal, Kousikam, Avittam, 28/165 cms ICWAI. Executive in Ltd. Co., Coimbatore. Seeks good looking, graduate, home loving girl from respectable family. Send horoscope. D. Chandramouly, 10A, Vaigai Street, Kamadhenu Nagar, Avarampalayam, Coimbatore - 641 006.

■ வன்னியர் (கவுண்டர்), ஆயில்யம், கடக ராசி, 27/5.6" 6000/- எம்.டி.சியில் சீனியர் மெக்கானிக் பையனுக்கு அரசு (அ) தனியாரில் பணிபுரியும் பெண் தேவை. வன்னியர் உட்பிரிவுகளில் எதுவானாலும் சம்மதம். வி. பூங்காவனம், எண். 30, முதல் தெரு, லோகநாதன் நகர், சூளைமேடு, சென்னை - 94.

■ வாத்திமாள், பாரத்வாஜம், அசுவதி, பி.எஸ்ஸி., எம்.சி.ஏ, 32/160 செ.மீ. சிவப்பு நிறம், அமெரிக்காவில் (H1 visa) 6000 டாலர் சம்பளம், அழகிய சிவப்பான பட்டதாரி பெண் தேவை. வரதட்சணை தேவை இல்லை. போட்டோ, ஜாதகத்துடன் அணுகவும். ஆர். நடராஜன், நெ. 3, வேதாந்தம் தெரு, தாம்பரம் சானிடோரியம், சென்னை - 47.

■ Iyer, Astasahastram, Paurugutsam, Thiruvadarai, 31/5.6"/16,500/- B.Com, PGDCA, MNC Bangalore, seeks good looking graduate employed girl preferably software professional, Bank, LIC, Central Govt. Subsect acceptable. Contact N. Venkatraman, 2, 1st Shop Street, Tata Silk Farm, Basavanagudi, Bangalore - 560 004.

■ Brahacharanam, Athreya, Thiruvonam - II, 33/165/ B.Sc./Rs. 7500/- GIC seeks decently employed girl, private/bank/LIC/Govt. Subsect acceptable. Contact S. Jayalakshmi, Plot No. 10, Kamakotinagar Annexe, Valasaravakkam, Chennai - 600 087.

■ வசதியான இந்து நாடார், கண்கள் பார்வையற்ற M.Phil., M.Ed மாநிறம், வயது 34, உயரம் 5¼ சம்பளம் 10,100/- அரசினர் கல்லூரி விரிவுரையாளர் சென்னை ஓரளவு தமிழ் படித்த பொருத்தமான மணப் பெண் பெற்றோரிடம் வரவேற்கப்படுகிறது. போன் : 6450477. ஜாதி தடையில்லை. டி. சொர்ணம்மாள், 18, நான்காவது குறுக்கு தெரு, கிழக்கு செனாய்நகர், சென்னை - 600 030.

■ Brahacharanam, Kousikam, Poosam, 29/165/10,000/ - Officer Foreign Bank, Pune, chevvai 8th place, seeks beautiful employed, transferable, computer qualified girl. R. Parthasarathy, 46, 'B' Block, Jawahar Campus, No. 23, 70 Feet Road, Jawahar Nagar, Chennai - 600 082.

■ Kerala Iyer, Brahacharanam, Kasyapa, Revathi, 33/163, B.A., 7500/- Jr. Officer, Pub. Ltd. Co., innocent divorcee of a non-consummated marriage. Only son, own house, simple marriage. Seeks employed girl. Contact with horoscope. N.P. Iyer, E1/7, LIG 165, Sector XI, Rohini, Delhi - 110 085. Tel : 7041185.

■ தஞ்சை சைவ வேளாளர் 33, 170, திருவாதிரை, 6500/- B.Com., PGDMM ஒசூர் மிகப் பெரிய தனியார் நிறுவனம். இதே இனத்தில் படித்த பணியிலுள்ள/ பணிக்கு செல்ல தகுதி உள்ள பெண் தேவை. கே. பாகீரதி, 64, ஆசிரியர் நகர், திருப்பத்தூர் - 635 601. வேலூர் மாவட்டம்.

■ வடமாள், கௌசிகம், திருவாதிரை, வயது 29, உயரம் 5.11" பி.காம்., எம்.எஸ். என்டர்பிரைசஸ் தனியார் கம்பெனி, 3500/-க்கு மேல். Contact address: Sai Krishnan, No. 434, Phase 1, 17th Cross, Sathuvachari, Vellore - 9. N.A. Dt.

■ வடமாள், கௌண்டின்ய கோத்திரம், ரோகிணி 3ம் பாதம், 32/180 செ.மீ. B.A. Eco. + கம்ப்யூட்டர், டி.ஐ. சைக்கிள், அம்பத்தூர். ரூ. 6500/-. Contact address : A. Ganapathy, 2/7, Venkatrama Iyer St., Venkadapuram, Ambattur, Chennai - 53.

■ Brahacharanam, Shadamarshanam, Bharani, 30/164 (B.Sc.) 6000/- + perks, Manager, Leather goods Export Co., seeks employed/unemployed girl. Subsect no bar. Contact: T.C. Swaminathan, C/o. Dr. V.K. Srinivasan, H128/5, 33rd Cross Street, Besant Nagar, Chennai - 600 090. Ph. 044 - 4461130.

■ Iyer Vadamal, Vadoolam, Hastham, 46, 5.4" Rs. 4500/ - bachelor graduate, Sales Executive private limited Chennai, seeks graduate girl employed public limited, public sector, Government, Bank, MNC. Divorcees, widowers excuse. Radha Viswanathan, 5, Oliver Road, Mylapore, Chennai - 600 004.

■ ஐயர், வடமாள், பாரத்வாஜம், வயது 49, ஆயில்யம் 2ம் பாதம், தனியார் பணி சம்பளம் 4000/-. மனைவியை இழந்தவருக்கு (குழந்தை இல்லை) தகுந்த வரன் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். M. நடராஜன், C/o.

ராஜீ ரவிசங்கர், நெ. 2, 3வது மெயின் ரோடு, நேரு நகர், அடையார், சென்னை - 20.

■ வடமாள், கௌசிகம், புனர்பூசம் 4ம் பாதம், 32, 168 செ.மீ. தனியார், 3500/- விபத்தினால் இடது கண் பார்வை கண்ணுக்கு புவனாகாதபடி பாதிக்கப்பட்டுள்ளது. ஒரே மகன். சகோதரிகள் மணமானவர்கள். தந்தை பென்ஷன்தாரர். வேம்பு, பிளாட் 350, 2வது மெயின் ரோடு, பெல் சக்தி நகர், விஜயநகர், வேளச்சேரி, சென்னை - 42.

■ ஐயர், கன்னடம், ஸ்மார்த்வா, உத்திராடம், தனுசு ராசி, 32/168/12,000/- எம்.ஏ., இன்சூரன்ஸ் அலுவலர், சட்டப்படி விவாகரத்தானவர், ஆண் குழந்தை (வயது 7), நீதிமன்ற தீர்ப்பு 96ன் படி அதன் தாய்வசமே வளர்கிறது. எவ்வித பிரச்னையும் இல்லை. இவருக்கு ஏற்ற நல்ல குணமான மணமகள் தேவை. ஐயர்/ஐயங்கார் உட்பிரிவுகள் சம்மதம். எளிய திருமணம். வரதட்சிணை இல்லை. விருப்பம் உள்ளவர்கள் ஜாதகம், புகைப்படத்துடன் எழுதவும். டி. அண்ணாமலை, முகவர் என்.எஸ்.சி, 20/2, கீழ்நாத்தூர் ரோடு, திருவண்ணாமலை - 606 601.

■ ஐயர், வடமாள், நைத்ருப காஷ்யப, ஆயில்யம், 27/டி.எம்.ஈ., 5500/- 180 செ.மீ. பையனுக்கு வேலைக்கு செல்லும் பெண் தேவை. எஸ். ராமநாதன், 13, 13வது தெரு, நந்தனம் விரிவு, சென்னை - 35. போன் : 4321170.

■ Iyer, Bharadwajam, Vadama, Pooram, 31/172/7000/- Central Government Bangalore, seeks educated, fair, employed/unemployed bride. Reply R.V. Swamy, Suraksha Building 2, Flat 13, Indrayani Nagar, Bhosari, Pune - 26.

■ ஐயர், அஷ்டசகஸ்ரம், ஆத்ரேயம், ரேவதி, பி.காம்., பி.ஜி.டி.சி.ஏ. தனியார் ரூ. 7000/- வேலையில் உள்ள/வேலைக்குச் செல்ல விருப்பம் உள்ள பட்டதாரி மணமகள் தேவை. உட்பிரிவு சம்மதம். வி. சதாசிவம், நெ. 1, விவேகாநந்தா தெரு, ராதாநகர், குரோம்பேட்டை, சென்னை - 600 044. போன் : 4880939.

■ Palghat Tamil Iyer, Vadamal, Srivatsa Gothram, Punarvasu, boy B.Sc., Mithuna rasi, business, Manager software concern, Hyderabad, 34/165/9000/- fair. Send girl's horoscope, bio-data. Subsect no bar. P.N. Hariharan, 41, Eleventh Main Road, Vasantha Nagar, Bangalore - 560 052.

■ ஐயர், வடமாள், கௌசிகம், ஹஸ்தம், 33, +2, டைப்பிங் லோயர், ஹையர், 7000/- சொந்த தொழில். 10வது/+2 படித்த மணமகள் தேவை. உட்பிரிவு சம்மதம். ஏ.வி. சுப்ரமணி ஐயர், 25, தெற்கு மாடவீதி, திருவான்மியூர், சென்னை - 41. போன் : 4424312.

■ Fair, beautiful, employed girl wanted for a fair, well settled Chennai basedTamil Iyer boy, Brahacharanam, Kousikam, Sadhayam, 27/185 working in a reputed organisation as an Engineering Executive. Reply with bio-data and horoscope. Mr. S. Rangaswamy, 21, Lakshmanan Street, Mahalingapuram, Chennai - 600 034. Phone : 8258692.

■ Kerala Iyer, Kousikam, Makam, 33 yrs., widower with a female child 3 yrs., Central Govt. employee, well settled in Delhi, seeks bride. Contact : K.S. Narayanan, L/492, Periyar Nagar, Erode - 638 009.

■ Brahacharanam, Haritha, Poosam, Kataka Lagnam, March '64/164/B.Com/Rs. 8,500/- Canara Bank Bangalore, financially sound, seeks alliance employed/unemployed graduate bride. Subsect no bar. No dowry. Angaraka dosha, jathakam not required. Moolam without Angaraka dosha acceptable. Immediate marriage preferred. Age group 27 yrs. to 32 yrs. Send horoscope. Ramesh GA, Site No. 45, Shri Nagar, Kurumbapalayam, Vedapatty, Coimbatore - 641 007.

■ வடமாள், பாரத்வாஜ கோத்திரம், கேட்டை நட்சத்திரம், 35/+2/DTP Operator/Rs. 4500/- மாத வருமானமுள்ள வாலிபருக்கு, வேலையில் உள்ள குடும்பப்பாங்கான பெண் தேவை. Mr. Suresh, C/o. P.B.No. 3906, Coimbatore - 641 018.

■ Alliance for handsome Iyer boy, 31/B.Com. receptionist at Jamshedpur, Chithirai, Sandilya, Vadama. Contact Suryanarayanan, Postmaster, Kadagambadi, Sarabojirajapuram, Via. Punthottam - 609 503 or K. Gopalan, E/10 - 2, Mosaboni - 832 104.

■ Wanted Vadama, Non-Haritha girl below age of 25yrs. preferably employed for Vadama/29 yrs./B.E./5.11" Uthiram, Executive in Alsthom, Rs. 12,000/- p.m. Contact V. Seetharaman, East IInd Street, Mannargudi - 614 001.

■ Iyer, Bharadwaj, Hastham, 48/165 Bank Officer, Rs. 20,000/- p.m. innocent and legally divorceed with two grown up children, own house at Chennai, seeks suitable Brahmin bride, graduate or under graduate, moderate looking, homely type preferred. K.B. Vivek Ayer, C/o. Mrs. K.B. Jayalakshmi, 33/3, Sannadhi Street, Maruthinagar, Rajkilpakkam, Chennai - 600 073.

மணமகன் தேவை

■ ஐயர், வடமாள், ஷடமர்ஷண கோத்திரம், சதயம், 32 வயது, பி.எஸ்ஸி., எம்.பி.ஏ. இண்டியன் ஆயில் கார்ப்பரேஷனில் அதிகாரியாக பணிபுரியும், 162 செ.மீ. உயரம், fair, father Iyer, mother Iyengar பெண்ணிற்கு தகுந்த வரன் தேவை. பெட்டி எண் : 25132

■ 21/163/(பி.ஏ.) பாரத்வாஜம், சுவாதி, ரிஷபம், மாநிறம் செவ்வாய் உள்ள பெண்ணுக்கு தகுந்த வரன் தேவை. பெட்டி எண் : 25133

■ Alliance solicited from broad-minded, understanding person for Central Govt. Bangalore girl, Vadama, Bharani, 33/155. Absolutely normal and forward looking after recovery from minor tumorous growth in neck in 1989. Apply Box No. 25134

■ இந்து, சௌராஷ்டிரா, பூசம், 28/156 BA Eng. (Lit), BA Hindi, (MBA) பெண்ணிற்கு சௌராஷ்டிரா வகுப்பைச் சேர்ந்த பட்டதாரி அரசு/தனியார் நிறுவனத்தில் வேலையிலிருக்கும் குணமுடைய மணமகன் தேவை. பெண் தனியார் நிறுவனத்தில் வேலை. பெட்டி எண் : 25135

■ பாரத்வாஜம், வடமாள், பூரட்டாதி-3, 21/160 பாலிடெக்னிக், கம்ப்யூட்டர் தேர்ச்சி, சென்னை பி.ஈ. இரண்டாம் வருடம் ஒரே பெண், வீடு, நிலம், மனை, சிகப்பு, அழகான பெண்ணிற்கு திருமணத்திற்குப் பிறகு படிப்பு அனுமதிக்கும் தகுந்த மணமகன் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண் : 25136

■ Saiva Vellala, 25/162/M.Com, Hastham, perma-

nently employed in Insurance Corporation, Chennai, 6500/- alliance from same community, decent family invited. Apply to Box No. 25137

■ பிராமணர், குருக்கள், பார்கவ கோத்திரம், வயது 26, 5.6" பி.காம்., எம்.ஏ. (மியூசிக்) மூல நட்சத்திரம் பெண்ணிற்கு நல்ல படித்த குருக்கள் தொழிலிலோ/உத்யோகத்திலோ உள்ள மணமகன் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 25138

■ Wanted qualified, non-vadhoola boys for Vadagalai Iyengar, Thiruvonam girl 32 yrs. 5.3" fair, M.Sc., class I Officer Central Govt. Bombay. Box No. 25139

■ Father Chettiar, Mother Brahmin, Krishna devotee, Poosam, B.E., 25/154 cms./10,000/- Pvt. employed. Hare Rama Hare Krishna (ISKON) follower, seeks suitable groom. Caste no bar. Box No. 25140

■ Vanniakula Kshatriya, Pooradam, chevvai dosham in 7th, 28/155 cms, M.Sc., Lecturer seeks from respectable family. Professionals, P.G. employed boy of same community. Send horoscope. Box No. 25141

■ பிராமணர் மாத்வா காஸ்யபம் கோத்திரம், அனுஷ நட்சத்திரம், வயது 40/5.1" 3000/- படித்த அழகான லட்சணமுள்ள பெண்ணுக்கு அதே இனத்தில் படித்த வேலையிலுள்ள மணமகன் வயது 48க்குள் தேவை. விவரங்களுடன் எழுதவும். பெட்டி எண் : 25142

■ கவரா நாயுடு, 25/155 செ.மீ. அனுஷம், எம்.ஏ., கம்ப்யூட்டரில் நல்ல தேர்ச்சி பெற்ற வசதியான பெண்ணிற்கு அரசுப் பணி/எஞ்சினியர்/வங்கியில் பணிபுரியும் மணமகன் தேவை. குடும்ப விவரம் மற்றும் ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 25143

■ Iyer, Vadamal, Bharadwajam girl Poorattathi, 28/5.4" BE (ECE.) software engineer employed at Chennai. Divorcee without encumbrance seeks CA/MS/M.Tech/B.E, professional working abroad. Box No. 25144

■ Well employed Iyer boys required below 48, for a good looking unmarried home loving girl Bharadwajam, Vadamal, age 42, widowers without encumbrance accepted. Horoscope optional. Box No. 25145

■ வடமாள், ஆத்ரேய கோத்திரம், பரணி நட்சத்திரம், வயது 42, படிப்பு எஸ்.எஸ்.எல்.சி. சம்பளம் 2500/- சுமாரான பெண்ணிற்கு சென்னையில் வேலை பார்க்கும் மணமகன் தேவை. பெட்டி எண் : 25146

■ முதலியார், பூரம், வயது 31, ITI படிப்பு, தனியார் கம்பெனி ரூ. 2000/- சம்பளம், நடுத்தர குடும்பம், நல்ல தோற்றம், குடும்பப்பாங்கான பெண்ணிற்கு, நிரந்தர வேலையில் உள்ள மணமகன் தேவை. தாரமிழந்தவரும், விண்ணப்பிக்கலாம். உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண் : 25147

■ Iyer, Vadama, Koundinya, 45/165 educated, fair, charming, very young looking, spinster, good status, seeks educated well placed, good status non Koundinya Iyer bachelors only. Divorcees, widowers excuse. Full details to Box No. 25148

■ Alliance invited for Kshatriya Raju, Thirty years, fair, widow with two boys, decent family from broad minded, educated bachelor or widower or divorcees. Caste no bar. Apply with horoscope and family details to Box No. 25149

■ Alliance for Tamilian Iyer, spinster Haritham, Hastham, fair, doctorate, 38/156/13,000/- + Central Gazetted, Chennai based. Subsect acceptable. Respond full bio-data, horoscope. Subsect acceptable. Box No. 25150

■ ஐயர், வடமாள், ஆத்ரேய, பூசம், 24, 5.6½" பி.எஸ்ஸி., பி.எட், தட்டச்சு, கருக்கெழுத்து ஹையர், இந்தி ப்ரவீன், மெட்ரிகுலேஷன் பள்ளி ஆசிரியைக்கு 32 வயதுக்குட்பட்ட வடமாள்/பிரஹசரணம் பட்டதாரி, டிப்ளமோ, அரசு, வங்கி, கம்பெனி மணமகன் தேவை. பெட்டி எண் : 25151

■ Alliance invited from well settled Brahmins, vegetarian boys for girl Revathi, Brahacharanam, Iyer, 31/150 M.A., divorcee no encumbrance (within 10 days of marriage) working in Tamil Nadu Govt. only daughter (two brothers engineers) own flat. Good at domestic duties. Divorcees/widowers without encumbrance may also apply with bio-data and horoscope. Box No. 25152

■ Bharadwajam, Thenkalai, Moolam 1, 26/160 M.Phil (Eng.) fair girl seeks alliance from PG/professionally qualified Iyengar boys, either sect. Apply with horoscope. Contact 8547498 or Box No. 25153

■ Saiva Pillai girl, Chennai, very fair, slim, good looking M.Sc., 24/160 computer diploma, good horoscope, property share. Flat of high value, invites suitable alliance with horoscope. Box No. 25154

■ Iyer, Brahacharanam, Shadamarshanam, Hastham 25/160 cms, nurse, private Govt. trained Diploma ir nursing, suddha jadhagam. Subsect no bar. Seeks boy well employed permanent job. Box No. 25155

■ தமிழ் அய்யர், வடமாள், பாரத்வாஜம், மூலம், பி.காம்., 1975/157/5500/- தேசிய வங்கியில் சென்னையில் பணிபுரியும் பெண்ணுக்கு 30 வயதுக்குட்பட்ட அரசு/தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் பட்டதாரி மணமகன் தேவை. உட்பிரிவு சம்மதம். பெட்டி எண் : 25156

■ Alliance invited from professionals for Iyer, Vadama, Naithruba Kashyapa, Swathi, Doctor girl MBBS, DNB, (FRCS), 29/165. Well accomplished. Reply Box No. 25157

■ தமிழ் விஸ்வகர்மா வயது 27, சுவாதி, B.Sc., B.Ed., Computer (DPA) படித்த பெண்ணுக்கு, நல்ல பணியில் உள்ள வரன் தேவை. பூர்வீகம் தென்மாவட்டங்கள் விரும்பத்தக்கது. பெட்டி எண் : 25158

■ ஆதி திராவிடர், வள்ளுவர், 27/பி.ஏ/150 அனுஷம், தொலை தொடர் துறையில் ரூ. 6000/- மாதம் சம்பளம் வாங்கும் பெண்ணிற்கு படித்து, வேலையிலுள்ள/சுய தொழில் புரிபவர்களிடமிருந்து ஜாதகம் மற்றும் குடும்ப விவரங்களுடன் தொடர்பு கொள்க. போன் : 5224133. பெட்டி எண் : 25159

■ ஆதி திராவிடர், வள்ளுவர், 22/150 fair, விசாகம், Dip. in Elec. & Commu.Engg., படித்த பெண்ணிற்கு, படித்து வேலையிலுள்ள/சுயதொழில் புரிபவர்களிடமிருந்து ஜாதகம் மற்றும் குடும்ப விவரங்களுடன் தொடர்பு கொள்க. போன் : 5224133. பெட்டி எண் : 25160

■ Vathima, Tharagayanam, Pooram, final B.Com, Computer Science, Canada University, Montreal Examination May, 21/155, homely Iyer girl, Mars eighth, seeks well qualified, employed professional abroad. Dial 5378538, Chennai. Horoscope, bio-data to Box No. 25161

■ தகப்பனார் ரெட்டி, தாயார் பிராமின், 25/154 செ.மீ. B.Sc., MCA., GNIIT, ஒரே பெண்ணிற்கு பிராமின்/இன்டர்கேஸ்ட் (யாராவது ஒருவர் பிராமின்) சென்னை, அரசு அலுவலகம்/தனியார் நிறுவனம் பணிபுரியும் B.E., MCA., PG மணமகன் தேவை. பெட்டி எண் : 25162

■ Vadamal, Haritha, Avittam, 22/160 cms, B.Com with computer qualification/experience, employed Chennai private sector, seeks suitable groom with clean habits. Preference professionals. Contact Box No. 25163

■ Kerala Iyer girl 27, Vadama, Kousikam, Bharani, B.Com, Computer literate, tall (165) fair, pretty, slim, god fearing, home loving, sober by nature, well accomplished in fine arts (Bharata Natyam) seeks alliance with well qualified, cultured professional with good family background, either India/USA. Girl innocent divorcee after a brief period with no encumbrances. Write to Box No. 25164

■ தஞ்சை கள்ளர் இன அவிட்டம், 29 வயதுள்ள சிகப்பு நிறமான அழகான B.A., P.G., DCA, படித்து தனியார் கம்பெனியில் வேலை பார்க்கும் பெண்ணிற்கு பட்டப் படிப்பு படித்து, வேலையில் உள்ள இதே இன வரன் தேவை. பெட்டி எண் : 25165

■ Suitable alliance invited for a Bombay based Palghat Iyer girl, Vadoolam, Rohini, 28/5.6" B.Sc., ACA, well employed in a Public Sector Organisation. Write with horoscope and family particulars to Box No. 25166

■ திருநெல்வேலி சைவப் பிள்ளை, 38 வயது நிரம்பிய மத்திய சர்க்காரில் வேலை செய்யும் பெண்ணிற்கு (முதுநிலை பட்டதாரி) அதே இனத்தை சேர்ந்த நல்ல வேலையில் உள்ள மணமகன் தேவை. பெட்டி எண் : 25167

■ Vadamal, Kousika, 22/159 Puradam, B.Sc., Computer qualified and talent in music, dance seeks professionally qualified and well employed groom. Phone No. : 4844456. Box No. 25168

■ Hindu Adi-Dravida, 38/155 unmarried, well to do girl, seeks alliance from broadminded bridegroom with good habits and job 40 - 45 without encumbrances. Caste no bar. Reply with personal and family background. Decent marriage. Box No. 25169

■ இந்து, கிராமணி மகம், வயது 21/155 B.Sc. (Maths) அழகான ஒரே பெண்ணிற்கு (ஒரு தம்பி உண்டு) இதே இனத்தில் படித்த நல்ல வேலையில் உள்ள மணமகன் தேவை. ஜாதகம், குடும்ப விவரத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 25170

■ Iyengar, Vadagalai, Bharadwajam, Ayilyam 4th padam, M.Com/23/5.3" working in LIC, seeks good looking graduate bridegroom working in Bank/LIC/Govt. Reply with horoscope and family details to Box No. 25171

■ Iyer, Vadamal, Kousikam, Poosam 4th padam, 32/160/6500/- M.Com., DCS, fair, good looking girl, bank, seeks well qualified, employed groom. Box No. 25172

■ சைவ வெள்ளாளர், 32/7200/- அரசு பள்ளி ஆசிரியை, இளம் விதவைக்கு (7 வயதில் மகள்) 40 வயதுக்குள் அரசு/ஆசிரியர் பணியிலுள்ள சைவ பிள்ளை/முதலியார் பிரிவு மணமகன் தேவை. சைவ உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண் : 25173

■ Groom wanted for Balija Naidu girl, M.A, 23/5.1" Sadhayam - 2, medium complexion, chevvai dosham in 7th house. Executives/State or Central Govt./Business/decent employed, same caste, matching star apply. Box No. 25174

■ Madhwa Desastha, 24/148 Bharadwaja Gothram, Pooradam, +2, domestically accomplished, seeks well employed groom. Reply with horoscope. Box No. 25175

■ Wanted understanding pious, clean habits Brahmin, vegetarian groom below 39 for bride M.A, 34 years, Poosam, fair, smart looking, divorcee without encumbrance. Mother Brahmin, father Mudaliar. Well settled. B.E./DME preferred. Ph : 2377757. Box No. 25176

■ Thengalai, Bharadwajam, Thiruvonam, 33, M.A., M.Lis. Librarian in private concern, divorcee, immediately after marriage (no issue) from well settled, employed Iyengar/Iyer divorcee/widower without encumbrance upto 43. Horoscope optional. Box No. 25177

■ Iyer, Vadamal, Kousikam, Poorattathi, 39/5.4" M.A., MBA, Govt employed, beautiful girl seeks alliance from well qualified boys India/abroad. Subsects no bar. Apply with bio-data, horoscope to Box No. 25178

■ Tamil Viswakarma, Makam, 25, 150 cms, B.E., MNC employed in Chennai, seeks alliance from decently employed B.E./MBA/Bank boys Chennai based preferred. Early marriage. Reply Box No. 25179

■ Iyer, Vadamal, Sukla Yajur, Kousikam, Moolam 2nd padam, 24/165 cms, M.Sc., Hindi Praveen, studying M.Phil. Subsects no bar. Seeks well qualified, employed grooms below 30 years. Reply with bio-data, horoscope. Box No. 25180

■ சைவப் பிள்ளை, பூராடம், பி.ஏ., வயது 27, தனியார் கம்பெனியில் வேலை மாத வருமானம் ரூ. 3000/-ம் உள்ள பெண்ணிற்கு, மணமகன் தேவை. (டெல்லியில் இருந்தால் நலம்) வெளியூரும் சம்மதம். உட்பிரிவு சம்மதம். பெட்டி எண் : 25181

■ Alliance invited for Bombay based Palghat Iyer girl, Vadhoolam, Makam, 32/154, B.Sc., well employed in Bank subsidiary. Has minor medical problem requiring daily intake of medicine. Reply with horoscope. Box No. 25183

■ வாத்திமாள், காஷ்யப கோத்திரம், 5' உயரம், பி.காம் 3வது ஆண்டு படிக்கும், தனியார் துறையில் Accounts Assistant மாத வருமானம் ரூ. 2000/- 23 வயதுள்ள பெண்ணிற்கு, பட்டப்படிப்பு. ரூ. 5000/- அல்லது அதற்கு மேல் வாங்கும் மணமகன் தேவை. பெட்டி எண் : 25184

■ Seer Karuneegar, Kettai, 30, Kasi Magarishi Gothram, virgin widow, working in quasi Govt. Chennai city, vegetarian, seeks suitable groom below 38. Widowers can also apply. Reply with horoscope to Box No. 25185

■ Hindu, Vellala girl, M.E., AS-400, 29/165 seeks alliance from class I Officers, post graduate engineers India/abroad preferably USA. Subsect acceptable. Apply with details, horoscope. Box No. 25187

■ ஐயர், வடமாள், ஸ்ரீவத்ஸம், அஸ்வினி, 22/5.3" B.Sc., HDSE (Aptech) தனியார் நிறுவனப் பணி, 8-ல், செவ்வாய் உள்ள, கர்நாடக சங்கீதத்தில் நல்ல ஈடுபாடு உள்ள பெண்ணிற்கு B.E., CA, M.Sc., MCA படித்த நல்ல

வேலையில் உள்ள வரன் தேவை. பெட்டி எண் : 25188

■ தஞ்சை ஜில்லா சைவ வெள்ளாள பிள்ளை, சித்திரை, 23/168 செ.மீ. பி.எ., பணியில் உள்ள பெண்ணிற்கு நல்ல வரன் தேவை. ஜாதகம், குடும்ப விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 25189

■ முதலியார், உத்திரம், 29/5.1" எஸ்.எஸ்.எல்.சி. பாஸ், குடும்பப்பாங்கான மாநிற பெண்ணிற்கு நல்ல வேலையில் உள்ள மணமகன் தேவை. இடது கால் சிறிது தாங்கி நடப்பாள். குடும்ப, ஜாதக விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 25190

■ Balija Naidu, 27/167 cms, B.Com, PGDCA, Kettai, only daughter, own house, seeks engineer/executive/PSU/Bank/MNC. Employed groom (avoid abroad). Reply horoscope, bio-data to Box No. 25191

■ தமிழ் ஐயர், ஸ்ரீவத்ஸம், பிரஹசரணம், பூரம் 4, 22/5.5" பி.பி.எம். கம்ப்யூட்டர் படித்த, வேலையில் இல்லாத, அழகான குடும்பப்பாங்கான பெண்ணிற்கு தகுந்த படித்த, நல்ல வேலையில் உள்ள மணமகன் தேவை. உட்பிரிவு சம்மதம். பெட்டி எண் : 25192

■ For Iyer,Vadama, Kousikam, Moolam III padam, 29 years, 5.2" M.Com, working in Air India, Mumbai, wanted employed boys from respectable family. Subsects acceptable. Contact Mumbai Tel. 5684213 (or) Chennai Tel. 2335838. Box No. 25193

■ Alliance for Iyer, Naithrupa Kashyapa, Vadamal, Revathy, age 24/5.4" B.Sc., Computer Science; fair, good looking, seeks good looking, well qualified and well employed boy. Same caste below 30 yrs. Reply with horoscope, family details. Subsect no bar. Box No. 25194

■ சோழிய வெள்ளாளர் (திருவாரூர் பூர்வீகம்) சைவம், 26, பி.ஏ. திருவாதிரை இரண்டாம் பாதம், எழில் செவ்வாய், 5.3" மாநிறம், ஆரோக்கியமான உடல் வாகு, வசதியான பெண்ணுக்கு அரசு/தனியார்/சொந்த தொழில் நல்லொழுக்கமுடைய மணமகன் தேவை. தொடர்பு கொள்ள போன் : 4710892. பெட்டி எண் : 25195

■ PalakkadVadama girl, Srivatsa Gothram,Anusham, 33 years, employed in nationalised bank in Delhi. Lost her right hand in road accident. Alliance invited from broad-minded, settled boys. Box No. 25196

■ சேனை தலைவர், செட்டியார், அசைவம், 28/165/M.D.S. அரசு பணி, பல் டாக்டருக்கு சென்னையில் பணியாற்றும் இஞ்சினியர்/டாக்டர்/லெக்ட்சரர் மணமகன் தேவை. முதலியார், மூப்பனார், வெள்ளாளர் உட்பிரிவு சம்மதம். ஜாதகம், குடும்ப விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். போன் : 044 - 6445088. பெட்டி எண் : 25197

■ சிர்கருணிகர், 24/158, M.Sc., NIIT - C++, அழகான பெண்ணிற்கு 30 வயதிற்குள் BE/MBBS/Bank employed/Govt. வேலையிலுள்ள மணமகன் தேவை. முதலியார், துளுவப் பிள்ளை Bio-dataவுடன் விண்ணப்பிக்கவும். ஆர். கௌதமன், 7, நேரு நகர், சக்தி தியேட்டர் அருகில், மேட்டூர்அணை ஆர்.எஸ். - 636 402.

■ வன்னியகுல க்ஷத்திரியர், உத்திரட்டாதி நட்சத்திரம், 28/5.5" அழகான நல்ல நிறமுள்ள பெண்ணுக்கு அதே இனத்தைச் சேர்ந்த படித்த, நல்ல சுய தொழில் அல்லது கவர்ன்மெண்ட்டு பணியில் உள்ள வரன் தேவை. K.E. வெங்கட்ராஜ், நெ. 55, என்.ஜி.ஓ நகர் விரிவு, கண்ணதாசன் தெரு, பொன்னேரி - 601 204.

■ Wanted well employed boy below 30 for Iyer girl, Vadamal, Bharadwaj, Kettai, chevvai dosham, 23/154, B.Com., DBA, Hindi M.A., send horoscope. N. Ramachandran, 37, C.I.T.U. Colony, Ramamoorthy Nagar, Vilangudi, Madurai - 18. Phone : 662695.

■ செங்குந்தர், மூலம் முதல் பாதம், மாநிறம், 24/157 செ.மீ. ME., 12,000/- சென்னையில் (MNC) பணிபுரியும் பெண்ணிற்கு ME/BE/MCA படித்த நல்ல வேலையில் உள்ள மணமகன் தேவை. முகவரி : எஸ். பழனியப்பன், 39, கச்சேரி வீதி, ஈரோடு - 638 001. Phone : 251026 (Off.), 265354 (Res.).

■ திருநெல்வேலி சைவப் பிள்ளை கார்த்திகை, 27/150 எம்.காம்., பிஜிடிசிஏ தனியார் நிறுவனத்தில்பணி. தோஷமில்லாத ஜாதகம். தகுந்த மணமகன் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். எம். பாலசுப்பிரமணியன், வீ.எ. 18, ஆர்பிளாக், வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு, பட்டினம்பாக்கம், சென்னை - 28.

■ Vadamal, Kashyapa, Puradam, 27/5' B.Com, seeks well qualified, well settled boys. Send horoscope with details. V. Gopalan, 49/3, Rukmini Sadan, Tilak Nagar Third Road, Goregaon (West), Mumbai - 400 062.

■ இந்து, வண்ணான், வயது 30, தகுதி எம்.எஸ்ஸி, பி.எட் (எம்.எட்) தனியார் பள்ளியில் வேலை பார்க்கும் பெண்ணிற்கு பி.ஈ./அரசு/தொழில் தகுதியுள்ள, நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். கிட்டப்பா, 3, வட்டிக் குருக்கள் தெரு, கும்பகோணம் - 612 001. போன் : 0435 - 425617.

■ கேரளா பிராமின், வடமாள், மௌடல்ய கோத்திரம், உத்திரட்டாதி, 29/5.2" 10 +2, பெண்ணுக்கு அரசு/தனியார் நல்ல வேலையில் உள்ள 35 வயதுக்குட்பட்ட மணமகன் தேவை. எம். நாராயணன், நெ. 445/1, ஐ.சி.எஃப், சௌத் காலனி, சென்னை - 38.

■ Iyer, Brahacharanam, Shadamarshanam, Poorattathi 3rd padam, 24.11.1974 very fair, 154 cms, domestically well trained tenth standard, tailoring. Send horoscope and details. A. Ramakrishnan, "Indus Durga", Mani Naicken Street, Ganapathipuram, Chrompet, Chennai - 44.

■ Iyer (N.A. Dt.)Vadoolam, Hastham, 20/5.4" B.Com, final year computer literature, slim, good looking girl, seeks professionally qualified Bangalore based boy upto 28. Contact 080/5451638. P.B. No. 4221, S.C. Garden, Bangalore - 560 042.

■ Tamil Iyer,Vadamal, Kousikam, Rohini, Chennai girl, 32/165 slim, science graduate, teacher private school, prefers any graduate Brahmin, having permanent employment, Maharashtra/North India. T.V. Krishnan, behind Nutan Saraswati Vidhyalaya, Monda Road, Kamptee - 441 002. Dist. Nagpur, (M.S) P. No. (07109) 88079.

■ வடமாள், நைத்ருப காஸ்யபம், ரேவதி, 24/5.4"/8000/- B.Sc., H.D.S.E (MBA) சாப்ட்வேர் கம்பெனியில் ப்ரோக்ராமர், சிம்ம லக்னம் செவ்வாய் தோஷ நிவர்த்தி உள்ள பெண்ணுக்கு BE/CA/MCA/MBA 30 வயதுக்குள் வரன் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். Manian, 30, Taylors Estate II St., Kodambakkam, Chennai - 24. Phone : 4835023.

■ TamilViswakarma boy, for girl, 27/154, B.Com, ACS, LLB, Asst. Manager, TATA Company, Bombay. Rs.

10,800/- per month. Kindly contact Rama Prasad, F2/8, Hariniketan, Bangurnagar, Goregaon West, Mumbai - 400 090.

■ Iyer, Vadama, Koundinya, Utharam girl, 27/175 cms, B.Com., PGPMS employed ICICI Mumbai, seeks boy preferably CA/ICWA/MBA, professionally qualified. Venkateswaran, 6/562, Sabari II Floor, Elevant Road (E), Chembur, Mumbai - 71. Phone : 5573899.

■ Alliance invited for fair Saiva Vellala working girl, 23/163 Revathi born and brought up at Delhi, from decently employed and settled Delhi based groom. Contact G. Balasubramanian, C-11, Dhaka Patel Chest Complex, Delhi - 110 009. Phone : 011 - 7425875.

■ இந்து சௌராஷ்டிரா, ஜாபாலி, மிருகசீர்ஷம், 33/6000/- மத்திய அரசு பணி போலியோவினால் பாதிக்கப்பட்ட பெண்ணிற்கு எவ்வித கெட்ட பழக்கமும் இல்லாத சேவை மனப்பான்மையுடன், நிரந்தர வருமானத்துடன் இதே இன மணமகன் தேவை. எளிய திருமணம், சிறு உடல் ஊனம் சம்மதம். K.M. Vijayakumar, 72, South Masi Street, Madurai - 625 001.

■ Vadama, Vadhoolam, Avittam, fair, good looking. 23/5.4" B.Com, MBA Officer Bank, seeks professionals, Keralite groom 27/28. Ramanathan, E-16, BBC Enclave, Sivakamipuram First Street, Sastri Nagar, Chennai - 600 041. Ph : 4902598.

■ Iyer, Haritham, Brahacharanam, Pooram, fair, 26/5.3" B.Sc., B.Ed., private school Salem, seeks graduate settled groom. Narayanan, 1-C, Kalinga Colony, PT Rajan Salai, K.K.Nagar, Chennai - 600 078. Ph : 4725977.

■ Alliance invited for Vadamal, Kousika, Revathi, 1974/160 cms, B.Com., M.A. Computer qualified girl from professionally qualified post graduate, well employed boys. S. Thyagarajan, 24-80/3/1, Anand Bagh West, Safilguda, Hyderabad - 500 047. Ph : 040 - 7051104.

■ Telugu Mulakanadu, Kuthsa Brahmin girl Thiruvonam, 24, seeks alliance from employed groom in Govt/PSU/reputed conern. Contact B.S. Ramaswamy, 8, Kasthuri 2nd Street, New Lakshmipuram, Chennai - 600 099.

■ வடமாள், கர்க கோத்திரம், உத்ராடம், வயது 24, B.A. (P.C.P) பெண்ணிற்கு அரசாங்க, தனியார் நிரந்தர பணியிலுள்ள வரன் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். ஆர். நாராயணசாமி, 14, போலீஸ் குவார்ட்டர்ஸ், திருவள்ளுவர் நகர், புதுக்கோட்டை.

■ வீர சைவ லிங்காயத்து, 25/150 பி.எ. மகம், நன்கு படித்த நல்ல வேலையிலுள்ள மணமகள் தேவை. பிராமின் மணமகனும் விண்ணப்பிக்கலாம். ஆர். சுப்ரமணியன், 116, இராயப்பேட்டை ஐரோடு, சென்னை - 14.

■ பாரத்வாஜம், வாத்திமா, அனுஷம், 33/5.5" LIC Insurance consultant ஆக பணிபுரியும் குழந்தையில்லாத விவாகரத்தான பெண்ணிற்கு நல்ல பணியிலுள்ள ஆண்கள் ஜாதகம் மற்றும் குடும்ப விவரங்களுடன் தொடர்பு கொள்க. Divorcee/widower without encumbrance OK. B. தங்கம், 29/2, காரணீஸ்வரர் கோயில் தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.

■ TamilViswakarma, Poosam, B.Arch., private concern, fair girl, seeks alliance from B.E., B.Arch., MCA qualified, well employed bridegroom. S. Thiagarajan, P6, Housing Unit, Koundampalayam, Coimbatore - 30.

■ தென்கலை, ஆத்ரேய, அஸ்தம் நட்சத்திரம், 34 வயது, +2, சென்னையில் தமிழக அரசு சார்ந்த நிறுவனம், தட்டச்சர், சம்பளம் ரூ. 5200/- வடகலை சம்மதம். சென்னையில் நல்ல வேலையிலுள்ள வரன் தேவை. என். ரங்கநாயகி, நெ. 8, குளக்கரை தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 15.

■ திருநெல்வேலி பிராமின் முதலியார் கலப்பு திருமண தம்பதிகளின் மகள் வயது 27. கேட்டை நட்சத்திரம், D.O.B. 2/5/1972 B.A., படித்துள்ள (டைப்ரைட்டிங் தமிழ், ஆங்கிலம்) பெண்ணிற்கு மணமகன் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்க வேண்டுகிறோம். A.L. Narasimhan, LIC Agent, Phone : 334525, 12, பெருமாள் தெற்கு ரத வீதி, திருநெல்வேலி டவுன்.

மணமகன் மணமகள் தேவை

■ North based rich Vadama, Bharadwajam, Officer's only son professional, 35/172/10,000/- propertied, only daughter, beautiful, under graduate, Maham, 29/160/5200/- suddha jathakams, mutual preferred. Box No. 30486

■ Iyer, Brahacharanam, Kousikam, Chitrai, 29/155/M.E Electronic Professor, Engg. College, running own educational tution centre, owns flat, invites well educated and domestically trained girl and for his only sister Revathi, 31/150/M.A., Tamil Nadu Govt. owns flat legal divorcee without encumbrance, seeks well educated, broadminded boys. Horoscopes and details to Box No. 30487

■ Iyer, Vadamal, Sangrithi, 32/170 B.Com, PGD IRPM, Area Manager, Private Firm seeks girl with computer knowledge and sister Anusham, 31/150, fair, MBA handicap girl seeks alliance. Ph. 040 - 3737806. Box No. 30488

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. MANJULA RAMESH
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097
Telephones — Editorial : 2345624; Circulation Manager; Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax 2345621
Annual Subscription : India Rs. 150/-; Overseas : Rs. 850/- (Air Mail)
Half Yearly Subscription : India Rs. 75/-; Overseas : Rs. 425/- (Air Mail)

to post without prepayment under PMG's Licence No. TN / MS / (S) 9 * Registered as a Newspaper in Srilanka

